# சிறந்த கம்யூனிஸ்ட் ஆவது எப்படி?



லியூ ஷோசி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ் மாநிலக் குழு.

விலை:
ரூ. 3-00

# சிறந்த கம்யூனிஸ்ட் ஆவது எப்படி?



லியூ ஷோசி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ் மாநிலக் குழு.

விலை ரூ. 3-00

# சிறந்த கம்யூனிஸ்ட் ஆவதெப்படி?

லியூ ஷோ சி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ் மாநிலக்குழு

முதற்பதிப்பு ஜனவரி 1983
இரண்டாம் பதிப்பு
பிப்ரவரி, 1983

★

(சீன நாட்டின் வட பகுதியிலுள்ள ஏனானிலிருந்த மார்க்ஸிஸ—லெனினிஸ கழகத்தில் 1939 ஜூலையில் **லியூ ஷோ சி** தொடர்ச்சியாக நிசழ்த்திய பிரசங்க்ங்களின் தொகுப்பு.)

தீக்கதிர் அச்சகம், 6/16 பைபாஸ் ரோடு,
மதுரை—625018

# அறிமுகம்

—•—

இந்நூலின் ஆசிரியர் தோழர் லியூ ஷோ சி சீனமக்கள் குடியரசின் உபதலைவராகவும், கட்சியின் பொலிட்பீரோ, செயற் குழுவிலும் உறுப்பினராகவும் இருந்தவர். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முச்கிய தலைவர்களில் ஒருவராவார்.

லியூஷோ சி 1898-ஆம் ஆண்டில் பிறந்தார். பிறப்பக ஹூனான் மாகாணம், நிங்சியாங் பிர்க்கா, சீனக் கம்யூனிஸ் கட்சியின் முன் தோன்றலாகிய சீன சோஷலிஸ்ட் வாலிபர் சங்க 1920-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது: அதில் அவர் சேர்ந்தார். சீன கம்யூனிஸ்ட் கட்சி 1921ல் அமைக்கப்பட்டது. அதே ஆண்டில் லியூஷோசி கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தினரானார். இன்றைய அகில சீன .தொழிலாளர் சம்மேளனத்தின் முன்தோன்றலான சீனத் தொழிலாளர் ஸ்தாபனம் என்கிற ஸ்தாபனத்தின் செயற் குழுவில் அங்கத்தினராக 1922ல் அவர் நியமிக்கப்பட்டார்.

அன்றுமுதல் 1927ல் மாபெரும் முதற் சீனப்புரட்சி தோல்வியுற்ற காலம்வரை சீனாவின் புரட்சித்தன்மை பொருந்திய தொழிற்சங்க இயக்கத்துக்கு தலைமை வகித்து வந்தார்.

1927ம் ஆண்டில் மாபெரும் சீனப்புரட்சி தோல்வியடை-ந்த பின்னர் லியூஷோசி தலைமறைவாகச் சென்று தொழிற்சங்க இயக்கத்துக்குத் தொடர்ந்து வழிகாட்டி வந்தார். 1932ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் **கியாங்சியி**லுள்ள புரட்சி தளத்துக்கு அவர் சென்றுவிட்டார். கம்யூனிஸ்ட் வசமுள்ள பிரதேசங்களில் உயங்கும் தொழிலாளர் இயக்கத்துக்கு வழிகாட்டும் பொறுப்பை அங்கு அவர் மேற்கொண்டார்,

சீன கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் வடக்குப் பிரதேச கமிட்டிக்கும், மத்திய சமவெளிப் பிரதேச கமிட் கும், மத்திய சீனப்பிரதேச கமிட்டிக்கும் செயலாளராக ஒன்ற பின்னொன்றாக பணியாற்றி வந்தார்.

1932ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொலிட் பீரோ (அரசியல்குழு) வில் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1943ல் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்கமிட்டியின்

செயற்குழுவில் ஒரு அங்கத்தினராகவும், சீன மக்களின் புரட்சிகர மான இராணுவக் குழுவின் உப-தலைவராகவும் ஆனார்.

1949ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ம் தேதியன்று சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்ட பொழுது, மத்திய சீன சர்க்காரின் உப-தலைவராக லியூ ஷோ சி ஆனார்.

# முன்னுரை

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உன்னதமான இடத்தைப் பெற்றிருந்தவர் லியூஷோசி. 1949ல் புரட்சி பூரண வெற்றி பெற்று சீன மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது வரையிலான ஒரு தலைமுறைக் காலத்தில் மாவோ, சூ-என்-லாய், சூட்டே ஆகிய தலைவர்களுக்கு சமமான இடத்தை அவர் பெற்றிருந்தார்.

இந்த கால கட்டத்தில் கட்சியின் கூட்டுத் தலைமையினால் உருவாக்கப்பட்ட பல்வேறு கருத்துக்கள் பிற்காலத்தில் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குப்பெரும்அளவில் பயன்பட்டுள்ளது. குறிப்பாக இந்தியா உட்பட உள்ள பல பின் தங்கிய நாடுகளின் கம்யூனிஸ்ட் இயக்கங்களுக்கு பயன்படக் கூடிய பல கருத்துக்கள் இதில் அடங்கியிருந்தன. மாவோவின் நூல்கள் என்ற வடிவில்தான் அவைகள் வெளிவந்துள்ளன.

அதே வரிசையில் உட்படுத்தக் கூடியதுதான் இத்துடன் வெளியிடப்படுகிற "சிறந்த கம்யூனிஸ்ட் ஆவது எப்படி?" என்னும் இந்த நூல். மாவோவின் நூல்களைப் போலவே இதனுடைய முக்கியமான உள்ளடக்கமும் சீன கம்யூனிஸ்ட் தலைமையின் கூட்டான அனுபவத்திலிருந்து உருவாகிய நிர்ணயிப்புகளேயாகும். அதே நேரத்தில் கூட்டுத் தலைமையின் கருத்துகளுக்கு திட்டவட்டமான வடிவம் அளிப்பதில் மாவோ நூல்களில் மாவோவின் தனித் தன்மை பிரதிபலிப்பது போலவே இதில் லியூ ஷோ சியின் தனித் தன்மையும் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

மக்கள் ஜனநாயக குடியரசு அமைக்கப்பட்ட பின் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்குள் கடுமையான உட்கட்சிப் போராட்டம் நடந்ததல்லவா! 1950வது ஆண்டுகளின் இறுதியில்தான் அது திட்டவட்டமான வடிவத்தை எட்டியது—அதுவரை கட்சிக்கும் குடியரசுக்கும் தலைவராக இருந்த மாவோ முழுமையாக கட்சிப் பணிகளில் ஈடுபடுவதற்காக குடியரசின் தலைவர் பதவியிலிருந்து விலகினார். அதனைத் தொடர்ந்து 1956வது ஆண்டில் நடைபெற்ற 8வது கட்சிக் காங்கிரசிலும் (இதில் இந்திய சகோதரப் பிரதிநிதிக் குழுவில் ஒருவனாக நானும் பங்கு கொண்டேன்) சீனக்கட்சியின் தலைமை கட்டுப்பாடான ஒரே அணியாகவே இருந்தது.

ஆனல்குடியரசின் தலைவராக லியூவும், கட்சியின் தலைவராக மாவோவும் செயல்பட்ட காலத்தில் கடுமையான உட்கட்சிப் போராட்டம் வெடித்தது. கட்சிஉறுப்பினரல்லாத இலட்சக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் அதில் பங்கு கொண்டனர்; ''தலைமை நிலையத்தை தகர்த்தெறியுங்கள்'' என்னும் முழக்கம் முன் வைக்கப்பட்டது. இதற்கு மாவோவின் ஆசியும் இருந்தது. (இந்நிலையில் அன்றைய போராட்டத்தை உட்கட்சிப் போராட்டம் என்று அழைக்கலாமா என்பதே கேள்விக்குரியது. அது இருக்கட்டும்) அந்த உட்கட்சிப் போராட்டத்தின் முக்கிய இலட்சியம் ''சீனவின் குருஷ்சேவ்'' என்றும் ''முதலாளித்துவப் பாதையாளர்களில் முதல்வன்'' என்றும்இன்னும் பலமுறைகளிலும் வருணிக்கப்பட்ட லியூஷோசியை தாக்குவதாகவே இருந்தது. அவர் குடியரசின் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ஆனல் இன்னொருவரை அந்தப் பதவியில் அமர்த்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியது. சூஎன்லாய், மாவோ, சூட்டே ஆகிய திருமூர்த்திகளின் மறைவுக்கு பிறகு தான் குடியரசு தலைவர் பதவியும் கட்சி தலைவர் பதவியும் ஹுவாகுவா பெங்கிற்கு அளிக்கப்பட்டது.

இதற்கிடையில், லியூஷோசியை சீனவின் குருஷ்சேவ் ஆக சித்தரிக்க வாய்ப்பளித்த ''கலாச்சாரப்புரட்சி'' காலத்தின் பல்வேறு நடவடிக்கைகள் திருத்தப்பட்டன. அககாலத்தில்அவமானப் படுத்தப்பட்ட பலர் கட்சியிலும் குடியரசிலும் உயர்ந்த பதவிகளைப் பெற்றுர்கள். இதற்குள் மரணமடைந்தவர்கள் விஷயத்திலும் முன்னல் கூறப்பட்ட தவருன கருத்துக்களைத் திருத்தி கட்சியின் சரித்திரத்தில் அவர்களுக்கு உன்னதமான அந்தஸ்து அளிக்கப்பட்டது. இதற்கு முன் அனைத்துக் குற்றங்களுக்கும் லியூவின் மீதும் டெங்கின் மீதும் பழி சுமத்தியது போலவே இப்போது அனைத்து குற்றங்களுக்கும் நால்வர் கும்பலின் மீது பழி சுமத்துவது நடைமுறையாகி விட்டது.

இதற்கிடையில் லியூஷோசிக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விக்கு விளக்கம் பெறப் பயன்படுகிற எந்த விபரமும் அதிகாரப் பூர்வமாக கிடைக்கவில்லை. ஆனல் ''கலாச்சாரப் புரட்சி'' உச்சகட்டத்தில் கூட தனது அடிப்படையான நிலைபாட்டில் எவ்வித மாறுதலும் செய்யாமலிருந்த லியூ, வயோதிக நிலையில் உடல் ஆரோக்கியம் குன்றி மரணமடைந்தார் என்றே யூகிக்க வேண்டியுள்ளது.அது சரியாக இருந்தாலும் தவருக இருந்தாலும்



இங்கு வெளியிடப்படுகிற அவரது நூலின் முக்கியத்துவம் குறையாது. 1956-ல் நடைபெற்ற 8-வது கட்சிக் காங்கிரசுக்குப் பின் தோன்றிய முதலாளித்துவப் பாதையாளர்களில் முதல்வராக லியூ செயல்பட்டார் என்ற வாதம் உண்மையாக இருந்தால் கூட, கட்சியின், கூட்டுத்தலைமையின் அனுபவங்களுக்கும் நிர்ணயிப்புகளுக்கும் திட்டவட்டமான வடிவம் அளிக்கும் பணியினையே இந்நூல எழுதிய காலத்தில் அவர் செய்துள்ளார். ஆகவே சீனப் புரட்சியின் அனுபவத்தை உட்கொள்ள முயலுகின்றவர்கள் அனைவரும் ஆழமாக பயில வேண்டிய ஒரு நூல் இது.

தொழிலாளி வர்க்கக் கண்ணேட்டத்திற்கு முற்றுக மாறுபட்ட பல கண்ணேட்டங்களும் தொழிலாளி வர்க்க அணிகளில் ஊடுருவக் கூடும். அவைகள் ஒவ்வொன்றையும் அங்குலம் அங்குலமாக எதிர்த்துப் போராடாமல் தொழிலாளிவர்க்கத்தின் புரட்சிகரமான முன்னணிப் பகுதியை ஒரு கட்சியாக உருவாக்க முடியாது என்று மார்க்சிசம்—லெனினிசம் போதிக்கிறது இந்த தத்துவத்தை விளக்குவதற்காகத்தான் லெனின் **'என்ன செய்ய வேண்டும்?'** என்ற நூல் எழுதினர். ரஷ்யாவில் போல்ஷ்விக் கட்சியை உருவாக்குவதற்கு தேவைப்பட்ட தத்துவ அஸ்திவாரமாக அமைந்தது இந்நூல் என்பதை பிற்கால நிகழ்ச்சிகள் நிரூபித்தன. கட்சிக்குள் வரக்கூடிய நடுத்தர வர்க்கத்தினர் போன்றோரிடம் மட்டுமின்றி, முதலாளியுடன் இடைவிடாமல் போராடிக் கொண்டிருக்கிற தொழிலாளி கூட வாழுகிற சூழ்நிலையும் உட்கொள்ளும் வாயுவும் எதிரி வர்க்கக் கண்ணேட்டமுடையது. இந்நிலையில் ஒவ்வொரு கட்சி உறுப்பினரிடமும் சந்தேகத்திற்கிடமின்றி எதிர் வர்க்கக் கண்ணேடடத்தின் பிரதிபலிப்பு ஏற்படும். இந்த எதிர் வர்க்க கண்ணேட்டத்திற்கெதிராக நிரந்தரமான போராட்டம் நடத்துவது ஒரு புரட்சிகரமான கட்சியை உருவாக்குவதற்கு இன்றியமையாத ஒரு கடமையாகும்.

இந்த மார்க்சிச—லெனினிச தத்துவ அடிப்படையில் தான் லியூவின் இந்நூல் உருவாகியுள்ளது. பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள், கோடிக்கணக்கான விவசாயிகள், (இவர்களில் விவசாயத்தொழிலாளர்களும் உட்படுவர்) பத்தாயிரக்கணக்கான இதர வர்க்கத்தினரிடமிருந்து உயர்ந்து வருகின்ற புரட்சிக்காரர்கள்— இவர்களையெல்லாம் உட்கொண்டதுதான் கம்யூனிஸ்ட் கட்சி. இவர்கள் அனைவரும் அளிக்கின்ற விலை மதிப்பற்ற சேவையினுல் தான் புரட்சிகர இயக்கமும் கட்சியும் ஒவ்வொரு நாளும்

வலுவடைந்து வருகிறது. அதேநேரத்தில் இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள் வாழுகின்ற சூழ்நிலைகளின் பலஹீனங்களையும் குணக்கேடுகளையும் கட்சிக்குள் கொண்டு வருகிருர்கள். அது கட்சிக்குள் கருத்து வேறுபாடுகளாகவும் பிளவுகளாகவும் வெளிப்படுகிறது. ஆகவே கட்சி உறுப்பினர்களின் மதிப்புவாய்ந்த சேவையை கூடுமான அளவு கட்சி பயன்படுத்துகிற அதேநேரத்தில் பலஹீனங்களுக்கும் குணக்கேடுகளுக்கும் எதிரான போராட்டத்தையும் ஸ்தாபன ரீதியாக நடத்த வேண்டும்.

இதை நடத்த வேண்டுமானுல் அதற்கு ஒரு முக்கிய முன்நிபந்தனையுண்டு. லெனின் **'என்ன செய்ய வேண்டும்?'** என்ற நூலில் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளதும், பிற்காலத்தில் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகளுடையவும் சட்ட திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதுமான ஒன்று தான் அது—ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் ஒரு கிளையில் உறுப்பினராக இருந்து செயல்பட வேண்டுமென்ற கோட்பாடு. அவரவர் கிளையில் நடைபெறும் விவாதங்கள், ஒவ்வொரு உறுப்பினரும்செய்கின்ற பணிகளைப் பற்றிய விமர்சன ரீதியான பரிசீலனை, இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளுகிற கூட்டான முடிவுகள்—இவைகளின் மூலமாகத்தான் ஒவ்வொருவருடைய திறமையினை சாத்தியமான அளவு அதிகரிக்கவும் குறைபாடுகளையும் குணக்கேடுகளையும், கூடுமான வரை போக்கவும் முடியும்.

இந்த மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் தத்துவத்தை சீனப் புரட்சியின், சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அனுபவங்களின் வெளிச்சத்தில் வலுப்படுத்தவே லியூ ஷோசி இந்நூலில் முயற்சிக்கிருர். இவைகளையெல்லாம் இதே முறையில் இதர நாடுகளில் பின்பற்ற முயல்வது படு முட்டாள்தனமாக இருக்கும். ஏனெனில், சீன மக்களின் புரட்சிகர போராட்டங்களிலிருந்து உருவாகிய அனுபவங்கள்தான் லியூ கூறியுள்ளவைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. இதர நாடுகளின் புரட்சிகரப் போராட்டங்களின் அனுபவம் இதற்கு மாறுபட்டதாக இருக்கும். உண்மையை கூறுவதென்ருல், ஒவ்வொரு கம்யூனிஸ்ட் கட்சியும் அதனதனுடைய சரித்திர அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டும் ஆங்காங்குள்ள சமூக, கலாச்சார பின்னணியை அடிப்படையாகக் கொண்டும் அதனதன் அணிகளில் தோன்றுகின்ற தவருன போக்குகள், பலஹீனங்கள் ஆகியவைகளை முழுமையாகவும் திட்டவட்டமாகவும் ஆராய வேண்டும்.



இந்த கண்ணேட்டத்துடன் ''நல்ல கம்யூனிஸ்டு''களாக செயல்படக்கூடிய லட்சக்கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நடுத்தர வர்க்க ஊழியர்கள், மாணவர், வாலிபர், மாதர் பகுதியினர், தாழ்த்தப்பட்ட ஜாதியினர், சிறுபான்மை மதத்தவர்கள் ஆகிய பல்வேறு பகுதிகளிலிருந்து வரக்கூடிய புரட்சிக்காரர்களைக் கட்சிக்குள் கொண்டு வந்து ஒரு வெகுஜன புரட்சிகர தொழிலாளி வர்க்கக் கட்சியை கட்டுவது பற்றிய பிரச்சினை இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முன்னுக்கு வந்துள்ளது. 1978 டிசம்பர் இறுதி வாரத்தில் ஹௌராவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் பிளீனத்தில் இது தான் முக்கிய விவாத விஷயமாக இருந்தது.

இதுவும் இப்போது திடீரென்று தோன்றிய ஒரு பிரச்சினையுமல்ல. 1951ல் ஒன்றுபட்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகரித்திருந்த கொள்கை அறிக்கையிலேயே இப்பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது,

தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில், தொழிலாளி விவசாயிகளின் போராட்ட அணியை அடிப்படையாகக் கொண்டு சாத்தியமான அளவு விரிவான மக்கள் ஜனநாயக அணியை கட்டியமைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சியை பூர்த்தி செய்து சோஷலிசத்தை நோக்கிச் செல்லுவது தான் 1951ல் கட்சி அங்கீகரித்த திட்டத்தினுடையவும் கொள்கை அறிக்கையினுடையவும் கண்ணேட்டமாக இருந்தது. இந்தபாதையில் முன்னேறிச் செல்லவேண்டுமானுல் கம்யூனிஸ்ட் கட்சியை ஒரு வெகுஜன புரட்சிக் கட்சியாக கட்டி வளர்க்க வேண்டுமென்று இந்த தஸ்தாவேஜுகளில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தது

வெகுஜன புரட்சிக்கட்சியெனும் இந்த கருத்தின் இரண்டு அம்சங்களுக்கும்—வெகுஜன கட்சி, புரட்சிக்கட்சி என்ற இரண்டு அம்சங்களுக்கும்-கொள்கை அறிக்கையில் சமமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து தீவிரமாகி வரும் முதலாளித்துவ நெருக்கடியின் விளைவாக மேலும் மேலும் அதிகமான தொழிலாளர்களும் இதர உழைப்பாளி மக்களும் கம்யூனிஸ்ட் கட்சியின்பால் கவரப்படுவார்கள் ; அனைத்து வர்க்கங்களையும் பிரிவுகளையும் சார்ந்த புரட்சிக்காரர்கள் தலைமைக்கும் வழிகாட்டுதலுக்கும் கம்யூனிஸ்ட்

கட்சியை எதிர்நோக்கத் தொடங்குவார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் கட்சி உறுப்பினர்களாக்க—படிப்படியாகக் கட்சித் தலைமைக்கே—கொண்டுவர உணர்வு பூர்வமாக செயல்பட வேண்டும். இதுதான் வெகுஜனக்கட்சி என்னும் கருத்தின் அடிப்படையான அம்சம்.

அதே நேரத்தில், வெகுஜனக் கட்சியாக்குவதன் பேரால் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகர குணத்தை மட்டுப்படுத்தக் கூடாது என்றும் கொள்கை அறிக்கை திட்டவட்டமாக கூறியிருந்தது. அவரவர் உறுப்பினராக உள்ள கட்சிக் கிளையின் கூட்டு முடிவுக்குட்பட்டு செயல்படுவதும் மற்றவர்கள் செயல்பட ஒத்துழைப்பதும் ஒவ்வொரு உறுப்பினருடைய கடமையாகும். இதுதான் கம்யூனிஸ்டுகளுடைய புரட்சிகரக் கட்சிக்கும் வர்க்க வஞ்சகர்களான சோஷியல் டெமாக்ரடிக்கட்சிக்கும் இடையிலானவேறுபாடு என்பதை மார்க்சிசம்—லெனினிசம் வலியுறுத்துகிறது.

இக்கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இடைவிடாமல் செயல்படுகிற எண்ணற்ற உறுப்புகளின் கூட்டு மையம் தான் கம்யூனிஸ்ட் கட்சி. ஆகவே விரிவான வெகுஜன கட்சியானாலும் புரட்சிகர கட்சியின் இக்கோட்பாட்டினை கண்டிப்பாக பாதுகாக்க வேண்டுமென்று கொள்கை அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. வெகுஜன கட்சி என்றபெயரால்புரட்சிகரத்தன்மையையோ, புரட்சிகரக்கட்சி என்ற பேரால் வெகுஜனத் தன்மையையோ, இழக்காமல், இரண்டும் இணைந்துள்ள ஒரு வெகுஜன புரட்சிக் கட்சியை உருவாக்க வேண்டுமென்பதே இதன் பொருள்.

இவைகளில், வெகுஜனக் கட்சி என்பதை நடைமுறையில் அதிகமாக வலியுறுத்திக் கொண்டு புரட்சிக் கட்சி என்னும் அம்சத்தைப் புறக்கணித்தும் கம்யூனிஸ்ட் கட்சியை புனரமைப்பதற்கான ஒரு முயற்சி 1952வது ஆண்டிலிருந்து ஒன்றுபட்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சியில் நடைபெற்றது. இத்தவறானபோக்கின் படைப்பு தான் இன்றைய வலதுகம்யூனிஸ்ட் கட்சி, எம்.பி.க்கள் எம்.எல்.ஏக்கள், சாத்தியமான சமயங்கள் மந்திரிகள் முதலிய அதிகாரமும் அந்தஸ்தும் உடைய பதவிகளை அடைவதற்கான முயற்சி அதனுடைய அரசியல் ஸ்தாபன நடவடிக்கைகள் அனைத்திலும் பிரதிபலித்தது. இத்தகைய பதவிகளை அடைவது மட்டும் அடிப்படையாகக் கொண்ட ஒரு வெகுஜன கட்சியாக ஒன்றுபட்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சி முழுவதையும் மாற்ற வேண்டுமென்றுதான் அவர்கள் கருதினார்கள்.



ஆனால், இம்முயற்சிக்கு கடுமையான எதிர்ப்பு உருவாகியது. கட்சியில் கணிசமான செல்வாக்குடைய ஒரு பகுதியினர் இம்முயற்சியினை எதிர்த்தனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பிளவினால் வலது, மார்க்சிஸ்ட் என்ற இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் பிறகு சில நக்சலைட் குழுக்களும் உருவாகியது. சமுதாய மாறுதலுக்கான முக்கியபாதை புரட்சிகரப்போராட்டங்கள்தான் என்னும் அடிப்படையான நிலையில் ஊன்றி நிற்கிற போதே, புரட்சிகரப் போராட்டங்களுக்கு மக்களை அணி திரட்டுவதற்கான வாய்ப்பாக நாடாளுமன்ற அமைப்புகளை பயன்படுத்துவது என்றும் மார்க்சிஸ்ட்--லெனினிஸ்ட் சித்தாந்தம் செயல்படத்தொடங்கியது. இவைகளை வலதுபக்கமிருந்தும் இடதுபக்கமிருந்தும்எதிர்ப்பவர்கள் தான் வலது கம்யூனிஸ்ட் கட்சியும் நக்சலைட்டுகளும் என்ற நிலை ஏற்பட்டது

இந்த அனுபவமும் நம்முன் இருப்பதனால் ஹௌரா பிளீனத்தில் மத்திய கமிட்டி சமர்ப்பித்த தஸ்தாவேஜில் முன் வைக்கப்பட்ட வெகுஜனகட்சி என்னும் கருத்தை சந்தேகத்துடனும் அவநம்பிக்கையுடனும் பார்த்த பிரதிநிதிகள் ஏராளம் இருந்தனர். முன்னாள் ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியைப் போலவே இப்போது கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியும் ஒரு வெகுஜன கட்சியாக முயற்சி செய்தால் இதுவும் வலது நிலைக்கு போகாதா என்னும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக நீண்ட கடுமையான விவாதம் பிளீனத்தில் நடைபெற்றது. அதன் விளைவாக கடந்த பதினான்கு ஆண்டு காலமாக ஸ்தாபனத்துறையில் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி பின்பற்றி வரும் கொள்கையும் அணுகுமுறையும் ஆழமான சுயவிமர்சனத்திற்கு உள்ளாகியது. இந்த சுயவிமர்சனத்திலிருந்து கீழ்க்கண்ட விஷயங்கள் முன்னுக்கு வந்துள்ளன.

**முதலாவதாக:** வலது கட்சியைப் போன்ற ஒரு வெகுஜன கட்சியாக ஆகக்கூடாது என்னும் நன்னோக்குடன் கட்சியின் செயல்படும் வட்டாரமும் கிளைகளில் அங்கத்தினர்களின் எண்ணிக்கையும் கூடுமான வரை குறைப்பதற்கே கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் தலைமை முயற்சித்தது.

காங்கிரசினுடையவும் வலதுசாரிமுதலாளித்துவகட்சிகளினுடையவும் கொள்கை சூன்யத்தின் விளைவாக கம்யூனிஸ்ட்

(மார்க்சிஸ்ட்) கட்சியினிடமும் அது இணைந்துள்ள இடதுசாரி ஜனநாயக இயக்கத்திடமும் ஆதரவு காட்டக் கூடியவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பல்வேறு மக்கட் பகுதிகளிலிருந்து வரக்கூடிய இந்த ஆதரவாளர்களை, அவர்களுடைய செயல்பாட்டின் தராதரத்தைப் பொறுத்து கட்சிக்குள் கொண்டு வருவதற்கான வாய்ப்பு மிகப்பெரும் அளவு அதிகரித்திருந்தது இவ்வாறு அகில இந்திய ரீதியாக செயல்படக் கூடிய ஒரு கட்சியாக வளர்வதற்கான சாதகமான சூழ்நிலை உருவாகியிருந்தது.

ஆனல், கட்சியின் புரட்சிகரத் தன்மையை இழக்கக் கூடாது என்ற காரணத்தைக்கூறி அது விரிவுபடுவதை உணர்வு பூர்வமாகவே தடுக்கக்கூடிய ஒருநிலைக்கு கட்சித் தலைமை சென்றது. 1967ல்மத்தியக் கமிட்டி அங்கீகரித்த ஸ்தாபனத்தீர்மானத்திலேயே இக்கண்ணேட்டம் கருக் கொண்டிருந்தது. ஆனல் அது வளர்ச்சியடைந்து முழுமையானது 1973ல் தான். (1973வது ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஸ்தாபனத் தீர்மானம்— மொழிபெயர்ப்பாளர்) இந்த இரண்டு தீர்மானங்களிலும் அடங்கியுள்ள சரியான அம்சங்களை நிலைநிறுத்திக்கொண்டு தவறுன அம்சங்களை திருத்துகிற ஒரு புதிய அணுகு முறையைத்தான் பிளீனம் அங்கீகரித்தது.

**இரண்டாவதாக:** *புரட்சிகரத் தன்மையை இழக்காமலேயே வெகுஜனக் கட்சியாக மாறுவது என்னும் கண்ணேட்டம்* இன்றைய இந்திய அரசியல் சூழ்நிலையில் சிறப்பான முக்கியத்துவமுடையதாகும், ஏனெனில், காங்கிரஸ், ஜனதா, இதர முதலாளித்துவக் கட்சிகள், வலது கம்யூனிஸ்ட் கட்சி, முன்னள் சோஷலிஸ்டு குழுக்கள், பல்வேறு நக்சலைட் குழுக்கள்-— ஆகியோரின் அரசியல் கொள்கை சூன்யத்தின் விளைவாக கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் பால் மேலும் மேலும் அதிகமான மக்கள் கவரப்படுகிருர்கள் அவர்களில் தகுதியானவர்களை யெல்லாம் இணைத்துக் கொண்டு கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியை விரிவுபடுத்தாவிட்டால் சர்வாதிகார சக்திகளுக்கெதிராகவும் உழைக்கும் மக்களின் நலன்களை பாதுகாப்பதற்காகவும் போராடக்கூடிய இடதுசாரி ஜனநாயக அணியைக் கட்டமுடியாது.

கட்சி ஸ்தாபனம் விரிவுபடுவது; அதனுடைய உறுப்பினர்கள் ஆதரவாளர்களின் எண்ணிக்கையை அதிகப் படுத்துவது;



வர்க்க உணர்வையும் அரசியல் தரத்தையும் உயர்த்துவது—இவைகளையெல்லாம் செய்யாமல் இடதுசாரி ஜனநாயக இயக்கத்தில் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி அதன் பங்கினை நிறைவேற்ற முடியாது. 1951வது ஆண்டின் கொள்கை அறிக்கை சுட்டிக் காட்டியது போல், இந்தியாவில் மக்கள் ஜனநாயகப் புரட்சியை பூர்த்தி செய்வதற்கு மட்டுமின்றி, இன்றைய உடனடி அரசியல் கடமையான இடதுசாரி ஜனநாயக அணியை உருவாக்குவதும் கட்சியை விரிவுபடுத்துவதும் இன்றியமையாதது என்பதே இதன் பொருள்.

**மூன்ருவதாக:** *புரட்சிகரத் தன்மையை பாதுகாப்பதற்கென்ற பேரால் விரிவுபடுத்துவதற்கெதிரான கொள்கையை பின்பற்றிய போதிலும் கட்சிஉறுப்பினரின் முக்கியகடமையாக மார்க்சிசம்— லெனினிசம் வலியுறுத்துகிற இரண்டு முக்கிய விஷயங்கள்* பல்வேறு உருவங்களில் அன்ருடம் முன்னுக்கு வருகிற எதிரி வர்க்க சித்தாந்தங்களுக்கெதிரான கருத்துப்போராட்டம், இந்தகருத்துப் போராட்டம் உட்பட அனைத்து கட்சி நடவடிக்கைகளுக்கும் மையமாக மத்திய கமிட்டி முதல் கிளைகள் வரையுள்ள கட்சி அமைப்புகள் செயல்படுவதும் அவைகளுக்கு கட்சி உறுப்பினர்கள் சுயமாக கட்டுப்படுவதும் ஆகிய இந்த இரண்டும்— கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சிக்குள் நடைபெறவில்லை என்பது தான் உண்மை. முதலாளித்துவ— நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கங்களும் அவர்களது ஆதரவாளர்களான நடுத்தர முதலாளி வர்க்க அறிவு ஜீவிகளும் தொடர்ந்து பரப்பி வரும் பிற்போக்கு போலி தத்துவங்களை அம்பலப்படுத்தி தொழிலாளி வர்க்கக் கண்ணேட்டதிற்கு ஆதரவான நிலையை மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென்ற கண்ணேட்டமே கட்சி தலைமைக்கு இல்லாமல் போய் விட்டது. மத்திய கமிட்டி முதல் கீழ்மட்டக் கிளைகள் வரையிலான கட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் இந்த சித்தாந்தப் போராட்டக் கடமையை நிறைவேற்றும் முறையில் அமையவில்லை. அவைகளின் செயல்பாடுகள் சம்பந்தமாக சுய விமர்சன ரீதியான பரிசீலனை செய்யவும் முன்வரவில்லை. சுயவிமர்சன ரீதியிலான இத்தகைய பரிசீலனையின் மூலம் கட்சி உறுப்பினர்களின் பணிகளை மதிப்பீடு செய்து தவறுகளை திருத்தவோ, இவ்வாறு தவறுகளை திருத்துவதின் அடிப்படையில் ஸ்தாபனத்தில் தேவையான மாறுதல்களைச் செய்யவோ உருப்படியான எந்த முயற்சியும் நடைபெறவில்லை. மார்க்சிசம்—லெனினிசம் வற்புறுத்துகிற,

மிக அவசியமான புரட்சிகரத் தன்மையை வளர்க்கவில்லை என்பது மட்டுமல்ல, நிலைநிறுத்தவும் இந்தகால கட்டத்தில் நம்மால் முடியவில்லை என்பதே இதன் பொருள்

இந்த யதார்த்த நிலையை பரிசீலனை செய்துதான் ஒரு வெகுஜன புரட்சிக் கட்சியை உருவாக்குவது என்ற கருத்தை மத்திய கமிட்டி முன் வைத்தது. பிளீனம் அங்கீகரித்தது இந்நோக்குடன் நிறைவேற்ற வேண்டிய பல்வேறு ஆலோசனைகளும் பிளீனம் அங்கீகரித்த தீர்மானத்திலும் அறிக்கையிலும் அடங்கியுள்ளன. இவைகளையும், எதிர்கால நடைமுறை அனுபவங்களின் அடிப்படையில் முன் வைக்கப்படக்கூடிய இதர ஆலோசனைகளையும் செயல்படுத்த முயற்சிப்பவர்களுக்கு சீன கம்யூனிஸ்ட் தலைமையின் அனுபவங்கள் அடங்கிய இந்த நூல் பயனுள்ளதாக இருக்கும்.

ஏற்கெனவே சுட்டிக்காட்டியது போல, சீனப்புரட்சியின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட இந்நூலின் உள்ளடக்கத்தை அப்படியே இந்தியாவில் பயன்படுத்த முயற்சிப்பது முற்றிலும் தவறானது. இந்திய தொழிலாளி வர்க்க அணிகளில் ஊடுருவுகின்ற அன்னிய வர்க்கக் கருத்துக்கள் சீன நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஆகவே இங்கு திட்டவட்டமான வடிவத்தில் முன்னுக்கு வருகின்ற எதிரி வர்க்க சித்தாந்தங்களுக்கெதிரான போராட்டத்தின் உருவமும் உள்ளடக்கமும் சீனாவினுடையதிலிருந்து மாறுபட்டதாக இருக்கும்.

ஆனால், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாளி வர்க்கக் கண்ணோட்டம், தங்களது போராட்ட வரலாற்றின் ஒட்டுமொத்த அனுபவங்கள் படிப்பினைகள்— இந்தஇரண்டுஅடிப்படையான அம்சங்களை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப்படுகிற ஒரு அமைப்பு தான் லட்சக்கணக்கான சாதாரண மக்களை ‘‘சிறந்த கம்யூனிஸ்ட்களாக’’ ஆக்குகிற கட்சி அமைப்பு. இது சீனாவைப் போலவே இந்தியாவுக்கும் பொருந்தக் கூடியது. ஏனென்றால், சீன புரட்சியின் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு ‘‘சிறந்த கம்யூனிஸ்ட்களை’’ லட்சக்கணக்கான மக்கள் மத்தியிலிருந்து உருவாக்க இந்நூல் உதவியது போலவே, இந்தியாவின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு இங்குள்ள லட்சக்கணக்கான மக்கள் மத்தியிலிருந்து ‘‘சிறந்த கம்யூனிஸ்டுகளை’’ உருவாக்குகின்ற ஒரு முயற்சியினைத்தான் மத்திய



கமிட்டி முதல் கிளைகள் வரை அனைத்து மட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனை முடிப்பதற்குமுன் என்னுடைய ஒரு அனுபவத்தை இங்கே குறிப்பிடுகிறேன். 1956ல் சீனகட்சிக் காங்கிரசில் ஒரு சகோதரப் பிரதிநிதியாக நான் பங்கு கொண்ட போது லியூஷோசியுடன் ஒரு உரையாடல் நடத்தினேன். சீனகம்யூனிஸ்ட் கட்சியின வரலாற்றில் ஏறத்தாழ ஒருடஜன் தடவைகள் ‘‘தவறு திருத்தும் இயக்கம்’’ (Rectification Campaign) நடந்ததாக கேள்விப்பட்டிருந்தேன். இந்நூலில் விவரிப்பது போல் ‘‘சிறந்த கம்யூனிஸ்டுகளை’’ உருவாக்குவதே இந்த இயக்கத்தின் குறிக்கோள்.

ஆகவே இந்நூலைப்பற்றி அதிகமாக அறியும் ஆவலுடன் லியூஷோசியுடன் உரையாடல் தொடங்கியது இந்திய கட்சியின் அன்றைய நிலை, கட்சி எதிர் நோக்குகின்ற, பிரச்னைகள் ஆகியவை பற்றிய பல்வேறு விவரங்களை லியூவிடம் கூறியபின் நான் அவரிடம் கேட்டேன். ‘‘இந்த சூழ்நிலையில் இந்திய கட்சியில்தவறு திருத்தல் இயக்கம் நடத்த ஏற்பாடு செய்வதாக இருந்தால அது எவ்வாறு இருக்கவேண்டும்?’’

இதற்கு லியூ அளித்த பதில் மிகவும் முக்கியமானது,

‘‘தவறு திருத்தும் இயக்கம் தேசத்தின் யதார்த்த நிலைமையைப் பற்றிய ஆதார பூர்வமான ஆய்விலிருந்து தொடங்க வேண்டும். புரட்சி இயக்கமும கட்சியும் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்து தெளிவான பார்வையை ஏற்படுத்துவது, இதனைச் செய்கின்றபோது தொழிலாளி வர்ச்கத்தினுடையவும் எதிரி வர்க்கத்தினுடையவும் கருத்தோட்டங்கள் ஒன்றோடொன்று மோதுவதைப் பார்க்கலாம். இந்த மோதுதலை ஸ்தாபன ரீதியாக நடத்துவது; எதிரி வர்க்க சித்தாந்தங்களை எதிர்த்துப் போராடி முறியடித்து தொழிலாளி வர்க்க சித்தாந்தத்தை நிலை நிறுத்துவதும் முன்னுக்கு கொண்டு வருவதும்தான் தவறு திருத்தல் இயக்கத்தின் மூலம் அடையவேண்டியுள்ளது’’

இந்நூலை ஒரு வேத நூலாகக் கருதி இதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை அப்படியே பின்பற்ற முயற்சிப்பதற்கெதிராக ஏற்கெனவே பலமுறை கூறப்பட்ட எச்சரிக்கையை மீண்டும்ஒருமுறை ஊர்ஜிதம் செய்வதற்காகவே இந்த நிகழ்ச்சி இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் ஹௌரா பிளீனம் முடிவு எதிர் பார்ப்

பது போன்ற ஒருவெகுஜன புரட்சிக் கட்சியை உருவாக்குவதற்கு உதவிகரமான ஒரு புதிய கண்ணோட்டத்தை இந்நூலில்வாசகர்கள் பெறமுடியும். கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களுமான அனைத்து தோழர்களும் இதனை சரியான முறையில் பயன்படுத்து வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**இ. எம். எஸ்.நம்பூதிரிபாட்**
பொதுச் செயலாளர்
இந்தியக் கம்யூனிஸ்ட்
(மார்க்சிஸ்ட்)கட்சி



# சிறந்த கம்யூனிஸ்ட் ஆவதெப்படி?

தோழர்களே; நான் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும்- உங்களிடம் வந்து பேசும்படி நீங்கள் என்னைக் கேட்டு அதிக காலமாகியும், இன்று வரை நான் இங்கு வராமல் தாமதம் செய்யும்படி நேர்ந்துள்ளது. கம்யூனிஸ்ட்கட்சிஉறுப்பினர்களின்பயிற்சி என்னும் பிரச்சனை பற்றி நான் பேசப் போகிறேன். கட்சியைக் கட்டி அதை மேலும் உறுதிபடுத்துவதென்னும், அடிப்படையான வேலையை நாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், இந்த பிரச்சனை பற்றி பேசுவது நமக்கு லாபகரமாயிருக்குமென்று எண்ணுகிறேன். எனது உரையை பல்வேறு பகுதிகளாய் பிரித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்று ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்றவற்றை அடுத்த தடவைக்கு ஒதுக்கி வைக்கிறேன். பல இளந்தோழர்களும் புரிந்து கொள்வதற்கு சாத்தியமாயிருக்கும் பொருட்டு சில குறிப்பிட்ட பிரச்சனைகள் பற்றி அதிகப்படியான விளக்கங்களும் உதாரணங்களும் கொடுக்க வேண்டும். எனவே என் உரையை அதிக அளவு சுருக்குவதற்கு முடியாது. இதை நான் ஆரம்பத்திலேயே தெளிவு படுத்திவிட வேண்டும்.

**கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சுய-பயிற்சியை ஏன் மேற்கொள்ள வேண்டும்?**

தோழர்களே! கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஏன் சுய பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்?

மனிதன் உலகில் தோன்றியது முதற்கொண்டே, உயிர் வாழும் பொருட்டு, தன் வாழ்க்கைக்கு அவசியமான யதார்த்த செல்வங்களை உற்பத்தி செய்வதற்காக, அவன் இயற்கையை எதிர்த்துப் போராட வேண்டி இருந்துள்ளது.

"ஆனால் மனிதர்கள் இயற்கையை எதிர்த்துப் போராடும் பொழுதும், யதார்த்த செல்வங்களை உற்பத்தி செய்வதற்கு இயற்கையைப் பயன்படுத்திக் கொள்ளும்பொழுதும்அவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் தனித்து நின்று, தனிப்பட்ட தனி நபர்களாய் நின்று, இக்காரியத்தைச் செய்யவில்லை; சேர்ந்து நின்று, கோஷ்டிகளாக, சமூகங்களாக திரண்டு நின்றே இக்

காரியத்தைச் செய்கின்றனர். ஆதலால் பொருளுற்பத்தி என்பது எல்லாக் காலங்களிலும், எல்லா நிலைமைகளிலும் சமூகப் பொருளுற்பத்தியாகவே இருக்கிறது. யதார்த்த செல்வங்களை உற்பத்தி செய்யும் பொழுது, மனிதர்கள் பொருளுற்பத்தியின் கட்டுக்கோப்பிற்குள்ளேயே தங்களுக்குள் ஏதேனும் ஒரு வகை பரஸ்பர உறவுகளை, ஏதேனும் ஒருவகை பொருளுற்பத்தி உறவுகளை, அமைத்துக் கொள்கின்றனர்.'' (சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரம் பக்கம் 231)

மனிதர்கள் பொருள் உற்பத்திக்காக இயற்கையை எதிர்த்து நடத்திவரும் போராட்டம், இவ்விதம் சமூகத் தன்மையுடையதாயிருக்கிறது. இந்தப் போராட்டம் மனிதர்கள் சமூகத்தில் கூடிவாழும் உறுப்பினர்களாய் இயற்கையை எதிர்த்து நடத்தும் போராட்டமாகும். இயற்கையை எதிர்த்துநடைபெறும்இந்த ஓயாத போராட்டத்தின் மூலம்தான் மனிதர்கள் இயற்கையையும் அதே சமயத்தில் தங்களையும் இடைவிடாமல் மாற்றிக் கொண்டு வந்துள்ளனர்; மேலும் தங்களுக்குள் ஒருவரோடொருவருக்குள்ள உறவுகளையும் மாற்றி வந்துள்ளனர். மனிதர்கள் சமூக உறுப்பினர்களாய் இயற்கையை எதிர்த்து நடத்தி வரும் இந்த நீண்ட போராட்டத்தினிடையேதான் அவர்களுடைய பௌதீக உறுவங்கள் (கைகள், கால்கள், உடற்பாங்கு முதலியன) அவர்களுடைய சமூக உறவுகள், சமூக அமைப்பு முறைகள், இன்னும் அவர்களுடைய மூளைகள், சித்தாந்தம் முதலியன யாவும் தொடர்ச்சியாக மாற்றப்பட்டும் அபிவிருத்தி செய்யப்பட்டும் வருகின்றன. ஏனெனில்,

''பொருளுற்பத்தியின் முதலாவது அம்சம் என்னவென்றால் ஒரே நிலையில் அது நீண்டகாலமிருப்பதில்லை, சர்வ சதா காலமும் மாறுதலடைந்து வளர்ச்சிபெற்றுக்கொண்டே இருக்கிறது; மேலும் பொருளுற்பத்தி முறையிலுண்டாகும் மாறுதல்கள் சமூக அமைப்பு முழுவதிலுமே, சமூகக் கருத்துக்கள், அரசியல் அபிப்ராயங்கள், அரசியல் ஸ்தாபனங்கள் முதலியவைகளவற்றிலும் தவிர்க்க முடியாத வண்ணம் மாறுதல்களை உண்டாக்கி விடுகின்றன.'' (சோவியத் கம்யூனிஸ்ட்கட்சியின் சரித்திரம், பக்கம் 132)

மனிதன் மிருகங்களிலிருந்து பரிணாம வளர்ச்சியால் தோன்றியவன். பண்டைக் காலத்தில் மனிதனின் வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, சித்தாந்தம் முதலியன இன்றுள்ளது போல் இருக்கவில்லை. மாறுபட்டிருந்தன; வருங்காலத்திலும் மனிதனின் வாழ்க்கை முறை, சமூக அமைப்பு, சித்தாந்தம் முதலியன இன்றுள்ளது போல் இருக்கப் போவதில்லை, மாறுபட்டிருக்கும்.



மனித குலமும், மனித சமூகமும் ஒருவகை சரித்திரப் பூர்வ பரிணாமகர நிகழ்ச்சித் தொடராகும். அவை வளர்ந்துகொண்டும், மாறிக்கொண்டுமிருக்கின்றன. போராட்டத்தினிடையில் காலப் போக்கில் அவை தொடர்ச்சியாக மாற்றப்பட்டு வந்துள்ளன. இனியும் அவற்றை தொடர்ச்சியாக மாற்றுவதற்கு முடியும்.

மனித சமூகம் வளர்ச்சி பெற்று ஒரு குறிப்பிட்ட சரித்திர பூர்வ கட்டத்தை அடைந்ததும் வர்க்க சமூகம் தோன்றிற்று. அதற்குப் பிறகு வர்க்க சமூகத்தைச் சேர்ந்த மனிதர்கள் குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்த மனிதர்களாக வாழ்ந்தனர். மார்க்சிய தாத்பர்ய சாஸ்திரத்தின் கோட்பாடுகளின்படி, மனிதர்களின் சமூக வாழ்வு அவர்களுடைய சித்தாந்தத்தை நிர்ணயிக்கிறது. எனவே, ஒரு வர்க்க சமூகத்தில் மனிதர்களின் சித்தாந்தம் ஒரு குறிப்பிட்ட சமூக வர்க்கத்தினுடைய சித்தாந்தத்தின் பிரதிநிதியாக விளங்குகிறது. வர்க்க சமூகத்தில் ஓயாமல் வர்க்கப் போராட்டங்கள் நடந்த வண்ணமுள்ளன. இவ்விதம் இயற்கையை எதிர்த்து நடைபெறும் இடைவிடாதபோராட்டத்தின்போதும்சமூகத்தில் நடைபெறும்இடைவிடாதவர்க்கப்போராட்டத்தின்போதும் தான், மனிதர்கள் இயற்கையை மாற்றியமைக்கின்றனர்; சமூகத்தை மாற்றியமைக்கின்றனர். அதே சமயத்தில் தங்களுடைய சித்தாந்தத்தையும் மாற்றியமைத்துக் கொள்கின்றனர்.

முன்பொரு சந்தர்ப்பத்தில் மார்க்ஸ் தொழிலாளர்களிடம் கூறினர்:—

''இப்போதுள்ள சமூக உறவுகளை மாற்றுவதற்கு மட்டுமின்றி, நீங்கள் உங்களை மாற்றிக் கொண்டு, அரசியல் ஆட்சி நடத்தும் வல்லமை பெற்ற திறமை மிகுந்த மக்களாவதற்காகவும், பதினைந்து இருபது அல்லது ஐம்பதுஆண்டுகள் வரை உள்நாட்டு யுத்தங்களையும் சர்வதேச யுத்தங்களையும் நீங்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும்''

அதாவது, இயற்கையை எதிர்த்து தாங்கள் நடத்தும் போராட்டத்தினால் மட்டுமின்றி, இடைவிடாமல் நடைபெறும் சமூகப் போராட்டத்தினாலும்கூட மனிதர்கள் தங்களைத்தாங்களே மாற்றிக் கொள்கின்றனர். தொழிலாளி வர்க்கம் சமூகத்தையும்

தன்னையும் மாற்றிக் கொள்ளும் பொருட்டு இதே போல உணர்வு பூர்வமாய் நீண்டகாலத்திற்கு சமூகப் போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கும்.

எனவே, மாறுதல் தங்களுக்குத் தேவையானதென்றும் தாங்கள் மாறக்கூடியவர்களென்றும் தான் மனிதர்கள் தங்களைக் கருதிக் கொள்ள வேண்டும். மாறுதலில்லாதவர்களாக, குற்றம் குறையற்றவர்களாக, புனிதமானவர்களாக, சீர்திருத்தத்திற்கு இடமில்லாதவர்களாக அவர்கள் தங்களைக் கருதிக் கொள்ளக் கூடாது. இதில் இழிவு ஒன்றுமில்லை. ஏனெனில் இயற்கையின் பரிணாமகர வளர்ச்சியையும் சமூகத்தின் பரிணாமகர வளர்ச்சியையும் நிர்ணயிக்கும் தவிர்க்க முடியாத விதிகளுக்கு இதுவே பொருத்தமானதாகும். இவ்வாறு கருதாவிட்டால் மனிதர்கள் முன்னேற முடியாது.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான நாம் தான், நவீன கால சரித்திரத்தில் மிகவும் வளர்ச்சி பெற்ற புரட்சிவாதிகளாவோம். சமூகத்தையும் உலகையும் மாற்றி அமைப்பதற்கு இன்று போர்ப்படையாகவும் முன்னேற்றும் சக்தியாகவும் இயங்குவது நாம்தான். புரட்சிவிரோதிகள் இன்னும் இருப்பதால்தான் புரட்சிவாதிகளும் இருந்து வருகின்றனர். ஆதலால் புரட்சி விரோதிகளை எதிர்த்து ஓயாததோர் போராட்டத்தை நடத்துவது புரட்சிவாதிகளின் வாழ்விற்கும் அவர்களுடைய வளர்ச்சிக்கும் ஓர் அத்தியாவசியமான நிபந்தனையாகும். இத்தகைய போராட்டத்தை நடத்தத் தவறுவோர்களையானால் அவர்களை புரட்சிவாதிகளென்று அழைக்க முடியாது; முன்னேற்றமடைந்து வளர்ச்சி பெறும் சக்தி அவர்களிடம் கிஞ்சிற்றேனும் இருக்கமுடியாது புரட்சி விரோதிகளை எதிர்த்து நடைபெறும் இந்த போராட்டத்தின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சமூகத்தை மாற்றுகின்றனர், உலகையே மாற்றுகின்றனர்; தங்களையும் அதே சமயத்தில் மாற்றிக் கொள்கின்றனர்.

பல்வேறு துறைகளிலும் எதிர்ப்புரட்சியை எதிர்த்துப் போராடுவதின் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் தன்னைத் தானே மாற்றிக் கொள்கிறார். இதன் பொருள் என்னவென்றால் அவர் முன்னேற்றம் பெறுவதற்கு அவருடைய புரட்சிகரமான குணதிசயங்களை வேலைமுறையில் வளர்த்து வளர்வதற்கும் பின்வரும் இரு அம்சங்களும் ஒன்று சேரவேண்டும்; நடைமுறைப்



போராட்டத்தில் அவர் புடம் போடப்பட்டு எஃகுபோன்ற உறுதி பெறுவது, இரண்டாவது அவருடைய கருத்துக்கள் பயிற்சி செய்யப்பட்டு பண்படுத்தப்படுவது; அனுபவமற்ற புதிய ஊழியனுகத் தொடங்கி முதிர்ச்சியடைந்து மிகுந்த அனுபவம் பெற்று எந்த சூழ்நிலையையும் சமாளிக்கக்கூடிய ஒரு புரட்சிவாதியாவதென்பது நீண்டகாலம் புரட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டு உறுதிப்பாடும் பயிற்சியும் பெறுவதால்தான். அதாவது நீண்டகாலம்சீர்திருத்தம் செய்யப்படுவதால் தான் முடியும்- பகைவனைப்பற்றியும், தன்னைப் பற்றியும், சமூக வளர்ச்சி விதிகள் பற்றியும், புரட்சியின் விதிகள் பற்றியும் உண்மையிலேயே தீர்க்கமான முறையில் புரிந்து கொள்ளும் வல்லமை, அதிக அளவு அனுபவம் பெருத ஒரு புரட்சிவாதிக்கு ஏற்பட்டுவிட முடியாது. ஏனெனில் பழைய சமூகத்தில் வளர்ந்துள்ள இவர், இயற்கையாகவே பழைய சமூகத்தின் பல்வேறு சித்தாந்தங்கள், விருப்பு வெறுப்புகள், பழக்கங்கள். ஆகியவற்றின் மீதமிச்சங்களை தன்னுடன் கொண்டு வந்துவிடுகிருர்; இன்னமும் இவர் அனுபவமின்றியும் நீண்டகால புரட்சிகர நடைமுறையில் பக்குவமடையாமலும் இருக்கிருர்.

இந்த நிலைமையை மாற்றவேண்டுமென்ருல், அவர் சரித்திரத்திலுள்ள புரட்சிகர அனுபவங்களை (நமதுமுன்னேர்களின் நடைமுறையை)கற்றறிவதோடல்லாமல் தற்போதையபுரட்சிகரமுறையில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ளவும் வேண்டும். இந்தபுரட்சிகர நடைமுறையில், அதாவது பல்வேறு எதிர்ப்புரட்சி அம்சங்களை எதிர்த்து நடைபெறும் இந்தபோராட்டத்தில்அவர் தனது சுயமுன்முயற்சியை வளர்த்துக்கொள்ளவேண்டும், மேலும் கற்றுணர்வதற்கும் பயிற்சி பெற்று பண்படுவதற்கும் தான் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளைத் தீவிரப்படுத்த வேண்டும். அப்பொழுது தான் அவர் தனது அனுபவத்திலிருந்து படிப்படியாக பாடம் கற்றுக் கொண்டு சமூக வளர்ச்சி விதிகளையும் புரட்சியின் விதிகளையும் மேலும் தீர்க்கமாய் புரிந்து கொள்ள முடியும்; பகைவனைப் பற்றியும் தன்னைப்பற்றியும் புரிந்து கொள்ள முடியும்; முன்பு தன்னிடமிருந்த கருத்துக்கள், பழக்கங்கள், விருப்பு வெறுப்புகள் முதலியவை தவருனவை என்பதைக் கண்டுகொண்டு அவற்றைத் திருத்திக் கொள்ள முடியும்;தனது உணர்வின் நிலையையும் தன்னுடைய புரட்சிகரமான குணதிசயத்தின் நிலையையும் உயர்த்தி, தன்னுடைய புரட்சிகரமான வழிமுறைகள் முதலியற்றையும் மேன்மையடையச் செய்ய முடியும். ஆதலால் தன்னை மாற்றிக் கொண்டு

தன் உணர்வின் நிலையையும் உயர்த்திக் கொள்ள வேண்டுமென்றால் புரட்சிவாத புரட்சிகர நடைமுறையிலிருந்துதன்னை தனிமைப் படுத்திக் கொள்ளக் கூடவே கூடாது! சுய பயிற்சியில் ஈடுபடுவதற்கும் நடைமுறையிலிருந்து (தனது நடைமுறையிலிருந்தும் மற்றவர்களின் நடைமுறையிலிருந்தும்) பாடம் கற்றுக் கொள்ளுவதற்கும் முயற்சி செய்யாமல் எந்த புரட்சிவாதியும் தன்னை அபிவிருத்தி செய்து செய்து கொண்டு விடமுடியாது.

உதாரணமாக, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பலர் புரட்சிகரமான வெகுஜன போராட்டம் ஒன்றில் பங்கெடுத்துக் கொள்ள ஒருங்கே செல்கின்றனர், ஒரே புரட்சிகர நடைமுறையில் தான் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்கின்றனர். இருந்தபோதிலும் முடிவில் இந்த கட்சி உறுப்பினர்களிடம் ஏற்படும் பலாபலன்கள் முற்றிலும் மாறுபட்டனவாயிருக்கலாம். சிலர் வெகு விரைவில் முன்னேறி வரலாம்;முன்பு பின் தங்கியிருந்த சில உறுப்பினர்கள் இப்பொழுது மற்றவர்களை பின்னே விட்டுவிட்டு முன்னே வந்து விடலாம். சிலர் மிக மெதுவாக முன்னேறலாம். மற்றும் சிலர் போராட்டத்தின் போது, ஊசலாடுவதற்குக் கூட தொடங்கலாம்; புரட்சிகர நடைமுறை இவர்களை முன்னேறிச் செல்லும்படிச் செய்வதற்குப் பதில், பின்தங்கிவிடும்படிச் செய்து விடுகிறது. இதற்கெல்லாம் காரணமென்ன?

மேலும் ஓர் உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். நமது கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களில் பலர் **நீண்ட யாத்திரையில்** பங்கெடுத்துக் கொண்டனர், அது நம் கட்சி உறுப்பினர்களுக்கு மிகக் கடினமான ஒரு சோதனையாயிருந்தது. கட்சி உறுப்பினர்களிடமும், மேலும் விரிவான வெகுஜனங்களிடமும் கூட அது அளவுகடந்த முன்னேற்றத்தையும் உருப்படியான பலாபலன்களையும் உண்டு பண்ணிற்று. ஆனால் ஒருசில கட்சி அங்கத்தினர்களிடம் மட்டும் இதற்கு நேர் எதிரான பலாபலன்கள் ஏற்பட்டன. நீண்ட யாத்திரை, பத்து ஆண்டுகால உள்நாட்டு யுத்தம் ஆகிய கடுமையான போராட்டத்தைச சமாளித்துச் சென்றபின் இவர்கள் இந்த கடுமையான போராட்டத்தைக் கண்டு பீதியடைந்து விட்டனர். இவர்கள் பின்வாங்கிச் சென்று ஓடிவிடுவதற்கு முயற்சி செய்தனர். இறுதியில் இவர்கள் வெளியிலிருந்து வந்த தூண்டுதலின் விளைவாய் புரட்சி அணிகளைப் புறககணித்து ஓடி விட்டனர். நீண்ட யாத்திரையில் கட்சி உறுப்பினர்கள் பலரும் பங்கெடுத்துக் கொண்டனர். இருந்த போதி



லும் அவர்களிடம் முற்றிலும் மாறான பலாபலன்களும் விளைவுகளும் ஏற்பட்டன. இதற்கெல்லாம் காரணம் என்ன?

காரணமென்னவென்றால், இந்த கட்சி உறுப்பினர்கள் மாறுபட்ட புரட்சிகர குணாதிசயங்களைப் பெற்றிருந்தனர்; புரட்சிகர நடைமுறையில் அவர்கள் வெவ்வேறான திசைகளில் வளர்ந்து சென்றனர்! புரட்சிகர நடைமுறையில் அவரவர் எடுத்துக் கொண்ட சொந்த முயற்சிகளிலும் எந்த அளவிற்கு அவர்கள் சுயபயிற்சியை மேற்கொண்டனர்; சுயமுயற்சிக்காக அவர்கள் எம்முறைகளைச் கையாண்டனர் என்பதிலும் வித்தியாசங்களிருந்தன. புரட்சிவாதிகள் வெவ்வேறான குணாதிசயங்களைப் பெற்றிருப்பதாலும், அவர்களுடைய சொந்த முயற்சிகளிலும் சுய பயிற்சியிலுமுள்ள வித்தியாசத்தினாலும்,முற்றிலும் மாறான, ஏன் நேர் விரோதமான விளைவுகளும் பலாபலன்களும் ஏற்படக்கூடும். உங்கள் பள்ளிக்கூடத்திலும் இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும். பள்ளிக்கூடத்தில் நீங்கள் எல்லோரும் ஒரே மாதிரியான கல்வியையும் பயிற்சியையும் தான் பெறுகின்றீர்கள் இருந்தபோதிலும் உங்களுடைய குணாதிசயங்களும், அனுபவங்களும் கலாச்சார தரமும், சுயமுயற்சியும், சுயபயிற்சியின் அளவும்,அதற்கான முறைகளும் மாறுபட்டிருப்பதன் காரணமாய், மாறுபட்ட, ஏன் நேர்விரோதமான விளைவுகள் ஏற்படக்கூடும். ஆனால் பள்ளிகளில் கல்வியும் பயிற்சியும் பெற்ற பின்னர், சொற்ப தொகையானவர்கள் புரட்சியை விட்டு மேலும் அதிகமாய் விலகிச் சென்றுள்ளனரென்பதை நீங்கள் காணவில்லையா? இதுவும் அதே காரணத்தில் தான் ஏற்படுகிறது. எனவே, புரட்சிவாதி ஒருவர் தன்னைத்தானே மாற்றிக் கொண்டு மேன்மையுற வேண்டுமென்றால், சுயமுயற்சியும் சுய பயிற்சியும் புரட்சிப் போராட்டத்தில் பங்கெடுத்துப் பாடங்கற்றுக் கொள்வதும் அத்தியாவசியமானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

புரட்சிகரப் போராட்டத்தில் நீண்ட பல ஆண்டுகள் பங்கெடுத்து எஃகு போன்ற உறுதியடையும் ஒவ்வொரு புரட்சிவாதியும் ஒரு சிறந்த, அனுபவ மிகுந்த புரட்சிவாதியாக வளர்ச்சி பெற்று விடுவதில்லை. அவர் போதிய அளவிற்கு சொந்த முயற்சியையும், சுய-பயிற்சியையும் எடுத்துக் கொள்ளாததே இதற்குப் பிரதான காரணமாகும். சிறந்த அனுபவமிகுந்த புரட்சிவாதிகளாவதில் வெற்றி கண்டுள்ளோர் அனைவரும் கட்டாயம்புரட்சிப் போராட்டத்தில் நீண்ட பல ஆண்டுகள் பங்கெடுத்து எஃகு

போன்ற உறுதி பெற்றும் சுய-பயிற்சி மூலம் பண்படுத்தப் பட்டிருக்க வேண்டும். ஆதலால், நமது கட்சி உறுப்பினர்கள் அரசியல் ரீதியில் வளைந்து கொடுக்காத புரட்சிவாதிகளாக, உயர்ந்தரகப் புரட்சிவாதிகளாக வேண்டுமென்றால் விரிவான வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்டத்தில் பங்கெடுத்து, சகல கஷ்டங்களுக்கும் இன்னல்களுக்குமிடையே தங்களை எஃகு போன்ற உறுதியுடையோராய் செய்வதின் மூலமும் தங்களுடைய சுய-பயிற்சியை பலப்படுத்துவதின் மூலமும், புதுமை உணர்வை இழக்காமலிருப்பதாலும், தங்களுடைய சிந்தனா சக்தியை மேன்மையுறச் செய்வதின் மூலமும் தான் முடியும்.

கன்பியூஸியஸ் கூறினார்:

''பதினைந்தாவது வயதில், நான் கல்வி கற்பதில் என் சிந்தை முழுவதையும் ஈடுபடுத்தினேன். முப்பதாவது வயதில் நான் உறுதியுடனிருந்தேன். நாற்பதாவது வயதில் சந்தேகங்கள் என்னை விட்டகன்றன. ஐம்பதில் கடவுளின் கட்டளையை நான் தெரிந்து கொண்டேன். அறுபதில், உண்மையை ஏற்பதற்கு என்காது ஒரு நம்பகமான கருவியாயிருந்தது. எழுபதில் நீதிநெறியை விட்டகலாமல் என் மனதின் இச்சைப்படி நான் நடக்க வல்லவனானேன்.''

கன்பியூசியஸ் நாளாவட்டத்தில் எப்படி எஃகு போன்ற உறுதியடைந்து சுய-பயிற்சியால் பண்படுத்தப்பட்டார் என்பதை இங்கே எடுத்துரைக்கிறார். பிறக்கும் போதே தான் ஒரு ''ஞானி''யாகப் பிறந்து விட்டதாக அவர் கருதிக் கொள்ளவில்லை.

மென்சியஸ் கூறினார்:

''தெய்வம் எந்த மனிதனுக்காவது ஒரு மாபெரும் பொறுப்பை அளிக்கப் போகும் பொழுது, முதலில் அது துன்பத்தைக் கொண்டு அவர் மனதை பக்குவப்படுத்துகிறது; கடுமையான உழைப்பைக் கொண்டு அவர் தசைகளையும் எலும்புகளையும் பக்குவப்படுத்துகிறது. அவர் உடலைப் பட்டினி போட்டு வதைக்கிறது, அளவு கடந்த வறுமைக்கு அவரை ஆளாக்குகிறது. அவருடைய முயற்சிகளைப் பிரமிக்கச் செய்கிறது. இவ்வித முறைகள்மூலம் அது அவருடையமனதைத் தூண்டிவிடுகிறது. அவருடைய தன்மையை உறுதிப்படுத்துகிறது. அவரு



டைய குறைபாடுகளுக்கு சிகிச்சை செய்து அவற்றை அகற்றுகிறது''

மென்சியஸ் கூறியது வல்லமையுடைய மனிதர் ஒருவர் நாளாவட்டத்தில் உறுதியும் சுய பயிற்சியும் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய அந்த அப்பியாசத்திற்குப் பொருத்தமானதாகும். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் உலகையே மாற்றியமைப்பதென்னும், முன்பின் கண்டறியாத ஒரு ''மாபெரும் பொறுப்பை'' மேற்கொள்ள வேண்டியிருப்பதால், இத்தகைய முறையில் உறுதியும் சுய-பயிற்சியும் பெறுவது அவர்களுக்கு மேலும் அதிக அளவு அவசியமாகிறது.

கம்யூனிஸ்ட் கடசி உறுப்பினர்களின் பயிற்சியானது ஒரு புரட்சிகர பயிற்சியாகும். புரட்சிகரமான நடைமுறையிலிருந்தோ அல்லது விரிவான உழைப்பாளி வெகுஜனங்களின் குறிப்பாக தொழிலாளி வர்க்க வெகுஜனங்களின் நடைமுறை புரட்சி இயக்கத்திலிருந்தோ தொடர்பின்றி நம்மை கத்தரித்துக் கொண்டு நாம் நம்முடைய பயிற்சியை நடத்திவிடமுடியாது. புரட்சிகர நடைமுறையின் நலன்களுக்குப் பாடுபடுவதும், வெகுஜனங்களின் நடைமுறை புரட்சி இயக்கத்தை மேலும் அதிகமாக பயன்தரத்தக்கவாறு வழி நடத்திச் செல்வதும்தான் நம்முடைய பயிற்சியின் ஒரே நோக்கமாகும். நம்முடைய பயிற்சிக்கும் சமூக நடைமுறையிலிருந்து தனித்து நிற்கும் ஏனைய கருத்து முதல்வாத, உருவவாத ஸ்தூலமற்ற பயிற்சிகளுக்குமுள்ள வித்தியாசம் இதுவே. இவ்விஷயம் பற்றி பின்னால் மீண்டுமொருதரம்சுருக்கமாக விளக்குகிறேன்.

பிரயாசை மிகுந்த, கடினமான, மேலும் வெற்றி பெறாத புரட்சிகர நடைமுறையில் மட்டுமின்றி சாதகமான வெற்றிகரமான புரட்சிகர நடைமுறையிலும் நம் கட்சி உறுப்பினர்கள் தங்களைப் புடம் போட்டு உறுதி பெறச் செய்யவேண்டும். தங்கள் சுய பயிற்சியைத் தீவிரப்படுத்த வேண்டும். கட்சி உறுப்பினர்கள் சிலர் வெற்றியைக் கண்டு உற்சாகமடைந்ததும் தம் நிலையிழந்து விடுகின்றனர்; வெற்றி மயக்கத்தில் மூழ்கி விடுகின்றனர். வெற்றியும், விரிவான மக்கள் பகுதியினர் அளிக்கும் புகழ் உரைகளும், வெகுஜனங்களிடையே ஓரளவு அவர்களுக்குள்ள செல்வாக்கும், அவர்களை நெறியற்றவர்களாகவோ செருக்குடையவர்களாகவோ அதிகார மமதை கொண்டவர்களாகவோ, அல்லது லஞ்ச வெறியர்களாக சீர்கேடுற்றவர்களாகக் கூட மாற்றிவிடுகின்றன. முன்பு

தங்களிடமிருந்த புரட்சிகர ஆர்வத்தையும் உணர்வையும் அவர்கள் அறவே இழந்து விடுகின்றனர்.

இந்த தனிப்பட்ட சில உதாரணங்கள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களிடம் அடிக்கடி காணப்படுகின்றன. இத்தகைய சம்பவங்கள் கட்சியினுள் இருந்து வருவதானது, நம் கட்சி உறுப்பினர்களுக்கு ஒரு பெரிய எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; ஏனெனில் நமக்கு முந்திய தலைமுறைகளிலிருந்த புரட்சிவாதிகளிடம் இத்தகைய சம்பவங்கள் அனேகமாய் தவிர்க்கமுடியாத ஒரு நியதியாகவே இருந்துள்ளன. ஆனால் நமது கட்சியில் கட்டாயம் இத்தகைய சம்பவங்களை சகித்துக்கொண்டிருக்கமுடியாது. நமக்கு முந்திய தலைமுறைகளிலிருந்த புரட்சிவாதிகள் புரட்சி வெற்றி பெறும் வரையில், தாங்கள் வெற்றியடையும் வரையில், சுரண்டப்படும் வெகுஜனங்களின் முற்போக்குடைய மக்கட் பகுதிகளின் கோரிக்கைகளை பிரதிபலிக்கும் சக்தியுடையோராயும் தங்களுடைய புரட்சிகர குணதிசயங்களை பாதுகாத்துக் கொள்ளும் வல்லமையையுடையோராயுமிருந்தனர். ஆனால் புரட்சி வெற்றி பெற்று தாங்கள் வாகைமாலை சூட்டிக் கொண்டவுடனே, அவர்கள் பெரும்பாலும் லஞ்சத்துக்கும் அதிகார வர்க்கமமதைக்கும் ஆளாகி சீர்கேடுற்று தங்களுடைய புரட்சிகரமான குணதிசயங்களையும் தங்களுடைய முற்போக்குத் தன்மையையும் கைவிட்டுவிட்டு புரட்சிக்கும் சமூகத்தின் பரிணமைகர வளர்ச்சிக்கும் குறுக்கே நிற்கும் தடைச் சுவர்களாகி விட்டனர்.

சென்ற நூறு ஆண்டுகளில், இன்னும் சமீபத்தில் கூற வேண்டுமானால் சென்ற ஐம்பது ஆண்டுகளில், சீனத்தில் புரட்சிவாதிகள் பலர் ஓரளவு வெற்றி பெற்று ஒரு பொறுப்பு வாய்ந்த பதவிக்கு உயர்த்தப்பட்ட மறுகணமே, அவர்களிடம் லஞ்சத்தின் அறிகுறிகளும் சீரழிவின் அறிகுறிகளும் தென்படத் தொடங்கி விட்டன. சென்ற தலைமுறைகளைச் சேர்ந்த இந்த புரட்சிவாதிகளின் வர்க்க அடிப்படையே இதற்குக் காரணமாயிருந்தது. சென்றகால புரட்சிவாதிகள் சுரண்டும் வர்க்கங்களின் பிரதிநிதிகளாயிருந்தால், அவர்களுடைய புரட்சி வெற்றி பெற்றவுடன் அவர்கள் இயல்பாகவே மக்களுக்கெதிராய் திரும்பி, சுரண்டப்படும் வெகுஜனங்களைக் கொடுமைப்படுத்தினர்; இவ்வாறுஅவர்கள் புரட்சியையும் சமூகத்தின் பரிணமை வளர்ச்சியையும் தொடர்ந்து முன்னேறிச் செல்லாமல் தடுத்து நிற்கும் தடைச் சுவர்களாயினர். சென்றகால புரட்சிவாதிவாதிகள், புரட்சிவெற்றி பெற்றபின், லஞ்சத்தாலும் அதிகார வெறியாலும் பீடிக்கப்பட்டு, சீரழிந்து தங்களுடைய புரட்சிகர குணதிசயங்களை இழந்தனரென்பது தவிர்க்க முடியாத விதியாயிருந்தது.



ஆனால் இது கம்யூனிஸ்ட்களாகிய நம்மைப் பொறுத்த வரையில் உண்மையாகாது, உண்மையாகவும் முடியாது. நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் சுரண்டப்படும் தொழிலாளிவர்க்கம் எவரையும் சுரண்டவில்லையாதலால், இந்த வர்க்கம் புரட்சியை அதன் முடிவு வரைக்கும் நடத்திச் சென்று இறுதியில் லஞ்சம், அதிகார மமதை, சீரழிவு முதலியவற்றின் சகலவகைகளையும் அறவே துடைத்தெறியும் வல்லமை வாய்ந்தது. லஞ்சம், அதிகார மமதை சீரழிவு முதலியவற்றின் சகலவகைகளையும் எதிர்த்து, விட்டுக் கொடுக்காமல் போரட்டம் நடத்தும் பொருட்டு கறாரான ஸ்தாபன அமைப்பும் கட்டுப்பாடுமுடைய கட்சி இயந்திரத்தையும் அரசாங்க இயந்திரத்தையும் அது கட்ட முடியும்; கட்சி, அரசாங்க இயந்திரத்தை அது இடைவிடாமல் கழுவி சுத்தம் செய்து தங்களுடைய வேலையில் லஞ்சத்திற்கும் அதிகார வெறிக்கும் சீரழிவிற்கும் இடமளிக்கும் ஆட்களை (இவர்கள் எவ்வளவு தான் ''பெரும் புள்ளிக''ளாக இருந்தாலும் சரி) அகற்றி, கட்சியாலும் அரசாங்கத்தாலுமான இயந்திரத்தின் பரிசுத்தத்தைப் பாதுகாக்கமுடியும்.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சியிடம் காணப்படும் இந்த தலைசிறந்த அம்சம் சென்ற கால புரட்சிகர கட்சிகளிடம் காணப்படவில்லை, காணப்படவும் முடியாது. ஆதலால் நம் கட்சி உறுப்பினர்கள் இந்த தலைசிறந்த அம்சத்தை மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். புரட்சி வெற்றி பெறும் போதும் நமது செல்வாக்கும் அதிகாரமும் அளவு கடந்து மேலோங்கி உயரும் போதும் கூட, நமது சுய-பயிற்சியை தீவிரப்படுத்திக் கொள்வதற்கும் பரிசுத்தமான நமது புரட்சிகர குணதிசயங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் கட்சி உறுப்பினர்கள் விசேஷ கவனமெடுத்துக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் இறுதியில் நாம், வெற்றி பெற்றபின் சீரழிந்து போன சென்றகால புரட்சிவாதிகளின் பாதையில் செல்லாதிருக்க முடியும்.

புரட்சியில் புடம் போடப்பட்டு எஃகு போன்ற உறுதியும் பயிற்சியும் பெறுவது நம் கட்சி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் முக்கியமானதாகும். குறிப்பாக தொழிலாளி வர்க்கமல்லாத மற்ற வர்க்கங்களிலிருந்து தோன்றியுள்ள புதியகட்சி உறுப்பினர்களுக்கு

இது இன்னும் முக்கியமானதாகும். இதற்குக் காரணமென்ன? இத்தகைய கட்சி உறுப்பினர்கள் தொழிலாளி வர்க்கமல்லாது மற்றொரு வர்க்கத்திலிருந்து தோன்றியவர்கள் என்பது தான் இதற்கு முதலாவது காரணமாகும். தொழிலாளி வர்க்கத்திடமிருந்து தோன்றியுள்ள கட்சி உறுப்பினர்கள் தொழிலாளி வர்க்கத்தின் இயல்பான குணதிசயங்களைப் பெற்றிருக்கின்றனரென்று லெனின் கூறினார். எனவே மற்ற வர்க்கத்திலிருந்து தோன்றும் கட்சி உறுப்பினர்கள் மற்றவர்க்கங்களின் இயல்பான குணதிசயங்களைப் பெற்றுள்ளனரென்பது இதிலிருந்து புலப்படுகிறது. இவர்கள் இன்று கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டிருந்த போதிலும், அனேகமாய் கம்யூனிஸ்ட் அல்லாத சித்தாந்தங்கள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் மீதமிச்சங்களை இன்னமும் கைவிடாமல் வைத்துக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் புதிய உறுப்பினர், அதிக அளவு உறுதிப்பாடு அடையாதவர்கள் என்பது இரண்டாவது காரணமாகும். ஆதலால் சிறந்த புரட்சிவாதிகளாகு முன்னர் அவர்கள் புடம் போடப்பட்டு உறுதிப்பாடு அடைய வேண்டும், பயிற்சி பெற்று பண்படுத்தப்படவேண்டும்.

புடம் போடப்பட்டு உறுதிப்பாடு அடைவதும் பயிற்சி பெற்று பண்படுவதும் கட்சி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அவர் தொழிலாளி வர்க்கமல்லாத வேறு ஒரு வர்க்கத்தில் தோன்றிய புதிய உறுப்பினரானாலும் சரி, அல்லது நீண்டகால உறுப்பினரோ, தொழிலாளி வர்க்கத்திலிருந்து தோன்றிய உறுப்பினரானாலுங்கூட சரி; முக்கியமானதாகும். ஏனெனில் நமதுகம்யூனிஸ்ட்கட்சி ஆகாசத்திலிருந்து குதித்துவிடவில்லை; அது சீன சமூகத்திலிருந்து தான்தோன்றிற்று; நமது கட்சியிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் இந்த அழுகிப்போன பழைய சீன சமூகத்திலிருந்துதான் வந்திருக்கிறார். இன்றும் இந்த சமூகத்தில்தான் வாழ்ந்து வருகிறார் எனவே நம் கட்சி உறுப்பினர்கள் பழைய சமூகத்தின சித்தாந்தம் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றின் மீதமிச்சங்களை அதிகமாகவோ குறைவாகவோ தங்களுடன் கொண்டு வந்துள்ளனர். பழைய சமூகத்தைச் சேர்ந்த அழுகிய விஷயங்கள் யாவற்றுடனும் இடைவிடாமல் தொடர்பு கொண்டுள்ளவர்களாகவே அவர்கள் இருந்து வருகின்றனர். தொழிலாளி வர்க்க முன்னணிப்படையான நாம் நம்முடைய பரிசுத்தத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் அதை மேலும் விருத்தி செய்யும் பொருட்டும், இன்னும் நம்முடைய சமூகத் தன்மைகளையும் புரட்சிகர வேலை முறையையும் உயர்த்திக் கொள்ளும் பொருட்டும், நாம் சகலவழிகளிலும் நம்மை



மேலும் உறுதிபடுத்திக் கொள்வதும் மேலும் பயிற்சி செய்து பக்குவப்படுத்திக் கொள்வதும் அவசியமாகும்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சுய-பயிற்சியை மேற்கொள்ள வேண்டுமென்பதற்கு இவையே காரணமாகும்.

## மார்க்ஸ்-எங்கெல்ஸ்-லெனின்- ஸ்டாலினுடைய சிறந்த மாணுக்கர்களாவதற்கு முயற்சி செய்க!

ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக வேண்டுமென்றால், கட்சியின் சட்டதிட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள யோக்கியதாம்சங்களை மட்டும் பெற்றிருந்தால் போதும்.

அதாவது, கட்சியின் திட்டத்தையும் சட்டதிட்டங்களையும் ஏற்றுக் கொண்டு, கட்சி சந்தா செலுத்தி, கட்சியின ஸ்தாபனங்கள் ஒன்றில் தனக்கிடப்படும் வேலைகளை மேற்கொள்ளும் எவரும் கட்சியின் உறுப்பினர் ஆகலாம். கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் பெற்றிருக்கவேண்டிய குறைந்தபட்ச யோக்கியதாம்சங்கள் இவை. இந்தயோக்கியதாம்சங்கள் இல்லாமல் யாரும்கட்சி உறுப்பினராக முடியாது. ஆனால் நமதுகட்சி உறுப்பினர்ஒவ்வொருவரும் மேற்கூறிய குறைந்தபட்ச யோக்கியதாம்சங்களை மட்டுமே கொண்டவர்களாக இருக்கக்கூடாது; இந்தக் குறைந்தபட்ச யோக்கியதாம்சங்களுடன் மட்டுமே திருப்தி அடைவதோ அல்லதுநின்றுவிடுவதோ கூடாது. மேற்கொண்டும் முன்னேற்றமடைவதற்கும் தமது மார்க்ஸிஸ—லெனினிச உணர்வையும் ஞானத்தையும் அபிவிருத்தி செய்து கொள்வதற்கும் இடையறாது முயலவேண்டும். இது கட்சிக்கும், புரட்சிக்கும் நாம் செய்ய வேண்டிய கடமையுமாகும். இக்கடமையை கட்சி உறுப்பினர் எவரும் தட்டிக் கழிக்கக் கூடாது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினால் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய கட்சி சட்டதிட்டங்களிலும் கூட, இக்கடமை சேர்க்கப்பட்டுள்ளது. ஆயினும், இக்கடமையை திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்யும் பொருட்டு நமது கட்சி உறுப்பினர்கள் அவர்களது உறுதிப்பாட்டையும், பயிற்சியையும் தீவிரப்படுத்த வேண்டும்.

ஆகவே, எஃகு போன்ற உறுதியை அடைவதிலும், பயிற்சி பெறுவதிலும் நமது கட்சி உறுப்பினர்கள் வெறும் குறைந்தபட்ச யோக்கியதாம்சங்களை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாமல், அதிகபட்ச யோக்கியதாம்சங்களை [illegible] உயர்வதையே குறிக்கோளாகக் கொண்டு இந்த அதிகபட்ச

யோக்கியதாம்சங்கள்தான் என்ன? இவற்றை வரையறுத்துக் கூறுவதென்பது தற்பொழுது மிகவும் கடினமாகும். ஆயினும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியவர்கள் தமது வாழ்நாட்களில் கூறிய வார்த்தைகள், செய்த செய்கைகள், பெற்றிருந்த குணாதிசயங்கள், சாதித்த மகத்தான சாதனைகள் ஆகிய இவையனைத்தும் நமக்கு உதாரணங்களாகவும், நமது பயிற்சிக்குத் தேவையான பிரதான விதிகளை எடுத்துக்காட்டக்கூடியவைகளாயும் விளங்குகின்றன. பயிற்சி என்கிறோமே, அதற்கு இங்கு என்ன அர்த்தம்? சகல துறைகளிலும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர்களின் தரத்திற்கு நாம் நமது குணாதிசயங்களை உயர்த்திக் கொள்ளவேண்டும் என்பதேயாகும். ஆகவே, இவர்களுடைய தலைசிறந்த மாணாக்கர்களாவதற்கு நாம் முயல வேண்டும். சுப்ரீம் சோவியத் தேர்தல்கள் சம்பந்தமான ஒரு பிரசங்கத்தில் தோழர் ஸ்டாலின் கூறினார்:—

''வாக்காளர்களாகிய பொதுமக்கள், தங்கள் பிரதிநிதிகள், அவர்களுடைய வேலைகளைச் செய்துமுடிக்கும் திறமையுடையவர்களாக இருக்கவேண்டும் என்று கோரவேண்டும். பிரதிநிதிகள் தங்கள் வேலைகளில், அரசியல் ''பிலிஸ்டைன்''களின் நிலைக்குத் தாழ்ந்துவிடக்கூடாது; அவர்கள் தங்கள் பதவிகளில், லெனினைப் போன்ற அரசியல் ஊழியர்களாகப் பணியாற்ற வேண்டும்; பொதுநல ஊழியர்களாகச் செயலாற்றும் பொழுது அவர்கள் லெனினைப்போல தெளிவுடனும் உறுதியுடனும் இருக்கவேண்டும்; லெனினைப் போலவே, போராட்டத்தில் பயமின்றியும், மக்களின் பகைவர்களிடம் ஈவிரக்கமின்றியும் இருக்க வேண்டும். நிலைமை சிக்கலாகத் தொடங்கும் பொழுதும், ஏதேனும் அபாயம் ஏற்படும் பொழுதும், அவர்கள் லெனினைப்போலவே கிஞ்சித்தும் பீதியின்றியும், பீதியின் சாயலின்றியும் இருக்க வேண்டும். பரிபூரணமான, விவரமான கண்ணோட்டமும், சாதகமானவற்றையும் பாதகமானவற்றையும் விரிவான முறையில் சீர்தூக்கிப்பார்க்கும் திறமையும், தேவையாயிருக்கும் அளவுக்கு சிக்கலான பிரச்சனைகளைப் பற்றி முடிவு செய்வதில் நுண்ணறிவும், தீர்க்கமான ஆலோசனை செய்யும் சக்தியும் லெனினைப் போல் பெற்றிருக்க வேண்டும். லெனினைப் போலவே அவர்கள் ஒழுக்கமும் நேர்மையும் பெற்றிருக்க வேண்டும். லெனினைப் போலவே அவர்களும் மக்களை நேசிக்க வேண்டும் என்று கோர வேண்டும்.''

லெனினைப் பார்த்து கற்றறிந்து கொள்வது எப்படி என்பதற்கு எளியதோர் விளக்கமிது; லெனினுடைய தலைசிறந்த சீடரின் சித்திரமிது. இத்தகைய ஒரு சீடராகும் பொருட்டு, ஸ்டாலின்



கூறியுள்ள அதேமுறையில் லெனினைப் பார்த்து கற்றறிந்து கொள்வதே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுடைய பயிற்சியின் குறிக்கோளாகும்.

மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் போன்ற புரட்சி மேதைகளின் மகத்தான குணாதிசயங்களை அடைவதென்பது சாத்தியமல்ல என்றும், இப்பெரியார்களின் தரத்திற்கு நாம் நமது குணாதிசயங்களை உயர்த்திக் கொள்வது என்பதும் சாத்தியமல்ல என்றும் சிலர் கூறுகின்றனர். இவ்வாறு கூறுபவர்கள், மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியவர்களை அற்புதமான மாயப் பிறவிகளாகக் கருதுகின்றனர். இது சரிதானா? சரியல்ல என்று நான் நினைக்கிறேன்.

நமது தோழர்கள், தொழிலாளி வர்க்கத்தின் விமோசனத்திற்காகப் போராடும் முன்னணிப் படையினராக, உண்மையாகவும், உறுதியாகவும், உணர்ச்சி பூர்வமாகவும், முரண்பாடின்றியும் செயலாற்ற வேண்டும்; வாழ்க்கையைப் பற்றிய உண்மையான கம்யூனிஸ்ட் கண்ணோட்டமும், கம்யூனிஸ்ட் உலகக் கண்ணோட்டமும் கொண்டிருக்க வேண்டும்; தற்பொழுது தொழிலாளி வர்க்கமும், பொதுமக்களும் நடத்திவரும் மகத்தான புரட்சிகர இயக்கங்களினின்று ஒரு கணமும் பிரிந்து நிற்கக்கூடாது; மென்மேலும் தாமாகவே கற்றறிந்து கொள்வதற்கும் எஃகு போன்ற உறுதி பெறுவதற்கும், பயிற்சி பெறுவதற்கும் பெருமுயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு நமது தோழர்கள் செயல்படும் வரையில், அவர்களால் தமது குணாதிசயங்களை உயர்த்திக் கொள்வதற்கும், லெனினைப் போலவே, ''தெளிவும் உறுதியும்'' பெறுவதற்கும் லெனினைப் போலவே ''போராட்டத்தில் பயமின்றியும் மக்களின் பகைவர்களிடம் ஈவிரக்கமின்றியும்'' இருப்பதற்கும், ஆபத்துகளுக்கும் கஷ்டங்களுக்கும் மத்தியில் லெனினைப் போலவே ''சகலவித பீதியிலிருந்தும், பீதியின் சாயலிலிருந்தும், விடுபட்டவர்களாக'' இருப்பதற்கும், லெனினைப் போலவே, ''ஒழுக்கமும் நேர்மையும் பொருந்தியவர்களாக'' இருப்பதற்கும், லெனினைப் போலவே ''மக்களை நேசிப்ப''தற்கும் முற்றிலும் சாத்தியமே. அது மட்டுமல்ல; மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியவர்கள் பெற்றிருந்த மகத்தான திறமை, பரந்த விஞ்ஞான அறிவு, கற்றறிவதற்கு அவர்களிடமிருந்த உறுதி, அன்று நிலவிய சுற்றுச் சார்பு ஆகிய இவ்வனைத்திற்கும் நம்முடைய சாதாரணத் தோழர்களின் நிலைக்கும் வெகுதூரம் என்பதும், தொழிலாளி வர்க்கப் புரட்சி சம்பந்தமான தத்துவ ஞானத்திலும், பயிற்சியிலும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியவர்களைப் போன்று ஆழ்ந்த

அறிவும், பாண்டித்தியமும் பெறமுடியும் என்று நமது தோழர்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் எதிர்பார்க்க முடியாது என்பதும் உண்மையே என்றாலுங் கூட மேற்கூறிய முறையில் நமது தோழர்கள் செயல்படும் வரையில், அவர்கள் சிக்கலான பிரச்னைகளைத் தீர்ப்பதிலும், பிரச்னைகளைப்பற்றி பல்வேறுகோணங்களினின்று சிந்தித்து ஆராய்வதிலும், அவற்றைப் பற்றிய சாதகமான பாதகமான அம்சங்களை எடை போடுவதிலும், மார்க்சிஸ—லெனினிச வழிமுறையைக் கையாளும் வல்லமை பெறுவது முற்றிலும் சாத்தியமே. இதையே வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், கஷ்டப்பட்டு படிக்கவும், பயிற்சியும் உறுதிப்பாடும் பெறவும் நாம் உறுதி கொண்டிருக்கும் வரையில், பொது மக்களின் புரட்சிகரமான இயக்கத்திலிருந்து நாம் சற்றும் ஒதுங்கி நிற்காத வரையில், மார்க்சிச—லெனினிச வழிமுறையில்பாண்டித்தியம் பெற்றுவரும் வரையில், நாம் நமது குணாதிசயங்களை, "லெனின் ரகத்தைச்" சேர்ந்த ராஜதந்திரிகளின் தரத்திற்கு உயர்த்திக் கொள்வது என்பது முற்றிலும் சாத்தியமே. இவ்வாறு நாம் நமது வேலையிலும் போரட்டத்திலும்மார்க்ஸ்—ஏங்கெல்ஸ்—லெனின்—ஸ்டாலின் ஆகியோரின் வேலைமுறையைக் கையாள முடியும். அதாவது. "லெனின் ரகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்களாகவும்", "அரசியல் பிலிஸ்டைன்"களின் நிலைக்குசிறுமைப்படாதும் இருக்க முடியும்.

மென்ஷியஸ் கூறினார்: "ஒவ்வொருவரும்ஃயோவாகவோ அல்லது ஷன்னகவோ ஆக முடியும்."

இதுவும் மேற்கூறிய அதே விஷயத்தைத்தான் சுட்டிக் காட்டுகிறது. மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் போன்ற மாபெரும் புரட்சிவாதிகளின் குணாதிசயங்களை நாம் முதலில் காணும்போது நாம் அவர்களைப் போல் ஆவதற்கு முடியாதென்று மனச்சோர்வடைவதோ, முன்னேறிச் செல்லத் தயங்குவதோ கூடாது. அவ்வாறு மனச்சோர்வடைவதும், தயங்குவதும் முன்பு கூறிய "அரசியல் பிலிஸ்டைன்" நிலைக்குத் தாழ்வதாகும்; "சித்திரம் செதுக்க முடியாத உளுத்துப் போன மரக்கட்டை" போல் "மண்சுவர்" போல் ஆவதாகும்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலினிடமிருந்து கற்றறிந்து கொள்ளும் விஷயத்தில், பலர் பலவித போக்குகளை உடையவர்களாகவுள்ளனர்.

---

குறிப்பு: ஃயோ, ஷன்:— பண்டைய சீன சரித்திரத்தில், இவ்விருவரும் தயாளகுணத்திற்கும் விவேகத்திற்கும் பிரக்கியாதி பெற்ற இதிகாசப் பிரமுகர்கள்.



ஒரு போக்கினர், மார்க்ஸிச—லெனினிசத்தின் சாரத்தை ஊடுருவிப் பார்க்காமல், மார்க்ஸையும், லெனினையும படிக்கிறார்கள் ஆனல் அவர்கள் மார்க்சிசம்— லெனினிசம் பற்றி வாய் வீச்சு அடிக்கும் வல்லமையைத்தான் பெறுகிறார்கள். அவர்கள், மார்க்ஸிஸ, லெனினிஸ இலக்கியங்களை திரும்பத் திரும்ப படிக்கிறார்கள் என்றாலும், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியவர்களின் நூல்களிலுள்ள கோட்பாடுகளையும், முடிவுகளையும் மன பாடம் செய்கின்றார்கள் என்றாலும், இந்த கோட்பாடுகளையும் முடிவுகளையும், ஸ்தூலமான நடைமுறைபிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளாக உபயோகிக்கும் சக்தியற்றவர்களாயிருக்கின்றனர். இந்த கோட்பாடுகளையும், முடிவுகளையும் குறித்து வைத்துக் கொண்டு பாராமல் ஒப்பிப்பதிலும், இவற்றை யாந்திரீக முறையில் உபயோகிப்பதிலும் ஆத்ம திருப்தி அடைந்து விடுகின்றனர். மார்கசிசக் கொடியின் கீழ்தான் பணியாற்றுகிறார்கள் என்றாலும், தம்மை "உண்மை"யான மார்க்சிஸ்டுகள் என்றுதான் கருதிக் கொள்கின்றனர் என்றாலும், அவர்கள் உண்மையான மார்க்சிஸ்டுகள் ஆகமாட்டார்கள். அவர்களுடைய வேலைமுறைகள் மார்க்சிசம்—லெனினிசத்தின் வேலைமுறைகளுக்கு நேர் எதிரானவை.

லெனினின் 50வது பிறந்ததின விழாவை முன்னிட்டு தோழர் ஸ்டாலின் எழுதிய ஒரு கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்:—

'மார்க்சிஸ்டுகளில் இரண்டுவிதமான குழுக்கள் உள்ளன. இவ்விரண்டு குழுவினரும் மார்க்சிசப் பதாகையின் கீழ்தான் வேலை செய்கின்றனர். இவர்கள் தம்மை "உணமை"யான மார்க்சிஸ்டுகள் என்றுதான் கருதிக் கொள்கின்றனர். ஆயினும், இவ்விரு குழுவினரும் ஒருக்காலும் ஒரே மாதிரியானவர்கள் ஆகமாட்டார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால், இவ்விரு குழுவினரையும் ஒரு பெரும் கடல் பிரித்து வைத்திருக்கிறது. ஏனெனில் இவ்விரு குழுவினரின் வேலை முறைகள் ஒன்றுக்கொன்று நேர் எதிரானவை.

"முதற்குழு, மார்க்சிசத்தை மேம்போக்காக ஏற்றுக் கொள்வதுடன் நின்றுவிடுகிறது. இக்குழு மார்க்சிசத்தை சம்பிரதாய பூர்வமாக ஏற்றுக் கொள்வதுடன நின்றுவிடுகிறது. மார்க்சிசத்தின் சாரத்தை கிரகிக்க சக்தியற்றதாக அல்லது விருப்பமில்லாததாக இருப்பதால், மார்க்சிசத்தின் ஜீவனுள்ள,

புரட்சிகர கோட்பாடுகளை இது அர்த்தமற்ற வறட்டு சூத்திரங்களாக மாற்றுகிறது. தனது நடவடிக்கைகளுக்கு இது மார்க்சிடமிருந்து எடுக்கப்படும் மேற்கோள்களையே ஆதாரமாகக் கொண்டுள்ளதேயன்றி அனுபவத்தையோ, நடைமுறை வேலையிலிருந்து கிடைக்கும் போதனைகளையோ ஆதாரமாகக் கொள்வதில்லை.

''இக்குழு எடுக்கும் முடிவுகளும் நிர்ணயிக்கும் திசைவழிகளும் யதார்த்த உண்மைகளை அலசி ஆராய்வதிலிருந்து ஏற்படுவதில்லை. அதற்கு மாறாக சரித்திரபூர்வமான ஒப்பு உவமைகள் மூலமும் நிலைமைகளிடையே ஒத்த அம்சங்களைப் பார்ப்பதின் மூலமும் தான் இவர்களது முடிவுகளும் நிர்ணயிப்புகளும் ஏற்படுகின்றன. சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள மாறுபாடே, இந்தக் குழுவின் பிரதான வியாதி.''

மார்க்ஸ்—லெனினிடமிருந்து பாடம் கற்று போதனை பெறுவது சம்பந்தமாக கடைபிடிக்கப்படும் போக்குகளில் இது ஒன்று.

முதல்குழுவைச் சேர்ந்தவர்கள் சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஒருகாலத்தில் ஏராளமாக இருந்தனர் எனலாம். இவர்கள் மிகமிக மோசமானவர்கள். மேலே ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளவர்களையும் மிஞ்சியவர்களாக இருந்தனர். உண்மையில, மார்க்சிசம் லெனினிசத்தைப் ''பயில''வேண்டும்என்றஎண்ணம் இவர்களுக்கு ஒருபோதும் இருந்ததில்லை. மார்க்ஸ், லெனின் ஆகியோரின் மகத்தான தொழிலாளி வர்க்க இயல்பையும் மகோன்னத பண்புகளையும் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. ''கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி''யைப் போல், மார்க்ஸ்—லெனினின் ஒரு சில வேலை முறைகளை அவர்கள் மேம்போக்கான ரீதியில் ''காப்பி அடிக்க'' முயற்சித்தனர்; மனம்போன போக்கில் இங்கும் அங்குமிருந்து மார்க்சிச-லெனினிச சொற்றொடர்கள் சிலவற்றை எடுத்துக் கையாண்டனர்; சீனாவின் மார்க்சும், லெனினும் தாம் தான் என்று அவர்கள் நினைத்துக் கொண்டனர். கட்சிக்குள் அவர்கள் தான் மார்க்ஸும் லெனினும் என்று வெளிச்சம் போட்டனர்; மார்க்ஸுக்கும் லெனினுக்கும் நாம் எவ்வளவு மரியாதை செலுத்துகிறோமோ அவ்வளவு மரியாதை அவர்களுக்கும் செலுத்த வேண்டுமென்றும் அவர்களைத் ''தலைவர்க''ளாக ஏற்றுக்கொண்டு ஆதரிப்பதுடன் விசுவாசமும் அன்பும் காட்ட வேண்டுமென்றும கட்சி உறுப்பினர்களைக் கேட்கும் அளவுக்கு இறுமாப்புடையோராயிருந்தனர். மறும மிகுந்த துணிச்சலுடன் தம்மைத் தாமே ''தலைவர்களாக'' நியமித்துக் கொண்டனர்; பிறருடைய பிரேரணையில்லாமலேயே பொறுப்புள்ள ஸ்தானங்களில் ஏறி அமர்ந்து கொண்டனர்; பழங்காலக் குடும்பத் தலைவர்களைப் போல கட்சிக்குள் கட்டளைகள் பிறப்பித்தனர்; கட்சிக்கே அவர்கள் ''கலவி'' புகட்ட முயன்றனர்; கட்சிக்குள் சகல உரிமைகளையும் துஷ்பிரயோகம் செய்தனர்; அக்கிரமமான முறையில் கட்சி உறுப்பினர்களைத் தாக்கினர்; தண்டித்தனர்; உரிமைகளைப் பறித்து கொடுமை புரிந்தனர். இவர்களுக்கு மார்க்ஸிசம்—லெனினிசத்தை உண்மையாகவே பயில வேண்டும் என்ற எண்ணமோ அல்லது மார்க்சிசம்—லெனினிசத்தின் வெற்றிக்காகப் போராட வேண்டும் என்ற எண்ணமோ இருந்ததில்லை. உண்மையில் அவர்கள் கட்சிக்குள் இருந்த சந்தர்ப்பவாதிகளேயாவர்; கம்யூனிசப்படையிலே ஒளிந்து கொண்டிருந்த தரகர்களும் கருங்காலிகளுமேயாவர். நிச்சயமாக இத்தகையோரை கட்சி உறுப்பினர்கள் எதிர்த்துப் போராடி அம்பலப்படுத்தி சரித்திரத்தின் குப்பைத் தொட்டியிலே புதைத்து விட வேண்டும். நம் கட்சி உறுப்பினர்கள் இதேபோல் புதைத்தும் உள்ளனர்.

ஆயினும் இன்று கட்சிக்குள் இந்த ரகத்தைச் சேர்ந்தோரை, அறவே ஒழித்து விட்டோமென்று கூறமுடியுமா? முடியாது! இன்னமும் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கின்றனர்.

''இரண்டாவது குழு''வினர் மேற்கூறிய முதல்வகையினருக்கு நேர் விரோதமானவர்கள், முதன் முதலாக மார்க்ஸ்; ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலினின் மாணாக்கர்களாகவே இவர்கள் தங்களை பாவிக்கின்றனர். மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலினின் மகோன்னத நிலைக்குக் காரணமாயிருந்த, அவர்களுடைய போதனைகளின் சாரத்தையும் உட்பொருளையும், அவர்களுடைய வழிமுறைகளையும் உணர்ந்து பாண்டித்தியம் பெற பாடுபடுகின்றனர். மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலினிடமுள்ள மகத்தான குணாவிசேஷங்களையும் தொழிலாளி வர்க்கப் புரட்சி வீரர்கள் என்ற முறையில் அவர்கள் பெற்றிருந்த அரும் பெரும் பண்புகளையும் உதாரணமாகக் கொண்டு, புரட்சிகர போராட்டங்களின் போது அரும்பாடுபட்டு தமது சொந்த பயிற்சியை மேற்கொள்ளுகின்றனர். பிரச்சினைகள் சம்பந்தமாகவும், மக்கள் சம்பந்தமாகவும் தாம் அனுஷ்டிக்கும் போக்கும், தமது சொந்த நடத்தையும் மார்க்சிசம்—லெனினிசத்தின் உண்மையான தன்மைக்குப்பொருத்தமானது தானா என்பதைப் பற்றியும் பரிசோதித்துப் பார்த்துக்

கொள்கின்றனர். இவர்களும்கூட மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் நூல்களை மீண்டும் மீண்டும் படிக்கத்தான் செய்கின்றனர். ஆனால் யதார்த்த உண்மைகளை அலசி ஆராய்வதற்கே இவர்கள் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றனர். தாம் வசிக்கும் நாட்டில் அந்த நேரத்தில் தொழிலாளி வர்க்கத்தை எதிர்நோக்கும் சூழ்நிலைமையின் சகல அம்சங்களின் விசேஷ குணாம்சங்களையும் அவர்கள் தீர்க்கமாக சீர்தூக்கிப் பார்த்து அவற்றிலிருந்து தாங்களே சுயமாக முடிவுகளுக்கு வருகின்றனர். மார்க்சிசம் லெனினிசத்தின் கோட்பாடுகளையும் முடிவுகளையும் மனப்பாடம் செய்து கொள்ளுவதோடு அவர்கள் திருப்தி அடைந்து விடாமல், சகல புரட்சிகரமான போராட்டங்களையும் உறுதியான முறையில் நடத்திச் செல்வதற்கும், சமூக நிலைமைகளை மாற்றுவதற்கும், அத்துடன் கூடவே தம்மையும் மாற்றிக் கொள்ளுவதற்கும் வேண்டி மார்க்சிசம்—லெனினிசத்தை உறுதியாகக் கைக்கொண்டு அதன் வழிமுறைகளில் பாண்டித்தியம் பெற்று அவற்றைநடைமுறையில் அனுசரிக்கின்றனர். மார்க்சிச—லெனினிசக் கோட்பாடுகளே அவர்களின் நடவடிக்கைகள் யாவற்றிற்கும், அவர்களின் வாழ்நாட்கள் பூராவிற்கும் வழிகாட்டியாக அமைந்திருக்கின்றன. மேலும் அவர்களின் நடவடிக்கைகளும், வாழ்நாட்களும் தொழிலாளி வர்க்கத்தின் வெற்றி, தேசத்தின விடுதலை, மனித குலத்தின் விடுதலை, கம்யூனிசத்தின வெற்றி என்னும் இந்த ஒரே இலட்சியத்தையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன.''

தோழர் ஸ்டாலின் கூறினார்:

''இதற்கு மாறாக இரண்டாவது குழுவைச் சேர்ந்த மார்க்சிஸ்டுகள், மார்க்சிசத்தை மேம்போக்காக ஏற்றுக் கொள்ளுவதற்கு பிரதான முக்கியத்துவம் அளிப்பதில்லை; அதற்குப் பதில் மார்க்சிசத்தின் வெற்றிக்கு, அதை யதார்த்த உண்மையாக மாற்றுவதற்கு [illegible] முக்கியத்துவம் [illegible] நிலைமை [illegible] சிறந்த [illegible] முறைக்கு கொண்டு வருவதற்கான [illegible] இதும், நிலைமை மாறும்போது [illegible] வழிவகைகளையும் மாற்றிக் கொள்ளுவதிலும், [illegible] [illegible], உலகை [illegible] வியாக்கியானம் [illegible] அடைந்து விடாது [illegible] இதற்கு மாறாக அவர்கள் [illegible] முன்னே செல்[illegible] [illegible] மாற்ற [illegible] மார்க்ஸ் கூறிய [illegible]



இக்குழுவினருக்கே முழுதும் பொருந்தும் எனலாம். இந்தக் குழுவினர்தான் போல்ஷிவிக்குகள், கம்யூனிஸ்டுகள் எனப்படுவர்''

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஸ்டாலினிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளுவது சம்பந்தமாய் கடைப்பிடிக்கப்படும் மற்றொரு போக்கு இது.

இந்த இரண்டாவது போக்கு தான் சரியானது. மார்க்சிசம்—லெனினிசத்தை கற்றறியும் விஷயத்தில், இவ்வழியைக்கடைப் பிடித்தால் தான், ''பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கானது'' என்பார்களே, அத்தகைய தவறுகள் ஏற்படாமல் தவிர்க்க முடியும். இவ்வழியில் தான் ஒருவர் தன் பண்பாடுகளை அபிவிருத்தி செய்து மார்க்ஸ்—எங்கெல்ஸ்—லெனின்—ஸ்டாலின் ரகத்தைச் சேர்ந்த தொழிலாளி வர்க்க கம்யூனிஸ்ட் புரட்சி வீரனாகமுடியும்.

சுய-பயிற்சியிலே எந்த சிரமத்தையும் பாராது ஈடுபட்டு வருகிறவர்களும், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலினின் விசுவாசமிக்க சீடர்களாக உள்ளவர்களும், புரட்சி இயக்கத்தில் தொழிலாளி வர்க்கத்தை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளைப் பற்றிய மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் கண்ணோட்டத்தையும் வழிமுறைகளையும், பரிகாரங்களையும், மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் ஸ்டாலினைப் போல ஆய்ந்தறிந்து இவற்றில் அவர்களைப் போல் பாண்டித்தியம் பெறுவதற்கு மட்டுமே விசேஷ கவனம் செலுத்துகிறார்கள். இதைத்தவிர, கட்சிக்குள் தமது பதவியும், அந்தஸ்தும் உயர்நிலையில் உள்ளதா, இல்லையா என்பதுபற்றி அவர்கள் கவலைப்படுவதே இல்லை. சீனாவின் மார்க்சோ அல்லது லெனினோ தாம் தான் என்று அவர்கள் ஒரு பொழுதும் உரிமை பாராட்டுவதில்லை.

மார்க்சுக்கும், லெனினுக்கும் எத்தகைய மரியாதை அளிக்கப்படுகிறதோ அத்தகைய மரியாதை தமக்கும் அளிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோருவதில்லை; இதைப் போன்ற சபலத்திற்கு மனதில் இடமளிப்பதில்லை. அத்தகைய ஸ்தானத்திற்கும் உரிமைக்கும் தம்மை அருகதையானவர்கள் என்று அவர்கள் கருதுவதுமில்லை அவ்வாறு கருதுவதானது, மார்க்சுக்கும், லெனினுக்கும் துரோகம் செய்வதாகும் என்பது மட்டுமல்ல, அரசியல் ''பிலிஸ்டைன்களின்'' நிலைக்குத் தாழ்வதும் ஆகும் என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர். ஆயினும் மேற்கூறிய இதே காரணத்தாலும், புரட்சிப் போராட்டங்களில் அவர்கள் காட்டும் ஈடிணையற்ற தீரம், திறமை ஆகியவற்றின் காரணமாகவும், கட்சியின்

சாமான்ய உறுப்பினர்களின் தன்னிச்சையான மதிப்பையும், ஆதரவையும் அவர்கள் பெறுகின்றனர்.

தோழர்களே! சுய-பயிற்சிக்கு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியவர்களை நமது உதாரணபுருஷர்களாகக்கொண்டு அவர்களின் மிகவும்விசுவாசமான மிகவும் சிறந்த மாணாக்கர்களாவதென்பது மிகவும் கடினமானதே. இதற்கு தொழிலாளி வர்க்கத்தின் புனித லட்சியத்திற்கான கடுமையான போராட்டத்திலே உருக்குப்போன்ற உள்ளமும் வைராக்கியமும் படைத்திருக்கவேண்டியது அவசியமாகும். இதற்கு, வாழ்நாள் முழுதும் மார்க்சிசம்—லெனினிசத்தை விசுவாசத்துடன் கற்றறிவதும், கற்றறிந்ததை பரந்த வெகுஜனப் புரட்சிப் போராட்டங்களில் நடைமுறையில் கையாளுவதும் அவசியமாகும். இதற்கு புடம் போடப்பட்டு எஃகு போன்ற உறுதிபெற்று, சகல வழிகளிலும் பயிற்சி பெற்று பக்குவமடைவது அவசியமாகும்.

## பயிற்சி முறைகளும், பயிற்சியின் அம்சங்களும்

தோழர்களே! மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின்,ஸ்டாலினுடைய மிகவும் விசுவாசமான, சிறந்த மாணாக்கர்களாகும் பொருட்டு, தொழிலாளி வர்க்கமும், பொதுமக்களும் நடத்தும் நீண்ட நீடித்த, மகத்தான, புரட்சிகரப் போராட்டத்தின் போது, சகல அம்சங்களிலும் தொடர்ந்து பயிற்சி பெற்று பக்குவமடைந்தாக வேண்டும். மார்க்சிச-லெனினிச தத்துவங்கள், அத்தத்துவங்களை நடைமுறையில் கையாளுதல், புரட்சிகரமான யுத்ததந்திரம், போர்த்தந்திரம், பல்வேறு பிரச்னைகளை மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் முறையிலும் கண்ணோட்டத்திலும் பரிசீலனை செய்து சமாளித்தல், சித்தாந்தம், ஒழுக்கசீலம், கட்சியின் ஒருமைப்பாடு, உட்கட்சிப் போராட்டம், கட்டுப்பாடு, வேலை முறை, திறமையுடன் பல்வேறு விதமான மக்களிடத்தில் நடந்து கொள்ளுதல், வெகுஜனங்களுடன் இணைந்து நிற்பது, பல்வேறு வகைப்பட்ட விஞ்ஞான சாஸ்திரங்களில் ஞானம் பெறுவது முதலியவற்றிலெல்லாம் நாம் தொடர்ந்து பயிற்சி பெற்று பக்குவமடையவேண்டும்.

நாம் அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சிஉறுப்பினர்கள். ஆகவே கூட்டாக நம் எல்லோருக்கும் ஒரு பொதுவான பயிற்சி உண்டு. ஆனால், இன்று நமது கட்சி உறுப்பினர்களுக்கிடையில் பரந்த அளவுக்கு வித்தியாசங்கள் உள்ளன. அரசியல் உணர்விலும், வேலையி



லும்; பதவியிலும், கலாச்சார நிலையிலும், போராட்ட அனுபவத்திலும்,வர்க்க பூர்வோத்திரத்திலும் நம்மிடையே பரந்தஅளவுக்கு வித்தியாசங்கள் உள்ளன. ஆகவே, பொதுவான பயிற்சியோடு கூடவே, பல்வேறு குழுவினருக்கும், தனிப்பட்ட தோழர்களுக்கும் விசேஷப் பயிற்சியும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

இதற்கேற்ப, பல்வேறு விதமான பயிற்சி முறைகளும் பயிற்சி வழிகளும் இருக்க வேண்டும். உதாரணமாக, நமது வேலையையும், எண்ணங்களையும் அன்றாடம் சீர் தூக்கிப் பார்க்கும் நிமித்தம் நமது தோழர்களில் பல குறிப்புப் புத்தகம் வைத்திருக்கின்றனர்; அல்லது தமது குறைபாடுகளையும், தாம் என்னென்ன சாதிக்க முடியும் என்று நம்பிக்கை கொண்டுள்ளனரோ அவற்றையும் எழுதி,அதில் தமக்கு வழிகாட்டியாக விளங்கும் தோழர்களின் படங்களையும் பொருத்தி, தாம் வசிக்கும் அல்லது வேலை செய்யும் ஸ்தலத்தில் அதை ஒட்டி வைத்துக் கொள்கின்றனர். மேலும் தம் தோழர்களை விமர்சனம் செய்யும்படியும், மேற்பார்வையிடும்படியும், கோருகின்றனர். பண்டைகால சீனாவில்,பற்பல பயிற்சிமுறைகள் இருந்தன. கன்பியூஷியசின் சீடர்களில் ஒருவரான செங்-சீ கூறினார்: ''நாளொன்றுக்கு மும்முறை நான், என்னைப் பற்றி ஆழ்ந்த சிந்தனை செய்கிறேன்'' ''இரத்தினப் பரிசோதகன் எப்படி இரத்தினக் கற்களை வெட்டி, செதுக்கி, இழைத்து மெருகுபடுத்துகிறானோ அப்படியே நாமும்நமது பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்'', என்று ''ஓடஸ் புத்தகம்'' கூறுகிறது. மற்றொரு பயிற்சி முறை, ''தன்னைத் தானே சுய-சிந்தனையின் மூலம் பரிசோதனை'' செய்து கொள்வதும், நன்னடத்தைக்கான விதிகளை தினசரி ஞாபகமூட்டும் முறையில் ''தனது மேஜையின் வலப்புறத்திலோ அல்லது தனது இடுப்பில் கட்டியுள்ள துணியின் மீதோ ஒரு சில குறிக்கோள்களை எழுதி'' வைத்துக் கொள்ளுவதுமாகும். கன்பியூஷியசின் தத்துவங்களைப் பின்பற்றிய சீனப்பண்டிதர்கள் உடலையும், உள்ளத்தையும் பயிற்சிக்குட்படுத்தி பண்படுத்துவதற்கு பற்பல முறைகளைக்கையாண்டனர். ஒவ்வொரு மதத்திற்குப் தனக்கே உரித்தான வெவ்வேறு பயிற்சி முறைகளும், பயிற்சி வழிகளும் உண்டு, ''உண்மையைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சி, அறிவை விரிவுபடுத்துதல், சிந்தனையில் நேர்மை, மனதைத் தூய்மைப் படுத்துதல், தன்னை பயிற்சி செய்து கொள்ளுதல், குடும்பத்தை ஒழுங்குபடுத்துதல், அரசாங்கத்தின் நல்லமைப்பிற்கான பணி, ராஜ்ஜியம் முழுமையும் அமைதியைப் பேணுதல்'' ஆகியவற்றைப்

பற்றி, மகத்தான போதனை ''* திகிரேட் லேர்னிங்'' என்ற புத்தகத்தில் கூறப்படுவது கூட பயிற்சி முறைகள் சம்பந்தமானவையே.

இவை அனைத்தும் எடுத்துக் காட்டுவதென்ன? ஒருவர் முன்னேற்றமடைய வேண்டுமானால், சுய-பயிற்சியையும், கல்வியையும் மேற்கொள்ளுவதற்குத் தீவிரமான, பிரயாசைமிக்க முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்பதேயாகும். ஆயினும், மேற்கூறிய பயிற்சி முறைகளிலும், பயிற்சி வழிகளிலும் பலவற்றை நாம் கடைப்பிடிக்க முடியாது ஏனெனில் அவற்றில் பெரும்பாலானவை, எண்ண முதல்வாத, உருவவாத, ஸதூலமற்ற தன்மையதாயும், சமூக நடைமுறையினின்று பிரிக்கப்பட்டதாயும் உள்ளன. இந்தப் பண்டிதர்களும், மதாபிமானிகளும், தன்னெண்ண ரீதியான முன் முயற்சியின் பாத்திரத்தை மிகைப்படுத்துகிறார்கள். தமது பொதுவான ''நன்னோக்கங்களை'' கைவிடாது, நிசபதமான பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தாலே, அமுலிலிருந்து வரும் நிலைமைகளைத் தம்மால் மாற்ற முடியும் என்றும், சமூக, புரட்சிகர நடைமுறையினின்று பிரிந்து நிற்கும் நிலைமைகளிலும் சமூகத்தையும், தம்மையும் மாற்றிக் கொள்ள முடியும் என்றும் அவர் எண்ணுவதே இதற்குக் காரணம். இது வெறும் அபத்தம் என்பதில் ஐயமில்லை. இம்முறையிலே நாம் சுயபயிற்சி செய்து கொள்ள முடியாது. நாம் பொருள் முதல்வாதிகள். ஆகவே, நமது பயிற்சி நடைமுறையினின்றும் பிரிக்கப்பட முடியாதது.

நமக்கு முக்கியமானது என்ன? ஒரு குறிப்பிட்ட காலத்தில் பல்வேறு வகை மக்கள், பல்வேறு ரூபங்களில் நடத்தும் புரட்சிகர போராட்டங்களினின்றும் நாம்எந்த சூழ்நிலைமைகளின் கீழும் ஒதுங்கி நிற்கக்கூடாது; மேலும் சரித்திர பூர்வமான புரட்சிகர அனுபவத்தை வடித்தெடுத்து, அதிலிருந்து தன்னடக்கத்துடன் பாடம் கற்றுக் கொண்டு, அதை நடைமுறையில் அனுஷ்டிக்க வேண்டும். அதாவது, நாம் நமது நடைமுறை வேலைகளைச் செய்யும் போதே கடந்தகால புரட்சிகர நடைமுறையின் அனுபவங்கள் நிகழ்காலத்திலுள்ள ஸ்தூலமான நிலைமை, புதிய அனுபவங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சுய-பயிற்சியை மேற்கொள்ள வேண்

குறிப்பு:— ''தி கிரேட் லேர்னிங் ' என்ற இப்புத்தகம் 'கன்பியூஷியஸ் கருத்துகளைப் பின்பற்றுபவர்களால் பல தலைமுறைகளில் எழுதப்பட்ட'தென்றும், ''அனுபவமில்லாதவர்கள் ஒழுக்கமும் நற்குணங்களும் எய்துவதற்கு இது வாயிற்படியாக அமைந்துள்ளது'' என்றும் கருதப்படுகிறது.



டும்; புடம் போடப்பட்டு எஃகு போன்ற உறுதியையும் பெற வேண்டும். சுய-பயிற்சியும், எஃகு போன்ற உறுதி பெறுவதும், புரட்சிகரமான நடைமுறையில் நாம் ஈடுபடுவதற்கேயன்றிவேறெதற்காகவுமல்ல. அதாவது, மார்க்ஸிஸம்—லெனினிஸத்தின் கண்ணோட்டப், வழிமுறை, ஜீவன் ஆகியவற்றையும் மார்ச்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோர் மக்கள் சம்பந்தமாக எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதையும் நாம் புரிந்து கொள்வதற்கும் தன்னடக்கத்துடன்முயற்சிக்க வேண்டும். இவ்வாறு புரிந்து கொண்டபின், இதை நாம் நடைமுறையில் உடனடியாக அனுஷ்டிக்க வேண்டும்; அதாவது நமது வாழ்வில், சொல்லில், செயலில், வேலையில் இவற்றைப் பிரயோகிக்க வேண்டும். மேலும் நாம் இவற்றை உறுதியாகப் பற்றிக் கொண்டு இவற்றிற்கு விரோதமாக நமது சித்தாந்தத்திலுள்ள சகலவற்றையும் தயக்கமின்றி அப்புறப்படுத்தி, பிழை திருத்தம் செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு நமது தொழிலாளி வர்க்க, கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தையும், பண்புகளையும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அதாவது நமது வேலைக்கானதோர் சரியான கண்ணோட்டத்தைப் பெறும் பொருட்டு நாம் நமது தோழர்களுடையவும், வெகுஜனங்களுடையவும் அபிப்பிராயங்கள், கூற்ற விமர்சனங்கள் ஆகியவற்றிற்கு தன்னடக்கத்துடன் செவிமடுக்க வேண்டும்; நமது வாழ்விலும் வேலையிலுமுள்ள நடைமுறைப் பிரச்சனைகளை அக்கறையுடன் பரிசீலனை செய்ய வேண்டும்; நமது அனுபவங்களையும் நாம் கற்றறிந்த பாடங்களையும் அக்கறையுடன் தொகுத்துப் பார்க்க வேண்டும். மேலும், நல்முடைய மார்க்ஸிஸ—லெனினிஸ ஞானம் சரியானதுதானா என்பதையும் மார்க்ஸிஸ—லெனினிஸ வழிமுறையை நாம் பிசகற்ற முறையில் பிரயோகித்துள்ளோமா என்பதையும், நமது குறைபாடுகளையும், தவறுகளையும் கண்டுபிடித்து அவற்றைத் திருத்திக் கொண்டோமா என்பதையும் மேற்கூறியவற்றின் அடிப்படையில் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். அதேசமயத்தில் நன்கு கிரகிக்கப்பட்ட புதிய அனுபவங்களின் அடிப்படையில் மார்க்சிசம்— லெனினிசத்தின் குறிப்பிட்டமுடிவுகளை பலப்படுத்தும்முறையில் புதிதாக சேர்க்கப்பட வேண்டியதும், செழுமைப்படுத்தப்பட வேண்டியதும், வளர்க்கப்பட வேண்டியதும் எந்தெந்த அம்சங்களில் என்பதை நாம் கண்டறிய வேண்டும். அதாவது மார்க்சிசம்—லெனினிசத்தின் பிரபஞ்ச உண்மையை, புரட்சியின் ஸ்தூலமான நடைமுறையுடன் ஒன்றிணைக்க வேண்டும்.

இவையே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான நம்முடைய சுய-பயிற்சிக்கான முறைகள். அதாவது, நமது பயிற்சிக்கு மார்க்சிச—லெனினிச முறைகளை நாம் கையாள வேண்டும். இத்தகைய பயிற்சி, எண்ண முதல்வாதத் தன்மையதும், சமூக நடைமுறையினின்று பிரிக்கப்பட்டுள்ளதுமான இதரவகை பயிற்சிகளினின்றும் முற்றிலும் வேறுபட்டதாகும்.

இது சம்பந்தமாக, பயிற்சி, உறுதிப்பாடு பெறும் பிரச்னை குறித்து இருந்துவரும் வெட்டிப் பேச்சுகளையும், யாந்திரீக வாதத்தையும் நாம் எதிர்த்துப் போரிடாமலிருக்க முடியாது.

எல்லாவற்றிற்கும் முதலாவதாக, பழைய சமுதாயத்தின் கல்வியும் அறிவும் நமக்கு சனமானமாக விட்டுச் சென்றுள்ள மிகப் பெரும் தீங்குகளில் ஒன்றான தத்துவத்திற்கும் நடைமுறைக்கும் உள்ள பிரிவினையை நாம் உறுதியுடன் எதிர்த்துப் போராடி, ஒழித்துக் கட்ட வேண்டும் பழைய சமுதாயத்தில் கல்வி கற்கும் போது பலர், தாம் கற்றவற்றின்படி நடக்க வேண்டியது அவசியமில்லை என்றும்—ஏன் அசாத்தியம் என்றும் கூட—எண்ணினர். பண்டைக்கால முனிவர்களின் புத்தகங்களை அவர்கள் திரும்பத் திரும்ப படித்தார்கள் என்ற போதிலும், அம்முனிவர்கள் செய்பத்தகாதவை என்று வெறுத்துத் தள்ளக்கூடிய காரியங்களை அவர்கள் செய்தார்கள். அவர்கள் எழுதிய அல்லது சொல்லிய ஒவ்வொன்றிலும் தர்மத்தையும், ஒழுக்கத்தையும் பற்றி போதித்தனர் என்ற போதிலும், அவர்கள் செய்த ஒவ்வொரு காரியத்திலும் அப்பட்டமான கொள்ளைக்காரர்களாகவும் வேசிகளாகவுமே நடந்து கொண்டனர். சில "உயர்தர அதிகாரிகள்" "**நான்கு வேதப் புத்தகங்களையும்** "**ஐந்து இதிகாசங்களையும்**" படிக்க வேண்டும் என்று கட்டளையிட்டனர் என்ற போதிலும் அவர்கள் தமது அன்றாட நிர்வாக வேலைகளின்போது, ஈவிரக்கமற்ற முறையில் அகாத தண்டல்களை வசூல் செய்தனர்; ஊழல்களில் திளைத்து கொலை கொள்ளை புரிந்து கோர நர்த்தனமாடினர்; தர்மத்திற்கும் ஒழுக்கத்திற்கும் விரோதமான சகலவற்றையும் செய்தனர் சிலர், **மக்கள் கோட்பாடுகள் மூன்றையும்** படித்தனர் என்றாலும்,

---

**குறிப்பு;** "நான்கு வேத புத்தகங்கள்" "ஐந்து இதிகாசங்கள்": இவை தத்துவம், சரித்திரம், கவிதை முதலியன பற்றி கன்பியூஷியஸ் நெறிபின்படி அமைந்துள்ள பண்டையகால சீன இதிகாசங்களாகும்.



திரும்பத் திரும்ப **டாக்டர் சன்யாட் — சென்னின் மரண சாசனத்தை** பாராமல் ஒப்பிக்க அவர்களுக்குத் தெரியும் என்றாலும், அவர்கள் மக்களை ஒடுக்கினர்; சம அந்தஸ்தின் அடிப்படையில் நம்முடன் பழகிய நாடுகளை எதிர்த்தனர்; தேசத்தின் விரோதியோடு சமரசம் செய்து கொள்வதற்கு அல்லது சரணாகதி அடைவதற்குக் கூட துணிந்தனர்.

"எந்த உணவும் அவனுக்கு ருசிகரமாய் இருக்காது, உயர்ந்த மாமிசமும்கூட திருப்தி அளிக்காது" என்னும் கன்பியூஷியசின் இந்த முதுரையை மட்டுமே தம்மால் அனுஷ்டிக்க முடிந்ததென்றும், கன்பியூஷியசின் இதரபோதனைகள் எதையும்தான் அவ்வாறு அனுஷ்டிக்கவில்லை, அனுஷ்டிக்க வேண்டுமென பிரியப்படவுமில்லை என்றும் பழங்கருத்துலகைச் சேர்ந்த பண்டிதர் ஒருவர் முன்னொரு சமயம் என்னிடம் கூறினார்.

இப்படியிருக்கும் போது, ஏன் அவர்கள் கல்வி வேலையை மேற்கொள்ளவும், முனிவர்களின் போதனைகளை கற்கவும் விரும்பினர்? வெறும் வெளிப்பகட்டுக்காக மட்டுமின்றி பின்வரும் நோக்கங்களுக்காகவும் அவர்கள் இவ்வாறு செய்தனர்.

(1) இந்த போதனைகளை உபயோகித்து, சுரண்டப்படும் மக்களை ஒடுக்குவதற்கும், தர்மம், ஒழுக்கம் ஆகியவற்றை பயன்படுத்திக் கொண்டு, கலாச்சார ரீதியில் பிற்பட்டு நிற்கும் மக்களை ஏய்த்து, நசுக்குவதற்கும் விரும்பினர்.

(2) இவ்வாறு, உயர்ந்த சர்க்கார் உத்தியோகங்களை சம்பாதிப்பதற்கும், பணம் சேர்ப்பதற்கும் பெயரும் புகழும் எய்தி பெற்றோர்களுக்கு கீர்த்தி தேட முயற்சிக்கின்றனர்.

இந்த நோக்கங்களுக்காக அல்லாமல், முனிவர்களின் போதனைகளுக்கு அவர்கள் எவ்வகையிலும் கட்டுப்பட்டிருந்ததில்லை. இதுதான் பழங்கருத்துலகத்தின் இலக்கிய 'அறிஞர்களும்' பண்டிதர்களும் தாம் "வழிபட்ட" முனிவர்களின்பால் காட்டிய மரியாதையும் போக்குமாகும். ஆனால், மார்க்ஸிஸம்—லெனினிஸத்தையும், நமது பண்டைய முனிவர்கள் நமக்கு ஆஸ்தியாக வைத்துச் சென்றுள்ள மிக உன்னதமான, பிரயோஜனகரமான போதனைகளையும், கற்கும் விஷயத்தில், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாகிய நாம், இத்தகைய போக்கைக் கடைப்பிடிக்க முடியாது. நமது செயலும் வாழ்வும், நமது சொல்லுக்கேற்ப அமைந்திருக்க வேண்டும். நாம் யோக்கியமானவர்கள், பரிசுத்தமானவர்கள்.

நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள முடியாது; மக்களேயோ அல்லது நமது மூதாதையர்களேயோ நாம் ஏமாற்ற முடியாது. இது, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான நம்மிடத்திலுள்ள தலை சிறந்த குணவிசேஷமும், மகோன்னத பண்புமாகும்.

தோழர்களே! பழைய சமுதாயம் நமக்கு விட்டுச் சென்றுள்ள இந்தத் தீய ஆஸ்திகள் இன்னமும் நம்மீது ஓரளவு செல்வாக்கு வகித்து வருகின்றன என்றுதான் கூற வேண்டும். மாணுக்கர்களாகிய உங்கள் மத்தியில், உயர்தர சர்க்கார் உத்தியோகங்களைப் பெறுவதற்காகவோ, பணம் குவிப்பதற்காகவோ, சுரண்டப்படும் மக்களை ஒடுக்குவதற்காகவோ, மார்க்சிசம்—லெனினிசத்தைப் பயில முயற்சிக்கிறவர்கள் யாரும் இல்லை என்பது நிச்சயம். மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பை ஒழித்துக் கட்டுவதற்காகவே, நீங்கள் மார்க்சிசம்—லெனினிஸத்தைப் பயிலுகிறீர்கள். ஆயினும், நீங்கள் கற்ற போதனைகளுக்கேற்ப வாழ்க்கை நடந்து வருவதாக நான் உறுதி கூற முடியாது. தமது சிந்தனைகள், சொற்கள், செயல்கள், வாழ்க்கை ஆகிய யாவும், மார்க்சிச—லெனினிசக் கோட்பாடுகளினால் வழிகாட்டப்பட வேண்டியது அவசியமில்லை என்ற பாணியிலும் நாம் கற்றறிந்துள்ள கோட்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவது அவசியமில்லை என்ற பாணியிலும் சிந்திக்கக் கூடியவர்கள் உங்கள் மத்தியில் யாரும் இல்லை என்று சொல்ல முடியுமா? இதேபோல், மார்க்சிசம்—லெனினிசத்தையும் ஆழ்ந்த கருத்துக்கள் மிக்க தத்துவத்தையும் பயின்று, உயர்பதவி பெறலாம், பெரும் பகட்டாகவும் தடபுடலாகவும் நடந்து கொள்ளலாம். பிரக்யாதிபெற்ற கீர்த்திவான்களாகவும் ஆகலாம் என்று நினைக்கக்கூடியவர்கள் உங்கள் மத்தியில் யாரும் இல்லை என்று சொல்ல முடியுமா? இம்முறையில் சிந்திக்கக்கூடியவர்கள், உங்கள் மத்தியில் யாரும் இல்லை என்று நான் உறுதி கூற முடியாது. இம்முறையில் சிந்திப்பது மார்க்ஸியத்திற்குப் பொருத்தமானதல்ல. இது மார்க்சிஸ்ட் தத்துவத்திற்கும் மார்க்சிஸ்ட் நடைமுறைக்குமுள்ள பிளவின் பிரதிபிம்பமே. தத்துவப் பயிற்சியை நாம் எதிர்க்கவில்லை. உண்மையில் நாம் தத்துவம் படிக்க வேண்டும். ஆனால், படித்தறிந்ததை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற ஒரேயொரு நோக்கத்திற்காகவே நாம் படிக்கிறோம். கட்சிக்காகவும், புரட்சியின் வெற்றிக்காகவுமே நாம் படிக்கிறோம்.



உதாரணமாக, ''தத்துவத்தையும் நடைமுறையையும் ஒன்றிணைத்திடுக!'' என்ற கோஷத்தை நீங்கள் அடிக்கடி முழங்கி வந்திருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் படித்தறிந்துள்ள தத்துவத்தை உங்களுடைய சொந்த நடைமுறையுடன் ஒன்றிணைத்திருக்கிறீர்களா? மார்க்சிசம்—லெனினிசத்தின் கோட்பாடுகளினின்று முற்றிலும் பிரிந்து நிற்கும் நடைமுறையை உடையவர்கள் உங்கள் மத்தியில் இன்னமும் ஒரு சிலர் இருக்கவில்லையா? தத்துவத்தையும் நடைமுறையையும் ஒன்றிணைப்பதென்பதை, கீழ்க்கண்ட முறையில் புரிந்து கொள்ளுபவர்கள், இன்னமும் உங்கள் மத்தியில் உள்ளனர் என்றே தோன்றுகிறது. பள்ளிக்கூடத்துக்கு வெளியே வேலைசெய்யும் தோழர்கள் இங்கு வந்து தமது அனுபவங்களைப் பற்றி ரிப்போர்ட் செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர். இவ்வாறு செய்தால் தத்துவத்தையும், நடைமுறையையும் எப்படி பிணைப்பது என்பதை அறிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறார்கள். உண்மையில் இது தத்துவத்தையும் நடைமுறையையும் ஒன்றிணைப்பதேயாகும். ஆனால் இது அவர்களுடையது, உங்களுடையதல்ல. நீங்கள் மேற்கூறிய கோஷம் முழக்குவதற்கு அர்த்தமிருக்க வேண்டுமானால், நீங்கள் படிக்கும் தத்துவத்தை உங்களுடைய சொந்த நடைமுறையுடன் ஒன்றிணைக்க வேண்டும். இம்முறையில் இதைப் புரிந்து கொள்ளாவிட்டால், நீங்கள் கோஷம் முழக்குவதில் என்ன பிரயோஜனமிருக்கிறது? மற்றொரு உதாரணம் தருகிறேன். எஃகு போன்ற உறுதிப்பாட்டை அடைய வேண்டியதின் அவசியம்பற்றி பற்பல கோஷங்களை நீங்கள் கர்ஜித்தீர்கள். ஆனால் உறுதிப்பாடு என்பதற்கும் தமக்கும் ஒரு வித சம்பந்தமுமில்லாதவர்கள் அல்லது உண்மையான சோதனைக்காலம் வந்தபோது, தோல்வி ஏற்பட்ட போது அல்லது குற்ற விமர்சனத்திற்கும் தண்டனைக்கும் நாம் ஆளாக்கப்பட்டபோதும், பொதுஜன அபிப்பிராயத்தின் நிர்ப்பந்தத்திற்கும், மக்களின் மிகப் பெரும்பான்மையோரின் சரியான அல்லது தவறான பேர்பார்வைக்கும் நாம் உட்படுத்தப்பட்டபோதும், உறுதிப்பாட்டுடன் நிமிர்ந்து நின்று சமாளிக்க முடியாதவர்களை எனப்பலர் காட்டிக் கொண்டவர்கள், உங்கள் மத்தியில் ஒரு சிலராவது இருக்கவில்லையா? கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், [illegible]மான உறுதி, செம்மையான கண்ணோட்டம் முதலியவற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை இவர்கள் மறந்துவிட்டார்கள். என்ன செய்வதென்று விளங்காமல், அவர்கள் மனச்சோர்வுற்றனர். உறு

திப்பாடும், பயிற்சியும் பெறுவது பற்றிய வெட்டிப் பேச்சுக்கு இவை உதாரணங்களல்லவா?

உண்மையில், இப்பள்ளிக்கூடத்தில் நீங்கள் பெறும் பயிற்சியும், நீங்கள் படிக்கும் படிப்பும்கூட, உறுதிப்பாடும், பயிற்சியும் பெறுவதற்கான வழிகளேயாகும். பள்ளிக்கூடப்பயிற்சி, படிப்பின் மூலம் உங்களை நாங்கள் பிரயோஜனமுள்ள ஊழியர்களாகவும், கட்சித் தொண்டர்களாகவும் ஆக்க முயற்சித்து வருகிறோம். இது ஏதோ ஒரு சில ஸ்தூலமற்ற ''தத்துவங்களை''யும், மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் சொற்றொடர்களையும் சூத்திரங்களையும் நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அல்ல, மேலும், நீங்கள் பிசகற்றமுறையில் சிந்திக்கக்கூடிய, திடமான உறுதிப்பாடு கொண்ட, சகலவித சிக்கலான பிரச்னைகளையும் காரியசாத்தியமான முறையில் தீர்க்கும் ஆற்றல் படைத்த கட்சி ஊழியர்களாகும் பொருட்டு, பயிற்சியும், உறுதிப்பாடும் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஆயினும், உறுதிப்பாடு பெறுவதற்கான வழி பள்ளிக்கூடத்தில் படிப்பதல்ல என்றும் ஒருவர் பயிற்சியும், உறுதிப்பாடும் பெற வேண்டுமானால் பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேறி நடைமுறை வேலையில் இறங்க வேண்டும் என்றும் சொல்லப்படுவதை நான், அடிக்கடி கேட்டிருக்கிறேன். தோழர்களே! பயிற்சியும், உறுதிப்பாடும், அடைவதென்பது, ஒருவரின் வாழ்நாள் பூராவுக்குமான நீடித்ததோர் பன்முகம் படைத்த பணியாகும். பயிற்சியும், உறுதிப்பாடும், சகல காலத்திற்கும், சகல பிரச்சனைகள் சம்பந்தமாயும் தேவையாயுள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர், பிரதானமாக வெகுஜனங்களின் நடைமுறைப் போராட்டத்தின் போதுதான், உறுதிப்பாடும் பயிற்சியும் பெறவேண்டும் என்பதை நாம் மறுக்கவில்லை என்ற போதிலும், குறிப்பிட்ட காலங்களில்தான், குறிப்பிட்ட இடங்களில்தான் குறிப்பிட்ட பிரச்சனைகள் சம்பந்தமாய் தான் உறுதிப்பாடு பெறுவதையும், பயிற்சி பெறுவதையும் மேற்கொள்ள முடியும் என்றும், இதர காலங்களிலும், இதர இடங்களிலும், இதர பிரச்சனைகள் சம்பந்தமாயும் இவற்றை மேற் கொள்ள முடியாது என்றும் நாம் கூற முடியாது. அதாவது பயிற்சிப் பிரச்சனை பற்றிய, எண்ண முதல்வாதம், வெட்டிப்பேச்சு, யாந்திரீகப் போக்கு ஆகியவற்றிற்கு நாம் எதிரானவர்கள். அதாவது, எஃகு போன்ற உறுதியை பெறுவதற்கான சகிப்புத் தன்மையை நாம் பெற்றிருக்க வேண்டும்.

பள்ளியிலும், வெகுஜனங்களின் மத்தியிலும், கட்சிக்கு உள்ளும், வெளியேயும் நடக்கும் போராட்டங்களிலும், நாம்



நம்மை உறுதிப்பாடுடையவர்களாக்கிக் கொள்ள வேண்டும். சகல சுற்று சார்புகளிலும்- வெற்றி, தோல்விஆகிய இவ்விரண்டு சூழ்நிலைமைகளிலும்— நாம் படிப்பினைகளைக் கற்றுத் தெளிந்து பயிற்சி பெற்றுக் கொள்ளவேண்டும்.

## மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் தத்துவப் படிப்புக்கும் கட்சி உறுப்பினர்களின் சித்தாந்தப் பயிற்சிக்குமுள்ள உறவு

மார்க்சிசம்-லெனினிசத்தின் தத்துவத்திலும், வழிமுறையிலும் ஞானமும், பாண்டித்தியமும் பெறுவதற்கு பரிசுத்தமான தொழிலாளி வர்க்க கண்ணோட்டம் அவசியமில்லை என்ற கருத்து நமது கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களிடையில் ஓரளவுக்கு கணிசமாக இருந்து வருகிறது. தமது வர்க்க கண்ணோட்டம் மிகவும் திடமானதாக இல்லை என்றபோதிலும் தமது சித்தாந்தம் பரிசுத்தமானதாக இல்லை என்ற போதிலும் (இதர வர்க்கங்களின் தத்துவத்தின் மிச்சசொச்சங்கள் அவர்களிடம் இன்னமும் தேங்கிக்கிடக்கின்றன. அவர்கள் இன்னமும் சுயநலமுடையவர்களாகவும் பௌதீக ஆசைகள் முதலியவற்றை உடையவர்களாகவும் இருக்கின்றனர்) தம்மால் மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவத்திலும் வழிமுறையிலும் பரிபூரண ஞானமும் பாண்டித்தியமும் பெற முடியும் என்று அவர்கள் நினைக்கின்றனர். ஒருவர் தனது சொந்த புத்தி, வல்லமை, படிப்பு இவற்றின் மூலம் மட்டும் மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவத்திலும் வழி முறையிலும் பரிபூரண பாண்டித்தியம் பெறமுடியும் என்று சில தோழர்கள் நினைக்கின்றனர். தோழர்களே! இவ்வாறு நினைப்பது தவறு!

மிட்டுன என்ற சோவியத் உலக தாத்பரிய ஞானி ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளது முற்றிலும் சரியானதாகும்:—

''அவரவர் உணர்வும் எந்த அளவுக்கு ஆழமாய் இருக்கிறது என்பதில் வித்தியாசங்கள் உள்ளன. இதற்கு வர்க்க ரீதியான விளக்கம் தேவைப்படுகிறது உதாரணமாக, நிகழ்காலத்தில்—அதாவது முதலாளித்துவத்தின் சீரழிவு சகாப்தத்தில், பூர்ஷ்வா வர்க்கத்தின் சித்தாந்த ஞானி ஒருவன் எவ்வளவு தான் திறமை படைத்தவனாயிருப்பினும் அனைத்து ஆக்கத்திறனும் வளர்ச்சி விதிகளைப் பற்றிய துல்லியமான ஞானத்

தைப் பெறும் திறனும், அவனது வர்க்கத் தன்மையினுல் அவன் பிரதிநிதித்துவப்படுத்தும் வர்க்கத்தின் பிற்போக்குத் தனத்தால், ''கட்டுப்படுத்தப்படுகிறது'' பூர்ஷுவா வர்க்கம். வருங்காலத்தை தீர்க்க தரிசனத்துடன் பார்க்கும் சக்தியற்றிருப்பதானது, சமூக வளர்ச்சியின் தோற்றத்தைப் பற்றிய பூர்ஷுவா தத்துவப்பண்டிதர்களின் ஞானத்தைத் தீர்மானிப்பதுடன், அதன் எல்லைகளைக் குறுக்கி, ஆழத்தையும் குறைக்கிறது. சரித்திரத்தின் அரங்க மேடையிலிருந்து ஒழிந்துகொண்டு வரும் வர்க்கங்களுடைய சித்தாந்த ஞானிகள், அவர்கள் எவ்வளவு தான் திறமைசாலிகளாக இருந்த போதிலும் உண்மையிலேயே ஆழ்ந்த விஞ்ஞான பூர்வமான முடிவுகளைக் காணவும், புதிய கண்டுபிடிப்புகளை சாதிக்கவும், சக்தியற்ற நிலையில் உள்ளனர். விஞ்ஞானம், உலக தாத்பரிய, சாஸ்திரம் ஆகியவற்றின் வளர்ச்சி சரித்திரம் பூராவும், இந்த மார்க்சிஸ்ட் உண்மையை ஊர்ஜிதம் செய்கிறது.

— தர்க்கவியல், சரித்திரவியல் பொருள் முதல்வாதம் பாகம் 1, பக்கம் 285. ரஷ்யப் பதிப்பு பதிப்பாசிரியர் மிட்டின் மாஸ்கோ 1934)

மார்க்ஸிசம்—லெனினிசமே, தொழிலாளி வர்க்கப் புரட்சியின் விஞ்ஞானம். முழுக்க முழுக்க தொழிலாளி வர்க்கக் கண்ணேட்டத்தை மேற்கொள்பவர்களும், தொழிலாளி வர்க்கத்தின் லட்சியத்தை தமது சொந்த லட்சியங்களாக ஏற்றுக் கொள்பவர்களும் தான், மார்க்சிசம்—லெனினிசத்தில் பரிபூரண ஞானமும் பாண்டித்தியமும் பெற முடியும். திடமான கண்ணேட்டமும், தொழிலாளி வர்க்கத்தின பரிசுத்தமான லட்சியமுமில்லாத எவரும் தமது புத்திக் கூர்மையின் மூலமும் தீவிர படிப்பின் மூலமும் மட்டுமே தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சீய விஞ்ஞானத்தில் பரிபூரண ஞானமும், பாண்டித்தியமும் பெறுவதென்பது சாத்தியமல்ல. இதுவும கூட தெட்டத் தெளிவாகத தெரியும் உண்மையாகும ஆகவே, இன்று நாம் மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவத்தையும் வழிமுறையையும் பயிலும் அதே காலத்தில், நாம் நமது சித்தாந்தப் பயிற்சியை மேற்கொள்வதும், எஃகு உறுதியைப் பெறுவதும் அவசியமாகும். ஏனெனில், மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவமும் வழிமுறையும் இல்லாவிட்டால், நமது சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும் வழிகாட்டக் கூடியது ஒன்றும் இருக்காது. நமது சித்தாந்தப் பயிற்சியும் சாத்தியப்படாது.



இவ்விரண்டும் ஒன்ருேடொன்று நெருங்கிய சம்பந்தமுள்ளவை, பிரிக்கப்படவும் முடியாதவை.

தொழிலாளி வர்க்கத்தினின்று தோன்றியுள்ள சிறந்த கட்சி உறுப்பினர்கள் சிலர், தத்துவப்படிப்பில் விசேஷமாக ஈடுபட்டு வருகிறவர்களைப் பார்க்கிலும் குறைந்த அளவுக்கே மார்க்சிசம்— லெனினிசத் தத்துவத்தில் வளர்ச்சி பெற்றுள்ளவர்களாக விளங்குவதை நாம் அடிக்கடி பார்த்து வருகிருேம். மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் சூத்திரங்களையும், மார்க்சிய—லெனினிச நூல்களிலிருந்து மேற்கோள்களையும் ஒப்பிக்குமாறு இவர்களைக் கேட்டால், நிச்சயம் மற்றவர்களை விட இவ்விஷயத்தில் குறைவான சாமர்த்தியமுடையவர்களாகவே இருப்பார்கள். ஆனுல், அவர்களுக்குப் புரியும் வார்த்தைகளில் விளக்கம் தரப்பட்டால், மாணவப் பகுதியினின்றும் வந்துள்ள கட்சி உறுப்பினர்களைப் பார்க்கிலும், மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவத்தைப் பயிலுவதில் அதிகபட்சமான அக்கறையும், அதிகம் ஆழமான ஞானமும் அவர்களுக்கு உண்டு என்பதை காண முடியும். உதாரணமாக உபரி மதிப்பு பற்றிய தத்துவத்தை விளக்கும் ''மூலதனம்'' என்ற நூலிலுள்ள அத்தியாயத்தை புரிந்து கொள்ளுவது சில, பல கட்சி உறுப்பினர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆனுல் இது, தொழிலாளி வர்க்கத்திலிருந்து வந்துள்ள உறுப்பினர்களுக்கு அவ்வளவு சிரமமானதாக இருப்பதில்லை. ஏனெனில், உற்பத்தியின் நிகழ்ச்சிப் போக்கில் எவ்வாறு முதலாளிகள் கூலிகளை நிர்ணயிக்கின்றனர், எவ்வாறு லாபம் சம்பாதிக்கின்றனர் என்பதையும், எவ்வாறு அவர்கள் மறு-உற்பத்தியை விரிவுபடுத்துகின்றனர் என்பன போன்றவற்றையும் தொழிலாளர்கள் பரிபூரணமாக புரிந்து கொள்கின்றனர். ஆகவே, மார்க்சின் உபரி-மதிப்புத் தத்துவத்தை இதர கட்சி உறுபபினர்களைப் பார்க்கிலும் மிகவும் தீர்க்கமாக புரிந்து கொள்ளுகின்றனர். குறிப்பாக, பல்வேறு நடைமுறைப் பிரச்னைகளைக் கவனித்து அவற்றை சமாளிக்கும் விஷயத்தில், பல சந்தர்ப்பங்களிலும், அவர்களது முடிவுகள் மற்றவர்களுடையதைக் காட்டிலும், அதிக அளவுக்குப் பொருத்தமானதாகவும், சரியானதாகவும் மார்க்சிச—லெனினிசத்தின் கோட்பாடுகளுக்கு மிகவும் ஏற்றதாகவும் உள்ளன. இதற்குக் காரணம என்ன? காரணம் என்னவெனில், திடமான, பரிசுத்தமான தொழிலாளி வர்க்க, கம்யூனிஸ்ட் கண்ணேட்டமும், லட்சியங்களும் அவர்களிடம் உண்டு; எல்லா விஷயங்களைப் பற்றியும் யதார்த்தப்போக்கு அவர்களிடம்

உண்டு; உண்மையை எதிர்நோக்கும் முன்பே, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட கருத்துக்களால் அவர்கள் பாதிக்கப்படுவதில்லை; தனிப்பட்ட பிரச்னைகளைப் பற்றியோ அல்லது அசுத்தமான விஷயங்களைப் பற்றியோ அவர்களிடம் எந்த கவலையும் இருப்பதில்லை. ஆகவே, அவர்கள் விஷயங்களின் உண்மையை விரைவில் கண்டறிந்து, எந்தவித தயக்கமோ அல்லது சிரமமோ இல்லாத முறையில் உண்மையை தைரியமாக நிலை நாட்டவும் முடிகிறது.

மிகவும் தெளிவான, திடமான வர்க்கக் கண்ணோட்டமில்லாதவர்கள், பிசகற்ற, பரிசுத்தமான சித்தாந்தமில்லாதவர்கள், இதர வர்க்கங்கள், பழைய சமுதாயம் ஆகியவற்றின் பல்வேறு விதமான சித்தாந்தங்கள், பழக்க வழக்கங்கள், தப்பெண்ணங்கள் ஆகியவற்றின் மிச்சசொச்சங்கள் முதலியவற்றை ஓரளவுக்கு இன்னமும் கொண்டிருப்பவர்கள், சொந்த நலவுரிமைகள், தனிப்பட்ட நோக்கங்கள், சகலவிதமான பௌதீக ஆசைகள், சுயநலக் கருத்துகள் ஆகியவற்றை இன்னமும் கொண்டிருப்பவர்கள் சிலர், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான நம் மத்தியில் இருக்கின்றனர் என்றால், அவர்கள் மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவத்தையும், வழிமுறையையும் படிக்கத் துவங்கும் போது, மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் கோட்பாடுகளும், முடிவுகளும், அவர்களுடைய மேற்கூறிய குறைபாடுகளுடன் மோதும் என்பது நிச்சயம். அப்போது அவர்கள், தமது குறைபாடுகளைப் போக்கிக் கொள்ள முயற்சிப்பார்கள் அல்லது மார்க்சிசம்—லெனினிசத்தின் கோட்பாடுகளையும் முடிவுகளையும் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப திரித்துப் புரட்ட முயற்சித்து, மார்க்சிசம்—லெனினிசத்தை புரிந்து கொள்வதையே கெடுத்துக் கொள்வார்கள். தெளிவானதோர் வர்க்கத் தன்மை கொண்டதான மார்க்சிசம்—லெனினிசத்தின் சாரத்தை ஆழ்ந்து ஊடுருவிப் பார்க்கவும், அதன் மிகத் தூய்மையான சத்தை கிரகிக்கவும், இந்த சத்தை தம்முடைய சொந்த ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ளவும் அவர்கள் சக்தியற்றவர்களாக இருப்பர். ஏனெனில் இந்த ஆயுதத்திற்கும், அவர்களது பழைய வர்க்க சித்தாந்தத்திற்கு எந்தவித சம்பந்தமுமில்லை.

மேலும், தொழிலாளி வர்க்கப் புரட்சியின் ஓட்டத்தில் எழும் பல்வேறு நடைமுறைப் பிரச்னைகளை அவர்கள் சமாளிக்க முற்படும் போது, இப்பிரச்னைகள் மார்க்சிசம்—லெனினிஸக் கோட்பாடுகளுக்கேற்ப தீர்க்கப்பட்டால், அது அவர்களது பழக்க வழக்கங்களுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் நேர் எதிரானதாகவிருக்கும்; அவர்களது சொந்த நலவுரிமைகளுடன், மோதவும் செய்யும். இத்தகைய சமயங்களில், அவர்கள் அற்ப புத்தியும், உறுதியின்மையும், தயக்கமும், ஊசலாட்டமும், கொண்டவர்கள் என்பதை வெளிப்படுத்திக் கொள்வர். பிரச்னைகளை பொருத்தமான முறையிலும், பிசகற்ற முறையிலும், யதார்த்த முறையிலும் சமாளிக்கவோ அல்லது உண்மையைச் சிரமமின்றி கண்டறியவோ அல்லது உண்மையை தைரியத்துடன் நிலைநாட்டவோ சக்தியற்றவர்களாக இருப்பர். அவர்கள், உண்மையை மூடி மறைக்கும் அளவுக்கு அல்லது தெரிந்தோ தெரியாமலோ உண்மையைத் திரித்துப் புரட்டும் அளவுக்கும் செல்வர். தோழர்களே! நிச்சயமாக, இதுபோன்ற உதாரணங்கள் அரிதோ அன்றி விநோதமானவையோ அல்ல; இவை சர்வசாதாரணமான நிகழ்ச்சிகளேயாகும்.

ஆகவே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவரிடம் தொழிலாளி வர்க்கத்தின் தெட்டத் தெளிவான, திடமான, பிசகற்ற, பரிசுத்தமான கண்ணோட்டமும் சித்தாந்தமும் இல்லாதிருக்குமேயானால், அவரால் மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவத்திலும், வழிமுறையிலும் பரிபூரண ஞானமும் பாண்டித்தியமும் பெறுவது சாத்தியமல்ல; மார்க்சிசம்—லெனினிசத்தை தமதுசொந்த புரட்சிகரப் போராட்டத்தில் ஒரு ஆயுதமாகக் கையாளுவதும் அவருக்கு சாத்தியமல்ல.

எனவே, ஏனைய பயிற்சிகளுக்கும் அடிப்படையாக விளங்கும் சித்தாந்தப் பயிற்சிதான், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களின் பயிற்சியில் முதன்மையும், முக்கியமும் வாய்ந்ததாகும். அடுத்த படியாக இதைப்பற்றி பேசப் போகிறேன்.

## கட்சி உறுப்பினர்களின் சித்தாந்தப் பயிற்சி

தோழர்களே! கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களின் சித்தாந்தப் பயிற்சி பற்றி நான் பேசப் போகிறேன். நமது கட்சியிலுள்ள சில உறுப்பினர்களின் சித்தாந்தத்தில் பிரதிபலிக்கும் குறிப்பிட்ட சில விஷயங்களின் அடிப்படையில் நான் இந்த பிரச்னையை விவாதிக்கப் போகிறேன் இந்த சந்தர்ப்பத்தில் கட்சி உறுப்பினர்களின மிகவும் அடிப்படையான சித்தாந்தம் பற்றி மட்டுமே நான் பேசப் போகிறேன்.

சித்தாந்தப் பயிற்சி என்றால் என்ன?

சித்தாந்தப் பயிற்சி என்பது பிரதானமாக நமது மனதில் நடைபெறும் ஒரு போராட்டத்தைக் குறிக்கிறது—தொழிலாளி

வர்க்கத்தின் சித்தாந்தத்திற்கும் ஏனைய சித்தாந்தங்களுக்குமிடையே நமது மனதில் நடைபெறும் போராட்டத்தையும், வாழ்க்கை பற்றிய கம்யூனிஸ்ட் கண்ணோட்டம், கம்யூனிஸ்ட் உலக கண்ணோட்டம் ஆகியவற்றிற்கும் வாழ்க்கைபற்றிய சகலவித இதர கண்ணோட்டங்கள், சகலவித இதர உலக கண்ணோட்டங்கள் ஆகியவற்றிற்குமிடையே நமது மனதில் நடைபெறும் போராட்டத்தையும், கட்சி உறுப்பினர்களின் சொந்த நலன்கள், நோக்கங்கள், கட்சியின் மக்களின் நலன்கள், நோக்கங்கள் ஆகிய இந்த இரு கருத்தோட்டங்களுக்குமிடையே நடைபெறும் போராட்டத்தையும் குறிக்கிறது என்றே நான் கருதுகிறேன்

சித்தாந்தப் பயிற்சி என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு வர்க்கங்களின் பொருளாதார அரசியல் கோரிக்கைகளைப் பிரதிபலிக்கும், ஒன்றுக்கொன்று விரோதமான கருத்துக்களிடையே நடைபெறும் ஒரு போராட்டத்தைக் குறிக்கிறதென்று நான் கருதுகிறேன். நமது கட்சி உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் இந்தப் போராட்டத்தின் விளைவாக தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தம் சகலவித இதர சித்தாந்தங்களை வென்று, அவற்றை அறவே அகற்றி விடவும் வேண்டும்; வாழ்க்கைப் பற்றிய கம்யூனிஸ்ட் கண்ணோட்டமும் கம்யூனிஸ்ட் உலக கண்ணோட்டமும் வாழ்க்கை பற்றிய சகலவித இதர உலக கண்ணோட்டங்களையும் வென்று அவற்றை அறவே அகற்றி விடவும் வேண்டும்; கட்சியின், புரட்சியின, தொழிலாளி வர்க்கத்தின், மனித குலத்தினது விடுதலையின், பொது நலன்கள், நோக்கங்கள் என்னும் கருத்தை வென்று, அதைத் தன்னுள்ளே கிரகித்துக் கொண்டு விட வேண்டும். இந்த போராட்டத்தின் விளைவு இவ்வாறின்றி வேறுவிதமாய் இருக்குமேயானால், முன்னது தோற்று பின்னது வென்றுவிட்டதென்றுதான் ஏற்படும்; அப்பொழுது கட்சி உறுப்பினர் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டு, மேலும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராயிருப்பதற்கு தகுதியற்றவராகி விடும்படியும் ஏற்படும். கட்சி உறுப்பினர்களாகிய நமக்கு இது உண்மையில் ஒரு பயங்கரமான, மிகப்பெரிய ஆபத்தான விளைவாயிருக்கும்.

கட்சிக்கு உள்ளும் வெளியிலும் நடைபெறும் எல்லா சித்தாந்த, அரசியல், பொருளாதாரப் போராட்டங்களினிடையில்தான் கம்யூனிஸ்டுகளாகிய நாம் நமது சொந்த கருத்துக்களைப் பண்படுத்திக் கொள்கிறோம். புரட்சியின் யதார்த்த நிலைமைகளைப் புரிந்து கொள்ளும் சக்தி பெறுகிறோம். அதேசமயத்தில் நாம் புரட்



சிகர நடைமுறையிலிருந்து கிடைக்கும் அனுபவத்தை தொடர்ச்சியாக ஒன்று திரட்டி அதை கிரகித்துக் கொள்ளவும் வேண்டும். நம்முடைய சொந்த கருத்துக்களை ஆராய்ந்து அவை மார்க்சிசம் லெனினிசத்திற்கும் தொழிலாளி வர்க்க விடுதலைப் போராட்டத்தின் நலன்களுக்கும் முற்றிலும் பொருத்தமானவையா என்று பார்க்க வேண்டும். இத்தகைய ஒரு ஆராய்ச்சி, சிந்தனை சுய-சோதனையின் மூலம் நம்முடைய தவறான கருத்துக்கள் யாவற்றையும் அகற்ற வேண்டும்; கம்யூனிசத்தின் நலன்களுக்குப் புறம்பான எந்த கருத்தையும் அது எவ்வளவு இலேசானதாயிருந்த போதிலும் சரி அதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்— இதைத்தான் நாம் சித்தாந்தப் பயிற்சி என்கிறோம். சித்தாந்தப் பயிற்சி மட்டுமின்றி இது சித்தாந்த ரீதியில் தன்னைத் தானே புடம் போட்டு உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஒரு மார்க்கமுமாகும்

தோழர்களே! மனிதனின் சகல நடவடிக்கைகளும் அவனுடைய சித்தாந்தத்தால் வழிகாட்டப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். மேலும் ஒவ்வொரு மனிதனின் கருத்துக்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் பொதுவாக வழிகாட்டியாக உள்ளது' வாழ்க்கை பற்றி அவருக்குள்ள கண்ணோட்டமும் அவருடைய உலக கண்ணோட்டமும்தான். ஆதலால் சித்தாந்தப் பயிற்சியை நடத்தும் பொழுது கம்யூனிஸ்டுகளாகிய நாம் முதல் முதலில் வாழ்க்கை பற்றிய நம் கண்ணோட்டத்தையும் நமது உலக கண்ணோட்டத்தையும் தெளிவாக விளக்கியாக வேண்டும். ஏனெனில் நமது கருத்துக்கள் நடவடிக்கைகள் யாவும் வாழ்க்கை பற்றிய நம் கண்ணோட்டத்துடனும் நமது உலக கண்ணோட்டத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன.

**கம்யூனிஸம் என்னும் இலட்சியம் மிகவும் உன்னதமான, மனித குலத்தின் சரித்திரத்திலேயே மிகவும் கடினமான இலட்சியமென்பதை உணர்ந்து கொள்வது அவசியம்.**

வாழ்க்கை பற்றி கம்யூனிஸ்டுகளாகிய நாம் கொண்டுள்ள கண்ணோட்டமும், நம்முடைய உலக கண்ணோட்டமும், தொழிலாளி வர்க்க சித்தாந்தத்தின் அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். இவையே வாழ்க்கை பற்றிய கம்யூனிஸ்ட் கண்ணோட்டமும் கம்யூனிஸ்ட் உலக கண்ணோட்டமுமாகும். மேலும், இவை கம்யூனிஸ்டுகளாகிய நம்முடைய வழிமுறையுமாகும். இந்த விஷயம் பற்றி மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் இலக்கியத்திலும் குறிப்பாக

தாத்பர்ய சாஸ்திரம் பற்றி மார்க்சும், லெனினும் எழுதியுள்ள நூல்களிலும் மிகவும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டிருப்பதாலும். இது பற்றி நீங்கள் முன்பே அதிக அளவு கற்றுள்ளதாலும் இன்று நான் இதைப்பற்றி பேசப் போவதில்லை. இங்கு நான் நம்முடைய இலட்சியத்தைப்பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டியதென்ன- கம்யூனிசத்தின் இலட்சியம் தான் என்ன- கம்யூனிஸ்ட் கட்சிஉறுப்பினர்களான நாம் எப்படி நம் இலட்சியத்திற்குப் பாடுபட வேண்டும் - என்பது பற்றி மட்டும் சுருக்கமாகப் பேசப் போகிறேன்

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான நமக்குள்ள மிகவும் அடிப்படையான, பொதுவான கடமை என்ன? கம்யூனிசத்தை அமைப்பதே, இன்றுள்ள உலகை ஒரு கம்யூனிஸ்ட் உலகாக மாற்றுவதே அந்தக் கடமை என்பது எல்லோருக்கும்தெரியும் கம்யூனிஸ்ட் உலகம் நல்லதா, கெட்டதா? மிகவும் நல்லது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இத்தகைய உலகில் சுரண்டுவோரும், அடக்கி ஆள்வோரும், நிலச்சுவான்களும், முதலாளிகளும், ஏகாதியத்தியவாதிகளும்,பாசிஸ்டுகளும் இருக்க மாட்டார்கள். அடக்கியாளப்பட்டு சுரண்டப்படும்மக்களும் இருக்கமாட்டார்கள்.இருளும்,அறியாமையும், பின்தங்கிய நிலையும் இருக்காது. இத்தகைய ஒரு சமூகத்தில் மனிதர்கள் அனைவரும் தன்னலமற்ற,புத்தி கூர்மையுடைய உயர்ந்த கலாச்சார நிலையும் தொழில் நுணுக்க தேர்ச்சியும் பெற்றுள்ள கம்யூனிஸ்டுகளாகி விடுவார்கள். மனித வர்க்கத்தினிடையே பரஸ்பர உதவி உணர்வும், பரஸ்பர அன்பும நிலவும் ஒருவரை ஒருவரை ஒருவர் ஏமாற்றுவது, பரஸ்பர விரோதம் ஒருவரை ஒருவர் கொலை செய்வது, யுத்தம் முதலியவை போன்ற அறிவிற்குப் புறம்பான பல விஷயங்களும் இருக்காது. இத்தகைய ஒரு சமூகம் மனிதகுலத்தின் சரித்திரத்திலேயே மிகவும் சிறந்த சமூகமாய், மிகவும் அழகானதாய், மிகவும் முன்னேற்றமடைந்துள்ளதாய் விளங்குமென்பதில் ஐயமில்லை. இத்தகைய ஒரு சமூகம் நல்லதல்லவென்று யார்தான் கூறமுடியும்? ஆனால் கம்யூனிஸ்ட் சமூகத்தைக்கொண்டுவர முடியுமா என்னும் கேள்வி இங்கே எழுகிறது. முடியுமென்பதே நம்முடைய பதில். இதைப் பற்றி மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவம் முழுவதும் விஞ்ஞான ரீதியில், சந்தேகத்திற்கு இடமளிக்காத ஒரு விளக்கம் கொடுக்கிறது. மேலும் அது மனித வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்தின் விளைவாக இறுதியில் இத்தகைய ஒரு சமூகம் கட்டாயம், தவிர்க்க முடியாதபடி, ஏற்பட்டே தீருமென்றும் விளக்குகிறது. சோவியத் நாட்டில சோஷலிசம்



பெற்றுள்ள வெற்றி இதைக் கண்கூடாக நமக்கு நிரூபித்துக் காட்டியுள்ளது. ஆதலால், மனித வர்க்கத்தின் சரித்திரத்தில் தவிர்க்க முடியாதபடி ஏற்பட்டுத் தீர வேண்டிய இந்த கம்யூனிஸ்ட் சமூகத்தை சீக்கிரத்தில் கொண்டுவருவதே நம்முடைய கடமையாகும்.

இது ஒரு அம்சமாகும். இதுவே நமது இலட்சியம்.

ஆனால் மற்றுமோர் அம்சத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, கம்யூனிசத்தை நிறைவேற்ற முடியும், அது நிறைவேறியே தீரும் என்றாலுங்கூட, இன்னமும் அது மிகுந்த பலமுடைய பகைவர்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. இந்த பகைவர்கள் ஒவ்வொரு துறையிலும் பூரணமாகவும் இறுதியாகவும் முறியடிக்கப்படாத வரையில் கம்யூனிசத்தை நிறைவேற்றிவிட முடியாதென்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே கம்யூனிசத்தின் இலட்சியம் கைகூடுவதென்பது ஒரு நீண்ட மிகக் கடினமான ஆனால் வெற்றிகரமான போராட்ட நிகழ்ச்சியாகும். இம்மாதிரியான ஒரு போராட்டமின்றி கம்யூனிசம் ஏற்பட்டுவிட முடியாது. சிலர் கூறியுள்ளதுபோல் இந்த போராட்டம் ஏதோ ''எதிர்பாராத விதமாய் ஏற்படும் சமூக சம்பவமோ,'' அல்லது ''இயற்கையாகவே கலகக்காரர்''களான சில கம்யூனிஸ்டுகளால் தூண்டிவிட்டு உற்பத்தி செய்யப்படும் ஒரு சம்பவமோ ஆகாதென்பது உண்மைதான். இதற்கு நேர்மாறாக, இது வர்க்க சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் ஏற்படும் ஒரு தவிர்க்க முடியாத சம்பவமாகும். இது நம்மால் தவிர்க்க முடியாத ஒரு வர்க்கப் போராட்டமாகும். கம்யூனிஸ்ட் கட்சியின் உதயம், கம்யூனிஸ்டுகள் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வது, அவர்கள் போராட்டத்தை ஸ்தாபன ரீதியில் திரட்டி அதற்கு வழி காட்டிச் செல்வது முதலியனவும்கூட சமூக வளர்ச்சி விதிகளுக்கு உகந்தாற் போலமைந்துள்ள தவிர்க்க முடியாத சம்பவங்களாகும். ஏகாதிபத்தியவாதிகளும், பாசிஸ்டுகளும், முதலாளிகளும், நிலச்சுவான்களும்—சுருக்கமாய் கூறினால் சுரண்டுவோர்கள்—இருப்பதால்தான் இவ்வாறு ஏற்படுகிறது. அடக்கப்பட்டு சுரண்டப்படும் மக்கள் மனித வர்க்கத்தின் மிகப் பெரும் பகுதி மக்கள், வாழ முடியாத அளவிற்கு இந்த சுரண்டும் கும்பல் அவர்களை அடக்கி ஒடுக்கி சுரண்டுவதால், அடக்கி ஒடுக்கி சுரண்டப்படுவோர்கள் இந்த ஒடுக்குமுறையையும் சுரண்டலையும் எதிர்த்து ஒன்றுபடாமலிருக்க முடியவில்லை. இவ்வாறு செய்யாவிட்டால், இவர்கள் வாழ முடியாது, வளரமுடியாது.எனவே இந்த போராட்டம் முழுக்கமுழுக்க

இயற்கையான தவிர்க்க முடியாத ஒரு சம்பவம் ஆகும். எனவே இந்த போர்ராட்டம் முற்றிலும் இயல்பானதும் தவிர்க்கப்பட முடியாததுமாகும். மனித குலத்தின் சரித்திரத்திலேயே மிகவும் சிறந்த இலட்சியம் கம்யூனிஸ்ட் இலட்சியம்என்பதைநாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் கம்யூனிஸம் இறுதியில் வர்க்கங்களை ஒழித்து விடும்; மனித சமுதாயம் முழுவதையுமே விடுவித்து விடும. மனித வர்க்கத்தின் சரித்திரத்தில் என்றுமே காணப்பட்டிராத அளவு இன்ப வாழ்விற்கு மனித சமூகத்தை உயர்த்தி விடும்; கம்யூனிசமென்னும் இலட்சியம் மனித வர்க்கத்தின் சரித்திரத்திலேயே மிகவும் கடினமான இலட்சியமென்பதையும் நாம் உணர வேண்டும். ஏனெனில், கம்யூனிஸம் அளவு கடந்த பலமுடைய ஒரு பகைவனை எதிர்த்து நின்று வெற்றி பெற்ருக வேண்டும். சுரண்டும் வர்க்கங்களையும் மக்களிடையே உள்ள இந்த வர்க்கங்களின் செல்வாக்கு, பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றையும் எதிர்த்து நின்று வெற்றி பெற்ருக வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தையும், சுரண்டி ஒடுக்கப்படும் மக்களைச் சேர்ந்த வெகுஜனங்களையும் ஆதாரமாய் கொள்வதின் மூலமும், வெகுஜனங்களின் புரட்சிப் போராட்டத்திற்கு வழிகாட்டி அழைத்துச் செல்வதிலும், கம்யூனிசமென்னும் உன்னத குறிக்கோளை நோக்கி சமூகத்தை முன்னேறச் செய்வதிலும் மார்க்சிசம்-லெனினிசத்தின் யுத்த தந்திரத்தையும் போர் தந்திரத்தையும் கையாளுவதின் மூலமும், கம்யூனிஸ்ட் கட்சி இறுதி வெற்றியைப் பெறுமென்பது திண்ணம். ஏனென்ருல, மனித வர்க்கத்தின் சமூகப் பரிணமகர வளர்ச்சி என்னும் சரித்திர பூர்வமான நிகழ்ச்சி கம்யூனிஸ்ட் சமூகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது; உலகத் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளிடமும் சுரண்டி ஒடுக்கப்படும் மக்களைச் சேர்ந்த வெகுஜனங்களிடமும் பிரம்மாண்ட புரட்சிகர சக்திகள் மறைந்து பொதிந்துள்ளன இந்த சக்திகளைத் திரட்டி, ஐக்கியமடையச் செய்து, ஸ்தாபன ரீதியில் உருவாக்கி விட்டால், அவை உலகெங்குமுள்ள சுரண்டும் வர்க்கங்களையும் அமுகிக் கொண்டிருக்கும் முதலாளித்துவத்தைச் சேர்ந்த சகல பிற்போக்கு சக்திகளையும் தோற்கடிக்கக் கூடிய வல்லமை பெற்றதாகும்; மேலும் கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிலாளி வர்க்கமும் உதயமாகிக் கொண்டிருக்கும் சக்திகளாகும். ''எது உதயமாகிக் கொண்டிருக்கிறதோ, எது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறதோ, அது தான், வெல்லற்கரியது'' [சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரம் (போல்ஷ்விக்)] சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரமும்



சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சரித்திரமும், சர்வதேச தொழிலாளி வர்க்க சரித்திரமும் இதை பரிபூரணமாக நிரூபிக்கின்றன.

இன்றைய நிலைமையைப் பொறுத்த வரையில், சோவியத் யூனியனில், உலகப் பரப்பில் ஆறிலொரு பகுதியில், கம்யூனிசம் இதற்குள்ளாகவே மகத்தான முறையில் வெற்றி கண்டுள்ளது. உலக நாடுகள் அனைவற்றிலும் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் விரைவாக வளர்ந்தோங்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. மார்க்சிசம்—லெனினிசம் என்னும் போராயுதத்தைப் பெற்றுள்ள போர்க்குணம் மிகுந்த கம்யூனிஸ்ட் கட்சிகள், இதற்குள்ளாகவே சகல நாடுகளிலும் அமைக்கப்பட்டுவிட்டன. உலகத் தொழிலாளி வர்க்கத்தின் பலமும், சுரண்டி ஒடுக்கப்படும் வெகுஜனங்களின் பலமும் ஓயாத போராட்டங்கள்மூலம் துரிதமாகத் திரட்டப்பட்டு ஐக்கியமடைந்து வருகின்றன. ஆதலால், கம்யூனிசமென்னும் இலட்சியம் உலகெங்கணும் மிகுந்த சக்தி வாய்ந்த, வெல்ல முடியாத ஒரு சக்தியாகியுள்ளது. இந்த சக்தி தொடர்ந்து வளர்ந்து, முன்னேறி, இறுதியில் பரிபூரண வெற்றியைப் பெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லைஎன்ருலும், சர்வதேச பிற்போக்குசக்திகளும் சுரண்டும் வர்க்கங்களும் நம்மைவிட இன்னும் அதிகமான பலத்தோடு உள்ளன; பல துறைகளிலும் அவை தற்காலிகமாய் நம்மைவிட இன்னும் அதிக சக்தியுடன் உள்ளன; இதன் பயனுய், நாம் இவற்றை முறியடிப்பதற்கு ஒரு நீண்ட, கடுமையான, சுற்றி வளைத்த, சரடுமுரடான போரராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

சுரண்டும் வர்க்கங்கள் மனித வர்க்கத்தின் மீது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் ஆட்சி செலுத்தி வந்திருப்பதால் அவை உலகிலுள்ள தனைத்தையும் தாமேகைப்பற்றிக் கொண்டுசகல துறைகளிலும் அளவுகடந்த பலத்துடன் விளங்குகின்றன. அது மட்டுமல்ல; அவை சமூகத்திலுள்ள சுரண்டப்படும் வர்க்கங்களையும் பொது மக்களையும் சேர்ந்த வெகுஜனங்களிடையே படுமோசமான தீய பலாபலன்களையும் உண்டுபண்ணியுள்ளன. மனித சமூகத்தில் காணப்படும் சகலவிதமான பின்தங்கிய நிலைமைக்கும், அறியாமைக்கும், சுயநலத்திற்கும் மற்றும் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொள்வது, பரஸ்பரம் விரோதம் கொள்வது, ஒருவரை ஒருவர் கொலை செய்து கொள்வது முதலியவற்றிற்கும் இந்த தீய பலாபலன்களே காரணம். வர்க்க சமூகத்தில், குறிப்பாக பரிவர்த்தனைப்

பண்ட பொருளாதாரத்திலும் முதலாளித்துவ சமூகத்திலும் இந்த நிலைமை அவசியம் ஏற்பட்டே தீரும். சுரண்டும் வர்க்கங்கள் தங்கள் வர்க்கநலன்களுக்காகவும், வர்க்க ஆட்சியின் பொருட்டும் சிருஷ்டி செய்யும் தவிர்க்க முடியாத ஒரு நிலைமையே இது. ஏனெனில் சுரண்டப்படும் வர்க்கங்களையும், காலனி மக்களையும் சேர்ந்த வெகுஜனங்களின் பின்தங்கிய நிலையும், அறியாமையும், சிதறுண்டு குலைந்தநிலையும், ஐக்கியமின்மையும் இல்லையெனில் சுரண்டும்வர்க்கங்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது முடியாமற் போய் விடும். எனவே, வெற்றி பெறும் பொருட்டு நாம் சுரண்டும் வர்க்கங்களை மட்டுமல்லாது, சுரண்டும் வர்க்கங்களால் வெகுஜனங்களிடையே தொடர்ந்து ஏற்படும் தீயபலன்களையும் எதிர்த்து கடுமையான போராட்டம் நடத்த வேண்டும். அதாவது வெகுஜனங்களிடையே நிலவும் பின்தங்கிய சித்தாந்தம், நிலைமைகள் முதலியவற்றையும் எதிர்த்துப் போராட்டம் நடத்தியாக வேண்டும்; அப்பொழுதுதான் நாம்அவர்களுடைய உணர்வைஉயர்த்தி சுரண்டும் வர்க்கங்களைத் தோற்கடிப்பதற்கு அவர்களை ஐக்கியப்படுத்த முடியும். கம்யூனிஸமென்னும் இலட்சியத்திற்கான போராட்டத்தில் நம்மை எதிர்நோக்கும் கஷ்டமெல்லாம் இதில் தான் அடங்கியுள்ளது.

தோழர்களே! சிலர் கற்பனை செய்து கொள்வது போல் வெகுஜனங்கள் முற்றிலும் உணர்வுபடைத்தவர்களாகவும்,ஐக்கியமுடையவர்களாகவும், சுரண்டும் வர்க்கங்களின் தீய பலாபலன்களிலிருந்து விடுதலை பெற்றவர்களாகவுமிருந்து விட்டால், புரட்சியில் இனிமேல் கஷ்டங்கள் எவையும் இருக்க இடமுண்டா? சுரண்டும் வர்க்கங்களால் ஏற்படும் இந்த தீய பலாபலன்கள் புரட்சி நடப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்து இருந்தன; அவை புரட்சி வெற்றி பெற்று, சுரண்டுவோர் அவர்களுடைய அரசியல் அதிகாரத்திலிருந்து சுரண்டப்படுவோரால் உதைத்துத் தள்ளப்பட்ட பின்பும் நீண்ட காலம் வரை நீடித்திருக்கும். சற்றுநேரம் சிந்தித்துப் பாருங்கள்—மனித வர்க்கம் பூராவையும் விடுதலை பெறச்செய்து அதை மாற்றுவதென்றால் சுரண்டும் வர்க்கங்களையும் அவற்றால் மக்களிடையே உண்டாகும் தீய பலாபலன்களையும் இறுதியாக முறியடிப்பதென்றால், லட்சோப லட்சக்கணக்கான சிறு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளர்களை சீர்திருத்தி, முடிவில் வர்க்கங்களை ஒழித்து, சகலவிதமான பழைய பழக்க வழக்கங்களையும், பாரம்பர்யங்களையும், பின்தங்கிய நிலைமைகளையும் கொண்ட வர்க்க சமுதாயத்தில் (ஒன்றோடொன்று போராடி



ஒன்றை ஒன்று கொலை செய்து கொண்டு, இவற்றின் மூலம் சுய நலம், பரஸ்பரம் ஏமாற்றிக் கொள்ளுதல், பரஸ்பர விரோதம் ஆகிய கருத்துக்களையும் பழக்க வழக்கங்களையும் சிருஷ்டி செய்து கொள்ளும் வர்க்கங்களாகவும்,தேசியஇனங்களாகவும் மனித குலத்தைப் பிரித்து வைத்திருக்கும் ஒரு சமுதாயத்தில்) ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் வாழ்ந்து வந்துள்ள மனித வர்க்கத்தை, படிப்படியாக, வளர்ச்சி பெறச் செய்து, அதை கூர்மையான புத்தியுடைய, தன்னலமற்ற, மிகவும் உயர்ந்த கலாச்சார நிலையும் தொழில் நுணுக்க தேர்ச்சியும் பெறும்படி உயர்த்துவது என்றால், நாம் மேற்கொள்ள வேண்டிய சிக்கலான, கடினமான வேலைகளும் போராட்டங்களும் எவ்வளவிருக்குமென்பது பற்றி சற்றுநேரம் சிந்தித்துப் பாருங்கள்.

லெனின் கூறியதாவது:

''வர்க்கங்களை ஒழிப்பது என்பதன் பொருள் நிலச்சுவான்களையும் முதலாளிகளையும் விரட்டுவதென்பது மட்டுமல்ல—நாம் இதை ஓரளவு சுலபமாகவே சாதித்து விட்டோம் —அதன் பொருள சிறு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளர்களை ஒழிப்பது என்பதுமாகும். இந்த சிறு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாளர்களை விரட்டவோ நசுக்கவோ முடியாது. நாம் அவர்களுடன் ஒத்து வாழ்ந்தாக வேண்டும்.மிகவும் நீடித்த, மெதுவான ஜாக்கிரதையான ஸ்தாபன ரீதியான வேலையால் மட்டுமே அவர்களைத் திருத்தி அவர்களுக்குப் புதிதாக கல்வி புகட்ட முடியும். அவ்வாறே செய்தாகவும் வேண்டும். நாலாபக்கங்களிலிருந்தும் அவர்கள் குட்டி — பூர்ஷ்வா சுற்றுச் சார்பால் தொழிலாளி வர்க்கத்தை சுற்றி வளைத்து விடுகின்றனர். இந்த குட்டி—பூர்ஷ்வா சுற்றுச் சார்பு தொழிலாளி வர்க்கத்தை ஊடுருவிச் சென்று அதை மாசுபடுத்திக் கெடுக்கின்றது. இதனால் குட்டி பூர்ஷ்வா தொடை நடுக்கம், அதன் ஒற்றுமை இன்மை, அதன் தனி மனிதத்துவம், மாறி மாறி மன எழுச்சிக்கும் சோர்விற்கும் இரையாகும் அதன் மனோபாவம் முதலிய பல களங்கங்களும் தொழிலாளி வர்க்கத்தினிடையிலும் மீண்டும் மீண்டும் ஏற்பட ஏதுவாகின்றது. இதை எதிர்த்துப் போராடும் பொருட்டு,தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபன ரீதியான பாத்திரம் (இதுவே அதன் பிரதான பாத்திரம்) பிசகின்றியும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றப்படும் பொருட்டு, தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சிக்குள் மிகவும் கறாரான மத்தியத்துவமும் கட்டுப்பாடும் தேவையாயிருக்கிறது... லட்சக்கணக்கானவர்களிடையே ஊறிப் போயுள்ள பழக்கவழக்கங்களின்

சக்தி மிகவும் பயங்கரமான சக்தியாகும்... கோடிக்கணக்கான சிறு உடைமையாளர்களை ''முறியடிப்பதை'' விட மத்தியத்துவத்துடன் ஒன்று திரண்டு நிற்கும் பெரும் பூர்ஷ்வாக்களை முறியடிப்பது ஆயிரம் மடங்கு இலகுவான காரியமாகும். இந்த சிறு உடைமையாளர்கள் தங்களுடைய சாதாரண, அன்றாட கண்ணிற்படாத, பிடிக்கு அகப்படாத மனச்சோர்வு உண்டாக்கும் நடவடிக்கை மூலம் பூர்ஷ்வா வர்க்கத்திற்குத் தேவையான பூர்ஷ்வா வர்க்கத்தை மீண்டும் ஆதிக்கத்திற்குக் கொண்டு வரக்கூடிய, அதே நிலைமைகளை ஏற்படுத்துகின்றனர்''

லெனின் மேலும் கூறியதாவது:

''......பூர்ஷ்வா வர்க்கத்தின் வீழ்ச்சி(ஒரே ஒரு நாட்டில் தான் இது ஏற்பட்டுள்ளது என்றாலும் கூட) அதன் எதிர்ப்பைப் பன்மடங்கு அதிகரிக்கும்படிச் செய்கிறது. அதனுடை சக்தி சர்வதேச மூலதனத்தின் பலத்திலும், பூர்ஷ்வா வர்க்கத்தின் சர்வதேச தொடர்புகளின் பலத்திலும், ஸ்திரத் தன்மையிலும் மட்டுமின்றி நீண்டகால பழக்க வழக்கங்களின் சக்தியிலும் சிறு பரிவர்த்தனை பண்ட உற்பத்தியின் பலத்திலும் அடங்கியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, சிறு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி இன்னமும் உலகில் மிகவும் பரந்து விரிந்து கிடக்கிறது. சிறு பரிவர்த்தனை பண்ட உற்பத்தி முதலாளித்துவத்தையும் பூர்ஷ்வா வர்க்கத்தையும் தொடர்ச்சியாக, நாள்தோறும் மணிக்கு மணி, தானாகவே திடீர் திடீரென மேலும் மிகவும் பிரம்மாண்டமான அளவில் ஊக்குவித்து வருகிறது. இந்தக் காரணங்களால் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியமாகிறது. பூர்ஷ்வா வர்க்கத்தின் மீது வெற்றி பெறுவதென்பது ஒரு நீண்ட, பிடிவாதமான, மூர்க்கத்தனமான வாழ்வு-மரண யுத்தமின்றி, விடாமுயற்சியும், கட்டுப்பாடும், உறுதியும், வெல்லுதற்கரிய சக்தியும் ஐக்கிய சித்தமும் தேவைப்படும் ஒரு யுத்தமின்றி முடியாது''

சோவியத் யூனியனில் அக்டோபர் புரட்சி வெற்றியடைந்து இரண்டாண்டுகளுக்குப்பின், லெனின் இவ்வாறு எழுதினார். (சோவியத் யூனியனில் மிகவும் கடினமான இந்த வேலை இப்பொழுது நிறைவேற்றப்பட்டு விட்டது.) ஆதலால், புரட்சி வெற்றி பெற்ற பின்னருங்கூட தொழிலாளி வர்க்கம் மிகவும் கஷ்டமான வேலையை செய்து முடிக்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் சரித்திரம் கண்டுள்ள மற்ற எல்லா புரட்சிகளிலிருந்தும் நம்மு



டைய புரட்சி மாறுபட்டதாகும். உதாரணமாய் பூர்ஷ்வா புரட்சி சாதாரணமாய் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றியதும் முடிவடைந்து விடுகிறது; ஆனால் தொழிலாளி வர்க்கத்திற்கு அரசியல் விடுதலையும் வெற்றியும் புரட்சியின் தொடக்கத்தையே குறிப்பிடுகின்றன. அரசியல் வெற்றி கிட்டிய பின்பும் மாபெரும் வேலைகள் அதன் முன்னே நிற்கின்றன.

லெனினும் இப்படித்தான் கூறினார்:

''ஒரே ஒரு பணிதான் பூர்ஷ்வா புரட்சியை எதிர் நோக்குகிறது; பழைய சமூகத்தின் விலங்குகளை உடைத்து உதறித் தள்ளிவிட்டு அவற்றை அழித்து விடுவதே அந்தப் பணி, இந்தப் பணியை செய்து முடித்துள்ள எந்த பூர்ஷ்வா புரட்சியும் அது செய்யவேண்டியதனைத்தையும் செய்துவிட்டதென்றுதான் கருத வேண்டும். ஏனெனில் பூர்ஷ்வா புரட்சி முதலாளித்துவ வளர்ச்சியைப்பலப்படுத்தும் புரட்சியாகும். சோசலிசப்புரட்சி அறவே மாறுபட்ட ஒரு சூழ்நிலையிலுள்ளது. சரித்திரத்தின் ஒரு திரும்பு முனையின் விளைவாய் சோசலிஸ்ட் புரட்சியில் இறங்கும்படி நிர்ப்பந்தம் செய்யப்படும் ஒரு நாடு, எவ்வளவுக்கெவ்வளவு பின்தங்கிய நிலையிலுள்ளதோ, பழைய முதலாளித்துவ உறவை விட்டு சோசலிஸ்ட் உறவிற்கு மாறிச்செல்வது அவ்வளவுக்கவ்வளவு கஷ்டமாயிருக்கும். சோசலிஸ்ட் புரட்சியில், அழித்து ஒழிக்கும் வேலை மட்டுமின்றி, முன்பின் காணப்பட்டிராத அளவு கடினமான ஒரு புதிய வேலையும், அதாவது ஸ்தாபன ரீதியான வேலையும் கூடுதலாக ஏற்பட்டு விடுகிறது''

எனவே புரட்சி வெற்றி பெற்ற பின்னருங்கூட தொழிலாளி வர்க்கத்தின் முன், கடினமான வேலைகள் உள்ளன எனவே கம்யூனிசமென்னும் இலட்சியம், நாம் கூறுவது போல், ''நூறு ஆண்டுகள் நீடிக்கும் மாபெரும் வேலை''யாகும்; இதை ''ஒரே மூச்சில் செய்து முடிப்பது'' என்பது நடக்காது. கம்யூனிஸ்ட் சமுதாயம் இறுதியாக அமைக்கப்படுமுன், பல்வேறு நாடுகளிலுமுள்ள தொழிலாளி வர்க்கம் வளர்ச்சியில் வெவ்வேறான கட்டங்களைத் தாண்டிச் சென்று வெவ்வேறான பகைவர்களைத் தோற்கடித்தாக வேண்டும். உதாரணமாக, சீனம் இன்னமும் பூர்ஷ்வா தன்மையுடைய ஒரு ஜனநாயகப் புரட்சியின் கட்டத்திலுள்ளது. சீனாவை எதிர்த்து ஆக்கிரமிப்பு செய்துவரும் ஏகாதிபத்தியமும் ஏகாதிபத்தியத்துடன் கூடி வேலை செய்யும் பிரபுத்துவ சக்திகளும் தான்

அதன் பகைவர்களாவர். பூர்ஷ்வா தன்மையுடைய இந்தப் புரட்சி முடிவுறும் முன் இந்த பகைவர்களை முறியடித்தாக வேண்டும். தற்போதைய கட்டத்தில் சிறு உற்பத்தியாளர்களான விஸ்தாரமான பகுதிகள் புரட்சியின் ஒரு மிகப்பெரும் இயக்கும் சக்தியாயிருக்கின்கின்றன. நம் நாடு படிப்படியாக மாறி வளர்ந்து இறுதியில் கம்யூனிஸ்ட் சமூகமாகுமுன் நீண்ட காலத்திற்கு அது சோசலிஸ்ட் நிர்மாண வேலையில் ஈடுபடவேண்டியிருக்கிறது.

தோழர்களே! கம்யூனிசத்தை அமைப்பதே நம்முடைய மிகவும் அடிப்படையான கடமை. ஆதலால் கம்யூனிசமென்னும் இலட்சியத்தின் முன் நிற்கும் மேலே நாம் குறிப்பிட்ட பல்வேறு கஷ்டங்களையும் எதிர்த்து வெற்றி காண்பது இயல்பாகவே கம்யூனிஸ்ட்டுகளாகிய நம்முடைய அத்தியாவசியமான கடமையாகும்.

கம்யூனிசமென்னும் இலட்சியம் இவ்வளவு மகத்தான, கடினமான இலட்சியமாயிருப்பதால், இன்று பலர் (நேர்மையுணர்வு படைத்தவர்களையும் உண்மையைக் காணமுயல்வோரையும் இங்கே குறிப்பிடுகிறோம்) கம்யூனிசத்தை அமைக்க முடியுமென்பதில் நம்பிக்கை இழந்து அதன் காரணமாய் கம்யூனிசத்திடம் அவநம்பிக்கைகொள்கின்றனர் அல்லது கம்யூனிச இலட்சியத்திலிருந்து பின்வாங்கி விடுகின்றனர். மனித வர்க்கத்தை வளர்ச்சி பெறச் செய்து அதை மிகுந்த அளவு பரிசுத்தமுடைய ஒரு கம்யூனிஸ்ட் மனிதவர்க்கமாக மாற்ற முடியும். மேலே குறிப்பிட்ட கஷ்டங்களை வென்று விட முடியும் என்று அவர்கள் நம்பவில்லை, அல்லது இத்தகைய கஷ்டங்களை அவர்கள் எதிர்பார்க்கவில்லை; எனவே கஷ்டங்களை கண்டவுடனே அவர்கள் நம்பிக்கையிழக்கின்றனர், ஏமாற்றமடைகின்றனர். ஊசலாட்டங்கூட ஏற்பட்டு விடுகிறது. கம்யூனிஸ்ட்களாகிய நாம் மனித குலத்தின் மகோன்னத வீரத்தையும், புரட்சிகர வைராக்கியத்தையும் பெற்றிருக்க வேண்டும். கம்யூனிசத்தை நிலைநாட்டுவதென்பது மனித சரித்திரத்திலேயே முன்பின் காணப்பட்டிராத மகத்தான, மிகவும் கடினமான வேலையாகும். இந்த மாபெரும் வேலையை மேற்கொள்வதற்கு கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் [illegible] முயற்சியுடனும், மன வைராக்கியத்துடனும் முன்வர வேண்டும். கம்யூனிசமெனும் இலட்சியத்தை எதிர்நோக்கும் கஷ்டங்களை நாம தெளிவாக பார்ககிறோமென்றாலும், நாம் இந்த கஷ்டங்களைக் கண்டு கிஞ்சித்தும் மனத்தளர்வு பெறுவதில்லை. ஏனெனில், எண்ணற்ற, லட்சக்கணக்கான மக்களை புரட்சியில் செயலாற்றும்படி ஆகர்ஷித்து இழுக்கும்போது இந்த கஷ்டங்கள் யாவற்றையும் நிச்சயமாய் தவிடு பொடியாக்கி விடமுடியுமென்பதையும் நாம் தெளிவாக உணருகிறோம். கம்யூனிச இலட்சியமென்பது ஒரு மாபெரும் நூற்றாண்டு கால வேலை என்பதை நாம் தெளிவாக உணருகிறோம். சரித்திரப் பூர்வ பரிணாமகர வளர்ச்சி நமக்கிட்டுள்ள இந்த மகத்தான பணியை நாம் நிறைவேற்றியாக வேண்டும். மகத்தான சக்திவாய்ந்த வெகுஜனப் பகுதிகளின் ஆதரவை நாம் பெற்றுள்ளோம். கம்யூனிச இலட்சியத்தை சாதிக்கும் பணியில் ஒருபெரும் பகுதியை நம்தலைமுறையிலேயே நாம் செய்து முடித்துவிட வேண்டும். வருங்கால தலைமுறையினருக்கு இப்பணியின் இறுதிப் பகுதியை மட்டுமே விட்டுச் செல்ல வேண்டும். தோழர்களே! கம்யூனிஸ்ட்களாகிய நம்முடைய மகோன்னத திருஷ்டியும் வீரமும் மனித சரித்திரத்தின் சென்றகால வீரர்கள் எவரிடமுமிருந்ததில்லை. இவற்றில் நாம் ஈடிணையற்றவராவோம். இதைப் பற்றி பெருமைப்பட்டுக்கொள்வது முற்றிலும்பொருத்தமானதே!



வாழ்க்கை வரலாறு எழுதும் மேற்கு ஐரோப்பிய பூர்ஷ்வா அறிஞர் ஒருவர் சோவியத் யூனியன் சென்ற போது, அவர்தோழர் ஸ்டாலினைக்கண்டு ரஷ்யாவின் மகாபீட்டருடன் லெனினை ஒப்பிடுவது பற்றி ஸ்டாலினின் அபிப்ராயமென்னவென்று கேட்டது என் ஞாபகத்திற்கு வருகிறது. லெனின் விரிந்த பெருங்கடலுக்குச் சமானமானவரென்றும், ஆனால் மகாபீட்டர் அந்த கடலில் ஒரு துளி நீருக்கே சமானமானவர் என்றும், தோழர் ஸ்டாலின் பதிலளித்ததாக இந்த ஆசிரியர் கூறுகிறார்.

தோழர்களே! தொழிலாளி வர்க்கத்தினுடைய கம்யூனிஸ்ட் இலட்சியத்தின் தலைவர் ஒருவரையும் பிரபுத்துவ பூர்ஷ்வா வர்க்கத்தினுடைய இலட்சியத்தின் தலைவர் ஒருவரையும் சரித்திரத்தில் அவரவருக்குள் ஸ்தானம் சமபந்தமாய் ஒப்பிட்டால் லெனின் கடலைப் போன்றும் மகாபீட்டர் துளியைப் போன்றும் இருப்பது விளங்குகிறது கம்யூனிசம் வெற்றி பெறுவதற்காக மனித குலம் விடுதலை பெற வேண்டுமென்னும் இலட்சியத்திற்காக போராடும் ஒரு தலைவர் கடல் போல் பெரியவராகவும் ஒரு சில சுரண்டல்காரர்கள். [illegible] இலட்சியத்திற்காகப் போராடும் மற்றொரு தலைவர் துளி போல் சிறியவராகவும் காணப்படுகின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மகத்தான இலட்சியங்களைப் பெற்றுள்ளனர். தங்கள் போராட்டத்திற்கு மிகவும் மகத்தான குறிக்கோளைக் கொண்டுள்ளனர். அதே சமயத்தில் அவர்

கள் ''ஸ்தூலமான யதார்த்த உண்மைகளிலிருந்து சத்தியத்தை சோதித்தறிவது'' என்னும் மிகவும் சிறந்த நடைமுறைக் கண்ணோட்டத்தையும் கொண்டுள்ளனர். மேலும் அவர்கள் நடைமுறை வேலையையும் தொடர்ந்து செய்து வருகின்றனர். கம்யூனிஸ்ட்களாகிய நம்முடைய குணவிசேஷங்கள் இவை.

தோழர்களே! மகத்தான, புனிதமான இலட்சியங்களை மட்டும் பெற்று ''ஸ்தூலமான யதார்த்த உண்மைகளிலிருந்து சத்தியத்தை சோதித்தறியும்'' பண்பைப் பெறவில்லை என்றால், உண்மையில் நடைமுறையில் அவசியமாயிருக்கும் வேலைகளைச் செய்யவில்லை என்றால், நீங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சிறந்த உறுப்பினராக இருக்க முடியாது. கனவுலகில் மூழ்கிக் கிடக்கும் கற்பனையாளராகவோ, வாய்வீச்சுக்காரராகவோ, வறட்டு இலக்கியவாதியாகவோ தான் இருக்கமுடியும். இதற்கு மாறாக நடைமுறைவேலையில் மட்டும் கவனம் செலுத்தி மகத்தான புனிதமான கம்யூனிஸ்ட் இலட்சியங்களைப் பெற்றிருக்கவில்லை என்றால், நீங்கள் ஒரு சிறந்த கம்யூனிஸ்டாகி விட முடியாது. ஒரு சாதாரண பதவி வேட்டைக்காரராகத்தான் இருக்கமுடியும் நடைமுறை வேலையுடன் கம்யூனிசத்தின் மகத்தான, புனிதமான இலட்சியங்களையும், நடைமுறை வேலையை விடாமல் செய்து முடிக்கும் தன்மையையும், ஸ்தூலமான யதார்த்த உண்மைகளிலிருந்து சத்தியத்தை சோதித்தறியும் பண்பையும் ஒருங்கே கொண்டுள்ளவர் தான் ஒரு சிறந்த கம்யூனிஸ்டாகத் திகழ முடியும்

கம்யூனிஸ்ட் இலட்சியம் மிகவும் நேர்த்தியான இலட்சியம். ஆனால் இன்றுள்ள முதலாளித்துவ உலகம் மிகவும் அகோரமானது. இவ்வாறு அது அகோரமாயிருப்பதால் தான் மக்களில் மிகப் பெரும் பகுதியினர் அதை மாற்ற விரும்புகின்றனர். அதை அவர்கள் மாற்றியே தீருவார்கள். உலகை மாற்ற முயலும் பொழுது நாம் யதார்த்த நிலைமைகளிலிருந்து நம்மைக்கத்தரித்துக்கொண்டு விலகி நிற்பதோ, அல்லது அவற்றை நாம் பொருட்படுத்தாமலிருப்பதோ கூடாது அகோரமாயுள்ள யதார்த்த நிலைமைகளிலிருந்து நாம்தப்பித்துக் கொண்டுவிடவும் முடியாது. அவற்றிற்கு நாம் சரணடைந்து விடவும் முடியாது. யதார்த்த நிலைமைகளுக்கு இசைந்த முறையில் நாம் நடந்து கொள்ள வேண்டும். யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு அவற்றின் கீழ் வாழ்ந்து வளர்ச்சி பெற முயற்சிக்க வேண்டும்; நமது இலட்சியங்கள் நிறைவேறும் பொருட்டு, அகோரமான யதார்த்த நிலைமைகளை எதிர்த்துப்



போராடி, யதார்த்தத்தை மாற்றியமைக்க வேண்டும். எனவே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான நாம் உலகை மாற்றியமைப்பதென்னும் நம் மாபெரும் வேலையை நம்முடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள மக்களிடம் முதலில் செயலாற்றத் தொடங்குவதின் மூலம், உடனடியாக நம்மால் செய்யக் கூடிய வேலையை மேற்கொள்வதின் மூலம் துவக்கியாக வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் சில இளந்தோழர்கள் அடிக்கடி இழைத்து வரும் சில தவறுகள் பற்றி, அதாவது அவர்கள் யதார்த்த நிலைமைகளிலிருந்து தப்புவதற்கோ அல்லது அவற்றைப் பொருட்படுத்தாமலிருப்பதற்கோ முயற்சிப்பது பற்றி, கண்டனம் செய்ய வேண்டியது அவசியமாகும். இவர்கள் புனிதமான இலட்சியங்களைக் கொண்டுள்ளனர் என்பது பாராட்டத்தக்கதே. ஆனால், இந்த இடம் மோசமானது, அந்த இடமும் சரி இல்லை என்றும், இம்மாதிரியான வேலை நன்றாகவில்லை, அம்மாதிரியானவேலையும் கூட நன்றாகயில்லை என்றும் அடிக்கடி இவர்கள் புகார் செய்கின்றனர். சகல வழிகளிலும் திருப்திகரமான இடத்தையும் வேலையையும் அவர்கள் சதாகாலமும் தேடிக் கொண்டே இருக்கின்றனர். ஆனால், இத்தகைய இடமும் இத்தகைய வேலையும் அவர்களுடைய ஆசைக் கனவிலுள்ளனவேயன்றி உண்மை உலகில் கிடைக்கப் போவதில்லை

மேலே நான் கூறியதுதான் கம்யூனிசமென்னும் இலட்சியம் பற்றி-நாம் நம் வாழ்நாள் பூராவும் பாடுபடும் இந்த இலட்சியம் பற்றி-நாம் புரிந்து கொள்வது. வாழ்க்கைபற்றியநம் கண்ணோட்டத்திலும், நமது உலக கண்ணோட்டத்திலும் மிகவும் முக்கியமான பகுதி இதுவே. நம் வாழ்நாள் பூராவிலும் நாம்மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளும் இதன் பொருட்டே அன்றி வேறில்லை.

வாழ்க்கை பற்றிய தனது கம்யூனிஸ்ட் கண்ணோட்டத்தையும் தனது கம்யூனிஸ்ட் உலக கண்ணோட்டத்தையும் திட்டவட்டமாய் வரையறுத்து நிலைநாட்டுவதுடன், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் தன் சொந்த நலன்களுக்கும் கட்சியின் நலன்களுக்குமிடையில் இருக்க வேண்டிய சரியான உறவையும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சொந்த நலன்கள் கட்சியின் நலன்களுக்கும், பகுதி நலன்கள் பூரண நலன்களுக்கும், தற்காலிக நலன்கள் நீண்டகால நலன்களுக்கும், ஒரு தேசத்தின் நலன்கள் பூரா உலகின் நலன்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட வேண்டுமென்பதே மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கோட்பாடு.

கம்யூனிஸ்ட் கட்சி என்பது தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதியான அரசியல் கட்சியாகும். தொழிலாளி வர்க்க விடுதலையின் நலன்களைத் தவிர, நம் கட்சிக்கு தனக்கென்று வேறு சொந்த நலன்களோ, நோக்கங்களோ எவையுமில்லை தொழிலாளி வர்க்கத்தின் இறுதி விடுதலை என்றால் அவசியம் மனிதகுலம் முழுமைக்கும் இறுதி விடுதலை என்றே ஆகும். ஏனெனில் தொழிலாளி வர்க்கம் உழைப்பாளி மக்கள் அனைவரையும் சகல தேசத்தினரையும் விடுவிக்காத வரையில், அதாவது மனிதகுலம் முழுவதையும் விடுவிக்காத வரையில், அது தன்னையும் விடுவித்துக் கொள்ள முடியாது. ஆதலால் தங்கள் சொந்த விடுதலைக்காகவும் தங்களுடைய சொந்த வாழ்க்கைத்தரத்தையும் தங்களுடைய சொந்த கலாச்சார, அரசியல் நிலையையும் உயர்த்திக் கொள்வதற்காகவும் போராடும் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும், ஒடுக்கப்பட்ட தேசங்களின் மக்கள் எல்லோருக்கும், தொழிலாளி வர்க்கம் விசுவாசமாய் உதவி புரிய வேண்டும்; தலைமைவகித்து செயலாற்ற வேண்டும். இவ்விதம் தொழிலாளி வர்க்க விடுதலையின் நலன்கள் மனித குலம் முழுவதும், ஒடுக்கப்பட்ட எல்லா தேச மக்களும் விடுதலை பெறுவதின் நலன்களுடன் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டு இரண்டறக் கலந்திருக்கின்றன. ஆகவே கம்யூனிஸ்ட் கட்சியின் நலன்கள் தொழிலாளி வர்க்கமும் மனிதகுலம் பூராவும் விடுதலை பெறுவதற்கான நலன்களேயாகும். மேலும் அவை கம்யூனிஸத்தின் நலன்களையும் சமூகத்தின் பரிணாமகர வளர்ச்சியின் நலன்களையும் குறிக்கும் எனவே, கட்சி உறுப்பினரின் சொந்த நலன்கள் கட்சியின் நலன்களுக்குக் கீழ்படுத்தப் படுவதென்றால், வர்க்க விடுதலையின் நலன்களுக்கும், தேச விடுதலையின் நலன்களுக்கும், கம்யூனிசத்தின் நலன்களுக்கும், சமூகத்தின் பரிணாமகர வளர்ச்சியின் நலன்களுக்கும் கட்சி உறுப்பினரின் சொந்த நலன்கள் கீழ்ப்படுத்தப்பட வேண்டுமென்பதே அதன் பொருளாகும்.

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எல்லா சூழ்நிலைகளிலும் தன் சொந்த நலன்களை கட்சியின் நலன்களுக்கு பரிபூரணமாகவும் நிபந்தனையின்றியும் கீழ்ப்படுத்துகிறாரா என்பதைக் கொண்டே கட்சிக்கும், புரட்சிக்கும், கம்யூனிஸ்ட் இலட்சியத்திற்கும் அவர் செலுத்தும் விசுவாசத்தை மதிப்பிட வேண்டும். கம்யூனிஸ்ட் இலட்சியத்தின் வெற்றி தொழிலாளி வர்க்கத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் பொறுத்திருப்பதால், தொழிலாளி வர்க்கத்தின் நலன்களும் கம்யூனிஸ்ட் கட்சியின் நலன்களும் புறக்கணிக்கப்



படுமேயானால், கம்யூனிசத்தை நிர்மாணிப்பதென்பது முடியாமற் போய்விடும்.

எக்காலத்திலும் சரி, எந்த பிரச்னையானாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கட்சி முழுமையின் நலன்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, கட்சியின் நலன்களுக்கு தன் சொந்த பிரச்சனைகளையும் நலன்களையும் விட அதிக முக்கியத்துவமளிக்க வேண்டும். கட்சியின் நலன்களே பிரதானமானவை இதுதான் நம் கட்சி உறுப்பினர்களின் மிக முக்கியமான கோட்பாடாகும். கட்சி உறுப்பினர் ஒவ்வொருவரும் தன் சித்தாந்தத்தில் இந்த கருத்தை மிகவும் உறுதியாக நிலைநாட்ட வேண்டும். இதைத்தான் நாம், அடிக்கடி ''கட்சி மனப்பான்மை'', ''கட்சி உணர்வு'' அல்லது ''ஸ்தாபன உணர்வு'' என்றுகூறி வந்துள்ளோம். கட்சி உறுப்பினரின் மனதில் முக்கிய ஸ்தானம் வகிக்க வேண்டியது கட்சியும், கட்சியின் நலன்களுமாகுமேயன்றி, தன் சொந்த விவகாரங்களோ சொந்த நலன்களோ அல்ல. தன் சொந்த நலன்கள் கட்சியின் நலன்களுக்குஏற்றதாக, அவற்றுடன் இரண்டறக் கலந்துவிடக் கூடியதாக இருக்கும்படி அவர் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தன் சொந்த நலன்கள் கட்சியின் நலன்களுடன் மோதும் போதெல்லாம், சிறிதும் தயக்கமின்றியும் மனத்தடுமாற்றமின்றியும் அவர் தன் சொந்த நலன்களைத் தியாகம் செய்து, கட்சியின் நலன்களுக்கு தன்னைக் கீழ்ப்படுத்திக் கொள்ள முடியும். கட்சியின் இலட்சியத்திற்காக, வர்க்கத்தின் விடுதலை, தேசத்தின் விடுதலை, மனித குலத்தின் விடுதலை என்னும் இலட்சியத்திற்காக, கிஞ்சித்தும் தயக்கமின்றியும், மேலும் மனமகிழ்ச்சியோடும் தன் சொந்த நலன்களை, தன் உயிரையும் கூட, அர்ப்பணிப்பதென்பது கம்யூனிஸ்ட் நெறியின் மிகச் சிறந்த பிரதிபலிப்பு ஆகும். இது கட்சி உறுப்பினரின் சீரிய கோட்பாட்டின் பிரதிபலிப்பு ஆகும். அவருடைய தொழிலாளி வர்க்க சித்தாந்தத்தின் பரிசுத்த தன்மையின் பிரதிபலிப்பு ஆகும்.

கட்சியினுள் நம் தோழர்கள் கட்சியின் நலன்களுக்குப் புறம்பான சொந்த நோக்கங்களை கொண்டிருக்ககூடாது. நம்கட்சி உறுப்பினர்களின் சொந்த நோக்கங்கள் கட்சியின் நோக்கங்களின் ஒரு பகுதியாகவே இருக்க முடியும். உதாரணமாக கட்சி உறுப்பினர்கள் மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் தத்துவத்தைக் கற்றறியவிரும்புகின்றனர். தங்கள் திறமையை விருத்தி செய்ய விரும்புகின்றனர். பரந்த வெகுஜனப் பகுதிகளின் வெற்றிகரமான புரட்சிகரப்

போராட்டத்திற்கு தலைமை தாங்கவிரும்புகின்றனர். இவையாவும் அவர்களுடைய சொந்த நோக்கங்களாக இருப்பினும், இவை கட்சியின் நலன்களுக்கு உகந்ததாகவுமிருக்கின்றன. இத்தகைய கட்சி உறுப்பினர்களும் ஊழியர்களும் கட்சிக்கு ஏராளமான பேர் தேவைப்படுகின்றனர். ஆனால் இவற்றையன்றி தங்கள் சொந்த அந்தஸ்து, தனிநபர் விருப்பு போன்ற சுயேச்சையான தனிப்பட்ட நோக்கங்களை அவர்கள் பெற்றிருக்கக்கூடாது. இவை போன்ற நோக்கங்கள் அவர்களுக்கிருக்குமேயானால், கட்சியினுள் சந்தர்ப்பவாதிகளாகிவிடும் அளவிற்கு கட்சியின் நலன்களை அவர்கள் புறக்கணிக்கும்படி நேரிடும்.

கட்சி உறுப்பினர் ஒருவர் கட்சியின் நலன்களையும் நோக்கங்களையுமே தானும் கொண்டுள்ளாரென்றால், கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தைப் பெற்றிருக்கிறார் என்றால், கட்சியின் நலன்களுக்குப் புறம்பான சொந்த நோக்கங்களையும், விருப்பங்களையும் பெற்றிருக்க வில்லை என்றால், மேலும் உண்மையிலே சுயநல மனப்பான்மையும் கோணல் பார்வையும் இல்லாமலிருப்பாரேயானால், அவரிடம் பின்வரும் திறமைகள் காணப்படும்:—

1. சிறந்த கம்யூனிஸ்ட் நெறியை பின்பற்றும் சக்தி அவரிடமிருக்கும். ஒரு கறாரான கண்ணோட்டம் அவரிடமிருப்பதால், மக்களை நேசிக்கும் சக்தியையும் அதே சமயத்தில் பகைவர்களை வெறுக்கும் சக்தியையும் பெற்றிருப்பார். தன் தோழர்கள் அனைவரிடமும், புரட்சிவாதிகளிடமும், பாட்டாளி மக்களிடமும் விசுவாசமும் ஆர்வமிகுந்த அன்பும் செலுத்துவார்; நிபந்தனையின்றி அவர்களுக்கு உதவபுரிவார்; சரிநிகர் சமானமாக நடந்து கொள்வார்; தன் சொந்த நலன்களை உத்தேசித்து அவர்கள் எவருக்கும் தீங்கிழைக்க மாட்டார்.

விசுவாசமாகவும், மன்னித்துவிடும் மனப்பான்மையுடன் ''மற்றவர் நிலையில் தன்னை வைத்துப் பார்க்கும்'' மனப்பான்மையுடனும் அவர்களோடு நடந்து கொள்வார். மற்றவர்களுடைய பிரச்னைகளை அவர்களுடைய கோணங்களிலிருந்து ஆராய்ந்து அவர்களிடம் கவலையும் கருத்தும் காட்டுவார். ''மற்றவர்கள் தனக்கு செய்யக்கூடாதென விரும்புவதை அவர் மற்றவர்களுக்கு செய்ய மாட்டார்.''

மனித குலத்தின் மிகக்கொடிய பகைவர்களை அவர் மிகுந்த வைராக்கியத்துடன் எதிர்த்து நிற்பார். கட்சியின் நலன்களையும்



வர்க்கத்தின் நலன்களையும் மனிதகுலத்தின் விடுதலையின் நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு பகைவனை எதிர்த்து அவர் ஓயாமல் போராடுவார். சீனப்பழமொழி கூறுவதுபோல், ''துன்பத்தை மேற்கொள்ளுவதில் மற்றவர்களைக் காட்டிலும் முன்னே நிற்பார். இன்பத்தை நுகர்வதில் எல்லோருக்கும் பின்னே நிற்பார்.'' கட்சியினுள்ளும் சரி; மக்கள் மத்தியிலும் சரி, கஷ்டத்தைப் பகிர்ந்து கொள்வதென்றால் முதன்முதலிலும் இன்பமுறுவதென்றால் கடைசியிலும் காட்சியளிப்பார் மற்றவர்களை விட தன் நிலைமை சௌகரியமானதா, மோசமானதா என்பதைப்பற்றி கவலைப்படாமல் மற்றவர்களை விட தான் அதிகமாக புரட்சிகர செயல்புரியவேண்டுமென்றும், மற்றவர்களைவிட தான் அதிகமாய் கஷ்டப்பட்டு போராட வேண்டுமெனறும் தான் அவர் கவலைப்பட்டுக்கொண்டிருப்பார் துன்பம் வரும் பொழுது, வீரமுடனும் அசைக்கமுடியாத உறுதியுடனுமிருப்பார். கஷடங்கள் நேரிடும்பொழுது அளவுகடந்த பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வார் செல்வத்தையும் பதவியையும் கண்டு மதி மயங்கி லஞ்சத்திற்கு இரையாகாமலும், ஏழ்மையையும் கீழ்த்தர அந்தஸ்தையும் கண்டு ஊசலாட்டத்திற்கு ஆளாகாமலும், நிர்ப்பந்தத்திற்கும் பயமுறுத்தலுக்கும் கீழ்ப்படிந்து விடாமலும் இருப்பதற்கு அவசியமான அளவுகடந்த உறுதியையும் தார்மீக வீரத்தையும் பெற்றிருப்பார்.

2. அபார தைரியமுடையவராகவுமிருப்பார். எவ்வகையிலும் எள்ளளவுகூட சுயநலமற்றவராதலாலும், ''தன் மனசாட்சிக்கு விரோதமாய்'' எதுவும் செய்தறியாதவராதலாலும், அவர் தன் தவறுகளையும் குறைபாடுகளையும் ஒளிவு மறைவின்றி துணிச்சலுடன் எடுத்துரைத்து அவற்றைத் திருத்திக் கொள்வார். சூரியனும் சந்திரனும் சில நிமிஷங்களுக்கு கிரஹணத்தில் மறைந்து மீண்டும் பிரகாசமாகவும் முழு உருவோடும் வெளிவருவதுபோல் அவரும் தன் தவறுகளையும் குறைபாடுகளையும் அகற்றிக் கொண்டு மீண்டும் சிறப்புடன் தோன்றுவார். ''அவருடைய இலட்சியம் நேர்மையானதாகையால் அவர் தைரியமுடனிருக்கிறார்.'' எக்காலத்திலும் உண்மையைக் கண்டு அவர் அஞ்சுவதில்லை. தைரியமாக உண்மையை நிலைநாட்டுகிறார்; மற்றவர்களுக்கு உண்மையை எடுத்துரைக்கிறார்; உண்மைக்காகப் போராடுகிறார். இவ்வாறு செய்வது தற்காலிகமாக அவருக்கு இடைஞ்சலாக இருப்பினும், உண்மையை நிலைநாட்டப் பாடுபடுவதால் அவர் பல்வேறு தாக்குதல்களுக்கும் ஆளாக நேரிடினும், மிகப் பெருவாரியான மக்களின்

எதிர்ப்பும் பகைமையும் அவரைத் தற்காலிகமாய் தனிமைப்படுத்தினாலும் கூட (இவ்விதம் தனிமைப்படுத்தப்படுவது உன்னதமானதே), இதன் காரணமாய் அவருடைய உயிருக்கே ஆபத்து ஏற்படலாமென்றாலுங்கூட செயலாற்றி வெள்ளத்தில் எதிர் நீச்சல் அடித்து வெற்றி பெற்று உண்மையை நிலைநாட்டுவாரேயன்றி, வெள்ளத்தோடு இழுத்துக் கொண்டு போய்விடும்படி தன்னை விட்டுவிட்டு செயலற்று இருந்து விடமாட்டார். தன்னைப் பொறுத்த வரையில் அவர் எதைக் கண்டும் அஞ்ச வேண்டியதில்லை.

3. அவர் மார்க்சிச — லெனினிச தத்துவத்தையும் வழிமுறையையும் கிரகித்துக் கொள்ளும் சக்தியுடையவராயிருப்பார். நுணுக்கமாகவும் கச்சிதமாகவும் பிரச்னைகளை பார்ப்பதிலும், குறிப்பிட்ட நிலைமையின் உண்மையான தன்மையைக் கண்டறிவதிலும் அவர் மிகுந்த திறமைசாலியாக விளங்குவார் ஒரு உறுதியான, திட்டவட்டமான வர்க்கக் கண்ணோட்டத்தைப் பெற்றிருப்பதால், விஷயங்களையும் நிலைமைகளையும் பார்த்து உண்மையை கிரகித்துக் கொள்வதற்கு இடைஞ்சலாய் அவருடைய பார்வையையும் உணர்வையும் தெளிவற்றதாகவோ கோணலாகவோ ஆக்கக் கூடிய சொந்தக் கவலைகளும் விருப்பங்களும் அவரிடமிருப்பதில்லை. தன்னோக்குப் பார்வையால் பீடிக்கப்படாமல் எதையும் அவர் யதார்த்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் சக்தியுடையவராயிருக்கிறார். எவரையும் கண்டு மதிமயங்கி விடாமல், எல்லா தத்துவங்களையும் உண்மைகளையும், பொய்களையும் புரட்சிகர நடைமுறையின் ஓட்டத்தில் சோதனை செய்கிறார்.

4. மற்றவர் யாரையும்விட மிகுந்த அந்தரங்கசுத்தி உடையவராகவும் இருப்பார். ஒளிவு மறைவற்றவராகவும், இன்பம் பொங்கும் இதயமுடையவராகவுமிருப்பார். சுயநல விருப்பங்களின்றி இருப்பதாலும், கட்சியிடமிருந்து மறைப்பதற்கு அவரிடம் எதுவுமில்லையாதலாலும், சீன முதுமொழி கூறுவதுபோல் ''பிறரிடம் கூறுவதற்கு அஞ்சவேண்டிய விஷயம் அவரிடம் எதுவுமில்லை!'' கட்சியின் நலன்களையும் புரட்சியின் நலன்களையும் அல்லாமல் வேறு சொந்த லாப, நஷ்டம் பற்றியோ அல்லது வேறு சொந்த விவகாரம் பற்றியோ அவர் கவலைப்பட இடமில்லை. தானே சுயேச்சையாக வேலை செய்யும்பொழுது அவர் தன்னைத் தானே கவனித்துக் கொள்ளும் சக்தி பெற்றிருக்கிறார். மேற்பார்வையின்றி சுயேச்சையாக வேலை செய்யும் பொழுது, பல வழி



களிலும் தவறுகள் இழைப்பதற்கு போதிய வாய்ப்பு இருக்கும் பொழுது, தவறுகளுக்கு இடமளிக்காமலிருக்க வேண்டுமென்று அவர் மிகுந்த எச்சரிக்கையுடனிருக்கிறார். அவருடைய வேலையை எவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்னால் பரிசீலனை செய்த போதிலும், கட்சியின் நலன்களுக்கு எவ்வகையிலும் அது முரண்பட்டதாகக் காணப்படாது. மற்றவர்கள் தன்னை குற்ற விமர்சனம் செய்வது பற்றி அவர் பயப்படுவதில்லை. மற்றவர்கள் பற்றி தைரியமாகவும் அந்தரங்க சுத்தியுடனும் விமர்சனம் செய்யவும் அவர் அஞ்சுவதில்லை. அவர் மனத்தூய்மையுடனும், ஒளிவுமறைவின்றியும் சந்தோஷமாகவுமிருப்பதற்கு இதுவே காரணம்.

5. அவர் மிகுந்த அளவு மரியாதையும், சுயமதிப்பும் பெற்றிருக்கிறார். அதே சமயத்தில் கட்சியின் நலன்களையும் புரட்சியின் நலன்களையும் உத்தேசித்து அவர் தயாள சிந்தையோடும் மிகுந்த பொறுமையோடும் நடந்து கொள்வார்; விட்டுக் கொடுத்து சமரசம் செய்து கொள்ளவும் தயாராயிருப்பார்; வேண்டுமென்றால் பல்வேறு வகையான அவமானத்தையும் அநீதியையும் கூட மனக்கசப்பின்றி, பகைமை உணர்வின்றி, சகித்துக் கொள்வதற்கும் தயாராயிருப்பார். சொந்த நோக்கங்களோ ஆசைத் திட்டங்களோ அவரிடம் இல்லையாதலால், அவர் மற்றவர்களை முகஸ்துதி செய்ய வேண்டிய அவசியமில்லை. மற்றவர்கள் தன்னை முகஸ்துதி செய்ய வேண்டுமென்று விரும்ப வேண்டியதுமில்லை. பிறரிடமிருந்து சொந்த சலுகைகள் எவற்றையும் அவர் எதிர்பார்ப்பதில்லை; எனவே, அவர் மற்றவர் உதவியை நாடி அடிபணிந்து நிற்கவேண்டியதுமில்லை; கட்சியின் நலன்களையும் புரட்சியின் நலன்களையும் உத்தேசித்து அவர் தன்னைத்தானே கவனித்துக் கொள்வார்; தன் உயிரையும் உடல் நலத்தையும் காப்பாற்றிக் கொள்வார்; தனது தத்துவார்த்த நிலையை உயர்த்திக் கொண்டு தன் திறமையை அபிவிருத்தி செய்து கொள்வார். அதே சமயத்தில் கட்சியின், புரட்சியின் சில முக்கியமான நோக்கங்களுக்காக, அவர் அவமானத்தை சகித்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டால் மிகக் கஷ்டமான வேலையை மேற்கொண்டு உடலை வருத்திக் கொள்ள நேரிட்டால், தனக்கு விருப்பமில்லாத ஒரு வேலையை மேற்கொள்ள வேண்டி வந்தால், அவர் மிகவும் கடினமான, முக்கியமான வேலையையும் சிறிதேனும் தயக்கமின்றி ஏற்றுக் கொள்வாரேயன்றி பொறுப்பைத் தட்டிக் கழிக்க மாட்டார்.

மனிதகுலத்தின் தலைசிறந்த உன்னத சிறப்புக்கள் யாவற்றையும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பெற்றிருக்க வேண்டும்.

மேலும் அவர் கட்சிக்கும் தொழிலாளர் வர்க்கத்திற்கும் உரித்தான கூரான திட்டவட்டமான கண்ணோட்டத்தையும் (அதாவது கட்சி மனப்பான்மையும் வர்க்கத் தன்மையையும்) பெற்றிருக்க வேண்டும். நம்முடைய அறநெறி கம்யூனிசத்தின், தொழிலாளி வர்க்கத்தின் அறநெறியாயிருப்பதால்தான் அது சிறப்புற்று விளங்குகிறது. ஒரு சில தனி நபர்கள் அல்லது சுரண்டும் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு சிலரின் நலன்களைப் பாதுகாப்பதென்னும் பிற்போக்கான அடிப்படையைக் கொண்டதல்ல இந்த அறநெறி. அதற்கு மாறாக, தொழிலாளி வர்க்கத்தின் நலன்கள், மனித குலம் முழுமைக்கும் இறுதி விடுதலை கிடைப்பதற்கான நலன்கள், உலகம் அழிந்தொழிந்து விடாமல், அதைப் பாதுகாத்து, இன்பம் பொங்கும் எழில் மிகுந்த கம்யூனிஸ்ட் உலகைக் கட்டியமைப்பதின் நலன்கள் ஆகிய இந்த முற்போக்கான அடிப்படையில் அது அமைக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனிநபரின் நலன்களுக்காக, அல்லது ஒரு சிறு கூட்டத்தினரின் நலன்களுக்காக தியாகம் புரிவதென்பது கம்யூனிஸ்டுகளாகிய நமக்கு மிகவும் கேவலமானதும் விரும்பத்தகாததுமாகும். ஆனால் கட்சிக்காக, வர்க்கமும் தேசமும் விடுதலையடைவதற்காக, அதாவது மனித குலத்தின் விடுதலைக்காக, எண்ணற்ற மக்களைக் கொண்ட, மனித குலத்தின், மிகப் பெரும் பகுதியின் நலன்களுக்காக, எண்ணற்ற கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் மனசஞ்சலமின்றி சாவை எதிர் நோக்கிச் செல்வர்; எந்த தியாகம் வேண்டுமானாலும் கிஞ்சித்தும் தயக்கமின்றி செய்வர். வேண்டும் பொழுது "ஒரு சிறந்த இலட்சியத்திற்காக உயிர்த் தியாகம் புரிவது" அல்லது "நீதிக்குப் போராடி உயிர் விடுவது" என்பது பெருவாரியான கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களைப் பொறுத்தமட்டில் விவாதத்திற்கு இடம் தராத, இயல்பாக செய்ய வேண்டிய ஒரு காரியமென்பது பெருவாரியான கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும் விஷயமாகும். கம்யூனிஸ்டுகளின் இந்த தியாக உணர்ச்சிக்கு காரணம் அவர்கள் கனவுலகில் வசிப்பதோ அல்லது பேரும் புகழும் பெற வேண்டுமென விரும்புவதோ அல்ல; சமூகத்தின் பரிணாமகர வளர்ச்சி பற்றி அவர்கள் விஞ்ஞான ரீதியில் புரிந்து கொண்டிருப்பதும் அவர்களுடைய உணர்வின் உயர்நிலையுமேதான் காரணமாகும். நம்முடைய அறநெறி மிகவும் சிறப்பானதாகவும் மிக விஞ்ஞான ரீதியானதாகவும் இருப்பதற்கு இதுவே காரணம். இதையன்றி, இன்னும் அதிகமான, சிறப்பு வாய்ந்த, இன்னும் அதிக அளவிற்கு விஞ்ஞான ரீதியான, "வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட" பொதுவான அறநெறி



என்று கூறப்படுகிறதே, அத்தகைய அறநெறி எதுவும் ஒரு வர்க்க சமுதாயத்தில் இருப்பதாக நாம் ஏற்றுக் கொள்வதில்லை இது மக்களை ஏமாற்றும் பொருட்டுக் கூறப்படும் அசட்டு வாதமேயாகும். உண்மையில் இத்தகைய 'அறநெறி' ஒரு சிறு சுரண்டும் கூட்டத்தின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதென்னும் அடிப்படையில் அமைக்கப்பட்டதேயன்றி வேறில்லை. இந்த 'அறநெறி' பற்றிய கருத்தோட்டம் என்றுமே கருத்து முதல்வாத தன்மை பெற்றே விளங்கியுள்ளது. கம்யூனிஸ்டுகளாகிய நாம் மட்டும்தான் சரித்திர இயல் பொருள் முதல்வாதமென்னும் விஞ்ஞான ரீதியான அடிப்படையில் அறநெறியை அமைத்திருக்கிறோம். கம்யூனிஸ்டுகளாகிய நாம் மாத்திரம்தான், தொழிலாளி வர்க்கமும் மனித குலமும் விடுதலை பெறுவதற்கான போராட்டத்தின் நலன்கள் என்னும் பிரத்யட்ச அடிப்படையின் மேல் ஒளிவு மறைவின்றி அறநெறியை அமைத்து விடுகிறோம்.

கம்யூனிஸ்ட் கட்சி தனிப்பட்ட கட்சி உறுப்பினர்களின் நலன்களை மட்டுமின்றி, தொழிலாளர்கள் அனைவரின் நீண்டகால நலன்களையும் மனித குலத்தினுடைய விடுதலையின் நீண்டகால நலன்களையும் பிரதிபலிக்கிறது. கட்சியின் நலன்கள் தனிப்பட்ட கட்சி உறுப்பினர்களின் நலன்களை மட்டுமின்றி தொழிலாளர்கள் அனைவரின் நலன்களையும், மேலும் மனித குலத்தினுடைய விடுதலையின் நலன்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன. தொழிலாளி வர்க்கத்தின், மனித குலத்தினுடைய விடுதலையின் நலன்களையல்லாமல் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வேறு எந்த நலன்களோ, நோக்கங்களோ கிடையாது. எனவேதான் உறுப்பினர்களின் சொந்த நலன்களைப் பாதுகாக்கும் ஒரு கழகத்தைப் போன்ற ஒரு குறுகிய சிறு குழுவாக கம்யூனிஸ்ட் கட்சியைக் கருதமுடியாது. இத்தகைய கருத்தையுடையவர் எவரும் கம்யூனிஸ்டாக இருக்க முடியாது.

கட்சி உறுப்பினருக்கு அவரது சொந்த நலன்கள், சொந்த வளர்ச்சி என்று ஒன்று இருக்கத்தான் செய்கிறது. சில சந்தர்ப்பங்களில் இந்த சொந்த நலன்கள் கட்சியின் நலன்களுக்கும் விரோதமானவையாகவோ அல்லது கட்சியின் நலன்களுடன் மோதக்கூடியதாகவோ இருக்கலாம். இவ்வாறு நேரிடும் போது, கட்சி உறுப்பினர் தன் சொந்த நலன்களை நிபந்தனையின்றி தியாகம் செய்ய வேண்டுமேயல்லாது, தன் சொந்த நலன்களை உத்தேசித்து கட்சியின் நலன்களை (எந்த வகையிலும், எந்த ரூபத்திலும்) தியாகம் செய்யக்கூடாது. கட்சி உறுப்பினரின் சொந்த நலன்களும் அவருடைய வளர்ச்சியும் கட்சியின் நலன்களிலும் அதன் வளர்ச்சி

யிலும் அடங்கியிருப்பதால்,கட்சியின்வெற்றி,வர்க்கத்தின் வெற்றி கட்சி உறுப்பினரின் வெற்றியையும் குறிக்கிறது.எனவே கட்சியின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் போராடுவதின் மூலம்தான் கட்சி உறுப்பினரும் வளர்ச்சி பெற முடியும்.தன் சொந்த வளர்ச்சிக்காக பாடுபடும் பொருட்டு அவர் கட்சியின் வளர்ச்சியிலிருந்து தன்னை கத்தரித்து விலகிக் கொண்டு விடக்கூடாது. சுருக்கமாக கூறுமிடத்து, கட்சியின் வளர்ச்சிக்காகவும், அதன் வெற்றிக்காகவும் போராடுவதின் மூலமாகவே கட்சி உறுப்பினர் தன் சொந்த வளர்ச்சிக்குப் பாடுபட முடியும். இந்த போராட்டமில்லாமல் அவர் தன்னை வளர்த்துக்கொள்வது முடியாத காரியம். ஆதலால் கட்சி உறுப்பினரின் சொந்த நலன்கள் கட்சியின் நலன்களுக்கும் கட்சியின் வளர்ச்சிக்கும் இசைந்து ஒன்றுபட வேண்டும்; இவ்வாறு ஒன்றுபடவும் முடியும்.

நம் கட்சியில் உறுப்பினராயிருக்கும் ஒருவர் ஒரு சாதாரண ஆளல்ல. அவர் உணர்வுபூர்வமான தொழிலாளி வர்க்க முன்னணிப் போர் வீரராவார். அவர் தன் சொந்த நலன்களை மட்டும் பிரதிபலிப்பவரல்ல. தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் அதன் சித்தாந்தத்திற்கும் தான் ஒரு உணர்வுபூர்வமான ஜீவனுள்ள பிரதிநிதி என்பதை அவர் நிரூபித்துக் காட்ட வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளில் ஒருவராக அவர் ஆகிவிட்டதால் அவருடைய சொந்த நலன்கள் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் கட்சியின் நலன்களுக்கும் விரோதமாய் எக்காலத்திலுமிருக்கக்கூடாது. கட்சியின் ஊழியர்களையும் தலைவர்களையும் பொறுத்தவரையில் கட்சியில் அவர்கள் தொழிலாளி வர்க்கத்தின் பொது நலன்களின் ஜீவனுள்ள பிரதிநிதிகளாக விளங்குவதும் தங்களுடைய சொந்த நலன்களையும்,நோக்கங்களையும், கட்சியின், தொழிலாளி வர்க்கத்தின் பொது நலன்கள், நோக்கங்களுடன் பரிபூரணமாய் சங்கமமாக்கிக் கொள்வதும் இன்னும் அதிக அவசியமாகும். சீனத்தில் இப்போதுள்ள நிலைமையில் தொழிலாளி வர்க்கம் ஒன்று மட்டுமே தேசவிடுதலையின் நலன்களின் சிறந்த பிரதிநிதியாக விளங்கக் கூடியது. எனவேதான் நம்கட்சி உறுப்பினர்கள் தேசமக்கள் அனைவரின் நலன்களின் மிகச்சிறந்த பிரதிநிதிகளாய் விளங்குகின்றனர்.

இது, நம் கட்சி உறுப்பினர்கள் கவனிக்கவேண்டிய பிரச்சனையின் ஒரு அம்சமாகும். அதே சமயத்தில் மற்றொரு அம்சமும் இருக்கிறது.



கட்சியின் பொதுநலன்களில் கட்சி உறுப்பினரின் சொந்த நலன்களும் சேர்ந்துள்ளனவென்றாலும் கூட, முன்னது பின்னதனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளதெனக் கூறி விட முடியாது. கட்சி உறுப்பினரின் சொந்த குணாதிசயங்களை அகற்றிவிட முடியாது, அகற்றவும் கூடாது. கட்சி உறுப்பினர் தீர்த்துக் கொள்ள வேண்டிய தன் சொந்த பிரச்சினைகள் சில இருக்கத்தான் செய்யும். மேலும் அவர் தன் சொந்த குணாதிசயங்களுக்கும் தன் விசேஷ திறமைக்கும் ஏற்றமுறையில்தான் தன்னை வளர்ச்சி செய்து கொள்ள வேண்டியிருக்கும். ஆதலால், கட்சி உறுப்பினர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையையும் குடும்ப வாழ்க்கையையும் அமைத்துக் கொள்வதற்கும் தங்கள் சொந்த குணாதிசயங்களையும் விசேஷ திறமைகளையும் வளர்த்துக் கொள்வதற்கும் (அவை கட்சியின் நலன்களைப் பாதிக்காமலிருக்கும் வரையில்) கட்சி அனுமதியளிக்கிறது.மேலும் கட்சியின் நலன்களை உத்தேசித்து கட்சி உறுப்பினருக்கு அவர் தன் சொந்த குணாதிசயங்களையும் விசேஷ திறமைகளையும் வளர்த்துக் கொள்ள சாத்தியமானவரை உதவியளிக்கிறது; அவருக்குகந்த வேலையையும் வேலை நிலைமைகளையும் கொடுக்கிறது; சாத்தியமான சகலவழிகளிலும் அவருக்கு உற்சாகமளிக்கிறது; மேலும் கட்சி உறுப்பினரின் தவிர்க்க முடியாத சொந்த நலன்களிலும் கவனம் செலுத்தி அவற்றைப் பாதுகாக்கிறது. உதாரணமாய், அவர் கல்வி பெறுவதற்கும் கற்றறிவதற்கும் அவருக்கு வாய்ப்புகள் அளிக்கும்; அவர் தன் வீட்டுப் பிரச்சினைகளையும் உடல்நலம் சம்பந்தமான பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்வதற்கும் உதவி செய்யும்; தேவையானல் தோழர்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு கட்சி வேலைகள் சிலவற்றைக் கைவிடுவதற்கும் முன்வரும். ஆனல் கட்சி முழுவதின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்னும் நோக்கத்திற்காக கட்சி இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறதேயன்றி வேறெந்த நோக்கத்திற்காகவுமல்ல.ஏனெனில் கட்சி உறுப்பினர்கள் ஆர்வத்தோடும் மனக் கவலையின்றியும் வேலை செய்யும் பொருட்டு வாழ்வு, வேலை, கல்வி முதலியவற்றில் குறைந்தபட்ச வசதிகள் அவர்களுக்கு உத்திரவாதம்செய்யப்படாவிட்டால் கட்சி முன்னுள்ள வேலைகளை செய்து முடிக்க முடியாது. கட்சி உறுப்பினர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாய் நடவடிக்கை எடுக்கும் பொழுது கட்சித் தலைவர்கள் இவ்விஷயத்தை கவனத்தில் வைத்திருக்க வேண்டும். இதுவே இந்த பிரச்சினையின் மற்றொரு அம்சம்.

சுருங்கக் கூறுமிடத்து, கட்சி உறுப்பினர் தங்குதடையின்றி முழு மனதுடன் கட்சியின் நலன்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

அவர் தன்னிடம் மிகவும் கறாராக இருக்க வேண்டும். பொது நலக் கண்ணோட்டமுடையவராய் இருக்கவேண்டும். தனக்கென சொந்தமான நோக்கங்களையோ இச்சைகளையோ கொண்டிருக்கக் கூடாது. எல்லா விஷயங்களிலும் தன்னைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கக்கூடாது. அளவுக்கு மீறி தன் சொந்த கோரிக்கைகளையே கட்சியின் முன் வைத்து வரக்கூடாது. தனக்கு உயர்ந்த பதவி கொடுக்கவில்லை என்றோ, தன்னைப் போற்றிப் புகழவில்லை என்றோ கட்சி மீது புகார் செய்து கொண்டிருக்கக்கூடாது. எல்லா சூழ்நிலைகளிலும், தன்னால் இயன்ற அளவிற்குக் கற்றுணர்வதற்கும் தன்னை விருத்தி செய்து கொள்வதற்கும் தைரியமுடன் போராடி மார்க்சிசம்—லெனினிசத்தைப் பற்றி தன்னிடமுள்ள உணர்வையும் தான் அதைப் புரிந்து கொண்டுள்ளதையும் இடைவிடாமல் உயர்த்திக் கொண்டு போவதற்கும் பாடுபட்டு, இவற்றின் மூலம் கட்சிக்கும், புரட்சிக்கும் அதிக அளவு உதவி புரிய வேண்டும்; அதிக அளவு பங்காற்ற வேண்டும்; கட்சி உறுப்பினர்களின் பிரச்சனைகள் சம்பந்தமாய் நடவடிக்கைகளில் இறங்கும் பொழுது கட்சியும், கட்சியின் தலைவர்களும் அவர்களுடைய வேலை நிலைமைகள், வாழ்க்கை நிலைமைகள், கல்வி நிலைமைகள் முதலியவற்றில் கவனம் செலுத்தி, அவர்கள் கட்சிக்காக சிறந்த முறையில் செயலாற்றுவதற்கும், தங்களை விருத்தி செய்து கொள்வதற்கும் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர இலட்சியம் பற்றி தங்களுடைய உணர்வை உயர்த்தி செழுமைப்படுத்திக் கொள்வதற்கும் அவர்களுக்கு சக்தியளிக்க வேண்டும். தங்களிடம் மிகவும் கறாராகவும், பொதுநல கண்ணோட்டமுடையவராகவும் உள்ள தோழர்கள் சம்பந்தமாய்க் குறிப்பாக அதிக கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்வதின் மூலமே, அதாவது இவ்விரு அம்சங்களிடமும் கவனம் செலுத்தி இரண்டையும் ஒன்றோடொன்று இசையும்படிச் செய்வதின் மூலமே, கட்சிக்கு அதிக அளவு நன்மை செய்ய முடியும்.

## கட்சியில் இருக்கக் கூடிய பல்வேறு தவறான சித்தாந்தங்கள்

தோழர்களே! வாழ்க்கையைப் பற்றிய கம்யூனிஸ்ட் கண்ணோட்டத்தையும் கம்யூனிஸ்ட் உலகக்கண்ணோட்டத்தையும் பெற்றுள்ளோமா என்பதையும், கம்யூனிச இலட்சியம் பற்றி நாம் புரிந்து கொண்டுள்ளோமா என்பதையும் கட்சியின் நலன்களுக்கும்



கட்சி உறுப்பினர்களின் நலன்களுக்குமிடையே சரியான உறவுகள் அமைந்துள்ளனவா என்பதையும் அளவுகோலாகக் கொண்டு உறுப்பினர்களையும் ஊழியர்களையும் மதிப்பிடவேண்டும். இவ்வாறு மதிப்பிடும்பொழுது கட்சி உறுப்பினர்கள், ஊழியர்கள் பலர் இந்த அளவு கோலுக்கு ஏற்றவர்களாக இருப்பதையும் இதர உறுப்பினர்களுக்கு இவர்கள் முன் உதாரணமாய் விளங்க முடியுமென்பதையும் நாம் காண்கிறோம். அதே சமயத்தில் சில உறுப்பினர்களும் ஊழியர்களும் இந்த அளவுகோலுக்கு தகுதியற்றவர்களாயிருப்பதையும் தவறான பல சித்தாந்தங்களை அதிகமாகவோ குறைவாகவோ பெற்றிருப்பதையும் நாம்பார்க்கிறோம். நம்தோழர்கள் தங்களது சுய-பயிற்சியில் ஈடுபடும் பொழுது இந்த தவறான சித்தாந்தங்களைக் கவனித்து அவற்றைக் களைந்தெறிவதற்குப் பாடுபட வேண்டுமென்பதற்காக நான் இவற்றை இங்கே பொதுப்படையாக குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கட்சித் தோழர்களிடையே காணப்படும் அடிப்படையான தவறான சித்தாந்தங்கள் யாவை? அவையாவன:—

முதலாவதாக, கட்சியில் சேர்ந்துள்ளவர்கள் பல்வேறுபட்ட சமூகப்பகுதிகளிலிருந்து வந்தவர்களாவர்; அவர்கள் பல்வேறுபட்ட நோக்கங்களையும், இச்சைகளையும் தம்முடன் கொண்டு வந்துவிடுகின்றனர். பெருவாரியான உறுப்பினர்கள் கம்யூனிசத்தை நிலைநாட்டுவதற்காகவும் தொழிலாளி வர்க்கமும் மனிதகுலமும் விடுதலை பெறுவதற்காகவும் தான் கட்சியில் சேர்ந்துள்ளனரென்றாலும் கூட வேறு சில காரணங்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் கட்சியில் சேர்ந்துள்ள வேறு சில உறுப்பினர்களுமுள்ளனர். உதாரணமாக சில விவசாயத் தோழர்களை எடுத்துக் கொள்வோம். நாம் சென்ற காலத்தில் செய்துள்ளது போல் ஆங்காங்குள்ள கொடுங்கோலர்களை வீழ்த்திவிட்டு நிலத்தை வினியோகிப்பதுதான் 'கம்யூனிஸ'மென்று அவர்கள் கருதினார்கள். கட்சியில் சேர்ந்த பொழுது அவர்கள் உண்மையான கம்யூனிசமென்பது இதையன்றி வேறெதுவாகவும் இருக்க முடியுமென்பதை உணரவில்லை. மேலும் பலர் பிரதானமாய் கம்யூனிஸ்டுகள் உறுதியுடன் ஜப்பானை எதிர்த்துப் போராடுவதன் காரணமாகவும் ஜப்பானிய-எதிர்ப்பு ஐக்கிய அணியின் காரணமாகவும் தற்சமயம் கட்சியில் சேர்ந்துள்ளனர். மற்றும் சிலர் தொழிலோ வேலையோ இல்லாதவர்கள், பள்ளி செல்ல வசதியற்றவர்கள், தங்கள் குடும்பங்களிலிருந்தோ அல்லது சட்டாய கல்யாணங்களிலிருந்தோ தப்பித்துக் கொள்ள விரும்பிய

வர்கள்—முதலியோர் கரை யேறும் வழியை சமூகத்தில் காண முடியாத காரணத்தால் கரையேறும் மார்க்கமாக கட்சியைக் கருதி கட்சியில் சேர்ந்து கொண்டனர். கட்சியின் செல்வாக்கைக் கண்டு சிலர் கட்சிக்குள் ஆகர்ஷிக்கப்பட்டுள்ளனர்; சீனத்தைக் காப்பாற்றக் கூடியது கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் என்பதை மேம்போக்கான முறையில் உணர்ந்து சிலர் கட்சிக்குள் வந்துள்ளனர். இறுதியில் கம்யூனிஸ்டுகள் வரியைக் குறைப்பார்கள் என்று எதிர்பார்த்து வந்தவர்கள், வருங்காலத்தில் தங்களுக்கு மிகுந்த செல்வாக்கு கிடைக்குமென்று கருதி கட்சிக்குள் வந்தவர்கள், மேலும் தங்களுடைய உறவினர்கள் அல்லது நண்பர்களால் கட்சிக்குள் கொண்டுவரப்பட்டவர்கள் முதலிய சில நபர்களுமுள்ளனர். இத்தகைய தோழர்கள் வாழ்க்கையைப்பற்றி தெளிவான திட்டவட்டமான கம்யூனிஸ்ட் கண்ணோட்டத்தையும் தெளிவான திட்டவட்டமான உலகக்கண்ணோட்டத்தையும் பெற்றிராமலிருப்பதும், கம்யூனிஸ்ட் இலட்சியத்தின் மேன்மையையும் அதன் கஷ்டங்களையும் உணரத் தவறுவதும், ஒரு உறுதியான தொழிலாளி வர்க்க நிலையை அனுஷ்டிக்கும் சக்தியற்றவர்களாயிருப்பதும் இயற்கையே. ஆதலால், முக்கியமான திரும்பு முனைகள் ஏற்படும்பொழுது, சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில், இவர்களில் சிலர் ஊசலாட்டமடைவதும் மாற்றமடைவதும் இயற்கையே. இவர்கள் தங்களுடன் பல்வேறு வகையான பல்வேறு ரூபமுடைய சித்தாந்தங்களைக் கட்சிக்குள் கொண்டு வந்து விடுகின்றனர் எனவே, இவர்களுக்கு கல்வியளிப்பதும், இவர்களை எஃகு போன்ற உறுதிபெறச் செய்வதும், சுய-பயிற்சி மூலம் பக்குவமடையச் செய்வதும் மிகவும் முக்கியமானதாகும். இப்படி செய்யவில்லை என்றால், அவர்கள் ஒருநாளும் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னணி வீரர்களாகத் திகழ முடியாது.

இருந்தபோதிலும், இது அவ்வளவு கடினமான பிரச்னையில்லை. குறிப்பிட்ட சிலர் கம்யூனிஸ்ட் கட்சியை நம்பியிருந்தனர், கரையேறும் மார்க்கம் தேடி கட்சிக்குள் வந்தனர். கட்சியின் கொள்கைகளை ஆதரித்தனரென்றால், அதில் தவறு ஒன்றுமில்லை. அவர்கள் கட்சியின் உதவியை நாடி வந்ததில் குற்றமொன்றுமில்லை. இத்தகையோரை நாம் வரவேற்கிறோம். சந்தர்ப்பவாதிகளையும் பகைவனின் உளவாளிகளையும், துரோகிகளையும் தான் நாம் எதிர்க்கிறோம். கட்சியின் வேலைத் திட்டத்தையும் அமைப்பு விதிகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அவற்றை கடைப்பிடிக்க வேண்டும்—அப்பொழுதுதான் கட்சி உறுப்பினராக இருக்க முடியும். கம்யூனிசத்தையும் கட்சியின் வேலைத்திட்டம், அமைப்பு விதிகள் முதலியவற்றையும் மேற்கொண்டு கற்றுணர்ந்து கொள்ள



அவர்கள் கட்சியில் சேர்ந்த பின்பு பாடுபட வேண்டும். மேலும், போராட்டத்தில் பங்கெடுத்து, தங்களுடைய படிப்பின் அடிப்படையில் அவர்கள் மேலும் தங்களை உறுதி பெறச் செய்து பயிற்சியடைந்து பக்குவம் பெற்று தங்களைச் சிறந்த கம்யூனிஸ்டுகளாக்கிக் கொள்ள வேண்டும்.

கட்சியில் சேருவதற்கு முன்பே எல்லோரும் கம்யூனிசம் பற்றியும், கட்சியின் வேலைத்திட்டம், அமைப்பு விதிகள் பற்றியும் ஆழ்ந்த உணர்வு பெற்றிருக்க வேண்டுமென்று கோருவது அசாத்தியமானது. கட்சியின் வேலைத்திட்டத்தையும், அமைப்பு விதிகளையும் பரிபூரணமாக உணர்ந்து கொண்டால்தான் கட்சி உறுப்பினராக முடியுமென்று நிபந்தனை போடுவதற்குப் பதில், கட்சியின் வேலைத் திட்டத்தையும் அமைப்பு விதிகளையும் ஏற்றுக் கொண்டால் போதும், கட்சி உறுப்பினராகி விடலாமென்று நாம் கூறுவதற்கு இதுவே காரணமாகும். கட்சியின் வேலைத் திட்டத்தையும் அமைப்பு விதிகளையும் ஏற்றுக்கொண்டு கட்சிக்குள் வருபவர்கள் எல்லோரும் கம்யூனிசத்தைப் பற்றி பரிபூரணமாக உணர்வு பெற்றிருக்க முடியாதென்றாலுங்கூட இன்று நடந்து வரும் கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் தற்போதைய புரட்சிகர இயக்கத்திலும் அவர்கள் முன்னணி வீரர்களாகத் திகழ முடியும். மேலும் நீண்ட புரட்சிப்போராட்டத்தினிடையில் அவர்கள் தீவிரமாய் படித்து உணர்வு பெறுவதின் மூலமும் பயிற்சி பெற்று பக்குவமடைவதின் மூலமும் உணர்வு படைத்த சிறந்த கம்யூனிஸ்டுகளாக வளர்ச்சி பெற முடியும். கட்சியின் அமைப்பு விதிகளின்படி, கட்சியில் சேர்ந்து கொள்ள சுதந்திரமில்லையே தவிர, கட்சியிலிருந்து விலகுவதற்கு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களுக்கு சுதந்திரமளிக்கப்பட்டுள்ளது எந்த உறுப்பினருக்கும், கம்யூனிசத்தில் ஆழ்ந்த நம்பிக்கையில்லை என்றால், கட்டுப்பாடான உள்கட்சி வாழ்க்கையை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்றால் அல்லது வேறு எந்த காரணத்தை முன்னிட்டோ அவர் விலக விரும்பினால் அவர் தன் இச்சைப்படி கட்சியிலிருந்து விலகிக் கொண்டு விடலாம் கட்சியின் ரகசியங்களை வெளியிடாமலும், கம்யூனிசத்தை எதிர்க்காமலும் கட்சிக்கு விரோதமாய் சதி வேலைகளில் ஈடுபடாமலும் இருக்கும் பட்சத்தில் எந்த உறுப்பினரும் தான் இஷ்டப்படும் பொழுது கட்சியிலிருந்து விலகிக் கொள்வதற்கு கட்சி அனுமதியளிக்கிறது. கட்சிக்குள் ஊடுருவி வந்துள்ள சந்தர்ப்பவாதிகளையும், துரோகிகளையும் பொறுத்தவரையில்

அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து நாமே அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கி விடுவோம். இம்முறையில் கட்சியின் தூய்மையைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இரண்டாவதாக, எப்படியும் சில குறிப்பிட்ட உறுப்பினர்களிடம் பலம் மிகுந்த அதிக அளவு தனி மனிதத்துவமும் சுயநலமும் நிறைந்த சித்தாந்தம் ஆட்சி புரிகிறது.

இவ்வகையான தனி மனிதத்துவம் பின்வரும் வழிகளில் பிரதிபலிக்கிறது. சில நபர்கள் பல்வேறு ஸ்தூலமான பிரச்சனைகளை தீர்க்கும்பொழுது தங்கள் சொந்த நலன்களை கட்சியின் நலன்களுக்கு மேம்பட்டதாகக் கருதுகின்றனர்; அல்லது எப்பொழுதுமே தங்கள் சொந்த நலன்களைக் கணக்கு செய்து தங்கள் சொந்த லாப நஷ்டங்களைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்; அல்லது பதவி வேட்டையில் ஈடுபட்டு, கட்சி வேலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்கின்றனர்; அல்லது ஒரு கோட்பாட்டுக்காகவோ அல்லது கட்சி நலன்களுக்காகவோ பாடுபடுவது போல் வேஷம் போட்டுக் கொண்டு மற்ற தோழர்கள் மீது தங்களுடைய சொந்த குரோதங்களைத் தீர்த்துக் கொள்ள முயலுகின்றனர்.

சம்பளங்கள், வசதிகள், சொந்த வாழ்க்கை பற்றிய மற்ற விஷயங்கள் சம்பந்தமான பிரச்சனைகள் வரும்பொழுது, அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் தங்களுக்கே முதலிடம் கிடைக்க வேண்டுமென விரும்புகின்றனர்; மிகவும் உயர்ந்த ஊழியர்களோடு தங்களை ஒத்திட்டுக்கொள்கின்றனர். அவர்களோடு போட்டியிடுகின்றனர். இவ்விஷயங்களில் தங்களுக்கு முதலிடம் கிடைக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் எந்த வழியையும் பின்பற்ற தயங்குவதில்லை. தங்களைப்பற்றி பீற்றிக்கொள்வதற்கும் முன் வருகின்றனர். ஆனால் வேலைசெய்ய வேண்டிவரும்பொழுது, தங்களைவிட குறைந்த திறமையுடையவர்களோடு தங்களை ஒப்பிட்டுக் கொள்ள விரும்புகின்றனர். கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி வரும் பொழுது அவர்கள் தப்பித்துக் கொள்ள முயலுகின்றனர். அபாயம் ஏற்படும் பொழுது ஓடுவதற்கு முயற்சிக்கின்றனர். தங்களுக்குக் கீழ் எப்பொழுதும் அதிகப்படியான சிப்பந்திகள் வேண்டுமென்று விரும்புகின்றனர். குயிடிருப்பு சம்பந்தமாய் சிறந்த இடம் தங்களுக்குத்தான் கிடைக்க வேண்டுமென்பார்கள். ஆடம்பரம் செய்து கொள்வதற்கும் கட்சிக்கு செலுத்தப்படும் வெகுமதிகளில் பங்கு பெற்றுக் கொள்ளவும் ஆசைப்படுகின்றனர். நல்ல விஷயங்களை தங்களுடைய ஏகபோகமாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றனர். ஆனால் சிறிதேனும் தொந்திரவான விஷயமென்றால் தூர விலகி வந்து விடுவார்கள்.



தோழர்களே! இத்தகையோர் நம் கட்சியினுள்ளுமுள்ளனர். சுரண்டும் வர்க்கங்களின் சித்தாந்தம் அவர்களிடம் குடிகொண்டுள்ளது. ''தனக்குப் பின்பே மற்றதெல்லாம்'', ''மனிதன் சுய-நல மிகுந்த ஓர் மிருகம்'', ''உண்மையிலே சுயநலமற்றவன் ஒருவருமில்லை, அப்படியிருந்தால் அவன் முட்டாள் அல்லது ஏமாந்த சோணகிரியாவான்'' என்பது போன்ற உரைகளைக்கூட அவர்கள் நம்பத் தயங்குவதில்லை. இவை போன்ற சுரண்டும் வர்க்கங்களின் உரைகளை உபயோகித்து தங்களுடைய சொந்த சுய-நலத்தையும் தனி மனிதத்துவத்தையும் நியாயப்படுத்த முயலுகின்றனர்.

இம்மாதிரியான சுய-நல தனி மனிதத்துவம் கட்சிக்குள் அடிக்கடி கோட்பாடற்ற தகராறுகள், கோஷ்டிப்போராட்டங்கள், செக்டேரியனிஸம், பகுதி மனப்பான்மை முதலிய தவறுகளுக்குக் காரணமாயிருக்கிறது. கட்சிக் கட்டுப்பாட்டில் சிரத்தையில்லாத அல்லது அதற்குக் குழிபறிக்கும் நடவடிக்கைகளிலும் இந்த சுய-நல தனி மனிதத்துவம் பிரதிபலிக்கிறது. கோட்பாடற்ற போராட்டங்கள் பெரும்பாலும் சொந்த நலன்களிலிருந்தே கிளம்புகின்றன. கோஷ்டிப் போராட்டங்களும் செக்டேரியனிஸமும் அடிக்கடி தனி மனிதரின் நலன்கள் அல்லது சிறுபான்மையோரின் நலன்களை கட்சி நலன்களுக்கு மேலானவையாக்கி விடுகின்றன. இத்தகையோர் பல சந்தர்ப்பங்களிலும் கோட்பாடற்ற கோஷ்டி போராட்டங்களின் போது உணர்வு பூர்வமாய் கட்சி ஸ்தாபனத்திற்கும் கட்சி கட்டுப்பாட்டிற்கும் குழி பறித்து விடுகின்றனர். சில குறிப்பிட்ட ஆட்களை அவர்கள் கோட்பாடற்ற முறையில் அல்லது வேண்டுமென்றே தாக்குகின்றனர்; மற்றும் சிலருடன் அவர்கள் கோட்பாடற்ற முறையில் நட்புரிமை கொண்டாடுகின்றனர். தங்களுக்குள் மனக்கசப்பு ஏற்படக்கூடாதென்பதற்காகவும் ஒருவரை ஒருவர் காண்பித்துக் கொடுக்காமலிருக்கும் பொருட்டும், பரஸ்பரம் ஒருவரை ஒருவர் போற்றிப் புகழ்ந்து கொள்வதற்காகவும் இவ்வாறு அவர்கள் கோட்பாடற்ற முறையில் தங்களுக்குள் நட்பு கொண்டாடுகின்றனர்.

கட்சிக்குள்ளிருக்கும் பகுதி மனப்பான்மை மேலே கூறப்பட்ட தனி மனிதத்துவத்திடமிருந்து வித்தியாசமானதாகும்,

பகுதி மனப்பான்மை என்பது ஒரு தோழர் ஒரு பகுதியின் நலன்களை மட்டுமே, கட்சி வேலையில் தனக்குள்ள பங்கை மட்டுமே பார்த்துவிட்டு, நிலைமை முழுவதையும் பார்க்கத் தவறுவதாலும், மற்றவர்கள் செய்யும் வேலையை பார்க்கத் தவறுவதாலும், ஏற்படுகிறது. இதனால் இந்த தோழர் கட்சி வேலையில் தனக்குள்ள பங்கிற்கான நலன்களை மட்டும் பாதுகாத்துக் கொள்வதென்னும் தவறான போக்கை அனுசரித்து மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இயங்கும்படி நேரிடுகிறது. அரசியல் ரீதியில் பேசுமிடத்து, இது குட்டிக் கழக மனப்பான்மையாகும். பகுதி மனப்பான்மை என்னும் குற்றமிழைக்கும் தோழர்களின் நோக்கங்களும் இந்தகுற்றத்தின் தோற்றுவாய்களும் அவசியம் படுமோசமானதாகவே இருக்க வேண்டுமென்பதில்லை. இந்த குற்றத்தை தனிமனிதத்துவமென்னும்பெரும் குற்றத்துடன் ஒப்பிடமுடியாதென்பதும் உண்மையே. இருந்தபோதிலும் தனிமனிதக் கண்ணோட்டமுடையவர்கள் பல சந்தர்ப்பங்களிலும் பகுதி மனப்பான்மை என்னும் தவறை இழைக்கின்றனர்.

மூன்றாவதாக சுய அகம்பாவம், தனிமனித வீரத்தனம், ஆடம்பர வீராப்பு முதலியன அதிகமாகவோ குறைவாகவோ கட்சித் தோழர்கள் சிலரிடம் இன்னமும் இருந்தே தான் வருகின்றன.

இத்தகைய கருத்துக்களை உடையவர்களுக்கு கட்சியில் தங்களுக்குள்ள அந்தஸ்துதான் மிகவும் முக்கியமானவிஷயமாகும். ஆடம்பர வீராப்பிலும் படாடோபத்திலும் அவர்களுக்கு அலாதியான பிரியமுண்டு. மற்றவர்கள் தங்களை முகஸ்துதி செய்ய வேண்டுமென்றும் போற்றிப் புகழ வேண்டுமென்றும் அவர்கள் ஆசைப்படுகின்றனர். தலைவர்களாகி விடவேண்டுமென்னும் தனிப்பட்ட ஒரு சொந்த ஆசை அவர்களிடமிருந்து வருகிறது. தங்களுடைய திறமைகளைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தங்களுக்கு வெகுமதியளிக்க வேண்டுமென்று கோர விரும்புகின்றனர். ஆடம்பரம செய்த கொள்ள ஆசைப்படுகின்றனர். எல்லா வேலைகளையும் தங்கள் [illegible] களில் [illegible] வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். மற்றவர்களிடம் [illegible] சகி[illegible] தன்மையற்றவர்களாயிருக்கின்றனர். அ[illegible] [illegible] பிர[illegible] கஷ்டமான வேலையில் மூழ்கிவிடக் கூடாதென்று ஆசைப்படுகின்றனர். சாதாரண சிறு வேலைகளைச் செய்வதற்கு இ[illegible]. அவர்கள் [illegible] மிருந்தவர்கள், [illegible] சிறு சா[illegible] [illegible] வெற்றி பெற்று விட்[illegible] போதும் அவர்களுக்கு [illegible] [illegible] ர்வம் ஏற்பட்டு



விடும். உலகில் தங்களைப் போன்றவர் வேறில்லை என்று கருதிக்கொண்டு அவர்கள் அகந்தையுடன் நடந்து கொள்ளத் தொடங்கி விடுவர் மற்றவர்களைக் காட்டிலும் தாங்களே உயர்ந்தவர்கள் என்பதை நிலைநாட்டிட வேணடுமென்று அவர்கள் துடித்துக் கொண்டிருப்பார்கள். மற்றவர்களை அவர்கள் தங்களுக்குச் சமத்துவமானவர்களாக கருதி நடக்க மாட்டார்கள்? தன்னடக்கத்துடனும் மரியாதையுடனும் மற்றவர்களிடம் பழகமாட்டார்கள். சுய அகந்தை பிடித்த இவர்கள் மற்றவர்களுக்கு பிரசங்கம் செய்யவும் கட்டளையிடவும் எஜமானர்கள் போல் அவர்கள் மீது அதிகாரம் செலுத்தவும் விரும்புகின்றனர். மற்றவர்களை விட தாங்களே உயர்நிலை பெற்றுவிட வேண்டுமென்று சர்வசதாகாலமும் அவர்கள் முயற்சி செய்து கொண்டிருப்பார்கள். மற்றவர்களுடைய தலைமைப் பதவியை அவர்கள் ஏற்கமாட்டார்கள்; தன்னடக்கத்துடன் மற்றவர்களிடமிருந்து, குறிப்பாக பொதுமக்களிடமிருந்து கற்றறிந்து கொள்ள மாட்டார்கள். மற்றவர்களிடமிருந்து வரும் விமர்சனங்களையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தாங்கள்உயர்பதவிக்கு'உயர்த்தப்படுவதை,விரும்புவார்களேயன்றி கீழ்பதவிக்குத் ''தாழ்த்தப்படுவதை'' அவர்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. சௌகரியமான நேரத்தில் வேலை செய்ய முடியுமேயல்லாது, தொந்திரவான நேரத்தில் அவர்களால் வேலை செய்ய முடியாது. தாக்குதல்களையோ அலலது அநீதிகளையோ அவர்களால் சகிக்கவே முடியாது. சூழ்நிலைமைக்கு ஏற்றபடி தங்களைத் திருத்திக் கொள்வதற்கு அவர்கள் சக்தியற்றவர்கள். ''தேவைப்படும் பொழுது முன்னே வந்து தன் கருத்தை வலியுறுத்தி அதை நிலைநாட்டிக் கொள்ளவும், வேணடும் பொழுது தன்னடக்கத்துடன் பின்னே நிற்பதற்கும் ஆற்றல் படைத்த மேதைகள்'' அல்ல அவர்கள். 'பேரும் புகழும் பெற வேண்டுமென்னும் ஆழமான ஆசை அவர்களை விட்டகன்று விடவில்லை. கம்யூனிஸ்ட் இலட்சியத்தின் ''மேதைகள்'' என்றும் "வீரர்கள்'' என்றும் பெயர் வாங்க வேண்டுமென்று அவர்கள் முயற்சி செய்கின்றனர்; இவைபோன்ற ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு எந்த வழியை வேண்டுமானாலும், மான வெட்கமின்றி மேற்கொள்வதற்கும் அவர்கள் அஞ்சுவதில்லை. ஆனால் தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்ற முடியாமற் போனவுடன், கட்சித் தோழர்களிடமிருந்து எதிர்பபையோ அல்லது நிதானமான நடவடிக்கையையோ எதிர் நோக்கியவுடன் அவர்கள் [illegible]த்திற்கு இரையாகக் கூடிய அபாயம் ஏற்படு

கிறது. கட்சியின் சரித்திரத்தில் இவ்விதம் ஊசலாட்ட மேற்பட்டு கட்சியை விட்டகன்றவர்கள் ஒரு சிலரல்ல. இத்தகைய ஆட்களின் மனதில் சுரண்டும் வர்க்கங்களுடைய சித்தாந்தத்தின் மிச்ச சொச்சங்கள் இருந்து வருகின்றன. கம்யூனிசத்தின் உன்னத தன்மையை அவர்கள் உணரவில்லை; கம்யூனிஸ்டிடம் இருக்க வேண்டிய விரிந்த கண்ணோட்டமும் அவர்களிடம் கிடையாது.

கம்யூனிஸ்டுகள் சுய—திருப்தி மனப்பான்மையோ அல்லது கர்வமோ கொண்டிருக்கக்கூடாது. சில தோழர்கள் மிகவும் ஆற்றல் படைத்தவர்கள் என்பதும் குறிப்பிட்ட வேலையை அவர்கள் சிறப்பாக செய்து முடித்துள்ளனர், மகத்தான சாதனைகளைச் செய்துள்ளனரென்பதும் உண்மையே—உதாரணமாக நமது ராணுவ தலைவர்கள் பல்லாயிரக்கணக்கான வீரர்களுக்குத் தலைமை தாங்கி வெற்றிகளைச் சாதித்தனர். அதே போல நமது கட்சித் தலைவர்களும் பொதுஜன அரங்கத் தலைவர்களும் பல்வேறு இடங்களிலும் தங்களுடைய வேலையின் மூலம் பன்மடங்கு சாதகமான நிலைமையை சிருஷ்டித்தனர். இவை யாவும் அவர்கள் பெருமையடையக் கூடிய ''பெரும்'' சாதனைகளாயிருக்கலாம். ஆயினும் கம்யூனிசமென்னும் இலட்சியம் பூராவுடனும் ஒப்பிடும்பொழுது இவர்களுடைய சாதனைகள் பெருங்கடலில் ஒரு நீர்த்துளி போன்றவையே கம்யூனிஸ்ட் உலக கண்ணோட்டமுடைய ஒருவருக்கு இந்த சாதனைகளைப்பற்றி உண்மையிலேயே பெருமையடித்துக் கொள்ள முடியுமா?

தனிப்பட்ட கட்சி உறுப்பினர் எவரையும் பொறுத்த மட்டில் தன் சொந்த அந்தஸ்து என்பது கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் அளவிற்கு அத்துணை மதிப்புடையதாகுமா? எவருடைய அந்தஸ்தும் ஒரு சக்கரவர்த்தியின் அந்தஸ்தைவிட அதிகமாயிருந்து விட முடியாது. ஆயினும் ஒரு சக்கரவர்த்தியின் நிலையை கம்யூனிஸமென்னும் இலட்சியத்திற்காகப் போராடும் ஒரு வீரரின் நிலையுடன் ஒப்பிடும் பொழுது, சக்கரவர்த்தியின் நிலை எவ்வளவு சிறியதென்பது புலப்படும் ஒருவருடைய சொந்த அந்தஸ்து ஸ்டாலின் கூறியதுபோல், ஒரு பெருங்கடலில் ஒரு சிறு நீர்த்துளி போன்றதேயாகும். எனவே இதைப்பற்றி கவலைப்படுவதோ பெருமையடித்துக் கொள்வதோ நியாயமாகுமா?

ஆம், நமது கட்சியில் கம்யூனிஸ்ட் இலட்சியத்திற்கு எண்ணற்ற கம்யூனிஸ்ட் வீரர்களும், செல்வாக்கும் அந்தஸ்துமுடைய மிகப்பல கட்சித் தலைவர்களும், வெகுஜனத் தலைவர்களும் தேவையாயிருக்கிறது. தற்சமயம் புரட்சிகரமான வீரர்களும் செல்வாக்கு



டைய தலைவர்களும் நம்மிடையே மிகச் சிலரே உள்ளனர். மிகப்பல தலைசிறந்த கம்யூனிஸ்ட் புரட்சி வீரர்களையும் தலைவர்களையும் இன்று சகல துறைகளிலும் புடம்போட்டு பயிற்சிசெய்து பக்குவப் படுத்தியாக வேண்டியிருக்கிறது. நமது லட்சியம் நிறைவேற வேண்டுமானால் நாம் இந்த முக்கியமான வேலையை அவசியம் செய்தாக வேண்டும். இவ்வேலையில் அக்கறை காட்டாதவர் எவராயினும் கம்யூனிஸ்ட் இலட்சியத்தை நோக்கி முன்னேறும் வழியை அவர் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் கூற வேண்டும். ஆதலால் புரட்சிகர இலட்சியத்தை நோக்கி முன்னேற வேண்டுமென்னும் அக்கறையையும் ஆர்வத்தையும் நம் கட்சி உறுப்பினர்களிடம் மேலும் பன்மடங்கு அதிகரிக்கும்படிச் செய்ய வேண்டும். தற்போது நாம் இந்த துறையில் போதிய அளவு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை; இவ்வுண்மை உதாரணமாக, கட்சி உறுப்பினர்கள் சிலர் கற்றுணர்ந்து அபிவிருத்தி அடைவதில் போதிய அளவு பிரயாசைப்படவில்லையென்பதும் அரசியலிலும் தத்துவத்திலும் அவர்கள் போதிய அளவு சிரத்தை காட்டவில்லை என்பதும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆதலால், நாம் தனிமனித வீரச்செயலையும் ஆடம்பர, வீராப்பையும் எதிர்க்கிறோமேயன்றி, முன்னேற வேண்டுமென்னும் ஆர்வம் நம் உறுப்பினர்களிடம் வளர்வதை நாம் எதிர்க்கவில்லை. இவ்வித ஆர்வம் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களிடமுள்ள மதிப்பிடற்கரிய ஓர் உயர்ந்த பண்பாடு. ஆனால் முன்னேற வேண்டுமென்னும் தொழிலாளி வர்க்க, கம்யூனிஸ்ட் ஆர்வம், முன்னேறவேண்டுமென்னும் தனி மனிதத்துவ ஆர்வத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். முதல்வகையைச் சேர்ந்த ஆர்வம் உண்மையை ஆராய்ந்துணர முயற்சி செய்கிறது. உண்மையை நிலைநாட்டுகிறது, உண்மைக்காக சிறந்தமுறையில் போராடுகிறது. தங்குதடையற்ற வளர்ச்சி ஏற்படுவதற்கான திருஷ்டியைப் பெற்றுள்ளது. முற்போக்கு தன்மையுடையதாயிருக்கிறது. ஆனால் இரண்டாவது வகையைச் சேர்ந்த ஆர்வம், தனி நபரைப் பொறுத்த மட்டில், முற்போக்கு தன்மையில் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது. மேலும் அதற்கு திருஷ்டி என்பதே கிடையாது. ஏனெனில், தனி நபரின் சொந்த நலன்களுக்காக அது உண்மையை உணர்வு பூர்வமாய் எதிர்த்து நிற்கிறது. உண்மையை மூடி மறைக்கிறது. திரித்துக் கூறுகிறது. ஆதலால் கம்யூனிச இலட்சியத்திற்காகப் பாடுபடும் உண்மையான தலைவர்களும் வீரர்களும் தனி மனிதத்துவ

முடையவர்களாகவோ தங்களை தாங்களே நியமித்துக் கொள்பவர்களாகவோ இருக்க முடியாதென்பதை நம் தோழர்கள் உணர்ந்து கொண்டாக வேண்டும். தன்னைத் தானே தலைவராக நியமித்துக் கொள்ளும் எவரும், அல்லது தனிப்பட்ட முறையில் தலைவராகி விட முயலும் எவரும், நம் கட்சியில் தலைவராகி விட முடியாது. தேசத்தலைவர்களாயினும் சரி, அல்லது ஸ்தல தலைவர்களாயினும் சரி, எல்லா தலைவர்களும் வெகுஜன ஆதரவின் மூலம்தான் வெற்றி பெறுகின்றனர் சுய-அகந்தையும், தனி மனித வீரச்செயல்களையும் ஆடம்பர வீராப்பையும் தலைமைப் பதவி பெற வேண்டுமென்னும் சொந்த இச்சையையும் கர்வத்தையும் பெற்றுள்ளவர்களை நம் கட்சியைச் சேர்ந்த சாதாரண உறுப்பினர்கள் தங்கள் தலைவர்களாகக் கொண்டு அவர்களை ஆதரிக்க மாட்டார்கள். கட்சி உறுப்பினர் எவரும் மற்ற உறுப்பினர்களும் பொதுமக்களும் தன்னையே தலைவராகக் கொணடு ஆதரவளிக்க வேண்டுமென்றோ அல்லது தனது தலைமைப்பதவியைப் பாதுகாக்க வேண்டுமென்றோ கோருவதற்கு உரிமை பெற்றிருக்கவில்லை. கிஞ்சித்தேனும்சொந்த நோக்கமென்பது இல்லாத, கட்சியிடம் விசுவாசமுள்ள, உயர்ந்த அளவு கம்யூனிஸ்ட் அறநெறியையும் பண்புகளையும் பெற்றுள்ள, மார்க்சிசம்—லெனினிசத்தின் தத்துவத்தையும் வழிமுறைகளையும் கற்று பாண்டித்தியம் பெறும் சக்தியுடைய, குறிப்பிடத்தக்க அளவு நடைமுறை வேலைத் திறமையும் கட்சி வேலைக்கு உண்மையில் தலைமை வகித்து அதை நடத்தும் வல்லமையையும் பெற்றுள்ள, இடைவிடாமல் பெருமுயற்சி செய்து கற்றுணர்ந்து முன்னேறுவதற்கு முயற்சிக்கும் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே கட்சியின் மேலும் பொது மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற முடியும். இவ்விதம் கம்யூனிஸ்ட் இலட்சியத்தின் வீரர்களாகவும், தலைவர்களாகவும் திகழ முடியும்

கட்சி உறுப்பினர் எவரும், அவர் தலைவரானாலும்சரி, வீரரானாலும் சரி, கம்யூனிஸ்ட் இலட்சியத்திற்கான வேலையில் ஒரு பகுதியைத்தான் செய்ய முடியும். இந்தப் பொறுப்பில் ஒரு பகுதியைத்தான் ஏற்றுக் கொண்டு நிறைவேற்ற முடியுமென்பதையும் நம் தோழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கம்யூனிஸ்ட் இலட்சியமென்பது எண்ணற்ற கோடிக்கணக்கானவர்கள் நீண்ட காலம் ஒன்று சேர்ந்து கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வது மூலமே நிறைவேற்றப்படும். எந்த தனி நபரும் இந்த பணியை தன் ஏகபோகமாக்கிக் கொண்டுவிட முடியாது. நமது மாபெரும் தலைவர்



களான மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியவர்கள் கூட கம்யூனிஸ்ட் இலட்சியத்திற்கான பணியில் ஒரு பகுதியைத்தான் செய்தனர். அவர்களுடைய வேலை நிறுத்தப்படுமுன் நம்போன்ற கோடிக்கணக்கானவர்கள் தொடர்ந்து பணியாற்றுவது அவசியமாயிருக்கிறது. சாதாரண கட்சி உறுப்பினர்களான நாமும் இவ்வேலையில் ஒரு பகுதியைத்தான் நிறைவேற்றுகிறோம். நம்முடைய பங்கு மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலினுடைய பங்கை விட மிகவும் சிறியதென்பது உண்மையே. இருந்தாலும் நமக்கு நம்முடைய பங்கு இருக்கிறது. பெரும் பங்கிற்கும் சிறிய பங்கிற்கும் வித்தியாசமிருக்கிறதென்றாலுங்கூட இவை யாவும் ஒரே பணியைச் சேர்ந்த பல பகுதிகளேயாகும். ஆதலால் இந்த பணியில் ஒரு பகுதியை நாம் சிறப்பாக செய்து முடிப்போமேயானால் நாம் நமது கடமையை நிறைவேற்றியவர்களாவோம்.

ஒரு பெரிய பகுதியை செய்து முடிப்பதற்கு நாம் அவசியம் நம்மால் இயன்ற அளவிற்கு முயற்சி செய்யத்தான் வேண்டும். ஆனால் நம்மால் அது முடியவில்லை என்றால், நாம் அதைவிட சிறிய பகுதியை செய்து முடிக்க முடியும். நம்மைத் தனிப்பட்ட நபர்களாகக் கொண்டு பார்க்கும் பொழுது' கவலைப்படுமளவிற்கு எதுவும் முக்கியத்துவம் பெற்றதல்ல. எப்படியிருந்தாலும் குறைந்த பட்சம் நாம் கம்யூனிஸ்ட் இலட்சியத்தின் வளர்ச்சிக்கு இடைஞ்சலாக குறுக்கே நிற்காமலிருப்பதற்காகவாவது முயற்சி செய்யவேண்டும். மேலும் கம்யூனிஸ்ட் இலட்சியத்திற்கான வேலையில் நமக்குள்ளபங்கை, அதுபெரியதானாலும்சரி, சிறியதானாலும்சரி செய்து முடிக்க வேண்டும். இதுவே நாம் நம்முடைய வேலை சம்பந்தமாய் அனுசரிக்க வேண்டிய போக்கு ஆகும். அன்றாட சாதாரண வேலைகளைச் செய்வதற்கு சில தோழர்கள் விரும்புவதில்லை. இந்த வேலைகளைச் செய்வது தங்களைச் சிறுமைப்படுத்திக் கொள்வதாகுமென்றும், தங்கள் வருங்காலத்தினரால் போற்றிப் புகழப்படும் பெரிய மனிதர்களாக ஆவதை இது தடை செய்துவிடுமென்றும் கருதுகின்றனர். (இது உண்மையல்ல. எடிசன், ஸ்டாகனோவ் போன்றவர்கள் யாவரும் சாதாரண இயந்திரத் தொழிலாளர்களாய் வேலை செய்தே பேரும் புகழும் பெற்றனர். இவர்களைப் போல் இந்தத் தோழர்களும் கீர்த்தி பெற முடியும்.) இத்தகைய வேலைகளைச் செய்தால் தங்களுடைய திறமைகளைக் காட்ட முடியாமற் போய்விடுமென்று இந்த தோழர்கள் கருதுகின்றனர். தாங்கள் இவ்வேலைகளில் ஈடுபட்டால் அது கம்யூனிஸ்ட் இலட்சியத்திற்கே மிகப் பெரிய நஷ்டமாகுமென்று இவர்கள்

கருதுகிறார்கள் போலும். ஆதலால் முன்னேற்றமடைய வேண்டும் என்ற ஆர்வத்தையோ கட்சி உறுப்பினர் அனைவருக்கும் அத்யாவசியமான ஆர்வத்தையே இவர்கள் அனேகமாய் இழக்கும்படி நேருகிறது.

தோழர்களே! இவ்வாறு எண்ணுவது மிகவும் தவறாகும். நம் கட்சி வேலையில் சாதாரண அன்றாட வேலைகள் மிகவும் முக்கியமான பாத்திரம் வகிக்கின்றன. இத்தகைய வேலைகளைச் செய்து வரும் தோழர்களும் மற்ற வகைகளைச் சேர்ந்த வேலைகளைச் செய்யும் தோழர்களைப் போலவே கம்யூனிஸ்ட் இலட்சியம் கைகூடுவதற்கு அவர்களுடைய பங்கை ஆற்றி வருகின்றனர். அவ்வப்பொழுது முக்கியமாயிருக்கும் எந்த வேலையையும் — அது தன் பிரியத்திற்கு இசைந்ததாயிருக்கிறதா, இல்லையா அல்லது அவ்வேலையின் மூலம் கீர்த்தி பெற முடியுமா, முடியாதா என்பதைப் பற்றி கவலைப்படாமல்— செய்வதற்குத் தயாராயிருப்பவர்தான் கம்யூனிஸ்ட்டாக இருக்க முடியும். உதாரணமாய் ரஷ்யப் புரட்சி வெற்றி பெற்றவுடன், முக்கியமான கட்சி வேலையிலும் அரசியல் வேலையிலும் ஈடுபட்டிருந்த பல ஊழியர்களும் திரட்டப்பட்டு வாணிபம் செய்யும் கலையைக் கற்றுத் தேர்ச்சி பெறும்படி செய்யப்பட்டது. புதிய பொருளாதாரக் கொள்கையை நிறைவேற்றும் பொருட்டு இவ்வாறு செய்யப்பட்டது. அச்சமயத்தில் திறமையுடன் வர்த்தகம் செய்வதின் மூலமே கம்யூனிஸ்ட் கட்சி தனி நபரின் சொந்த முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற முடியுமென்னும் நிலைமை ஏற்பட்டிருந்தது. கட்சி உறுப்பினர் எவரும் வர்த்தகம் புரிய விரும்பவில்லை என்றாலுங் கூட, அவர்கள் இவ்வேலையை மேற்கொண்டனர். அவர்கள் இவ்வாறு வர்த்தகத்தில் ஈடுபட்டது முற்றிலும் சரி. இவ்வாறு அவர்கள் செய்யவில்லை என்றால் அது தவறாயிருந்திருக்கும்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை நான் திரும்பவும் ஒருமுறை கூற விரும்புகிறேன். கட்சி உறுப்பினர்களுக்கு வேலையை நிர்ணயித்துக் கொடுக்கும் பொழுது கட்சித் தலைவர்கள் தனிப்பட்ட கட்சி உறுப்பினர்களின் வெவ்வேறான சூழ்நிலைமைகளை கணக்கிலெடுத்துக் கொள்வது அவசியம். அவர்களுக்குக் கொடுக்கப்படும் வேலை அவர்களுடைய சொந்த குணாதிசயங்களுக்கு ஏற்றதாயிருக்கிறதா என்பதையும் அவர்களிடமுள்ள சிறந்த அம்சங்களை மேலும் வளர்த்துக் கொள்ள உதவுகிறதா, முன்னேற்றமடைய வேண்டுமென்னும் ஆர்வத்தை அவர்களிடம் தூண்டிவிடுகிறதா என்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டும். ஆனால் வேலை நிர்ணயித்துக் கொடுக்கப்பட்ட கட்சி உறுப்பினர் மேலே



கூறிய காரணங்களைக் காட்டி தனக்கு இடப்பட்ட வேலையை ஏற்க மறுக்கக் கூடாது.

நான்காவதாக, சுரண்டும் வர்க்கங்களின் சித்தாந்தத்தை வன்மையாக பிரதிபலிக்கும் தோழர்கள் ஒரு சிலர் கட்சியிலிருந்து வருகின்றனர். இவர்கள் பரஸ்பர உதவி, ஒருமைப்பாடு என்னும் மனப்பான்மை கிஞ்சித்துமின்றி—கம்யூனிஸ்டுகளுடைய, தொழிலாளி வர்க்கத்தினுடைய மகத்தான, மிகவும் நேர்மையான இந்த மனப்பான்மை கிஞ்சித்துமின்றி—பகைவர்களிடம் கையாளப்படும் முறைகளையே கட்சி உறுப்பினர்கள் சம்பந்தமாகவும் உள் கட்சி பிரச்னைகள் சம்பந்தமாகவும் பல சந்தர்ப்பங்களிலும் கையாளுகின்றனர்.

இத்தகைய சித்தாந்தத்தையுடையவர்கள் கட்சியில் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளவும், தங்களை வளர்ச்சி செய்து கொள்ளவும் விருப்பி அதன் பொருட்டு மற்றவர்களை பிடித்துகீழே இழுக்கின்றனர். மற்றவர்களுடைய வளர்ச்சிக்கு இடைஞ்சலாக குறுக்கே நிற்கின்றனர். மற்றவர்களுடைய தலை மீது ஏறிதாண்டிச் சென்று விட விரும்புகின்றனர். தங்களை விட அதிக திறமை காட்டுபவர்களைக் கண்டு பொறாமைப்படுகின்றனர். மற்றவர்கள் தங்களை விட அதிகமாக முன்னேறிச் செல்வதையோ அல்லது தங்களுடைய நிலைக்கு உயர்ந்து வந்துவிடுவதையோ காணும் பொழுது அவர்கள் அதிருப்தியடைகின்றனர். மற்றவர்களைக் கீழே இருத்தி வைப்பதில் அல்லது தங்களைவிட பின் தங்கி இருக்கும்படிச் செய்வதில் வெற்றி பெற்றாலொழிய அவர்களுக்கு திருப்தி ஏற்படுவதில்லை. மற்றவர்களுக்குக் கீழிருக்க அவர்கள் விரும்புவதில்லை. மற்றவர்களுடைய கஷ்டங்களைப்பற்றி அவர்கள் அக்கறை எடுத்துக் கொள்வதே இல்லை. அவர்கள் கவலைப்படுவதெல்லாம் தாங்கள் நன்றாயிருக்க வேண்டும், தாங்கள் வளர்ச்சி பெற வேண்டுமென்பதே. மற்ற தோழர்களுக்கு கஷ்டங்கள், தடங்கல்கள், மனச்சோர்வு அல்லது தாக்குதல்கள் ஏற்படுவதைக் காணும் பொழுது அவர்கள் இன்பமுறுகின்றனர். ரகசியமாய் ஆனந்தப்பட்டுக் கொள்கின்றனர். சிறிதும் அனுதாபமின்றி இருக்கின்றனர். மற்ற தோழர்களை கெடுத்து விடவேண்டுமென்று கூட திட்டமிடுகின்றனர். ''கிணற்றுக்குள் விழுந்து, தவிப்பவர்கள் மீது கல்லை விட்டெறி'வதற்குக் கூடத் துணிகின்றனர். மற்ற தோழர்களிடமுள்ள பலவீனங்களையும் அவர்களுடைய கஷ்டங்களையும் பயன்படுத்திக் கொண்டு அவர்களைத் தாக்கி அவர்களுக்கு கெட்ட பெயர் வாங்

கித் தருகின்றனர். மேலும் கட்சிக்குள் இவர்கள் கட்சி ஸ்தாபனத்தின் பலவீனங்களை பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய சொந்த நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்ள முயலுகின்றனர். சொந்த முறையில் தங்களுக்கு லாபமுண்டாகும்படி செய்து கொள்கின்றனர். கட்சிக்குள் வதந்திகளை பரப்பி விடுவதிலும், மற்றவர்களைப் பற்றி முதுகுப்பின்னிருந்து அவதூறு செய்வதிலும், தோழர்களிடையே நிலவும் உறவுகளை உடைத்து சிண்டு முடித்து விடுவதிலும் இவர்களுக்கு அலாதியான பிரியமுண்டு கட்சிக்குள் நடைபெறும்கோட்பாடற்ற தகராறுகள் யாவற்றிலும் பங்கெடுத்துக் கொள்வதற்கும், எல்லா ''தர்க்கங்களிலும்'' மிகுந்த அக்கறை காட்டுவதற்கும் விரும்புகின்றனர். குறிப்பாக கட்சி மிகுந்த கஷ்டங்களுக்கிடையே இருக்கும்பொழுது இவர்கள கட்சிக்குள் இத்தகைய ''தர்க்கங்களை'' சிருஷ்டிக்கின்றனர், அல்லது தீவிரமடையச் செய்கின்றனர்.

சுருங்கக் கூறுமிடத்து, இவர்கள் மிகக் கொடியவர்கள், கிஞ்சித்தும் நேர்மை இல்லாதவர்கள். இத்தகைய ஆட்கள் மார்க்ஸிஸம்-லெனினிசத்தின் தத்துவத்தையும் வழிமுறையையும் கற்று பாண்டித்தியம் பெறமுடியும், தொழிலாளி வர்க்க சித்தாந்தத்தைப் பிரதிபலிக்க முடியுமென்று கூறுவது நகைக்கத்தக்கதாகும். இவர்களுடைய சித்தாந்தம் சுரண்டும் வர்க்கங்களுடைய சித்தாந்தத்தின் தத்ரூபமான பிரதிபிம்பமென்பதில் சந்தேகமே இல்லை. எல்லா சுரண்டல்காரர்களுக்கும தங்களுடைய வளர்ச்சியை முன்னிட்டு மற்றவர்களுடைய நலன்களுக்குக் கேடு செய்வார்கள். தங்களுடைய செல்வத்தை விருத்தி செய்வதற்காக, அல்லது பொருளாதார நெருக்கடியின்போது தாங்கள் ஓட்டாண்டியாகிவிடாமல் பாதுகாத்துக் கொள்வதற்காக, முதலாளிகள் மிகப் பல சிறு முதலாளிகளின் மென்னியை பிடித்து அமுத்துகின்றனர். எண்ணற்றத் தொழிலாளிகளைப் பட்டினி போடுகின்றனர். தங்களுடைய நிலத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக நிலச்சுவான்கள் விவசாயிகளை கசக்கிப் பிழிகின்றனர். விவசாயிகளின் நிலங்களை பிடுங்கிக கொள்கின்றனர். ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் போன்ற பாசிஸ்ட் நாடுகள், தங்களை விஸ்தரித்துக் கொள்வதற்காக மற்ற நாடுகளின் வளர்ச்சியை தடுத்துக்கொண்டு குறுக்கே நின்றன ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா, எத்தியோப்பியா முதலிய பல நாடுகளையும் வென்று விழுங்கின சீனத்தை ஆக்கிரமித்தன சுரண்டல் வெறியர்களின் சுபிட்சம் மற்றவர்களுடைய



துன்பங்களையே அஸ்திவாரமாகக் கொண்டுள்ளது. பிறர் நலன்களுக்குக் கேடு செய்வதும் அவர்களை ஒழித்து போண்டியாக்குவதும் சுரண்டல்காரர்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாத நிபந்தனைகளாகும்.

ஆதலால் சுரண்டல்காரர்களிடையே உண்மையிலேயே உறுதியான ஒற்றுமையும், ஒருவருக்கொருவர் உண்மையிலேயே உதவிக் கொள்ளும் பண்பும், உண்மையான மனிதாபிமானமும் இருக்கமுடியாது. சுரண்டல்காரர்கள் மற்றவர்களுக்கு விரோதமாய், சதிகாரத் திட்டங்களையும் திருட்டு வேலைகளையும் நடத்திக் கொண்டுதான் இருப்பார்கள். ஏனெனில் மற்றவர்கள் கெடுக்கப்படுவதாலும் ஓட்டாண்டியாக்கப்படுவதாலும் இவர்களுக்கு லாபமுண்டாகிறது. இருந்த போதிலும் 'தேவதூதர்களாகவும்', 'நீதியின் ஆதரவாளர்களாகவும், பொதுமக்கள் முன்பு வேஷம் போட்டுக் கொண்டு பொய்பேசும்படி இவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இவை அழிந்து கொண்டிருக்கும் சகல சுரண்டல்காரர்களின் குணுதிசயங்கள். இந்த குணுதிசயங்கள் நம்கட்சியிலுள்ள சிலபேர் வழிகளின் சித்தாந்தத்திலும் பிரதிபலிக்கின்றன. சுரண்டல்காரர்களுக்கு இந்த குணுதிசயங்கள் அவர்களுடைய ''புனிதமான'' அறநெறியின் அடித்தளமாக இருக்கலாம். ஆனல் தொழிலாளி வர்க்கத்தைப் பொறுத்த வரையில் இவை படுமோசமான துரோகச் செயலாகும்.

தொழிலாளி வர்க்கம் மேலே விவரிக்கப்பட்ட நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். தொழிலாளி வர்க்கம் மற்றவர் எவரையும் சுரண்டவில்லை; அது தான் மற்றவர்களால் சுரண்டப்படுகிறது. தொழிலாளர்களிடையேயும் சரி, தொழிலாளி வர்க்கத்திற்கும் ஏனைய ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்கள் பகுதிகளுக்குமிடையிலும் சரி, ஒருவர் நலனுக்கும் மற்றவர் நலனுக்கும் அடிப்படையான மோதுதல்கள் கிடையாது. தங்களை வளர்ச்சி செய்துகொள்வதற்காகவும்தங்களுடைய விடுதலையைப்பெறுவதற்காகவும் தொழிலாளர்கள் மற்றதொழிலாளர்கள்அல்லது உழைப்பாளி மக்களின் நலன்களுக்கும் வளர்ச்சிக்கும் கேடு செய்ய வேண்டியதில்லை; அதற்குப் பதில் மற்ற தொழிலாளர்களுடனும் பாட்டாளி மக்களுடனும் அவர்கள் ஒன்றுபட்டு ஐக்கியமடைய வேண்டியதிருக்கிறது இவ்வாறுஐக்கியமடைந்தால் தான் தொழிலாளர்கள் தங்களை வளர்ச்சி செய்து கொள்ள முடியும், தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள முடியும், தங்களை விடுவித்துக் கொள்ள முடி

யும். பாட்டாளி மக்கள் அனைவரும், மனிதகுலம் முழுவதும் விடு
தலை பெறும் பொழுது தான் தொழிலாளி வர்க்கமும் விடுதலை
பெறமுடியும். ஒரு தனிப்பட்ட தொழிலாளியை மட்டும் அல்லது
தொழிலாளர்களில் ஒரு பகுதியை மட்டும் விடுதலை பெறும்படிச்
செய்ய முடியாது. மனிதகுலமனைத்திற்கும் விடுதலை என்னும்
இலட்சியம் பரிபூரணமாக நிறைவேற்றப்பட வேண்டுமேயல்
லாது, அரை குறையாக நடுவழியிலே நின்றுவிடுவதென்பது முடி
யாது. மனிதகுலம் பூராவும் விதிவிலக்கின்றி பரிபூரண விடுதலையை
டைந்தாக வேண்டும்.

விழிப்படைந்த தொழிலாளர்களின் சித்தாந்தம் தொழிலாளி
வர்க்கத்தின் இந்த யதார்த்த நிலைமையைப் பிரதிபலிக்கிறது.
எனவே அது சுரண்டல்காரர்களின் சித்தாந்தத்திலிருந்து முற்றி
லும் மாறுபட்டதாயிருக்கிறது. ஒரு பக்கத்தில் மக்களின் பொது
எதிரி சம்பந்தமாய் அவர்கள் அவசியம் ஈவிரக்கமற்ற நடவடிக்கை
களைக் கையாள வேண்டியிருக்கிறது. மறு பக்கத்தில் தங்களுடைய
சகோதரர்கள், தோழர்கள் சம்பந்தமாய், அவர்கள் இத்தகைய
நடவடிக்கைகளை எக்காலத்திலும் கையாளுவதில்லை. இவ்வாறு
அவர்கள் தங்கள் விரோதிகளிடம் கையாளும் போக்கையும் நடவ
டிக்கைகளையும் தங்கள் நண்பர்கள், தோழர்களிடம் கையாளும்
போக்கிலிருந்தும் நடவடிக்கைகளிலிருந்தும் திட்டவட்டமாக வித்
தியாசப் படுத்திக் கொள்கின்றனர். தங்களுடைய வர்க்க சகோத
ரர்களிடமும் சுரண்டப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வரும் பாட்டாளி
மக்கள் அனைவரிடமும் அவர்கள் மகத்தான, மனப்பூர்வமான நட்
புறவும் அன்பும், அனுதாபமும் கொண்டுள்ளனர். தங்களுடைய
சகோதரர்கள் சம்பந்தமாய் பரஸ்பர உதவியும், உறுதியான ஒற்
றுமைப்பாடும் உண்மையான சமத்துவமும் பரிமளிக்கும் ஒரு புனி
தமான மனப்பான்மையைக் கொண்டுள்ளனர். தங்கள் சகோதரர்
களிலும் சரி, அல்லது மனித குலத்திலும் சரி எந்த ஒரு நபருக்கும்
பிரத்தியேகமான விசேஷ சலுகைகளும் உரிமைகளும் இருப்பதாக
அவர்கள் ஒத்துக்கொள்ள உறுதியாக மறுக்கின்றனர். அதேபோல்
தங்களுக்கும் எவ்விதமான பிரத்தியேக சலுகைகளும் உரிமை
களும் இருக்க முடியுமென்னும் கருத்தை அவர்கள் ஏற்றுக் கொள்
வதில்லை. இத்தகைய ஒரு கருத்து எண்ண முடியாததும் அவமான
கரமானதுமாகுமென அவர்கள் கருதுகின்றனர். தங்களை
வளர்ச்சி செய்து கொள்ள வேண்டுமென்றும் மேன்மையுறும்படி
செய்ய வேண்டுமென்றும் அவர்கள் விரும்புவது உண்மையே.
ஆனால், மற்றவர்களையும் அதே சமயத்தில் வளர்ச்சி பெறச் செய்



தால் தான் உழைக்கும் வர்க்கத்தினர் அனைவரின் நிலையை
யும் உயர்த்தினால்தான், தங்களை மேன்மையுறும்படிச் செய்ய
முடியுமென்பது அவர்களுக்குத் தெரியும். சித்தாந்தம், அரசியல்
தொழில் முதலிய எல்லாத் துறைகளிலும் தாங்கள் மற்றவர்
களை விட பின்தங்கி இருக்க விரும்பவில்லை என்பதும் முன்னேற்ற
மடைய வேண்டுமென்னும் உன்னத ஆர்வம் அவர்களுக்குண்டு
என்பதும் உண்மையே. ஆனால் இந்த அம்சங்களில் தங்களை விட
அதிகமான தகுதிகள் பெற்றுள்ளவர்களுக்குத் தாங்கள்
மரியாதையும் அன்பும் செலுத்த வேண்டும், உதவி புரிய வேண்டு
மென்பதும் அவர்களுக்குத் தெரியும். இவ்விதம் அதிக தகுதியுடை
யவர்களிடமிருந்து பொறுமையின்றி பாடம் கற்றுக் கொள்ள
அவர்கள் பிரயாசைப் படுகின்றனர். தங்களுடைய வர்க்கமும் உல
கிலுள்ள உழைப்பாளி மக்கள் எல்லோரும் துன்பகரமான கடின
மான நிலைமையிலிருப்பதுபற்றி அவர்கள் மிகுந்த அக்கறை காட்டு
கின்றனர். உலகெங்கும் உழைப்பாளி மக்கள் நடத்தி வரும் விடு
தலைப் போராட்டத்திலும் இம்மக்களின் வெற்றி, தோல்விகளி
லும் அவர்கள் அக்கறை கொண்டுள்ளனர். உழைப்பாளி மக்க
ளுக்கு கிடைக்கும் ஒவ்வொரு வெற்றியும், தோல்வியும் அது
எங்கு ஏற்பட்டாலும் சரி, தங்களுடைய சொந்த வெற்றியும்
தோல்வியுமாகுமென்பதை அவர்கள் உணருகின்றனர். இந்த
வெற்றி, தோல்விகள் சம்பந்தமாய் அவர்கள் மிகுந்த அனுதாப
மும் கவலையும் காட்டுகின்றனர்.

உழைப்பாளி மக்கள் அல்லது ஒடுக்கப்பட்ட மக்கள் அனை
வரின் விடுதலை போராட்டத்தில் மற்றவர்களுடைய கஷ்ட, நஷ்
டங்களைப் பற்றி அக்கறையின்றி இருப்பதோ அல்லது அவற்றைக்
கண்டு மனம் மகிழ்வதோ மிகக்கொடியகுற்றமாகுமென அவர்கள்
கருதுகின்றனர். தங்கள் தோழர்களையும் சகோதரர்களையும் அவர்
கள் நேசிக்கின்றனர்; அவர்களிடம்காணப்படும் பலவீனங்களையும்
தவறுகளையும் வெளிப்படையாகவும் ஒளிவு மறைவின்றியும் மனத்
தூய்மையுடனும் சுட்டிக் காட்டுகின்றனர் (இது அவர்கள் காட்
டும் அன்பின் அறிகுறியேயாகும். கோட்பாடுகள் சம்பந்தமாய்
அவர்கள் தங்கள் தோழர்களுக்கு விட்டுக் கொடுப்பதோ அல்லது
இவர்களுடன் சமரசம் செய்து கொள்வதோ அல்லது இவர்களு
டைய தவறுகளையும் பலவீனங்களையும் ஆதரித்துத் தூண்டி விடு
வதோ கிடையாது. அவ்வாறு செய்வது அன்பின் அறிகுறியா
காது). அதற்கு பதில் இந்த பலவீனங்களையும் தவறுகளையும்
வென்று அவற்றை திருத்திக் கொள்வதற்கு தங்கள் தோழர்களுக்கு

அவர்கள் உதவிசெய்கின்றனர். இந்த பலவீனங்களையும் தவறுகளையும் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் தங்கள் தோழர்களை மோசமான ஒருநிலைக்குத் தாழ்ந்துவிடும்படி நிர்ப்பந்தம் செய்வதில்லை.

தங்களுடைய தோழர்கள், சகோதரர்கள் சம்பந்தமாய் அவர்கள் ''தீமைக்குப் பிரதிபலனாக நன்மையைத் தருகின்றனர்''. மற்ற தோழர்கள் மட்டும் தங்கள் தவறுகளை திருத்திக் கொண்டு வருவார்களேயானால், பதிலுக்கு பதில் திருப்பித் தரவேண்டுமென அவர்கள் சிறிதும் விரும்புவதில்லை. ''தங்களிடமிருந்து அதிகமாகவும் பிறரிடமிருந்து கொஞ்சமாகவும் கோரும்'' சக்தி அவர்களிடமுண்டு. தங்களிடம், மிகவும் கறாராக இருக்கின்றனரென்றாலும் மற்ற தோழர்களிடம் அவ்வளவு கறாராக இருப்பதில்லை ஆயினும் கோட்பாடு சம்பந்தமான பிரச்னைகளில் அவர்கள் உறுதியாகவும், கறாராகவும் நடந்து கொள்கின்றனர்; ஒளிவு மறைவற்ற, நேர்மையான சிரத்தை மிகுந்த போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். கோட்பாடு சம்பந்தமான பிரச்னைகளில் அவர்கள் சமரசம் செய்து கொள்ளமாட்டார்கள். கட்சியின் நலன்களுக்குத் தீங்கிழைப்பவர் எவரையும் அவர்கள் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். காரணமின்றி எவரும் தங்களை அவமதிப்பதற்கும் அனுமதிக்க மாட்டார்கள். கோட்பாடற்ற ரீதியில் தங்களை அளவு மீறி புகழ்ந்து பேசுபவர்களிடமும் முகஸ்துதி செய்பவர்களிடமும் அனாவசியமாக போற்றுபவர்களிடமும் அவர்களுக்கு மிகுந்த அருவறுப்பு ஏற்படுகிறது. தங்களுடைய தோழர்களிடையே நடைபெறும் கோட்பாடற்ற போராட்டங்கள் யாவற்றையும் அவர்கள் எதிர்க்கின்றனர். அதே சமயத்தில் கோட்பாடற்ற போராட்டங்களில் அவர்கள் எவ்வகையிலும் பங்கெடுத்துக் கொள்ளாதவாறு கவனித்துக் கொள்கின்றனர். தங்கள் முதுகிற்குப் பின்னாலிருந்து கூறப்படும் மேம்போக்கான, பொறுப்பற்ற விமர்சனங்களால் அவர்கள் பாதிக்கப்படுவதுமில்லை, எரிச்சலடைவதுமில்லை இத்தகைய விமர்சனங்களின் காரணமாய் அவர்கள் கோட்பாடு சம்பந்தமாய் தங்களுக்குள்ள சொந்தநிலையையோ அல்லது தங்களுடைய நிதானமான அமைதியான போக்கையோ கைவிட்டுவிடுவதுமில்லை

இவையாவும் தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தத்தைப் பிரதிபலிக்கின்றன நம் கட்சித் தோழர்கள் ஒவ்வொருவராலும் பிரதிபலிக்கப்படவேண்டும், கற்றுணரப்படவேண்டும், வளர்ச்சி செய்யப்படவேண்டும். நம் மாபெரும் தலைவர்களான மார்க்ஸ்



ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் வாழ்க்கை பூராவுமே இந்த சித்தாந்தத்தின் மிகச்சிறந்த உதாரணமாகவும் ஸ்தூலமான உருவெடுப்பாகவும் திகழ்கிறது. இன்றைய சமூகத்தில் மனிதகுலத்தின் நேர்மையை இவை பிரதிபலிக்கின்றன. இத்தகைய நேர்மையை பிரதிபலிப்பது கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான். எல்லா விதமான கெட்ட குணங்களையும் அகற்றும் பொருட்டு நாம் இத்தகைய நேர்மைக்கு ஆதர்ஷமளிக்கவேண்டும், அதை வளர்த்து, உயர்த்தவேண்டும்.

ஐந்தாவதாக, நமது கட்சியிலும் பல்வேறு ஸ்தாபனங்களிலும் அதிகார வர்க்க மனப்பான்மை இன்னமும் இருந்துதான் வருகிறது. பின்னால் இவ்விஷயம் பற்றி மீண்டும் பேசுகிறேன். சில தோழர்களிடம் குறுகிய மனப்பான்மை, முழு நிலைமையையும் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் அற்ப விஷயங்களில் கவனம் செலுத்தும் போக்கு போன்ற பலவீனங்கள் பலவும் இருந்து வருகின்றன. கம்யூனிஸ்டிடமிருக்க வேண்டிய மிகுந்த தைரியமோ தூரதிருஷ்டியோ அவர்களிடமிருப்பதில்லை. பெரும் பிரச்சினைகளைப் பார்க்காமல் தங்கள் மூக்கின் நிழலிலுள்ள சிறு விஷயங்களில் அதிக கவனம் செலுத்துகின்றனர். ஜீவாதாரமான பிரச்னைகளிலும், கட்சியிலும், புரட்சியிலும் நடைபெறும் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகளிலும் அவர்கள் அதிக அக்கறை செலுத்துவதில்லை. அதற்கு பதில் சிறுதுரும்பு போன்ற அற்ப விஷயங்கள் பற்றியும், முக்கியத்துவமில்லாத பேச்சுகள் பற்றியும் பலசந்தர்ப்பங்களிலும் கவலை எடுத்துக்கொள்வார்கள். இந்த அற்ப விஷயங்கள் பற்றி பிறருடன் தீவிரமாகவும் ஓயாமலும் விலாதித்து மனதை அலட்டிக் கொள்வார்கள். மேலும் சிறிய சலுகைகளையும் சன்மானங்களையும் கொடுத்து பிறர் அவர்களை இலகுவில் விலைக்கு வாங்கிவிட முடியும். கிராமச் சமுதாயத்தைச் சேர்ந்த சிறு உற்பத்தியாளருடைய குறுகிய மனப்பான்மையின் குணாதிசயங்கள் யாவற்றையும அவர்கள் பெற்றுள்ளனர்.

தெளிவான திட்டவட்டமான கண்ணோட்டமில்லாத சில தனிப்பட்ட தோழர்களும் இன்னமும் இருந்துவருகின்றனர். அவர்களுக்கு இதுவும் பிழையற்றதாயிருக்கும் அதுவும் பிழையற்றதாயிருக்கும அவர்கள் இருபக்கத்துக்கும் சாதகமாய் நடந்து கொண்டு எல்லோரையும் திருப்தி செய்ய முயற்சிக்கின்றனர். தாங்கள் வெறுக்கும் ஒரு ஆளோடுகூட அவரை நேரில் காணும் பொழுது மிகவும் சல்லாபமாக பழகிக்கொள்வார்கள் உங்கள்

முன்னே உங்களைப் போற்றிப் பேசுவார்கள். ஆனால்உங்கள் முதுகிற்குப்பின் சென்று தூஷிப்பார்கள். ஒருஆளைப்பற்றி ஒருவரிடம் போற்றிப் பேசுவார்கள், அதே ஆளைப் பற்றி மற்றொருவரிடம் தூற்றிப் பேசுவார்கள். அவர்கள் பேசும்பொழுது தனிப்பட்ட நபர்களிடமும் சூழ்நிலைமைகளிடமும் அவர்களுக்கு அலாதியான மதிப்பு காட்டி பேசுவார்கள். காற்று எந்தப்பக்கம் வீசுகிறதோ அந்தப்பக்கம் சென்றுவிடுவார்கள்; வெல்லும் பக்கம் பார்த்து கோட்பாடின்றி சேர்ந்து கொள்வார்கள். இவைதான் அவர்களுடைய குணாதிசயங்கள். சில சமயம் அவர்கள் அந்தப் பக்கத்திலும் சேராமல் இந்தப்பக்கத்திலும் சேராமல் மதில் மேல் பூனை போல் இருப்பார்கள். எந்தப்பக்கம் வெல்லும் பக்கம் என்பதை பார்த்த பின் அந்தப்பக்கத்துடன் சேர்ந்து கொள்வார்கள். ''மீனுமல்லாத, மாமிசமுமல்லாத'', ''இரட்டை முகம் படைத்த'' இத்தகைய பேர்வழிகள் நம் அணிகளில் இல்லாமலில்லை இவர்கள் ஒரு தரகனுடைய குணாதிசயங்களைக் கொண்டுள்ளனர்.

பழைய சமூகத்தைச் சேர்ந்த சுரண்டும்வர்க்கங்கள் ஆசை காட்டும் பொழுது அதை எதிர்த்து நிற்க முடியாதவர்கள் சிலருமுள்ளனர். தங்களைச் சுற்றிலுமுள்ள பஞ்சவர்ண உலகையும், பசும்பொன்னையும், அழகிய மாதர்களையும் கண்டு அவர்கள் மதிமயங்கி ஊசலாட்டமடைகின்றனர். இதன் விளைவாக அவர்கள் கொடுங்குற்றம் புரிகின்றனர், அல்லது கட்சியையும் புரட்சியையும் காட்டிக் கொடுத்து துரோகமிழைப்பதற்கும் துணிகின்றனர்.

மேலும், குட்டிபூர்ஷ்வாக்களின் குண விசேஷங்களான மூர்க்கத்தனமும் நிலையற்றதன்மையும், இயந்திரத் தொழிலில் ஈடுபடாத, ஆனால் மிகவும் ஏழ்மையாக சமூகத்தின் அடித்தட்டிலுள்ள பிச்சைக்காரர்கள் போன்ற தெருசுற்றிகளான **லம்பன்** தொழிலாளர்களிடமும், சூன்யமான விவசாயிகளிடமும் காணப்படும் அழித்தொழிக்கும் குணமும பல சந்தர்ப்பங்களிலும் கட்சியிலுள்ள சில தோழர்களின் சித்தாந்தத்தில் பிரதிபலிக்கின்றன. நமது அட்டவணையை மேலும் நீட்டிக் கொண்டு போகத் தேவையில்லை

சுருங்கக் கூறுமிடத்து, நமது கட்சியில், வைராக்கியம் மிகுந்த மகத்தான தொழிலாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின் பிரதிநிதிகளாய் விளங்குவோர் மட்டுமின்றி, அதிகமாகவோ குறைவாகவோ பல்வேறு விதமான தொழிலாளி வர்க்கமல்லாத பகுதிகளின் சித்தாந்தத்தையும், ஏன் அழிந்து கொண்டிருக்கும் சுரண்டும் வர்க்கங்களின் சித்தாந்தத்தையும் கூட பிரதி



பலிக்கும் பல தோழர்கள் இன்னமும் இருந்து வருகின்றனர் இத்தகைய சித்தாந்தம் சில சமயங்களில் வெளியில் தென்படாமல் உள்ளூர இருந்து கொண்டிருக்கிறது; தனிப்பட்ட நபர்களின் சில சின்னஞ் சிறு பிரச்னைகளில் மட்டுமே அது தென்படுகிறது; சில சமயங்களில் அது வளர்ந்து கட்சியினுள் கோட்பாடு சம்பந்தமான பல பிரச்னைகளிலும், முக்கியமான அரசியல் பிரச்னைகளிலும், உள்கட்சி போராட்டங்களிலும் வெளிவருகிறது. கட்சி ஸ்தாபனத்தின் சில தனிப்பட்ட பகுதிகள் அல்லது இணைப்புகள் இந்த தவறான சித்தாந்தத்தின் பிடியில் அகப்பட்டு விடலாம்; அல்லது இதனால் செல்லரிக்கப்பட்டு சீர்கேட்டடையலாம். இது மிகுந்த அளவிற்கு வளரும்பொழுது, உதாரணமாய் கட்சியினுள் சென்-டு—சுயூ, சாங் சு-டோ போன்றவர்கள் அதிகாரத்திலிருந்த பொழுது, தொழிலாளி வர்க்கமில்லாத பகுதிகளைச் சேர்ந்த இந்த தவறான சித்தாந்தம் கட்சித்தலைமையின் மிக முக்கியமான அல்லது பிரதானப் பகுதியை தற்காலிகமாய் தன் பிடிப்பின் கீழ் கொண்டு வந்துவிடலாம். ஆனால் சாதாரண காலங்களில் இந்த சித்தாந்தம் தவறற்ற தொழிலாளி வர்க்க சித்தாந்தத்தால் தோற்கடிக்கப்பட்டு அடக்கப்பட்டு விடுகிறது. உள்கட்சி சித்தாந்தப் போராட்டம் இதை நிரூபிக்கிறது.

கட்சி உறுப்பினர்கள் சிலர் சம்பந்தமாகவும் இது உண்மையாகும். சில சமயங்களில் அவர்களுடைய தவறான சித்தாந்தம் கட்டுக் கடங்கி வெளியில் தலைகாட்டாமல் செயலற்று இருக்கிறது. மற்ற சமயங்களில் அது இந்த உறுப்பினர்களின் கொள்கைகளை அடக்கி ஆட்சி புரியுமளவிற்கு வளர்ந்து விடுகிறது. ஒரே உறுப்பினரிடமுள்ள மாறுபட்ட இரு சித்தாந்தங்களிடையே நிலவும் முரண்பாடுகளும் அவற்றினிடையே நடைபெறும் போராட்டமும் இதை நிரூபிக்கின்றன.

வாழ்க்கை பற்றிய தொழிலாளி வர்க்க கம்யூனிஸ்ட் கண்ணோட்டத்தையும் உலகக்கண்ணோட்டத்தையும் நாம்உணர்வுபூர்வமாக அனுசரித்து வரவேண்டும்; தனிப்பட்ட நபரின் வளர்ச்சிக்கும் வர்க்கம், தேசம், மனித குலம் இவற்றின் விடுதலையின் நலன்களுக்கும் இடையே உள்ள உறவு பற்றிய பிசகற்ற ஞானத்தைப் பெற்று அதன் மூலம் தொழிலாளி வர்க்கமல்லாத மற்றைய பகுதிகளின் தவறான சித்தாந்தங்களை வென்று அவற்றை அகற்றிவிடவேண்டும். நமது சித்தாந்தப் பயிற்சி என்பதன் பொருள் இதுவே.

# கட்சியிலுள்ள பல்வேறு தவருன சித்தாந்தங்களின் தோற்றுவாய்

தோழர்களே! நமது கம்யூனிஸ்ட் கட்சி தற்கால மானிட சமுதாயத்தின் தலைசிறந்த, மிகவும் முற்போக்கான பகுதியின் பிரதிநிதி. மனித குலத்தின் மிகவும் சிறந்த சித்தாந்தமான மார்க்சிசம்—லெனினிசம் நமது கட்சியிடம் தான் இருக்கிறது. இங்கு தான் அது வளர்ந்து ஓங்குகிறது. உலகத்திலேயே மிகுந்த உணர்வு படைத்த, முற்போக்குடைய, நீதியும் நேர்மையும் பற்றிய மிகவும் உயர்ந்த உணர்வுடைய சிலர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் ஒன்று திரண்டுள்ளனர். சகல தீய பலாபலன்களையும் எதிர்த்து அவர்கள் போராடுகின்றனர். பிரகாசமிகுந்த எதிர்காலத்திற்காக மானிட சமுதாயத்தின் இறுதி விடுதலைக்காக போராடுகின்றனர். உலகத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளுள் மிகவும் சிறப்பான கட்சிகளில் ஒன்று சீனக்கம்யூனிஸ்ட் கட்சி. அது மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் தத்துவமென்னும் ஆயுதத்தைப் பெற்று மிகுந்த சக்தியுடன் விளங்குகிறது. அதே சமயத்தில் அது சீனச் சரித்திரத்தில, சென்ற தலைமுறைகளில் மாபெரும் சாதனைகளைச் சாதித்துள்ள பல முற்போக்கான அறிஞர்களும் முக்கியஸ்தர்களும் விட்டுச் சென்றுள்ள சீரிய பாரம்பரியங்களையும் ஆஸ்தியாகப் பெற்றுள்ளது. சீனத்தின் தலைசிறந்த ஆண்களும் பெண்களும் பலர் அதன் ஸ்தாபனத்தில் ஒன்று திரண்டுள்ளனர். பழைய சீன சமூகத்தின் தீய பலாபலன்களையும் பாரம்பரியங்களையும் எதிர்த்து அது நீண்ட போராட்டம் நடத்தியுள்ளது. புரட்சிப் போராட்டத்தில் நீண்டகாலம் பல சோதனைகளுக்கும் உட்பட்டுள்ளது; செழுமை மிகுந்த அனுபவங்களைப் பெற்றுள்ளது. கம்யூனிஸ்ட்களாகிய நாம் பெருமைப்பட்டுக் கொள்ளத் தக்க விஷயங்கள் இவை. மேலும் நாம் கட்டாயம் இறுதி வெற்றி பெறுவோமென்று முழு நம்பிக்கையுடன் ஆதாரத்துடன் பிரகடனம் செய்ய முடியும்.

இருந்தபோதிலும், நம் ஸ்தாபனத்தில் சகலமும் பரிசுத்தமாயிருப்பதாய் கூறிவிட முடியாது. நம ஸ்தாபனத்தில் குற்றங் குறைகள் இல்லாமலில்லை. நம் அணிகளிடையே விரும்பத்தகாத அம்சங்களும், ஏன் அடியோடு அழுகிப்போன முட்டைகளுங் கூட இல்லாமலில்லை. இன்றுங்கூட இந்த விரும்பத்தகாத அம்சங்களும் அழுகிய முட்டைகளும் மோசம் செய்யவும் தீங்கிழைக்கவும் சக்தி பெற்று விளங்குகின்றன. எனவே பிரகாசம் மிகுந்த நம் கட்சியில் இருள்சூழ்ந்த அம்சங்கள் இன்னமுமிருந்து வருகின்றன. விரும்பத்தகாத பல விஷயங்கள் இன்னமுமிருந்து வருகின்றன. இவை பற்றி முன்னரே விவரித்துள்ளேன்.



அவலட்சணமான மருமகளையோ மருமகனையோ கல்யாணம் செய்து வீட்டுக்கு அழைத்து வந்த பின்பு, அவன் அல்லது அவளை விருந்தினர் கண்ணில்படாமல் வைத்துக் கொண்டிருப்பது சாத்தியமில்லை. ''ஒட்டை வாயை திறக்காமல்'' இருப்பதென்னும் கொள்கையை அனுசரித்தாலுங்கூட, இந்த இருள் சூழ்ந்த அம்சங்கள் வெளிப்படுவது நிச்சயம் பொதுமக்கள் நம் கட்சியுடன் இடைவிடாமல் தொடர்பு கொண்டுள்ளனர். நம் அனுதாபிகள் நம்மைப் பார்க்கவருகின்றனர். நம்மை நம்பிக் கொண்டிருக்கும் ஏராளமான இளம் ஆண்களும், பெண்களும், நம்மிடமிருந்து பாடம் கற்றுக் கொள்வதற்காகவோ அல்லது நம்கட்சியில் சேர்வதற்காகவோ ஏனனுக்கு வர விரும்புகின்றனர். அவர்கள் இங்கு வந்தவுடன், நம் வீட்டிலுள்ள முற்போக்கான, பிரகாசமான, அழகான அம்சங்களையும் குடும்ப உறுப்பினர்களையும் பார்ப்பதுடன் அவர்கள் நம்முடைய அவலட்சணமான மருமகன் அல்லது மருமகளையும் காண்பார்கள். எல்லோருக்கும் மத்தியில் நம்முடைய மருமகன் அல்லது மருமகள் அபத்தமாகப் பேசி தன் முட்டாள்தனத்தை வெளிப்படுத்திக் கொள்வதையும் அவர்கள் காண்பார்கள். அவ்வாறு நேரிடும்பொழுது நம் விருந்தினர்களில் சிலர், புதியகட்சி உறுப்பினர்களில் சிலர், திடுக்குறுவார்கள். கம்யூனிஸ்ட் கட்சி மிகவும் சிறந்த கட்சி என்றல்லவா கூறப்படுகிறது? மிகவும் சிறந்த ஆண்களும் பெண்களுமல்லவா கம்யூனிஸ்டுகள் என்று அழைக்கப்படுகின்றனர்? அவலட்சணமானவர்களும் கெட்ட அம்சங்களும் கம்யூனிஸ்ட் கட்சியில் இன்னமுமிருப்பதேன்? விநோதமானதல்லவா இது? இது போன்ற கேள்விகளை அவர்கள் கேட்பார்கள்.

இளந்தோழர்கள் சிலர், அவர்கள் கட்சியில் சேரும் முன்பு இன்றுள்ள சமூகத்தினிடம் மிகவும் தீவிரமாய் அதிருப்தி கொண்டிருந்தனர்; கரையேறும் வழி இல்லை என்று கருதினர். அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் நம்பிக்கையூட்டும் ஒளியாயிருப்பதாய் கருதினர் தாங்கள் கட்சியில் சேர்ந்தவுடன் எல்லாம் திருப்திகரமானதாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் ஆகிவிடுமென்று அவர்கள் எண்ணினர். ஆனால் கட்சியில் சேர்ந்த பின்பு கட்சியினுள்ளும் சில குற்றங்குறைகளும் இருள் சூழந்த அம்சங்களுமிருப்பதை அவர்கள் காணத் தொடங்கினர்.

மேலும், உண்மையில் பார்க்கப்போனால்,எல்லாவற்றைப் பற்றியும் அவர்கள் திருப்தியடையும்படிச் செய்ய நம்மால் முடியாது. (ஏனெனில், அவர்கள் திருப்திகரமானதாகக் கருதுவது அனேகமாய் கட்சியின் நலன்களுக்கும் புரட்சியின் நலன்களுக்கும் உகந்ததாயில்லாமலிருக்கும்) அவர்கள் இப்பொழுது நேரிடையாகக் காண்பது முன்பு கொண்டிருந்த இலட்சியங்களுடன் பூரணமாகப் பொருந்துவதாயில்லை. எனவே அவர்கள் சந்தேகப்படத் தலைப்பட்டனர். "கம்யூனிஸ்ட் கட்சியிலுங்கூட இத்தகைய விஷயங்களிருப்பதேன்?" என்று அவர்கள் கேட்கத் தொடங்கினர். அவர்களில் சிலர் ஏனனுக்கு வந்து ஜப்பானிய எதிர்ப்பு சர்வகலாசாலையில் சேரும்முன்பு, ஏனனும் ஜப்பானிய-எதிர்ப்பு சர்வகலாசாலையும் தாங்கள் கனவு காண்பதுபோல் அவ்வளவுநல்லதாயிருக்கும் என்று எண்ணியிருந்தனர். ஆனால் இங்கே வந்து சர்வகலாசாலையில் சேர்ந்த பின்பு, சகலமும் தாங்கள் எண்ணியது போல் திருப்திகரமாயில்லை என்பதைக்கண்டனர். இதைக்கண்டு அவர்கள் திகைப்படைந்தனர். "ஏனனிலும் ஜப்பானிய-எதிர்ப்பு சர்வகலாசாலையிலும் இத்தகைய அதிருப்திகரமான விஷயங்கள் இருப்பதேன்?" என்று வினவத்தொடங்கினர். இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூற முடியாமல் ஒரு சிலர் ஏமாற்றமடைந்து அறவே நம்பிக்கையையும் இழந்தனர்.

புதிய கட்சி உறுப்பினர்கள் சம்பந்தமாகவும் நம்மை நெருங்கி வருபவர்கள் சம்பந்தமாகவும் நாம் கண்காணிப்புடனிருக்க வேண்டும். இவர்களுக்கு உதவியளிப்பதற்கும் வழிகாட்டுவதற்கும் இவர்களிடம் பாதகமான அபிப்பிராயம் ஏற்படாமலிருக்கும்படிச் செய்யும் முயற்சி எடுத்து கவனம் செலுத்துமாறு கட்சி உறுப்பினர்களுக்கும் ஊழியர்களுக்கும் அறிவிப்பு செய்யவேண்டும். இத்துடன் நாம் கட்சியினுள்ளும் வெளியிலுமுள்ள நம் தோழர்களுக்கு இந்த கேள்விகள் பற்றி விளக்கம் கொடுப்பதும் அவசியமாகும்.

தலைசிறந்த நம்கட்சி ஸ்தாபனத்தில் இந்தமோசமான அம்சங்கள் இருக்கக் காரணமென்ன? இதன காரணம் மிகவும் தெளிவானதென்று நான் கருதுகிறேன். நம் கட்சிஆகாசத்திலிருந்து குதித்துள்ள ஒரு கட்சியல்ல; இன்றுள்ள சீன சமூகத்தில் தோன்றி வளர்ந்துள்ள ஒரு கட்சியே இது என்பதுதான் காரணமாகும். ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பொதுவாக நம் கட்சி உறுப்பினர்கள் சீனத்தின் மிகவும் சிறந்த ஆண்களும் பெண்களுமாவரென்றுலுங்கூட 'சீனத் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையினரென்றுலுங்கூட, அவர்கள் சீன சமூகத்தின் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் வந்தவர்களாவர். சுரண்டால்காரர்களால் ஏற்படும் பலாபலன்களான சுயநலம், சதிவேலைகள், அதிகார வர்க்க மமதை, மற்றும் அருவருக்கத்தக்க பல்வேறு விஷயங்களையும் அபரிமிதமாகக் கொண்டுள்ள இந்த சமூகத்தில் இன்னமும் வாழ்பவாகளாவர். சிறந்த கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலோர் இவற்றால் பாதிக்கப்படுவதில்லை. ஆயினும் சமூகத்தின் சீரழிந்த இவ்விஷயங்களை ஓரளவிற்கு கட்சிக்குள்ளேகொண்டு வருகின்ற,கட்சிக்குள்ளே பிரதிபலிக்கச் செய்கின்ற, வேறு சில கட்சி உறுப்பினர்கள் இன்னமுமிருப்பதில் ஆச்சரியமில்லை. சகதியிலிருந்து வெளிவருபவர் மீது சதாகாலமும் சகதியில் நின்று கொண்டிருப்பவர் அழுக்கு ஒட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்படலாமா? இது இயற்கையானது. கம்யூனிஸ்ட் கட்சியில் இத்தகைய அசிங்கங்கள் அறவே இல்லை என்றால்தான் ஆச்சரியத்திற்கிடமேற்படும். இந்த அசிங்கமான ஒரு சமூகத்திலிருந்து அசிங்கமென்பதே கிஞ்சித்துமில்லாத ஒரு கம்யூனிஸ்ட் கட்சி பிறப்பது எப்படி சாத்தியமாகும்? அசிங்கங்கள் இருக்கும் வரையில், வர்க்கங்களும் சுரண்டும் வர்க்கங்களால் சமூகத்திலேற்படும் பலாபலன்களுமிருக்கும் வரையில், கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஓரளவிற்கு இந்த அசிங்கங்கள் இருக்கத்தான் செய்யும்.

புரட்சியை நடத்திச் செல்லும் பணி கம்யூனிஸ்ட் கட்சி முன்புள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சுய-பயிற்சியிலும் உறுதி பெற்று பக்குவம் பெறுவதிலும் ஈடுபடுவது அவசியமாகும். இதனால் சமூகத்தில் இருள் நிறைந்த, பின்தங்கிய நிலைமைகளை எதிர்த்துப் போராட்டங்கள் நடத்துவது மட்டுமின்றி, கட்சிக்குள் சகலவிதமான இருள் நிறைந்த பின் தங்கிய நிலைமைகளைப் பிரதிபலிக்கும், ஊசலாடும், நிலைதடுமாறும் அம்சங்களை எதிர்த்து உள்கட்சி போராட்டம் நடத்தவேண்டும். நமதுஉள்கட்சி முரண்பாடுகளுக்கும் உள்கட்சி போராட்டத்திற்கும் அடிப்படையாக விளங்குவது இதுவே. கட்சிக்கு உள்ளும் வெளியிலும் நடைபெறும் பல்வேறு போராட்டங்களின மூலம் நாம் சமூகத்தை மாற்றி அமைக்கவும், இருள் நிறைந்த, பின்தங்கிய நிலைமைகளைப் படிப்படியாக அகற்றவும், அதே சமயத்தில் நம் கட்சியையும் கட்சி உறுப்பினர்களையும் திருத்தியமைக்கவும், உள்கட்சி முரண்பாடுகளை தீர்ப்பதற்கும், இவற்றின் மூலம் நம் கட்சியையும் கட்சி உறுப்பினர்களையும் குற்றங் குறையற்ற அசைக்க முடியாத ஒரு நிலைக்கு உயர்த்துவதற்கும் பாடுபடுகிறோம்.

தோழர் ஸ்டாலின் கூறினார்:

''......தொழிலாளி வர்க்கக் கட்சிகளுள் எழும் முரண்பாடுகள் இரண்டு காரணங்களிலிருந்து தோன்றுகின்றன.

''அவை யாவை?

''முதலாவதாக, வர்க்கப் போராட்டத்தினிடையில், தொழிலாளி வர்க்கத்தின் மீதும் அதன் கட்சியின் மீதும் பூர்ஷ்வா வர்க்கமும் பூர்ஷ்வா சித்தாந்தமும் கொண்டு வரும் நிர்ப்பந்தம். தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த உறுதி மிகவும் குறைந்த பகுதிகள் (இதன் பொருள் தொழிலாளி வர்க்க கட்சியைச் சேர்ந்த உறுதி மிகவும் குறைந்த பகுதிகள்) இந்த நிர்ப்பந்தத்திற்குப் பல சந்தர்ப்பங்களிலும் அடிபணிகின்றன. தொழிலாளி வர்க்கம் சமூகத்திலிருந்து பூரணமாகத் தனிமைப்பட்டிருக்கிறதென்றோ சமூகத்திற்கு அப்பாற்பட்டதாய் அது நிற்கிறதென்றோ, நாம் கருதமுடியாது. தொழிலாளி வர்க்கம் சமூகத்தின் பகுதி; நானாவித சமூகப் பகுதிகளுடனும் அது எண்ணற்ற வழிகளில் தொடர்பு கொண்டிருக்கிறது. நம் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் பகுதி, ஆகவே, பூர்ஷ்வா சமூகத்தின் பல்வேறு பகுதிகளுடைய தொடர்புகளிலிருந்தும் செல்வாக்கிலிருந்தும் நம் கட்சி தப்ப முடியாது. பூர்ஷ்வா வர்க்கமும், அதன் சித்தாந்தமும், தொழிலாளி வர்க்கத்தின் மீதும் அதன் கட்சியின் மீதும் கொண்டு வரும் நிர்ப்பந்தத்தின் விளைவாக என்ன ஏற்படுகிறது? பூர்ஷ்வா சமூகத்துடன், ஏதேனும் ஒரு வகையில், தொடர்பு கொண்டிருக்கும் தொழிலாளி வர்க்கத்தின் சில பகுதிகள் மூலம், பூர்ஷ்வா கருத்துக்களும், பூர்ஷ்வா ஒழுக்கங்களும், பூர்ஷ்வா பழக்கங்களும், பூர்ஷ்வா மனோபாவங்களும் தொழிலாளி வர்க்கத்துக்குள்ளும் அதன் கட்சிக்குள்ளும் பல சந்தர்ப்பங்களிலும் ஊடுருவிக் கொண்டு வந்து விடுகின்றன.

''இரண்டாவதாக உள்ள காரணம் என்னவெனில்—தொழிலாளி வர்க்கம் பல்வேறு பகுதிகளை, வெவ்வேறான தன்மையுடைய பல பகுதிகளைக் கொண்டுள்ளது. தொழிலாளி வர்க்கத்தை ஒரு வர்க்கமென்ற முறையில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாமென்று நான் நினைக்கிறேன்.

''முதல் பகுதி தொழிலாளி வர்க்கத்தின் பிரதான பகுதி, வர்க்கத்தின் பெரும் பகுதி, வர்க்கத்திற்கு இருதயம் போன்ற நிரந்தரமான பகுதி, முதலாளி வர்க்கத்துடன் இருந்த சகல



தொடர்புகளையும் நீண்ட காலத்திற்கு முன்பே துண்டித்துக் கொண்டு விட்ட ''பரிபூரணமாய் கடைந்தெடுத்த'' தொழிலாளி மக்களாலான பகுதி. தொழிலாளி வர்க்கத்தின் இப்பகுதி தான் மார்க்சிசத்தின் மிகவும் நம்பகமான ஆதரவாளனாகும்.

''இரண்டாவது பகுதி, சமீபத்திலே தொழிலாளி வர்க்கமல்லாத மற்ற வர்க்கங்களிலிருந்து வந்தவர்களை, விவசாயிகள், குட்டி பூர்ஷ்வாக்கள், அறிவாளிகள் ஆகியோரிடமிருந்து வந்தவர்களைக் கொண்டுள்ள பகுதி, தொழிலாளி வர்க்கமல்லாத பிற வர்க்கங்களிலிருந்து வந்த இவர்கள், சமீபகாலத்தில்தான் தொழிலாளி வர்க்கத்தின் அணிகளில் சேர்ந்து கொண்டுள்ள இவர்கள் தங்களுடைய பழக்க வழக்கங்களையும், ஊசலாட்டங்களையும், நிலையற்ற தன்மையையும் தங்கள் கூடவே தொழிலாளி வர்க்கத்திற்குள் கொண்டு வந்து விடுகின்றனர். அனார்க்கிஸ்ட் (அராஜக) கோஷ்டிகளும் அரைகுறை அனார்க்கிஸ்ட் கோஷ்டிகளும் ''அதிதீவிர இடதுசாரி'' கோஷ்டிகளும் முளைத்து வளர்வதற்கு மிகவும் சாதகமான சூழ்நிலையை இப்பகுதி பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

''இறுதியாக மூன்றாவது பகுதி ஒன்று இருக்கிறது. தொழிலாளர்களிடையேயுள்ள ''பிரபுக்களைக்'' கொண்ட தொழிலாளர் வர்க்கத்தின் மேல்தட்டிலுள்ளவர்களைக் கொண்ட பகுதி இது. தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்த மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும் பொழுது இப்பகுதி வாழ்க்கை நிலைமையில் அதிக அளவு பந்தோபஸ்து பெற்றுள்ளது. இப்பகுதி பூர்ஷ்வா வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்ள முயலுகிறது. அதிகாரத்திலுள்ளவனுக்கு ஏற்றபடி வளைந்து கொடுத்து இசைந்து செல்லும் போக்கு இதனிடம் மேலோங்கி விளங்குகிறது. ''மதிப்பும் மரியாதையும் பெற்ற முக்கியஸ்தராக'' வேண்டுமென இப்பகுதியினர் பாடுபடுகின்றனர். இந்தப் பகுதி பகிரங்கமான சீர்திருத்தவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் உதித்தெழுவதற்கு மிகவும் சாதகமான சூழ்நிலையைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.''

தோழர்களே! தலைசிறந்த நம் தொழிலாளி வர்க்கக் கட்சியினுள் இன்னமும் இருந்து வரும் தொழிலாளி வர்க்கமல்லாத பிற வர்க்கங்களின் பல்வேறு சித்தாந்தங்களுக்கும், தவறுகளுக்கும், குறைபாடுகளுக்கும், அசிங்கங்களுக்கும் தோற்றுவாயாக விளங்குவது இவையே. கட்சியினுள் இன்னமும் இருந்துவரும் பல்வேறு முரண்பாடுகளுக்கு தோற்றுவாயாக விளங்குவதும் இவையே.

# கட்சியிலும் உட்கட்சிப் போராட்டத்திலும் உள்ள பல்வேறு தவறான சித்தாந்தங்கள் குறித்து கடைப்பிடிக்க வேண்டிய போக்கு

சுரண்டும் வர்க்கங்களின் செல்வாக்கின் காரணமாயும், தொழிலாளி வர்க்கத்திலும், நமது கட்சியிலும் வெவ்வேறான தன்மையுடைய பல பகுதிகளிருப்பதின் காரணமாயும் பல்வேறு கட்சி உறுப்பினர்களுக்கிடையிலும், சித்தாந்தம், கண்ணோட்டம் பழக்கவழக்கங்கள், மனப்போக்கு ஆகியவற்றில் வேறுபாடுகள் எழுகின்றன. இதேபோல் வாழ்க்கையைப் பற்றிய அவர்களது உலக தாத்பரிய சாஸ்திரம், அவர்களது உலகக் கண்ணோட்டம், ஒழுக்கநெறி சம்பந்தமான கருத்து ஆகியவற்றிலும் பல்வேறு அளவுக்கு வேறுபாடுகள் எழுகின்றன. விஷயங்களையும் நிலைமைகளையும் பரிசீலிக்கும் முறைகளிலும், பல்வேறு புரட்சிகரப் பிரச்னைகளைப் பற்றி சிந்திக்கும் முறைகளிலும் கூட வேறுபாடுகள் எழுகின்றன. சிலர் விஷயங்களையும் நிலைமைகளையும் பிசகற்ற முறையில், புறத்தே உள்ள யதார்த்த உண்மைகளுக்கு ஏற்ற முறையில், அவற்றின் வளர்ச்சி, அவற்றினிடையிலுள்ள சம்பந்தா சம்பந்தம் ஆகியவற்றின் கோணத்தில் ஆராய்கின்றனர். மற்றும் சிலர் விஷயங்களையும் நிலைமைகளையும் பிசகான முறையில் யதார்த்த உண்மைகளுக்குப் புறம்பான தன்னோக்கு முறையில், அவற்றின் வளர்ச்சியையும், அவற்றினிடையிலுள்ள சம்பந்தா சம்பந்தத்தையும் பார்க்காமல், அவற்றைத் தனித்துப் பிரித்து வைத்து, ஸ்தம்பித்த நிலையில் வைத்து ஆராய்கின்றனர். சிலர் விஷயங்கள், நிலைமைகளின் ஒரு குறிப்பிட்ட அம்சத்தை மட்டுமே கவனிக்கின்றனர், அல்லது அவ்வம்சத்திற்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். மற்றும் சிலர், வேறொரு அம்சத்தை மட்டுமே கவனிக்கின்றனர் அல்லது அவ்வம்சத்திற்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். அதாவது அவர்கள், யதார்த்த விஷயங்களின் வளர்ச்சி விதிகளுக்கும், அவ்விஷயங்களுக்கு இடையேயுள்ள உறவுகளுக்கு மேற்ப, பிரச்னைகளை ஒட்டு மொத்தமாக வைத்துப் பார்ப்பதில்லை; அதற்கு மாறாக, ஒருதலைப் பட்சமான, தன்னோக்குக் கண்ணோட்டத்தில் பார்க்கின்றனர். எனவே, கட்சி உறுப்பினர்களிடையில், வேலைமுறை சம்பந்தமான வேறுபாடுகளும், வெவ்வேறு விதத்தில் மாறுபட்ட எண்ணங்களும், கருத்துகளும், வாதங்களும் எழுகின்றன. இவ்வாறே, உட்கட்சிப் போராட்டங்கள் ஏற்படுகின்றன.



இதுபோன்ற வேறுபாடுகளும், வாதப் பிரதிவாதங்களும் குறிப்பாக புரட்சியின் திரும்புமுனைக் கட்டங்களில், ஒவ்வொரு கணமும் தீவிரப்பட்டு வரும் புரட்சிகரப் போராட்டங்களின் சூழ்நிலைமைகளில், இடுக்கண்கள் அதிகரிக்கும் சூழ்நிலைமைகளில், சுரண்டும் வர்க்கம், அதன் சித்தாந்தம் ஆகியவற்றின் செல்வாக்கின் கீழும், நிர்ப்பந்தத்தின் கீழும் மேலும் மேலும் தீவிரமடையும். இது தவிர்க்க முடியாதது. எனவே, கட்சிக்குள் சித்தாந்த வேறுபாடுகளும், மாறுபட்ட அபிப்பிராயங்களும் உள்ளனவா, இல்லையா என்பதல்ல பிரச்னை (இத்தகைய வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும்). இந்த முரண்பாடுகளை கட்சிக்குள் எப்படித் தீர்த்துக் கொள்வது? இவ்வேறுபாடுகளை எப்படிக் களைவது? கட்சிக்குள்ளிருக்கும் தொழிலாளி வர்க்க சித்தாந்தமல்லாத, தவறான பல்வேறு சித்தாந்தங்களை எப்படிப் போக்குவது என்பதே பிரச்னை. உட்கட்சிப் போராட்டத்தின் மூலமே, இந்த முரண்பாடுகளைத் தீர்த்து, வித்தியாசங்களை அகற்றி, தவறான பல்வேறு சித்தாந்தங்களைப் போக்க முடியும். ஏங்கல்ஸ் கூறியதுபோல், ''முரண்பாடுகளை யாரும் வெகு நாளைக்கு ஒளித்து வைத்திருக்க முடியாது. போராட்டங்களின் மூலம் அவை தீர்க்கப்படவேண்டும்.''

கட்சிக்குள்ளிருக்கும் பல்வேறு தவறுகள், குறைபாடுகள், விரும்பத்தகாத விஷயங்கள் குறித்து, கட்சிக்குள்ளும் வெளியேயுமுள்ள பல்வேறு வகையினர், வெவ்வேறு விதமான கருத்துக்களைக் கொண்டுள்ளனர்; வெவ்வேறுவித போக்குகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

ஒரு வகையினர், கட்சிக்குள்ளிருக்கும் குறைபாடுகள், தவறுகள், விரும்பத்தகாத விஷயங்களைப் பார்ப்பதில்லை அல்லது பார்க்க விரும்புவதில்லை. அவர்கள் கண்மூடித்தனமான அதிக நம்பிக்கையும், திருப்தி மனப்பாங்கும் கொண்டிருக்கின்றனர். சற்றும் சிந்திக்காமல் கட்சியினுள் சகலமும் சரியாகத்தான் இருக்கமுடியும் என்று எண்ணுகின்றனர். எனவே குறைபாடுகள், தவறுகள் விரும்பத்தகாத விஷயங்கள்யாவற்றிற்கும்எதிராக அவர்களின் உஷார்த் தன்மை குறைகிறது. இவற்றை எதிர்த்து நடைபெற வேண்டிய போராட்டமும் தளர்கிறது.

மற்றொரு வகையினர், தவறுகள், குறைபாடுகள், விரும்பத்தகாத விஷயங்களை மட்டுமே பார்க்கின்றனர்; கட்சியின் நல்ல அம்சத்தைப் பார்ப்பதில்லை. கட்சிக்குள் ஒன்றும் சரியில்லை என்று அவர்கள் நினைக்கின்றனர். எனவே அவர்கள் தோல்வி மனப்பான்

மையுடையவர்களாகி, ஏமாற்ற முறுகின்றனர்; கட்சியின் வருங்காலத்தைப் பற்றிய நம்பிக்கையையும் இழக்கின்றனர்; அல்லது மிகுந்த பீதியுற்று ''இவையனைத்தும் மிகவும் ஆபத்தானவை'' என்று நினைக்கின்றனர்.

மேற்கூறப்பட்ட இவ்விரண்டு வகைக் கருத்துக்களும் தவறானவை, ஒருதலை பட்சமானவை. நமது கருத்து, இவ்விரண்டிற்கும் மாறானது. ஒரு புறத்தில், நமது கட்சிதான், சீனத் தொழிலாளி வர்க்கத்தின் மிகவும் முற்போக்கான, மிகவும் புரட்சிகரமான அரசியல் கட்சி என்பதை நாம் அறிவோம். மற்றொரு புறத்தில் நமது கட்சிக்குள் இன்னமும் பல்வேறுவித சிறிய ,பெரிய தவறுகளும், குறைபாடுகளும், விரும்பத்தகாத விஷயங்களும் உள்ளன என்பதை நாம் தெட்டத் தெளிவாக உணர்கிறோம். அதே சமயத்தில், இவற்றின் தோற்றத்திற்கான மூலகாரணத்தையும், திருத்தங்கள் செய்து இவற்றை படிப்படியாக அழித்தொழிப்பதற்கான வழிமுறையையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்கிறோம். எனவே, இதற்கேற்ப நாம் நமது முயற்சிகளையும், பணியையும் பலப்படுத்திக் கொண்டு, நமது கட்சியும், புரட்சியும் முன்னேறும் பொருட்டு போராட வேண்டியது அவசியமாகும்.

பல்வேறு நபர்களின் கண்ணோட்டமும், கருத்தும் வேறுபட்டிருப்பது போல், கட்சியிலுள்ள விரும்பத்தகாத விஷயங்கள் சம்பந்தமாக கடைப்பிடிக்கும் போக்குகளிலும் வெவ்வேறு விதங்கள் உள்ளன.

முதல்வகையைச் சேர்ந்த போக்கு, நமது கட்சியிலுள்ள குறைபாடுகளையும், தவறுகளையும் விரும்பத்தகாத விஷயங்களையும் கண்டு கீழ்த்தரமான மகிழ்ச்சியுறும் போக்காகும். கட்சிக்கு குழிபறிக்கும் பொருட்டு இத்தவறுகளையும், குறைபாடுகளையும் எல்லா வகையிலும் பயன்படுத்திக் கொள்வதோடுஅவற்றைமிகைப்படுத்தவும் செய்கிறது இப்போக்கு (சில தவறுகளை எதிர்த்துப் போராடிவிட்டு, அதே தவறுகள் மற்றொரு துறையில் தலைதூக்கும்வகையில் கட்சியின் கொள்கையை ஆதரிப்பதென்னும் வழிமுறையை இப்போக்கு சில சமயங்களில் பின்பற்றுகிறது.). கட்சிக்கு வெளியேயுள்ள நமது விரோதிகளும், கட்சிக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் உளவாளிகளும், டிராட்ஸ்கீயவாதிகளும் கடைப்பிடிக்கும் போக்கு இது

இரண்டாவது வகையைச் சேர்ந்த போக்கு. தனிப்பட்ட சுய-நல எண்ணங்களையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்து கொள்ளும் நிமித்தம், சில பல தவறான சித்தாந்தங்களுக்கும்,



தவறான உதாரணங்களுக்கும் அனுதாபம் காட்டி, அவற்றை ஏற்றுக் கொண்டு, அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்கிறது. இந்தப் போக்கையுடையவர்கள், கட்சிக்குள் குறைபாடுகளும், தவறுகளும் இருந்து வருவது, தமக்கு சாதகமானதென்று கருதுகின்றனர். எனவே தெரிந்தோ, தெரியாமலோ இத்தகைய தவறுகளையும், குறைபாடுகளையும் இவர்கள் மேலும் வளர்ப்பதற்கு வேலை செய்து, அவற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். சந்தர்ப்பவாதிகளும், மிகவும் விரும்பத்தகாத குணாம்சங்கள் பொருந்திய கட்சி உறுப்பினர்களும் கடைப்பிடிக்கும் போக்கு இது.

மூன்றாவது வகையைச் சேர்ந்த போக்கு, இத்தவறுகள், குறைபாடுகள், விரும்பத்தகாத விஷயங்களைப்பற்றி கவலை கொள்வதில்லை நடப்பது நடக்கட்டும் என்று வாளாவிருக்கும் போக்கு இது. இப்போக்குடையோர், கஷ்டங்களை மேற்கொள்ள மறுக்கின்றனர்; சுலபமான பாதையைத் தேடுகின்றனர்; குறைபாடுகளையும் தவறுகளையும் எதிர்த்துப் போராட விருப்பமற்றவர்களாய் விளங்குகின்றனர், அல்லது உட்கட்சிப் போராட்டத்தையும், சுயகுண விமர்சனத்தையும் கண்டு பயமடைந்து, அவை கட்சிக்கு நன்மை பயக்கக் கூடியதல்ல, தீங்கே விளைவிக்கக் கூடியவை என்று எண்ணுகின்றனர். கட்சிக்குள்ளிருக்கும் தவறுகள், குறைபாடுகள் முதலியவை சம்பந்தமாக இவர்கள், அக்கறையற்றவர்களாக அல்லது அவற்றை அங்கீகரிக்க விருப்பமற்றவர்களாக இருக்கின்றனர், அல்லது இவற்றின் பால் உதாசீனமான,விட்டுக்கொடுக்கும் போக்கை, தவறுகளிலும் நல்ல அம்சங்களிருப்பதாக ஆராய்ச்சி செய்யும் போக்கை கடைப்பிடிக்கின்றனர். கட்சிக் கடமை உணர்வு மிகவும் குன்றியுள்ள கட்சி உறுப்பினர்கள், மிதவாதக்குட்டையில் ஊறிப்போனவர்கள், அதிகாரவர்க்க மமதையுடையுவர்கள், இத்தகைய போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

நான்காவது வகையைச் சேர்ந்த போக்கு, தவறுகள், குறைபாடுகள் சம்பந்தமாகவும், கட்சிக்குள் தவறான சித்தாந்தங்களுடைய நபர்களின் மீதும், ஆக்ரோஷமான வெறுப்புணர்வைக் கொண்டிருக்கிறது. இத்தகைய போக்குடையோர், மேற்கூறிய நபர்களுடனுள்ள உறவுகளை மூர்க்கத்தனமாக முறித்துக் கொள்வர்; அவர்களை ஒரே மூச்சில் கட்சியை விட்டு வெளியேற்றி, கழித்துக்கட்ட முயற்சிப்பர். ஆனால் இதில் அவர்கள் தோல்வியுற்றால் அல்லது அவர்களுக்கே சூடுவிழுமேயானால், இதைக் கைவிடுத்து, மனச்சோர்வும், துயரமும் அடைகின்றனர்.

''பிறர் விஷயத்தைப் பற்றிநமக்கென்ன?'' என்றுஒதுங்கி அல்லது கட்சியினின்று வெகுதூரத்துக்கு விலகி நிற்கின்றனர். இப்போக்கு உட்கட்சிப் போராட்டத்தையும், சுய குணதோஷ விமர்சனத்தையும், யாந்திரீகமான முறையில் புரிந்து கொள்ளுவதின் பிரதிபலிப்பேயாகும். கட்சி உறுப்பினர்களுக்குள் நடக்கும் போராட்டம் எவ்வளவுக்கெவ்வளவு கடுமையாகவுள்ளதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று அவர்கள் நினைக்கின்றனர். உதவாக்கரை விஷயங்களைக்கூட அவர்கள், ''கோட்பாட்டின்நிலைக்கு'' உயர்த்துகின்றனர்; சின்னஞ்சிறு தவறுக்குக்கூட அரசியல் சந்தர்ப்பவாதம், அது, இது என்று பட்டம் சூட்டுவர். கட்சித்தோழர்களை தண்டிப்பதற்காக அவர்கள் கட்சியின் ஸ்தாபன முறைகளை துஷ்பிரயோகம் செய்வர். அல்லது கட்சிக்கு வெளியே நடத்தப்படும் போராட்ட முறைகளையும் கூட கடைப்பிடிப்பர். அவர்கள் உட்கட்சிப் போராட்டத்தை, யதார்த்த தேவைகளுக்கும், யதார்த்த விஷயங்களின் வளர்ச்சி விதிகளுக்குமேற்ப, பொருத்தமான, ஸ்தூலமான முறையில் நடத்துவதில்லை. அதற்கு மாறாக அந்தப் 'போராட்டத்தை'' யாந்திரீகமாக, தன்னேக்கு முறையில் ஆக்ரோஷத்துடனும், நேர்மையின்றியும் நடத்துகின்றனர். எந்த சூழ்நிலைமையிலும் உட்கட்சிப் போராட்டம் நடத்தப்பட வேண்டும். எவ்வளவு கடுமையாயும் அடிக்கடியும் போராட்டம் நடக்கிறதோ அவ்வளவுக்கும் நல்லதே என்று அவர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாய், உட்கட்சிப் போராட்ட அம்புகளை வீசுவதற்கு இலக்குகளைத் தேடிப் பிடிப்பதில் முனைகின்றனர்; வேண்டுமென்றே உட்கட்சிப் போராட்டத்தை சிருஷ்டிக்கின்றனர்; இத்தகைய யாந்திரீகமான ''போராட்டத்தை'' கட்சிப் பணிக்கு அடிப்படையாக நம்புகின்றனர். கட்சிக்குள்ளிருக்கும் முரண்பாடுகளின் மூலத்தைப் புரிந்து கொள்ளாத கட்சி உறுப்பினர்கள், உட்கட்சி வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிமுறைகளை அறியாதவர்கள் உட்கட்சிப் போராட்டத்தை யாந்திரீகமாகப் புரிந்து கொள்பவர்கள் ஆகிய இவர்களே இத்தகைய போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

ஐந்தாவது வகைப் போக்கே, நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சரியான போக்கு. இதுமுன் கூறப்பட்ட நான்கு போக்குகளுக்கும் நேர் எதிரானது.

1) முதலில், பல்வேறு நிகழ்ச்சிகள், சித்தாந்தங்கள், பலதரப்பட்ட அபிப்ராயங்கள், கருத்துகளில் எவையெவை பிசகற்றவை, எவையெவை பிசகானவை, புரட்சிக்கும் கட்சியின் நீண்ட



கால நலவுரிமைகளுக்கும்,எவையெவைநன்மை பயக்கக்கூடியவை, எவையெவை குந்தகம் விளைவிக்க கூடியவை என்பதை ஆய்ந்தறிய வேண்டும். ஒரு பிரச்னையைப் பற்றிய இருதரப்பு வாதங்கள், தவறாகவும், மூன்றாவது அபிப்பிராயமும் கருத்துமே சரியானதாகவும் இருக்கக்கூடும். எனவே, நிதானமான ஆராய்ச்சிக்கும் பரிசீலனைக்கும் பிறகே, நாம்கைக்கொள்ளவேண்டிய தெளிவானபோக்கைத் தீர்மானித்து, பிசகற்ற தரப்பு எதுவோ அத்தரப்பில் நாம் நிற்கவேண்டும். யாரையும் நாம் கண்மூடித்தனமாகப் பின்பற்றவோ, பூஜிக்கவோ கூடாது.

2) நல்லவை, நேர்மையானவை அனைத்தையும் நாம் பயிலுவோம், முன்னேற்றுவோம், வளர்ப்போம்; கட்சிக்குள்ளிருக்கும் சகல பிசகற்ற கருத்துக்களையும், அபிப்ராயங்களையும் நிலைநாட்டுவோம் தீய உதாரணங்களை பின்பற்றமாட்டோம்; தவறான சித்தாந்தத்திற்கு இரையாகவும் மாட்டோம்.

3) நாம் மிதவாதப் போக்கைக் கடைப்பிடிக்க மாட்டோம். அதற்கு மாறாக, கோட்பாடு ரீதியாகத் தவறானதாகவுள்ள பல்வேறு சித்தாந்தங்கள், கருத்துகளுக்கும், கட்சிக்குள் நடக்கும் சகல விரும்பத்தகாத நிகழ்ச்சிகளுக்கும் எதிராக, வளைந்து கொடுக்காத, விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடத்துவோம். இத்தகைய தவறுகளும், நிகழ்ச்சிகளும் ஏற்படாமல் இடையறாது முயற்சிப்பதே இதன் நோக்கம். நாம் காலத்திற்கேற்ப சந்தர்ப்பவாத முறையில் நடந்து கொள்ள மாட்டோம் அல்லது இத்தவறுகளும் நிகழ்ச்சிகளும் வளர்ந்து, கட்சியின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்க அனுமதிக்க மாட்டோம். இதே போல், இத்தகைய உட்கட்சிப் போராட்டதைக் கண்டு பயப்படவும் மாட்டோம்.

4) ஆயினும் நாம், இடம். பொருள், ஏவலைக் கவனியாத யாந்திரீகப் போக்கைக் கடைப்பிடிக்க மாட்டோம். கோட்பாடு சம்பந்தமாக நாம் தெளிவும், விட்டுக் கொடுக்காத தன்மையும் கொண்டிருப்போம். ஆனால் அதே சமயத்தில், உட்கட்சிப் போராட்ட முறைகளிலும், விஷயங்களை எடுத்துரைத்து விளக்குவதிலும்,மிகுந்த பொறுமையையும், வளைந்து கொடுக்கும் தன்மையையும் கைக்கொள்வோம். நீண்ட நீடித்தப் போராட்டங்களின் வாயிலாக, தவறான சித்தாந்தங்களையுடைய, ஆனால் திருத்தப்படக்கூடிய தோழர்களுக்கு கல்வி புகட்டி, விமர்சன உதவி அளித்து, உறுதிப்பாடும் சீர்திருத்தமும் அடையும்படிச் செய்ய முயல்வோம். கோட்பாடு சம்பந்தமான பல்வேறு பிரச்னைகளுக்கு

பல்வேறு கட்டங்களில் அத்தியாவசியமாகவுள்ள சித்தாந்தப் போராட்டங்களை, ஸ்தூலமான, பொருத்தமான முறையில் நடத்துவோம். ஆனால், தன்னெண்ண ரீதியிலும் யாந்திரீகமாகவும், வெறிபிடித்தவனைப் போன்று நாம், உட்கட்சிப் போராட்டத்தைப் பொறுப்பற்ற முறையில் நடத்த மாட்டோம். எடுத்ததற்கெல்லாம் போராட்டம் வேண்டும் என்று கூறிப்போராட்டத்தை பூஜிக்கும் போக்கும் நமக்கில்லை.

5) உட்கட்சிப் போராட்டத்தின் மூலம் நாம் கட்சியை பலப்படுத்துகிறோம்; கட்சிக் கட்டுப்பாட்டையும், கௌரவத்தையும் உயர்த்துகிறோம்; திருத்த முடியாத நபர்களுக்கு ஸ்தாபன ரீதியான தண்டனை அளிக்கிறோம் அல்லது அத்தகையவர்களை கட்சியின் உறுதிப்பாட்டையும், நன்மையையும் கருதி கட்சியை விட்டு வெளியேற்றவும் கூட செய்கிறோம். இதுவே, சிறந்த முதிர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய சரியான போக்காகும்.

மேலே கூறப்பட்ட ஐந்து வகைப் போக்குகளில் கடைசி வகைப் போக்கே பிசகற்ற, போல்ஷ்விக் போக்காகும். முதல் இரண்டு போக்குகளும் தவறானவை என்பது வெளிப்படை. நமது கட்சியை பலவீனப்படுத்துவதற்காக, நமது சகல தவறுகளையும், குறைபாடுகளையும் எதிரிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதில் விசித்திரம் ஒன்றுமில்லை. நாம் நமது உஷார்த் தன்மையை இடையறாது கூர்மைப் படுத்திக் கொள்ள வேண்டும். அதோடு, நமது கட்சிக்குள் தவறுகளும், குறைபாடுகளும் ஏற்படும் போது, எதிரிகள் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படாமல் தடுக்க வேண்டும். நமது கட்சியை நேசிக்கும் ஒவ்வொரு கட்சித் தோழரின் தவிர்க்க முடியாத கடமை இது. உட்கட்சிப் போராட்டத்தின் போது, இந்த அம்சத்தை எந்த கட்சி உறுப்பினரேனும் புறக்கணித்தால், உடனடியான போராட்டத்தில் வெற்றியடைவதிலும், தனது சொந்த நொடிப் பொழுது மகிழ்ச்சியிலும் மட்டுமே அவர் அவர் அக்கறை கொண்டிருந்தால், கேடுவிளைவிக்கும் நபர்கள அளிக்கும் உதவியை அவர் நிராகரிக்காமல் அவர்களுடன சேர்ந்து கொண்டால், உட்கட்சிப் போராட்டத்தில ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை அடையும் பொருட்டு அவர் கட்சிக்கு வெளியேயுள்ள சில சகதிகளையும், உதவியையும் பயன்படுத்திக் கொண்டால்—அவர் மன்னிக்க முடியாத ஒரு அரசியல் குற்றமிழைத்தவராவார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய கடும் குற்றமும் புரிந்தவராவார்.



நமது கட்சி உறுப்பினர்கள் பிசகற்ற சித்தாந்தத்தைப் பிரதிபலிக்க வேண்டும். கட்சிக்குள்ளிருக்கும் தவறான சித்தாந்தங்கள் கெட்ட உதாரணங்களை விடுத்து நல்ல உதாரணங்களினின்று பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். தவறான சித்தாந்தங்களையும், தீய உதாரணங்களையும் எதிர்த்துப் போராட வேண்டும். ஆயினும கட்சியில் சில தோழர்கள், பிசகற்ற சித்தாந்தங்களைப் பிரதிபலித்து,நல்ல உதாரணங்களைப் பின்பற்றிய போதிலும், அவர்கள் சில சமயங்களில் குறைந்த அளவுக்கோ, அதிக அளவுக்கோ குறிப்பிட்ட சில தவறான சித்தாந்தங்களைப் பிரதிபலிக்கின்றனர் சில கெட்ட, உதாரணங்களையும் பின்பற்றுகின்றனர். சில தோழர்களுக்கு, கெட்ட விஷயங்களைப் படித்துக் கொள்வது சுலபமாயும் நல்ல விஷயங்களைப் படித்துக் கொள்வது கடினமாயும் உள்ளது போல் தோன்றுகிறது. இதைப்பற்றி தீவிர கவனம் செலுத்த வேண்டியது மெத்த அவசியம்.

இந்தத் தோழர்கள், கட்சிக்குள் சில தவறுகள் ஏற்படும் போது, தெரிந்தோ தெரியாமலோ, அத்தவறுகளை வளர்க்கவோ மிகைப்படுத்தவோ கூடும். உட்கட்சிப் போராட்டத்தின் போது அவர்கள் அனேகமாக தவறான தரப்பில் சேர்ந்து விடுகின்றனர், அல்லது சில காரணங்களுக்காக வெற்றியடையும் தரப்பில் சேர்ந்து கொள்ளுகின்றனர். தீவிரமாக அவர்களுக்குத் தார் போட்டு, எஃகு போன்ற உறுதிப்பாடு அடையும்படிச் செய்தாலன்றி, இத்தோழர்கள் கொஞ்சமும் முன்னேற மாட்டார்கள்.

பல்வேறு தவறுகள், குறைபாடுகள், விரும்பத்தகாத விஷயங்கள் சம்பந்தமாக ஒரு மிதவாத, அதிகார வர்க்கப் போக்கைக் கடைப்பிடிக்கும் மூன்றும் வகைத் தோழர்களின் போக்கு மிகவும் தவறானது, சிறிதும் போல்ஷ்விக் தன்மையற்றது என்பது மார்க்சிசம்—லெனினிசப் பள்ளியின் மாணுக்கர்களான உங்களுக்கு, தெளிவாக விளங்கும் என்று நான் கருதுகிறேன் ஏனெனில், நீங்கள் பயின்றுள்ள "கட்சி நிர்மாணம்" என்றபுத்தகத்தில் கட்சிக்குள் சுயகுணதோஷ விமர்சனத்திற்கும், சித்தாந்தப் போராட்டத்திற்குமுள்ள அவசியம் பற்றி ஒரு அத்தியாயம் முழுதும் விளக்கப்பட்டுள்ளது. லெனினும் ஸ்டாலினும் இதே விஷயத்தைப் பற்றி, தெளிவான, ஆழ்ந்த விளக்கங்கள் தந்துள்ளனர். இவற்றை நீங்கள் படிப்பது நலலது. இதே பிரச்சனையைப் பற்றி, வெகு விரிவாக, சீனத்துப் பிரசுராலயத்தார் வெளியிட்டுள்ள "அரசியல் கட்சிகள் பற்றி" என்ற புத்தகத்திலும் விளக்கப்பட்டுள்ளது. எனவே, தற்பொழுது நான் இவ்விபரங்களை எடுத்

துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை, ஆயினும், இம்மூன்றும் வகைப் போக்கைப் பின்பற்றக்கூடிய தோழர்களுக்கு, நமது கட்சியில் பஞ்சமில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தோழர்கள், சுயகுணதோஷ விமர்சனத்திலும், குறிப்பாக மேலேயுள்ளவர்களைப் பற்றி கீழேயிருந்து வரக்கூடிய விமர்சனங்களிலும் கட்சிக்குள்ளிருக்கும் பல்வேறு தவறுகள், குறைபாடுகள் விரும்பத்தகாத விஷயங்களை பொறுப்பான, முறையான, மனத்தூய்மையுடன் கூடிய முறையில் அம்பலப்படுத்தி, அவற்றை அகற்றுவதிலும் பெருமளவுக்குப் போதிய கவனம் செலுத்துவதில்லை இத்துறையில் நாம், இன்னமும் வெகுவாக முன்னேற வேண்டியிருக்கிறது. ஆனால் கட்சியிலுள்ள சில பல நபர்களைப் பற்றியும், பொறுப்பற்ற, முறைகெட்ட, கோழைத்தனமான குற்ற விமர்சனங்களும், அதிருப்தியும் புறங்கூறலும் வெட்டிப் பேச்சுகளும் மிகவும் நிரம்ப இருக்கிறது என்பதில் ஐயமில்லை. இவையும் கூட கட்சிக்குள்ளிருக்கும் மிதவாதத் தன்மையின் பிரதிபலிப்புகளாகும். சில தோழர்களுக்கு புரட்சிகரப் போராட்டத்தில் அரசியல் வளர்ச்சியும், தைரியமும் போதுமான அளவுக்கு இல்லை என்பதையும், உட்கட்சி ஜனநாயகம் பற்றிய பிசகற்ற நடைமுறையும் பற்றாக்குறையாகவுள்ளது என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

சில தோழர்கள், தவறான "கௌரவத்தை"க் கைவிட அஞ்சுகின்றனர். மற்றவர்களுக்கு மனத்தாங்கல் ஏற்படக்கூடாது என்றும், அவர்களுடைய கோபத்தையோ அல்லது எதிர்த்தாக்குதலையோ தருவித்துக் கொள்ளக் கூடாது என்றும் பயப்படுகின்றனர். கட்சிக்குள்ளிருக்கும் பல்வேறு தவறுகளை எதிர்த்துப் போராடுவதை விட அவற்றை அப்படியே விட்டு வைத்துவிட்டு "சகதியில் உழலும்" போக்கை, "இந்தத தொந்திரவே நமக்கு வேண்டாம்" என்ற பொறுப்பற்றப் போக்கைக் கடைப்பிடிக்கவே அவர்கள் தயாராயிருப்பர். இப்படியிருந்தும் அவர்கள் முதுகுக்குப்பின்னால் மற்றவர்களைப் பற்றி குற்ற விமர்சனம் செய்யத்தவற மாட்டார்கள். இதுகட்சிக்கு நன்மையல்ல, தீமையே விளைவிக்கும். இதுபோன்ற பொறுப்பற்ற குற்ற விமர்சனங்களும், பேச்சுகளும் கட்சிக்குள் கோட்பாடற்ற தகராறுகளுக்கும் பிளவுகளுக்குமே கொண்டுபோய் விடும். இது, கட்சிக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் உளவாளிகளும், துரோகிகளும், தமது சீர்குலைவு வேலைகளை நடத்துவதற்கு வாய்ப்பளிக்கக் கூடும். மேலும் இது போன்ற பொறுப்பற்ற குற்ற விமர்சனங்களின் மூலம், கட்சியிலுள்ள தவறு



களையும், குறைபாடுகளையும் என்றுமே திருத்த முடியாது. எனவே தான், சீனக்கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மத்தியக் கமிட்டியின் 6வது பிளீனம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கட்சி விதிகள், இத்தகைய பொறுப்பற்ற குற்ற விமர்சனத்தையும் வெட்டிப் பேச்சுக்களையும் தடைசெய்து, கட்சிக்கு நன்மை பயக்கக்கூடிய பொறுப்பான, முறையான, உட்கட்சி சுயகுணதோஷ விமர்சனத்திற்கு ஆக்கம் தந்துள்ளன.

கட்சிக்குள் பல்வேறு தவறுகள், குறைபாடுகள், தொழிலாளி வர்க்கத்திற்குப் புறம்பாயுள்ள தவறான சித்தாந்தங்கள் இருந்து வருவதால், இத்தவறான சித்தாந்தங்கள் ஒவ்வொன்றும் சில சமயங்களில் கட்சிக்குள் ஒரு குறிப்பிட்ட போக்காக வளரக் கூடும். இதனால் சில கோட்பாடுகள் சம்பந்தமாக கட்சிக்குள் அபிப்பிராய வித்தியாசங்கள் ஏற்பட்டு, காரியாம்சத்தில் கட்சியின் ஒற்றுமை பாதிக்கப்படும். அத்தகைய நிலைமைகளில் நாம் கட்சிக்குள் பிசகற்ற முறையில் சுயகுணதோஷ விமர்சனம் செய்யாமல் பல்வேறு தவறுகளையும் குறைபாடுகளையும் இடைவிடாது எதிர்த்துப் போராடி அவற்றைத் திருத்தாமல் சகல தவறான சித்தாந்தங்களையும் அப்புறப்படுத்தாமல், உட்கட்சி வித்தியாசங்களைத் தீர்த்துக் கொள்ள உட்கட்சிப் போராட்டம் நடத்தாமல், அதற்குப் பதில் கெட்ட அம்சங்களிலும் நல்லவை இருப்பதாகத் தவறான முறையில் ஆராய்ச்சி செய்யும் ஒரு போக்கை, ஒரு "நடுவழிப்" போக்கைக் கடைப்பிடித்து சகதியில் உழல முயன்றால், அப்போது, "நம்மால் கட்சிக்கும், தொழிலாளி வர்க்கத்திற்கும் வெகுஜனங்களுக்கும் பிசகற்ற முறையில் கல்வி புகட்ட முடியாது." (ஸ்டாலின்) "நம்மால் முன்னேறவோ, வளரவோ முடியாது"; நாம் தொழிலாளி வர்க்கப் புரட்சிவாதிகளாக இருக்க முடியாது; நாம் தோல்வியுறுவது நிச்சயம்" (லெனின்),

ஸ்டாலின் கூறுகிறார்:

**"கோட்பாடு சம்பந்தமான பிரச்சினைகளில் "நடு வழி" என்பது மூளையைக் குழப்பும் "வழி" வேறுபாடுகளை மூடிமறைக்கும் "வழி", கட்சியின் சித்தாந்த ரீதியான சீரழிவின் "வழி", கட்சியின் சித்தாந்த ரீதியான மரணத்தின் "வழி."**

**"கோட்பாடு சம்பந்தமான பிரச்னைகளில் "நடுவழி" என்பது நம்மது கொள்கையல்ல. இந்தக் கொள்கை நாளுக்கு நாள் நலிந்து சீரழிந்து வருகின்ற ஒருகட்சியின் கொள்கை**

யாகும். இத்தகைய கொள்கையினால் அக்கட்சி உழைப்பாளி வெகுஜனங்களிடமிருந்து துண்டிக்கப்பட்டு, பயனற்ற முறையில் இயங்கும் ஒரு ஜீவனற்ற அதிகார வர்க்கக் கருவியாக சிறுமைப்படுவது திண்ணம்; இது நமது பாதையல்ல.

''எனவே... கட்சிக்குள்ளிருக்கும் முரண்பாடுகளை போராட்டத்தின் மூலம் தீர்த்துக் கொள்வது நமது கட்சியின் வளர்ச்சி விதியாகும்... அகில சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, கட்சிக்குள்ளிருந்த முரண்பாடுகளைத் தீர்த்துக் கொண்டதன் மூலம் தான் வளர்ந்து பலமும் பெற்றது.''

எனவே, மிதவாதப் போக்கையும் அதிகார வர்க்கப் போக்கையும் கடைப்பிடிப்பது தவறு. கட்சியைப் பலப்படுத்தி வளர்த்து, முன்னேற்ற வேண்டுமானால், சுயகுணதோஷ விமர்சனத்தை மேற்கொண்டு, சகல விரும்பத்தகாத அம்சங்களையும் எதிர்த்துப் போராடி கட்சியிலுள்ள வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்; இதற்காக உட்கட்சிப் போராட்டம் நடத்த வேண்டும்.

மற்றொரு உருவிலும் மிதவாதப்போக்கு பிரதிபலிக்கிறது. அதாவது கட்சிக்குள் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் தகராறு எழும்பொழுது, பல தோழர்கள் தமது மாமூலான வேலையை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, இரவும் பகலும் நாட்கணக்கில் பயனற்ற விவாதங்களில் மூழ்கி விடுகின்றனர்; கட்சியிலுள்ள சகலவற்றையும் வேண்டுமென்றே கண்டிக்க முற்படுகின்றனர்; இந்தகைய சர்ச்சைகளின் போது, கட்சி ஒற்றுமையை பலவீனப்படுத்துகின்றனர்; ஊழியர்களின் தோழமை உணர்வை சிரழிக்கின்றனர்; கடசிக் கட்டுப்பாட்டைக் குலைக்கின்றனர்; கட்சித் தலைமையை முடமாக்குகின்றனர்; கட்சியின் கௌரவத்தை அழிக்கின்றனர்; போர்க்குணமிக்க கட்சி ஸ்தாபனங்களையும், கட்சி யந்திரத்தையு[illegible] சொறபோர் கழகங்களாக மாற்றுகின்றனர். இத்தகைய சம்ப[illegible] கடந்த காலத்தில் நமது கட்சி ஸ்தாபனங்கள் பல[illegible]ற்றில் ந[illegible]துள்ளன. ஸ்டாலின் கூறுவது போல், இது ''சுயகுண தோஷ விமர்சனமல்ல; வெறும் கேலிக்கூத்து.'' ''இது தொழிலாளி வர்க்கத்தை அவதூறு செய்வதேயாகும்'' இது, அன்னியப்போக்கு. போல்ஷ்விக் **'சுயகுணதோஷ விமர்சன'**மல்ல. நாம் கோரும் சுயகுணதோஷ விமர்சனத்திற்கும் இதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. நாம், சுயகுணதோஷ விமர்சனத்தை மேற்கொள்வது, கட்சியின் கௌரவத்தை உயர்த்தவும், கட்சிக் கட்டுப்பாட்டையும், கட்சித் தலைமையை பலப்படுத்துவதுமேயன்றி, கட்சி கௌரவத்தைக் குலைக்கவும், கட்சி கட்டுப்பாட்டையும், தலைமையையும் பலவீனப்படுத்துவதற்கல்ல.



இடம், பொருள், ஏவல் என்றில்லாத போக்கைக் கடைப்பிடிக்கும் நான்காவது வகைத் தோழர்களின் போக்கும் தவறானதே. மேலே கூறிய மூன்றாவது போக்கான மிதவாதப் போக்கிற்கு நேர் எதிரான மற்றொரு தவறான போக்கிது. இப்போக்கைக் கடைப்பிடிப்போர், கட்சியிலுள்ள தவறான சித்தாந்தங்களுக்கு ஆழமான சமூக மூலாதாரங்கள் உண்டு என்பதையும், அவற்றை ஒரே மூச்சில் கெல்லியெறியமுடியாது என்பதையும் புரிந்து கொள்வதில்லை. விஷயங்களையும் நிலைமைகளையும் பரிசீலிப்பதில் பரிசுத்தம், உறுதிப்பாடு, பிசகின்மை, ஆழ்ந்த கருத்துச் செழுமை ஆகிய இவையனைத்தும் ஒருங்கே திரண்டு உருப்பெற்றது போல் விளங்க மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியவர்கள் மட்டுமே, இத்தகைய தவறான சித்தாந்தங்களினின்று முற்றிலும் விடுபட்டிருக்க முடியும். எனவேதான், டாக்டர் ஸன்யாட்-சென், ''புரட்சியின் மேதை'' என்று லெனினை அழைத்தார். நாம் ஒவ்வொரு வரும் நமது வேலையில் சிலபல தவறுகளைச் செய்வது தவிர்க்க முடியாதது. நாம் சகிப்புத் தன்மையும், விட்டுக் கொடுக்கும் தயாள குணமுமின்றி, ஏதோ ஒரு அளவுக்கு தொழிலாளி வர்க்கத்துக்குப் புறம்பான சமூக சித்தாந்தங்களையுடைய தோழர்களை, ஒரு சில தவறுகளைச் செய்யும், ஆனால் திருந்தக்கூடிய தோழர்களை அடியோடு நிராகரிக்கவோ அல்லது அடியோடு ஒழித்துக் கட்டவோ முற்பட்டால், பிறகு நாம், நமது கட்சியைக் கட்டமுடியாது இவ்வாறு தோழர்களை அடியோடு நிராகரிப்பதும், ஒழித்துக் கட்டுவதும் இறுதியில் எங்கு கொண்டு போய் விடும்? இந்த நிராகரிக்கும், ஒழித்துக் கட்டும் போக்கைக் கடைப்பிடிக்கும் அதே தோழர்கள் கட்சியை விட்டு இறுதியில் ஒழித்துக் கட்டப்படுவதிலேயே கொண்டுபோய் விடும். ஏனெனில், அவர்கள் ''புரட்சியின் மேதைகள்'' அல்ல; மேலும் தவறுகளுக்கு அப்பாற்பட்டவர்களுமல்ல. உதாரணமாக, கடந்த காலத்தில், பிற்போக்குப் பிண்டங்களுக்கு எதிரான இயக்கம் நடந்தபோது, சில தோழர்கள் இடம், பொருள், ஏவலற்ற இதே தவறான போக்கைக் கடைப்பிடித்தனர். இந்தப் போக்கைப் பின்பற்றும் தோழர்கள், கம்யூனிஸ லட்சியத்திற்கான போராட்டத்தின் ஓட்டத்திலே நம்மை எதிர்நோக்கும் மிகப்பெரிய, மிகக் கடினமான கடமை, மனிதகுலம் முழுமையை

யும் கம்யூனிஸ்ட் சமுதாயத்தின் தன்னலமற்றப் பிரஜைகளாக மாற்ற வேண்டியது தான் என்பதைக் குறிப்பாக அறிந்து கொள்வதில்லை. இந்த அம்சத்தை அவர்கள் புரிந்து கொள்வார்களேயானால், மனித குலம் முழுமைக்கும் கூட, அதற்குள்ள அத்தனை பலவீனங்களுக்குமிடையில், நீண்ட நீடித்தப் போராட்டத்தின் ஓட்டத்தில் எஃகு போன்ற உறுதிப்பாடும், புத்தறிவும் புகட்டி மிகவும் உயர்ந்த நாகரீகப் பண்புடைய கம்யூனிஸ்டுகளாக மாற்ற முடியும் என்றால், ஏன் அவர்கள் நமது கட்சியில் சேர்ந்துள்ள கட்சித் தோழர்களுக்கு, ஏதோ ஓரளவுக்கு பழைய சமுதாய சித்தாந்தத்தின் மிச்ச சொச்சங்களையுடைய அத்தோழர்களுக்கு, புத்தறிவு புகட்டி அவர்களை சீர் திருத்தக் கூடாது?

இந்தத் தோழர்களுக்கு, புத்தறிவு புகட்டி, அவர்களை சீர் திருத்துவதற்கு நீண்ட நாட்களுக்கு மிகவும் நிதானமான பிரயாசையுடன் கல்வியூட்ட வேண்டியதும், அப்போராட்டங்களில் முறுக்கேறும்படிச் செய்ய வேண்டியதும் அவசியமாகும். இது ஒரு கடினமான வேலை எனபது உண்மை ஆயினும், இந்த சிறிய கஷ்டத்தை மேற்கொள்ள நாம் தயங்கினால், உலகத்தையும் மனித குலத்தையும் மாற்றப் போவதாக நாம் பேசுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? உலகையும், மனித குலத்தையும் மாற்றுவது என்ற மிகப் பிரம்மாண்டமான கடும்பணியைக் கூட தைரியமாக மேற்கொள்வதென்று, அதைக் கண்டு ஓடுவதில்லை என்று உறுதி கொண்டுள்ள நமக்கு, உலகத்தில் வேறு எந்தப் பணிதான் பயங்கரமானது? வாழ்க்கையைப் பற்றிய கம்யூனிஸ்ட் உலக தாத்பரிய சாஸ்திரத்திலும், கம்யூனிஸ்ட் உலகக் கண்ணோட்டத்திலும் நம்பிக்கை கொண்டுள்ள கட்சி உறுப்பினர்கள், எந்த துன்ப துயரங்களுக்கும் கஷ்டங்களுக்கும் அஞ்சுவதில்லை. அதே சமயத்தில், உலக நிகழ்ச்சிகளின் முன்னேற்றப் பாதை மிகவும், கடினமான கோணல் மாணலான, கரடுமுரடான பாதை என்பதை அவர்கள் அறிவார்கள் இடம், பொருள், ஏவலற்ற போக்கைக் கடைப்பிடிக்கும் தோழர்கள், கம்யூனிஸ்ட் லட்சியப் பாதையின் கடுமையான, கரடு முரடான தன்மையை இன்னமும் புரிந்து கொள்ளவில்லை என்று தான் கூறவேண்டும். சகல விரும்பத்தகாத அம்சங்களையும் ஒரே மூச்சில் ஒழித்துக் கட்டிவிட்டு உடனடியாக தமது கற்பனை உலகிற்கு ஒரே பாய்ச்சலாகத் தாவும் பொருட்டு அவர்கள் தம்முன்னுள்ள கஷ்டங்களைக் கண்டு பயந்து, கோணல் மாணலில்லாத நேர்ப் பாதையில் பிரயாணம் செய்ய விரும்பினால், நிச்சயம் சுவரில் தான் போய் முட்டிக்



கொள்வார்கள். அவ்வாறு மண்டை உடைபட்ட பிறகு, சோர்வும் அவநம்பிக்கையும் அடைவர்; கம்யூனிஸ்ட் லட்சியத்தின் வருங்காலத்தில் நம்பிக்கையிழப்பர். இவ்வாறு, தொழிலாளி வர்க்க சித்தாந்தத்திற்குப் புறம்பாகத் தம்மிடமேயுள்ள சித்தாந்தத்தின் உண்மை சொரூபத்தை வெளிப்படுத்திக்கொள்வர்; கிட்டத்தட்ட இத்தகைய போக்கை கடைப்பிடிக்கும் தோழர்களுக்கு இன்னமும் நமது கட்சியில் பஞ்சமில்லை. இந்நிலைமை மிகவும் பரிதாபமாகரமானதே!

கட்சியின் வளர்ச்சியின் போதும், தொழிலாளி வர்க்கத்தின் போராட்டத்தின் போதும், கட்சிக்குள் கோட்பாடுகள் சம்பந்தமான வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இந்தக் காரணத்தினால் தான் உட்கட்சிப் போராட்டம் தேவைப்படுகிறது. இவ்வாறு வேறுபாடுகள் எழும் சமயங்களில், அவ்வேறுபாடுகளை அகற்றி முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதென்பது, ''ஒன்று அல்லது மற்றொரு கோட்பாட்டிற்காக, ஒன்று அல்லது மற்றொரு குறிக்கோளுக்காக அந்தக் குறிக்கோளுக்கு அழைத்துச் செல்லும் ஒன்று அல்லது மற்றொரு போராட்ட முறைக்காகப்போராடுவதன் மூலம் தான்'' சாத்தியம். எந்த சமரசமும் பயன் தராது. நாம் போராடவோ, வாதப் பிரதிவாதங்கள் நடத்தவோ விரும்புவதின் காரணமாக அல்ல உட்கட்சிப் போராட்டம் தேவை என்கிறோம். அதாவது பிரச்னைகள் கோட்பாட்டின் நிலைக்கு வளர்ந்து விட்ட பிறகு, அப்பிரச்னைகளை போராட்டத்தினாலேயன்றி, வேறு எவ்வழியிலும் தீர்க்க முடியாத நிலையில், நாம் தங்கு தடையின்றி, உட்கட்சிப் போராட்டத்தை நடத்த வேண்டும். அப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக இப்போராட்டத்தை நடத்த வேண்டும். இதற்கு அர்த்தம் நடப்புக் கொள்கைகள், வெறும் நடைமுறைப் பிரச்சனைகள் ஆகியவை சம்பந்தமாகவுள்ள சகல மாறுபட்ட கருத்துக்களுக்கும் எதிராக நாம், ஏக ஆர்ப்பாட்டத்துடனும், விட்டுக் கொடுக்காத முறையிலும், கடுமையாக முகத்தைச் சுளித்துக் கொண்டும், உட்கட்சிப் போராட்டம் நடத்த வேண்டும் என்பதல்ல.

தோழர் ஸ்டாலின் கூறினார்:—

**''நடப்புக் கொள்கை சம்பந்தமான பிரச்சினைகளிலும், முற்றிலும் நடைமுறைத் தன்மையுடைய பிரச்சனைகளிலும், கட்சிக்குள்ளிருக்கும் மாறுபட்ட அபிப்ராயமுடையவர்களிடம் நாம் சகலவிதமான உடன்படிக்கைகளையும் செய்து கொள்ள முடியும், செய்து கொள்ளவும் வேண்டும்'**

சந்தர்ப்பவாத சித்தாந்தம் தலையெடுக்கும் போது, கட்சிக்குள் கோட்பாடு விஷயத்தில் வேறுபாடுகள் எழும்போது, இந்தத் தவறான சித்தாந்தங்களையும், சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்து முறியடிப்பதற்காகப் போராட்டம் நடத்த வேண்டும். கோட்பாட்டில் வித்தியாசமில்லாத போது, சில வெறும் நடைமுறைப் பிரச்சினைகள் சம்பந்தமாக தோழர்கள் மத்தியில் எழும் வேறுபாடுகளை நாம், தன்னோக்குப் பார்வையுடன் ''கோட்பாட்டில் வேறுபாடு'' என்று எடுத்துக் கொண்டு, வேண்டுமென்றே, சிலதோழர்களை ''சந்தர்ப்பவாதிகள்'' என்று ''வேட்டை''யாடவும், அவர்களை உட்கட்சிப் போராட்டத்தில் ''இலக்கு''களாகவும் பாவிக்கவேண்டுமென்பதல்ல இதற்கு அர்த்தம். இத்தகைய ''இலக்கு''களுக்கு எதிராக குண்டு மழை பொழிவதைத் தீவிரப்படுத்துவதினாலே, கட்சியின் வேலை, கட்சியின் வளர்ச்சி, தொழிலாளி வர்க்கபுரட்சிகரப் போராட்டத்தின் வெற்றி ஆகிய இவையனைத்தும் அற்புதமான முறையில் முன்னேறிவிடும் என்றுநாம் கருதுகிறோம் என்பதுமல்ல இதற்கு அர்த்தம். இவ்வாறு செய்தால் அது, உண்மையிலே உட்கட்சிப் போராட்டத்தை நடத்துவதாகாது. அதற்கு மாறாக கட்சியை கேலிக்கூத்தாக்குவதாகும்; மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்சிப் போராட்டத்தை வெறும் சிறுபிள்ளை விளையாட்டாக பாவிப்பதாகும்.

கோட்பாடு சம்பந்தமான தவறுகள்செய்தபிறகும், சந்தர்ப்பவாத சித்தாந்தத்தை வெளிப்படுத்திய பிறகும், கட்சியிலுள்ள சில தோழர்கள், இதமான வேண்டுகோள்களையும் கட்சியின் குணதோஷ விமர்சனத்தையும் கேட்க மறுக்கின்றனர். மேலும் அவர்கள், தமது தவறுகளை விடாப்பிடியாகத் தொடர்ந்து நடத்துகின்றனர். கட்சியின் கொள்கைக்கு எதிராகப் போராடும் அளவுக்கும், கட்சி சம்பந்தமாக இருமுகப் போக்கைக் கடைப்பிடிக்கும் அளவுக்கும் மண்டைக்கனமும், பிடிவாதமும் காட்டுகின்றனர். இத்தகையவர்களைக் குத்திக்காட்ட வேண்டியதும், பகிரங்கமாக குற்ற விமர்சனம் செய்ய வேண்டியதும்,—ஏன்—ஸ்தாபன ரீதியான தண்டனைகள் விதிக்க வேண்டியதும் கூட அவசியமாகும். ஆனால், தவறு செய்த பிறகு, தமது தவறுகளை மேற்கொண்டும் விடாப்பிடியாக நீடிக்காமலிருக்கும் தோழர்களை, விவாதத்திற்கும், இதமான யோசனைகளுக்கும் பிறகு அத்தவறுகளைத் திருத்திக் கொண்டு, தமது பழம் கருத்துகளைக் கைவிடத் தயாராயுள்ள தோழர்களை, அல்லது தமது தவறுகளைப் பற்றி ஜரூராக சிந்தனை செய்து கொண்டோ மற்ற தோழர்களுடன் விருப்பு வெறுப்பின்றி



விவாதித்துக் கொண்டோ இருக்கும் தோழர்களை, நாம் தாக்குவதோ, தண்டிப்பதோ கூடாது. சுயகுணதோஷ விமர்சனமும், உட்கட்சிப் போராட்டமும் நடத்தும் போது எவ்வளவு கடுமையாக முகத்தை வைத்துக் கொள்கிறோமோ அவ்வளவுக்கும் நல்லது என்றோ, எவ்வளவு அதிகமான தோழர்களை தண்டிக்கிறோமோ அவ்வளவுக்கும் நல்லது என்றோ நாம் கருதவில்லை. கட்சிக்கும், தவறுகள் செய்த தோழர்களுக்கும் பயன்தரத்தக்க முறையில் கல்வியளிப்பதும் தவறுகளைத் திருத்தி கட்சியை பலப்படுத்துவதுமே சுயகுணதோஷ விமர்சனம், உட்கட்சிப் போராட்டம் ஆகியவற்றின் மிக உயர்ந்த குறிக்கோளாகும். இந்நோக்கத்தை தோழர்களை தாக்குவதற்குப் பதில் சமாதானமான விவாதம், இதமான யோசனைகள், குணதோஷ விமர்சனம் ஆகியவற்றினால் ஈடேற்றுவது சாத்தியமென்றால், அது மிகவும் விரும்பத்தக்கதே. ஆயினும் கோட்பாடுகள் சம்பந்தமான வேறுபாடுகள் இல்லாமையினால் ஏற்படும் உட்கட்சி சமாதானமும், உட்கட்சி சகோதரத்துவ ஒற்றுமையும் விரும்பத்தக்கதும் அவசியமானதாகும் என்று கடந்த காலத்தில் சில கட்டங்களில் பகிரங்கமாக அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதே கிடையாது எனலாம். வெறிபிடித்தவர்களைப் போல் தோன்றும் சிலருடைய கருத்துப்படி, கோட்பாட்டிலும், கொள்கையிலும் ஒற்றுமை ஏற்படுவதின் காரணமாய் உண்டாகும் உட்கட்சி சமாதானம் கூட விரும்பத்தக்கதல்லவாம்! ஒன்றுமில்லாத விஷயத்திற்கும் வேண்டுமென்றே உட்கட்சிப் போராட்டத்தை சிருஷ்டித்தால் தான் நாம் ''போல்ஷிவிக்குகள்'' ஆவோமாம்! இத்தகையவர்கள் உண்மையில் ''போல்ஷிவிக்குகள்'' அல்ல; ''போல்ஷிவிக்'' என்ற புனிதப் பெயரை துஷ்பிரயோகம் செய்யும், அனேகமாகத் திருத்த முடியாத பதவி வேட்டைக்காரர்களே இவர்கள்.

இந்தக் காரணங்களால்தான், மேலே கூறிய நான்கு போக்குகளும் தவறானவை. கட்சிக்குள்ளிருக்கும் தவறுகள், குறைபாடுகள், விரும்பத்தகாத அம்சங்களைக் குறித்து நாம் கடைபிடிக்க வேண்டிய சரியானபோக்கு என்ன என்பதற்கும் இதுதான் விடை. உண்மையில் கட்சிக்குள்ளும் வெளியேயுமுள்ள கெட்ட அம்சங்களை எதிர்த்துப் போராடுவதின் மூலமே, உலகையும், மனித குலத்தையும், ஏன் நமது கட்சியையும் நம்மையும் நாம் திருத்த முற்படுகிறோம். உட்கட்சிப் போராட்டமென்பது, கட்சிக்கு வெளியே நடக்கும் வர்க்கப் போராட்டத்தின் பிரதிபலிப்பே. கட்சிக்கு வெளியே நடக்கும் வர்க்கப் போராட்டத்தின் போது — அதாவது புரட்சிகர வெகுஜனப் 'போராட்டத்தின் போது, கட்சி

எஃகு போன்ற உறுதியும், வளர்ச்சியும் பெற்று தன்னை பலப்படுத்திக் கொள்கிறது. அதே சமயத்தில், உட்கட்சிப் போராட்டத்தின் போது நமது கட்சி, ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பெறுகிறது. இவ்வாறு புரட்சிகர வெகுஜனப் போராட்டத்திற்கு, திட்டமிட்ட ரீதியிலும், பிசகற்ற முறையிலும், பயன் தரத்தக்க வகையிலும் தலைமை தாங்கும் சக்தியைப் பெறுகிறது.

எனவே, கட்சியிலுள்ள பல்வேறு தவறுகள், குறைபாடுகள், விரும்பத்தகாத அம்சங்கள் சம்பந்தமாக மிதவாத போக்கைக் கடைப்பிடிப்பது, கட்சிக்குள் கோட்பாடுகள் சம்பந்தமாகவுள்ள வேறுபாடுகளை மறுக்க முயலுவது, உட்கட்சிப் போராட்டத்தை விட்டுத் தப்பி ஓடப் பார்ப்பது, உட்கட்சி முரண்பாடுகளை பூசி மெழுகுவது, ''சகதியில் குட்டைக் குழப்பிக் கொண்டிருப்பது'' ஆகிய இவையனைத்தும் முற்றிலும் தவறு மட்டுமல்ல; எதிரிக்கு சாதகமானதும் கூட. ஏனெனில் இது வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி விதிகளுக்கும், போராட்டத்தின் மூலம் உலகையும், மனித குலத்தையும் மாற்றுவது என்ற நமது அடிப்படையான கண்ணோட்டத்திற்கும் எதிரானது.

எனவே, கட்சிக்கு வெளியே நடக்கும் வர்க்கப் போராட்டத்தினின்று— அதாவது பரந்த வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்டத்தினின்று, உட்கட்சிப் போராட்டத்தைத் தனித்துப் பிரித்து, அதை வெறும் வெட்டிப் பேச்சாக மாற்றுவதும் கூட தவறானதாகும். ஏனெனில் பரந்த வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்டத்தினின்று பிரிந்து நிற்பதின் மூலம் கட்சி எஃகு போன்ற உறுதியும் வளர்ச்சியும் பெற்று தன்னை பலப்படுத்திக் கொள்ள முடியாது.

ஆயினும் நாம், ஒரேயடியாக மற்றொரு கோடிக்குப் பாய்ந்துவிடக்கூடாது. அதாவது அனேகமாக திருத்தப்படக்கூடிய தோழர்களிடமுள்ள தவறுகள், குறைபாடுகள் சம்பந்தமாக இடம், பொருள், ஏவலற்றப் போக்கைக் கடைப்பிடிப்பதும், யாந்திரீகமாகவும்- ஏன்-தன்னோக்கு முறையிலும்கூட உட்கட்சிப் போராட்டத்தை சிருஷ்டிப்பதும் முறையற்றதாகும்; ஏனெனில் இது கட்சியை பலவீனப்படுத்தும்; கட்சியைத் தாக்க எதிரிக்கு சந்தர்ப்பமளிக்கும்; கட்சியின் வளர்ச்சி விதிகளுக்கு எதிரானதுமாகும். நாணயமான கட்சித் தோழர்கள் சிலதவறுகளை செய்தவுடனேயே அவர்களிடமிருந்து நாம் கத்தரித்துக் கொள்ளக் கூடாது. அதற்குப் பதில், அன்புடன், அனுதாபத்துடன் அவர்களுக்கு நல்ல



யோசனை கூறி புத்தறிவு புகட்டி, எஃகு போன்ற உறுதிப்பாடு அடையும்படிச் செய்ய முற்பட வேண்டும். கட்டாயம் அவசியமானாலன்றி, அவர்களை பகிரங்கமாகத் தாக்குவதோ, கட்சியிலிருந்து வெளியேற்றவோ கூடாது.

நமது கட்சிக்குள் இன்னமும் ஒரு சில தவறுகளும், குறைபாடுகளும் இருந்தபோதிலும், இங்கும் அங்கும் ஒருசில தனிப்பட்ட கெட்ட அம்சங்கள் இன்னமும் காணப்பட்ட போதிலும், தொழிலாளர் இயக்க, வெகுஜனங்களின் புரட்சிகர இயக்க வளர்ச்சியில், இவற்றையெல்லாம் நிச்சயம் நாம் ஒழித்துக் கட்டமுடியும், ஒழித்துக் கட்டுவோம் என்ற உறுதியான நம்பிக்கை நமக்குண்டு. இந்த விஷயத்தில் நமது நம்பிக்கை சரியானதே என்பதை கடந்த பத்தாண்டுகட்கு மேற்பட்ட சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் சரித்திரமும் சகல துறைகளிலும் அது அடைந்துள்ள மகத்தான முன்னேற்றமும், உலக முழுதுமுள்ள பல்வேறு நாடுகளில் தொழிலாளி வர்க்க இயக்கம் அடைந்துள்ள வளர்ச்சியும் உறுதிப்படுத்தியுள்ளது.

கட்சியின் புரட்சிகரப் போராட்டத்தின் அத்தியாவசியமான புறக்கணிக்கவோ, பிரிக்கவோ முடியாத ஒரு பகுதியே உட்கட்சிப் போராட்டமாகும். எனவே, கட்சிக்கு வெளியே நடக்கும் போராட்டத்தில் மட்டுமல்ல, கட்சிக்கு உள்ளே நடக்கும் போராட்டத்திலும் நமது தோழர்கள் பங்கெடுத்து எஃகுபோன்ற உறுதியும் படிப்பினைகளையும் பெற்று இவ்விரு முனைகளிலும் பண்படைய வேண்டும். ஆயினும் இதை நமது தோழர்கள் பலர் இன்னமும் பரிபூரணமாக உணர்ந்து கொள்ளவில்லை.

இத்துறையில் அவர்களுக்கு சுய பயிற்சியும், உறுதிப்பாடும் தேவையாக உள்ளது. இது கட்சிக்குள் கோட்பாடற்ற போராட்டத்திலும் பின்வரும் உதாரணங்களிலும் பிரதிபலிப்பதைக் காணலாம்:— நமது தோழர்களில் சிலர், குறிப்பாக இராணுவத்தில் ஓரளவுக்கு நீண்டகாலம் வேலை செய்த தோழர்கள் என்றுமே ஊசலாடியதில்லை; எதிர்ப்புரட்சிக்கு எதிரான போராட்டத்தின் போது அவர்கள் சலித்துக் கொண்டதோ' அல்லது மனச்சோர்வடைந்ததோ கிடையாது. போராட்டம் எவ்வளவுதான் கடினமாகவும் கோரமாகவுமிருந்த போதிலும் அல்லது அவர்கள் எத்தனை தடவைதான் தாக்குதல்களுக்கும் தவறுகள் அல்லது அநீதிகளுக்கும் இரையாக்கப்பட்டு அவதியுற்ற போதிலும், மேற்கூறிய முறையில் உறுதியுடன் போராடினர். ஆனால், உட்கட்சிப் போராட்டத்தின் போது, அவர்

களால் எந்த குணதோஷ விமர்சனத்தையும், தாக்குதல்களையும், அநீதிகளையும்—ஏன்—ஒரு வார்த்தையைக்கூட—தாளமுடிவதில்லை; அல்லது அவர்கள் மிகுந்த சந்தேக மனப்பான்மை அடைந்து மற்றவர்கள் சொல்லும் எதுவும் தம்மைப்பற்றித்தான் என்று கருதிவிடுகின்றனர். இதைக் குறித்து அவர்கள் சலித்து முறையிடுகின்றனர்; மிகுந்த மனச்சோர்வும் அடைகின்றனர்.

தோழர்களே! இத்தகைய நிகழ்ச்சிகள் குறித்து நாம், கவனம் செலுத்தாமலிருக்க முடியாது.

இத்தோழர்கள் பொதுவாக மிகவும் நல்ல தோழர்கள். ஏனெனில், எதிர்ப்புரட்சியை எதிர்த்து அவர்கள் மிகவும் உறுதியாகப் போராடினவர்கள்; கட்சியைத் தமது அன்புமிக்கத் தாயாகப் பேணிப் போற்றியவர்கள். அவர்கள் எதிர்ப்புரட்சியை எதிர்த்து கடினமான பல போராட்டங்களில் பங்கெடுத்த பிறகு, தமது சொந்தத் தாயின் (கட்சியின்—மொ-ர்) கரத்திற்கு மீண்ட அவர்கள், தமக்கு அன்பும், அனுசரணையும், ஆதரவும், உற்சாகமும் கிடைக்குமென்று எதிர்பார்க்கின்றனரேயல்லாது,மேலும்மேலும் தாக்குதல்களும், குற்ற விமர்சனங்களும், அநீதிகளும் தம்மீது பொழியப்படும் என்று எதிர்பார்ப்பதில்லை... இவ்வாறு அவர்கள் எதிர்பார்ப்பது இயல்பானதே. ஆயினும் அத்தோழர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளாதது அல்லது முழுதும் கணக்கிலெடுத்துக் கொள்ளாதது என்னவெனில், கட்சிக்குள் இன்னமும் பல்வேறு தவறுகளும், குறைபாடுகளும் இருந்து வருவதினால் உட்கட்சிப் போராட்டத்தை நடத்த வேண்டியதும் அதில் கட்சித் தோழர் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக் கொள்வதும் அவசியம் என்பதே. உட்கட்சிப் போராட்டத்தின் போது ஒவ்வொரு தோழரும் சரியான அல்லது தவறான குற்ற விமர்சனங்களையும், தாக்குதல்களையும் ஏன் அநீதிகள் இழிவுகளையும்கூட எதிர்நோக்கும்படி நேருவதுதவிர்க்க முடியாததாகும். இதை ஒவ்வொரு தோழரும் அனுபவித்தே தீரவேண்டும். இதற்குக் காரணம் நமது கட்சி ஈவிரக்கமற்றது என்பதல்ல; ஆனால் உட்கட்சிப் போராட்டத்தின் போது எழும் தவிர்க்க முடியாதநிலைமை இதுவே என்பதாகும். ஆயினும் இத்தோழர்கள் இந்த அம்சத்தைக் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தவறுவதினால் மேற்கூறிய நிலைமை எழும்போது அவர்கள் திடுக்கிடுகின்றனர்; விவரிக்கவொண்ணாத அளவுக்கு துயரமும் மனச்சோர்வும் அடைகின்றனர்.



இது சம்பந்தமாக நமது தோழர்கள் என்ன செய்ய வேண்டும்? ஒரு புறத்தில் இதர தோழர்களுடன் ஐக்கியப்பட்டு நின்று அவர்களுடன் மனத்தூய்மையுடனும், கள்ளங்கபடமற்ற முறையிலும் நடந்து கொள்ள வேண்டும்; மனம்போன போக்கில் விஷமத்தனமான வார்த்தைகளை உபயோகித்து அவர்களது உள்ளத்தை புண்படுத்தக்கூடாது; குத்திக் கிண்டி கேலி செய்யும் வார்த்தைகளையும் அவர்கள் மீது வீசக்கூடாது; குறிப்பாக தோழர்களை, அவர்கள் இல்லாத சமயத்தில், அவர்களது முதுகுக்குப்பின்னே பொறுப்பற்ற முறையில், குற்ற விமர்சனம் செய்யக்கூடாது. விடாப்பிடியாகத் திருந்தாமலும், தமது தவறுகளைக் கைவிடாமலும், கட்சிக்குள் சகலவிதமான தீயகாரியங்கள் செய்து வரும் தோழர்களைத் தவிர மற்றெல்லோர் விஷயத்திலும் வேறுவிதமாக நடந்து கொள்ள வேண்டும். தவறுகள் செய்துள்ள இவ்விதர தோழர்களை நேருக்கு நேராக வைத்து மனத்தூய்மையுடனும் பொதுவான முறையிலும்தான் குற்றவிமர்சனமோ, கண்டனமோ செய்ய வேண்டும்; அதுவும்கூட அனுசரணையான முறையில் உதவிகரமான முறையில்தான் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் நாம் எல்லோரும் முக்கியமாக ஓரளவு அதிகப்பொறுப்புள்ளவர்களாக விளங்கும் நமது தோழர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ''தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே நாவினால் சுட்ட வடு'' என்ற மூதுரையை நாம் மறக்கக்கூடாது. மற்றொரு புறத்தில், நமது தோழர்கள் உட்கட்சிப் போராட்டத்திற்குத் தயாராயிருக்க வேண்டும்; குற்ற விமர்சனங்கள், தாக்குதல்கள் அல்லது தப்பபிப்ராயங்கள், அநீதிகள் ஆகியவை அனைத்தையும் தாங்குவதற்கு வேண்டிய தைரியம் படைத்திருக்க வேண்டும்; குறிப்பாக இதரர்களிடமிருந்து வரும் பொறுப்பற்ற-ஏன்-தவறான குற்ற விமர்சனங்கள், வதந்திகளைக் கேட்டு கோபமடையாமலிருக்க வேண்டும். கட்சி ஸ்தாபனங்களுக்குள், பரஸ்பரமாகவும், முறைபபடியும் குணதோஷ விமர்சனம் செய்வதுடன், நமது சித்தாந்தமும் நடத்தையும் பிசகற்றதாக இருக்கும் பட்சத்தில், இதரர்களுடைய பொறுப்பற்ற குற்ற விமர்சனங்களுக்கும் தப்பபிப்பிராயங்களுக்கும் பதிலளிக்கும் முறையில்தேவையானால் சில, பல விளக்கங்களைத் தரலாம். இத்தகைய விளக்கங்களால் பயனேற்படவில்லை என்றால், மற்றவர்கள் சொல்வதைச் சொல்லிக் கொள்ளட்டும் என்று விட்டு விடுவதே நல்லது

''புறம் கூறுவோர் பேச்சுக்கு ஆளாகாதோரில்லை; புறம் கூறாதவருமில்லை''என்றும், ''புயல் வீசும்போது ஓடத்தில் நிதா

னமாக அமர்ந்திரு!'' என்றும் இரண்டு சீன மூதுரைகள் உள்ளன. இவற்றை நாம் மனதிற் கொள்ள வேண்டியது அவசியம், ஏதாவதொரு வழியிலாவது, இதரர்களின் தப்பபிப்ராயத்திற்கு இலக்காகாத நபர் ஒருவர்கூட இல்லை எனலாம். எனவே நாம் ஒரு புறத்தில், எந்த தப்பபிப்ராயத்தையும் சகித்துக் கொள்ளும் சக்தி கொண்டிருப்பதுடன், கோட்பாடற்ற போராட்டங்களில் அகப் பட்டுக் கொள்ளவும் கூடாது; மறுபுறத்தில், எப்பொழுதும் உஷா ராகவிருந்து, நமது சொந்த சித்தாந்தமும், நடத்தையும் சரியா னதுதானு என்று பரிசோதனை செய்து பார்க்க வேண்டும்.

அதாவது மனம் போன போக்கில் தற்செயலாக வரும் நமது சொற்களின் மூலம் இதர தோழர்களின் மனதை நாம் புண் படுத்தக் கூடாது; ஆனல் இதரர்கள் நம்மீது வீசக்கூடிய எந்த சொற்களையும் தாளக்கூடிய சக்தி நமக்கிருக்க வேண்டும்.

கோட்பாடற்ற தகராறுகளை நாம் தீவிரமாக எதிர்க்கி றேம். இவை ,''கோட்பாடற்றவை'' என்ற காரணத்தினலேயே கட்சிக்குத் தீங்கும் நஷ்டமும் ஏற்படுத்தக் கூடியவை ஆகவே, இதில் ஏதோ சரியான விஷயங்களோ, அல்லது தவறுன விஷயங் களோ, நல்லதோ அல்லது கெட்டதோ உள்ளது என்றபிரச்னைக்கே இடமில்லை. கோட்பாடற்ற போராட்டங்களில் யார் சரி, யார் தவறு, யார் நல்லவர், யார் கெட்டவர் என்று நாம் ஆராய முயற்சிக்கக்கூடாது. ஏனெனில் இவ்விஷயங்களை சரிப்படுத்துவ தென்பது இயலாத காரியம். இத்தகைய கோட்பாடற்ற போராட் டங்களைத் தீவிரமாக எதிர்ப்பவர்கள் நாம். எனவே, இவற்றில் ஈடுபட்டுள்ள தோழர்கள் நிபந்தனையின்றி இப்போராட்டங்களைக் கைவிட்டுவிட்டு, கோட்பாடு சம்பந்தமான பிரச்னைகளுக்குத் திரும்பவேண்டும் என்று நாம் கோருவோம். இதுவே, கோட் பாடற்ற தகராறுகளில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை. கட்சித்தடையையும் நமது எதிர்ப்பையும் மீறியும்கூட, கட்சிக்குள் கோட்பாடற்ற தகராறுகள்நிகழ்ந்தால் அல்லதுகோட்பாடுசம்பந் தமான ஒரு குறிப்பிட்ட போராட்டத்தில் பல கோட்பாடற்ற பிரச்னைகள் சம்பந்தப்படுத்தப்பட்டிருந்தால், நாம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? கோட்பாடற்ற பிரச்னைகள் நம்மீது திணிக்கப்பட்டு நாம் அவற்றில் சம்பந்தப்படுத்தப்பட்டால், என்ன செய்ய வேண்டும்? இத்தகைய சமயங்களில் நாம், கோட் பாடு சம்பந்தமான பிரச்னைகளில் மட்டுமே முழு கவனத்தையும் தீவிரமாக செலுத்த வேண்டுமேயல்லாது, கோட்பாடற்ற பிரச்னை



களிலல்ல, மேலும், மேற்கூறிய கொள்கைகளுக்கேற்ப கோட் பாடற்ற பிரச்னைகள் சம்பந்தமாக நாம், மிகவும் கடுமையாகவும், கண்டிப்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். இது விஷயத்தில் நமது கண்ணேட்டத்தை கடைசி வரையில் விடாப்பிடியாகக் கடைப்பிடிக்க வேண்டும்; இந்த கோட்பாடற்ற பிரச்னைகளில் நாம் ஒரு பொழுதும் மாட்டிக் கொள்ளக் கூடாது; தவறு செய்ப வர்களுக்கு, அவர்கள் ''தவறிழைத்தார்கள்'' என்பதற்காக நாமும் ''தவறிழைக்கக் கூடாது.'' இதரர்களின் ''தவறுகளை'' எதிர்ப்பதற்காக நாம் எப்பொழுதுமே ''சரி''யான தரப்பில் உறுதியாக நிற்க வேண்டும். இது நம் தோழர்கள் பலருக்கு சுலப மான காரியமல்ல. எனவே நாம் உறுதிப்பாட்டையும் பயிற்சியை யும் பெறுவதில் ஈடுபட வேண்டும்.

சுருங்கக் கூறுமிடத்து, விசுவாசமான, பரிசுத்தமான, முற் போக்கான, முன் உதாரணமாகத் திகழக்கூடிய கட்சி உறுப்பினர் களாகவும், ஊழியர்களாகவும் விளங்குவதற்கான எஃகு உறுதிப் பாட்டை நாம் எல்லோரும் அடையும்படிச் செய்வதே, நமது சித் தாந்தப் பயிற்சியின் அடிப்படையான நோக்கமாகும். எனவே நாம், கீழ்க்கண்டவற்றை செய்ய வேண்டும்:—

1. மார்க்சிசம், லெனினிசக் கல்வியின் மூலமும், புரட்சிகர நடைமுறை மூலமும் நமது உறுதியான கட்சிக் கண்ணேட்டத்தை யும் வர்க்கக் கண்ணேட்டத்தையும் கட்டி வளர்த்திடுங்கள்!

2 நமது சொந்த சித்தாந்தத்தையும், நடத்தையையும் பரி சோதித்துப் பார்த்து, சகல தவறுன கருத்துக்களையும் திருத்திக் கொள்வோமாக. அதே சமயத்தில், வாழ்க்கையைப் பற்றிய கம் யூனிஸ்ட் உலக தாத்பரிய சாஸ்திரம், கம்யூனிஸ்ட் உலகக் கண் ணேட்டம், திடமான கட்சிக் கண்ணேட்டம் ஆகியவற்றின் அடிப்படையில்தான், பிரச்னைகளையும், இதர தோழர்களையும் நாம் பார்க்க வேண்டும்.

3. கட்சிக்குள்ளிருக்கும் பல்வேறு தவறுன சித்தாந்தங்களுக்கு எதிரான போராட்டத்தில், குறிப்பாக, அந்த சமயத்தில் கட்சி யின் புரட்சிகரப் போராட்டத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் விஷ யங்களுக்கு எதிரான போராட்டத்தில் நாம் பொருத்தமானதோர் போக்கையும் வழிமுறையையும் இடையருது பின்பற்றுவோமாக

4. நமது சித்தாந்தம், பேச்சு, நடத்தை ஆகியவற்றில் நம்மை நாமே கண்டிப்பாகக் கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும். குறிப்பாக, எந்தெந்த அரசியல் சித்தாந்தங்களும், பேச்சுகளும்,

நடவடிக்கைகளும், அந்த சமயத்தில் நடக்கும் புரட்சிகரப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்டவைகளாகவுள்ளனவோ அந்த சித்தாந்தங்களையும், பேச்சுகளையும், நடவடிக்கைகளையும் நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு திடமான கண்ணோட்டத்தை மேற்கொள்வதன் மூலமும், கோட்பாடுகளுடன் பிணைந்து நிற்பதன் மூலமும் இதைச் செய்ய வேண்டும். மேலும் நமது தனிப்பட்ட வாழ்க்கை, நடத்தை முதலிய பல ''சின்னஞ் சிறு'' விஷயங்களிலும் கூட நாம் கவனம் செலுத்துவது மிகவும் நல்லது. ஆனால், மற்ற தோழர்கள் விஷயத்தில், கோட்பாடு சம்பந்தமான பிரச்னைகள், முக்கியமான அரசியல் பிரச்னைகள் ஆகியவற்றைத் தவிர மற்ற விஷயங்கள் சம்பந்தமாக அவர்கள் மீது விதிக்கப்படும் நிபந்தனைகள் மிகவும் கடுமையானதாக இருக்கக் கூடாது. ''சின்னஞ் சிறு'' விஷயங்கள் குறித்து, மற்றவர்கள் மீது குற்றம் காண முயற்சிக்கக் கூடாது.

தோழர்களே! கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களின் அடிப்படையான சித்தாந்தப் பயிற்சி என்பதின் பொருள் இதுவே என்று நான் கருதுகிறேன்.

—●—



# குறிப்பு

## மனிதனின் வர்க்கத் தன்மை

வர்க்க சமுதாயத்தில் மனிதனின் இயல்பான குணமாகவும் மனிதனின் சாராம்சமாகவுமிருப்பது அவனுடைய வர்க்கத் தன்மையே.

வர்க்க சமுதாயத்தில் மனிதர்கள் எல்லோரும் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தைச் சேர்ந்த மனிதர்களாகவே வாழ்கின்றனர். எனவே, மனிதனின் சமூகத்தன்மை அவனுடைய வர்க்க அந்தஸ்தால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவருடைய வர்க்க அந்தஸ்து மற்றொருவருடைய வர்க்க அந்தஸ்திலிருந்து மாறுபட்டிருப்பதால், ஒருவருடைய சமூகத் தன்மை மற்றவரது சமூகத்தன்மையிலிருந்து மாறுபட்டிருக்கிறது. பண்டைக்காலத்தில் மென்சியஸ் காட்சி, ஹுசுன்சே* முதலானவர்கள் ''மனிதத் தன்மை நல்லதா? கெட்டதா?'' என்பதைப் பற்றி விவாதம் செய்தனர். ஆனால் அவர்களுடைய விவாதத்தால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. காரணமென்னவெனில், மனிதனின் சமூகத் தன்மையிலுள்ள வர்க்க பேதங்களை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை; அல்லது இந்த பேதங்களை வேண்டுமென்றே மூடி மறைத்துவிட முயற்சித்தனர். வர்க்க சமுதாயத்தில் எது நல்லது, எது கெட்டது என்பது பற்றி மனிதர்கள் மாறுபட்ட கருத்துடையவர்களாயிருக்கின்றனர். சுரண்டல்காரர்கள் எதை நல்லது என்று கருதுகிறார்களோ, அதை சுரண்டப்படுபவர்கள் தீயதெனக் கருதுகின்றனர். இதே போல், சுரண்டப்படுபவர்கள் நல்லதெனக் கருதுவதை சுரண்டல்காரர்கள் தீயதென்று கருதுகின்றனர். ஆதலால், வர்க்கங்களிடையே உள்ள உறவு பற்றி கவனியாமல் மனிதத் தன்மை நல்லதா, கெட்டதா என்று விவாதிப்பதால் எந்த பலனும் கிடைக்காது. இதே போல் தொழிலாளி வர்க்கத்தின் திருஷ்டி நிலைமையை

---

குறிப்பு: * அவர்கள் மூ[illegible] [illegible]சௌ' வம்சத்தின் (கி மு 1122 கி மு 255) பிற்பகுதியிலிருந்[illegible] [illegible]கிய அறிஞர்கள். இவர்கள் கன்பியூசியசை பின்பற்றுபவர்கள். மனிதத் தன்மையைப் பற்றி இவர்கள் மாறுபட்ட அபிப்ராயம் கொண்டிருந்தனர். மனிதத் தன்மை பிரதானமாய் நல்லதென மென்சியஸ் கருதினார். அது தீமையானதென்று ஹுசுன்சே கருதினார். அது மாறக் கூடியதென காட்ஸி எண்ணினார்.

ாம் கடைப்பிடிக்காவிடில், சில மனிதர்கள் எந்த அளவிற்கு தீயவர்கள் என்பது பற்றி நாம் சீர்தூக்கி நிர்ணயம் செய்துவிட முடியாது.

மனிதனின் வர்க்கத்தன்மை அவனது வர்க்க அந்தஸ்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அதாவது, குறிப்பிட்ட சிலர் நீண்ட காலமாய் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின அந்தஸ்தை பெற்றுள்ளனரென்றால், அதாவது சமூகப் பொருளுற்பத்தியில் ஒரு குறிப்பிட்ட அந்தஸ்திலுள்ளனரென்றால், மேலும் அவர்கள் நீண்டகாலமாய் ஒரு குறிப்பிட்ட முறையில் பொருள் உற்பத்தி செய்தும் ஜீவனம் நடத்தியும் போராடியும் வந்தனரென்றால், அவர்களுக்கு உரித்தான குறிப்பிட்ட வாழ்க்கை முறையையும், அவர்களுடைய குறிப்பிட்ட நலன்கள், கோரிக்கைகள், மனப்பாங்குகள், கருத்துக்கள், பழக்கவழக்கங்கள் அபிப்பிராயங்கள், மற்ற மக்கள் பகுதிகளோடுள்ள உறவுகள் முதலியனவற்றையும் அவர்கள் சிருஷ்டித்து விடுகின்றனர். இவை யாவும் மற்ற மக்கள் பகுதிகளால் சிருஷ்டிக்கப்படுவனவற்றிலிருந்து மாறுபட்டுள்ளன அல்லது நேர்விரோதமாகவும் உள்ளன. மனிதர்களின் குறிப்பிட்ட குணதிசயங்கள், அவர்களது குறிப்பிட்ட வர்க்கத் தன்மை இம்முறையில்தான் உண்டாக்கப்படுகிறது.

சமூகத்தில் பல்வேறு வர்க்கங்களையும் சேர்ந்த மனிதர்கள் வெவ்வேறான நலன்களையும், கோரிக்கைகளையும், கருத்துக்களையும் பழக்கவழக்கங்களையும் பெற்றிருப்பதால், சமூகம் சம்பந்தமாகவும் சரித்திரம் சம்பந்தமாகவும்—அரசியல், பொருளாதாரம், கலாசாரம் முதலியவை சம்பந்தமாகவும் வெவ்வேறானமுறைகளில் அணுகுகின்றனர். வெவ்வேறான கொள்கைகளை அனுசரிக்கின்றனர். ஆளும் வர்க்கங்கள் தங்கள் நலன்களுக்கும் கோரிக்கைகளுக்கும் கருத்தோட்டங்களுக்கும் ஏற்றபடி சட்டங்களையும் அமைப்புகளையும் வகுத்துக் கொள்கின்றன இதன் விளைவாய், சமூகத்தில் அரசியல் பொருளாதார, கலாசார அமைப்புகள் யாவும் ஆளும் வர்க்கங்களின் கருவிகளாகி விடுகின்றன. இந்த அமைப்புகள் யாவும் ஒரு வர்க்கத் தன்மையை பெற்று விடுகின்றன.

வர்க்க சமுதாயத்தில் மனிதர்களின் கருத்துக்கள், பேச்சுகள், அவர்களுடைய நடத்தை, சமூக அமைப்புகள், கோட்பாடுகள் முதலியவை யாவுமே ஒரு வர்க்கத் தன்மை பெற்று விளங்குகின்றன. இந்த வர்க்கத் தன்மை சில வர்க்கங்களின் குறிப்பிட்ட நலன்களையும் கோரிக்கைகளையும் பிரதிபலிக்கிறது. மனிதர்களின் வெவ்வேறான கோரிக்கைகள், கோட்பாடுகள், கருத்துக்கள், பேச்சுகள்



நடத்தை முதலியவற்றிலிருந்து அவர்களுடைய வெவ்வேறான வர்க்கத் தன்மையையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

உதாரணமாக, இயற்கை விவசாயப் பொருளாதாரத்தாலும் கைத்தொழிலிலுமான பொருள் உற்பத்தி முறை பிரபுத்துவ சமூகத்தின் அடிப்படையாகும். இத்தகைய பொருள் உற்பத்தி முறையில் விவசாயிகளின் உபரி உழைப்பை பிரபுக்கள் சுரண்டுகின்றனர். இந்த பிரபுக்கள் வேலை செய்யாமலே ஜீவனம் செய்கின்றனர். நில வாடகையையும் வாரத்தையும் வசூலித்து ஜீவனம் செய்கின்றனர். ஆதலால் அவர்கள் மேலும் அதிகமான நிலத்தை தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் நிலம் சாசுவதமாய் தங்கள் கையிலேயே இருக்கவேண்டுமென்றும் விரும்புகின்றனர். விவசாயிகள் அதிகப்படியான நிலவாடகை செலுத்த வேண்டுமென்றும் கூலியின்றி தங்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டுமென்றும் அவர்கள் கோருகின்றனர். விவசாயிகளை நசுக்குவதற்கும் சுரண்டிக் கொழுப்பதற்கும் தங்களுக்கு உரிமையுண்டு என்றும் இந்த உரிமை மிகவும் நியாயமானதென்றும் கூறுகின்றனர். இதன மூலம் அவர்கள் தங்களுடைய பிரபுத்துவ பாகுபாட்டிற்கும் மற்றவர்களைத் தாங்கள் விழுங்கிப் பெருப்பதற்கும், தங்களுடைய டாம்பீக. வாழ்விற்கும், சோம்பேறித்தனத்திற்கும், கொடுஞ் செயலுக்கும், சமூக அந்தஸ்திற்கும் வழிகோலிக் கொள்கின்றனர்.

நவீன இயந்திரத் தொழிலின் இயந்திர உற்பத்தி முறை முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படையாகும். இத்தகைய உற்பத்தி முறையில் முதலாளி வர்க்கம் உற்பத்தி சாதனங்களையும் சகலவிதமான உற்பத்திப் பொருள்களையும் தனக்குச் சொந்தமாக ஆக்கி வைத்துக் கொண்டு இவற்றின் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் உபரி உழைப்பைச் சுரண்டுகிறது. முதலாளி வர்க்கத்தின் ஜீவனம் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் உபரி மதிப்பைப் பொறுத்திருக்கிறது. எனவே தான், உற்பத்தி பண்டங்களையும் உழைப்பு சக்தியையும் வாங்குவதற்கும் விற்பதற்கும் பூரண சுதந்திரம் வேண்டுமென்றும், சுதந்திரமான போட்டி இருக்க வேண்டுமென்றும் முதலாளிகள் விரும்புகின்றனர். பொருளாதார வழிகளைப் பிரயோகித்து அவர்கள் தங்களுடன் போட்டியிடுவோரை ஒழித்துக் கட்டுகின்றனர்; பொருளாதார துறையிலும்

அரசியல் துறையிலும் தங்களுடைய ஏகபோக ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொள்கின்றனர்; தங்கள் சொந்த சொத்தின் மீது கை வைக்க எவருக்கும் உரிமையில்லையென அவர்கள் கோருகின்றனர். குறைந்த கூலிக்கு தொழிலாளர்கள் தங்கள் உழைப்பு சக்தியை அதிக அளவிலும் (வேலை நேர அதிகரிப்பு, வேலைப்பளு அதிகரிப்பு உயர்ந்த தரத்திலும், உயர்ந்ததும் அனுபவமானதுமான தேர்ச்சி) கொடுக்க வேண்டுமென்று கோருகின்றனர். செல்வந்தர்களாவதற்கும் சமூகத்தின் செல்வத்தை தங்களுடைய ஏகபோக உடைமை ஆக்கிக் கொள்வதற்கும் தாங்கள் உரிமை பெற்றிருப்பது நியாயமானதென்று தொழிலாளர்கள் ஏற்றுக் கொண்டுவிட வேண்டுமென்றும் அவர்கள் கோருகின்றனர். இம்முறையில் அவர்கள் முதலாளித்துவ போட்டா போட்டியையும், ஏகபோகத்தையும், டாம்பீகத்தையும், முதலாளித்துவ அமைப்பின் மத்தியத்துவத்தையும் அதன் யாந்திரீகத் தன்மையையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர். முதலாளி வர்க்கத்தின் குணாதிசயங்கள் இவையே.

விவசாயிகளை எடுத்துக் கொள்வோம். நீண்டகாலமாய் அவர்கள் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருப்பவர்கள். சிதறிக் கிடக்கும் சுயேச்சையான, எளிமையான, சுயதேவையை பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய, பரஸ்பரம் ஒத்துழைப்பில்லாத ஒரு முறையில் அவர்கள் நீண்டகாலமாக உறபத்தி செய்து வருகின்றனர். அவர்களுடைய வாழ்க்கை முறை எளியதாகவும் தனித்து நிற்கும் தன்மையதாகவுமிருக்கிறது. நிலவாடகை, விலையின்றி இனமாக நிலப்பிரபுவிற்கு கொடுக்கும் உழைப்பு முதலிய பலசுமைகளையும் அவர்கள் சுமந்து வருகின்றனர். இவ்விதம் விவசாயிகளின் மந்தப் போக்கிற்கும், மாறுதல் விரும்பாதமனப்பான்மைக்கும், குறுகிய மனப்பான்மைக்கும், பின் தங்கிய நிலைக்கும் தனிஉடைமையாளரின் கண்ணோட்டத்திற்கும், பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்திற்கும், அரசியல் சமதுவம் வேணடுமென்னும் அவர்கள் கோரிக்கைக்கும் வழி வகுககப்படுகிறது. இவையே விவசாயிகளின் குணாதிசயங்கள்.

தொழிலாளி வர்க்கம் பெரிய தொழிற்சாலைகளில் ஒன்று திரண்டுள்ள உ. நுணுக்கமான வேலைப் பிரிவினையுடன் விளங்கும் உற்பத்தி முறையில் அவர்கள் ஈடுபடுகின்றனர். அவர்களுடைய நடவடிக்கைகள் யாவற்றிலும் இயந்திரங்களும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கும் போக்கும் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவர்கள் கூலிக்கு வேலை செய்யும் உழைப்பாளிகள்; தங்கள்



உழைப்பு சக்தியை விற்கின்றனரேயன்றி, அவர்களிடம் எந்தவிதமான பொருள் உற்பத்தி சாதனமும் கிடையாது. கூலியைக் கொண்டே ஜீவனம் செய்கின்றனர்; அவர்களுடைய அடிப்படையான நலன்கள் மற்ற உழைப்பாளிகளின் நலன்களுடன் மோதுவதில்லை. எனவே தான் அவர்கள் மகத்தான ஒருமைப்பாட்டுடனும், பரஸ்பர ஒத்துழைப்புடனும், ஸ்தாபன உணர்வுடனும், கட்டுப்பாட்டு உணர்ச்சியுடனும், முற்போக்கான கண்ணோட்டத்துடனுமிருக்கின்றனர். எனவேதான் உற்பத்தி சாதனங்கள் பொது சொத்தாக வேண்டுமென்று அவர்கள் கோருகின்றனர்; சகலவிதமான சுரண்டல்காரர்களையும் எதிர்த்து போராடுகின்றனர்; போர்க்குணம், விடாமுயற்சி முதலிய குணங்களைப் பெற்றுள்ளனர். இவையே தொழிலாளி வர்க்கத்தின குணாதிசயங்கள்.

சுரண்டும் வர்க்கத்தினர் யாவரும் சுரண்டப்படுவோரை ஏமாற்றுகின்றனர்; அடக்கி ஒடுக்குகின்றனர்; மேலும் சுரண்டப்படுவோரின் உபரி உழைப்பாலுண்டாகும் பொருள்களை அல்லது உபரி மதிப்பை அபகரித்துக் கொள்வதற்காக தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சண்டை போட்டுக் கொள்கின்றனர்.

எனவேதான் அவர்கள் ஏமாற்றி மோசம் செய்யும் பழக்கமுடையவர்களாயிருக்கின்றனர்; மக்களை அடக்கி ஒடுக்குகின்றனர்; பரஸ்பரம் ஒருவரையொருவர் கொள்ளையடித்துக் கொள்கின்றனர். சுரண்டப்படுவோரால் உண்டாக்கப்படும் உபரிப் பண்டங்களையும் உபரி மதிப்பையும் கைப்பற்றி அவற்றை பங்கிட்டுக் கொள்வது சம்பந்தமாய் சுரண்டும் வர்க்கங்கள் தங்களுக்குள் ஒருவரோடொருவர் போராடிக் கொள்வதின் விளைவாய் சரித்திரத்தில் பல யுத்தங்கள் நடைபெற்றுள்ளன.

சுரண்டல்காரர்கள் மற்றைய மக்களின் துயரத்தின் மீது தங்களுடைய இன்ப வாழ்வை அமைத்துக் கொள்கின்றனா. இது சகலவித சுரண்டல்காரர்களிடையிலும் காணப்படும் ஒரு பொதுவான அம்சமாகும். ஒரு தனிநபர் அல்லது ஒரு சிறு கூட்டத்திற்கு பிரத்தியேக சலுகைகளும் பிரத்தியேக இன்பமும், கிடைக்கும் பொருட்டு, மனிதகுலம் பூராவின் அல்லது மக்களின் மிகப் பெருவாரியான பகுதிகளின் சுபிட்சத்தைச் தியாகம் செய்து, அவர்களை பசிக்கும், குளிருக்கும், இழிவிற்கும் இரையாக்குவதென்

பது தான் சகலவித சுரண்டல் வெறியர்களின் ''புனிதப் பண்பாக வும்'',''மகாத்மீயமாகவும்'',''சிறப்பாகவும்'' தார்மீக அடிப்படை யாகவும் விளங்குகிறது.

தொழிலாளி வர்க்கத்தையும் கம்யூனிஸ்ட்களையும் பொறுத்த வரையில் இதற்கு நேர்முரணான நிலைமையை நாம் காணுகின் றோம். தங்களுடைய இன்ப வாழ்வை மற்றவர்களுடன் பங்கிட் டுக் கொள்வதென்னும் அடிப்படையில் இவர்கள் தங்கள் இன்ப வாழ்வை அமைக்க விரும்புகின்றனர். உழைப்பாளி மக்களின் பரந்த பகுதிகளின், மனிதகுலம் முழுவதிலும் விடுதலைக்குப் போராடுவதின் மூலம் இவர்கள் தங்களை விடுவித்துக் கொள்ள முயற்சிக்கின்றனர். ஒருசிறு கூட்டத்தினருக்குள்ள பிரத்தியேக சலுகைகளை அகற்றுவதற்குப் பாடுபடுகின்றனர். இதுதான் கம்யூ னிஸ்ட்களின் புனித பண்பும்,மகாத்மியமும், சிறப்பும், தார்மீக அடிப்படையுமாகும்.

வர்க்க சமுதாயத்திலுள்ள மனிதர்களின் பல்வேறு வித மான வர்க்கத் தன்மைகள் இவையே. நீண்டகாலமாய் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் மனிதர்களின் பிரத்தியேக நிலைமை காரண மாயும், அவர்களுடைய பிரத்தியேக உற்பத்தி உறவுகள் காரண மாயும், பிரத்தியேக வாழ்க்கை முறை காரணமாயும் இந்த வர்க் கத் தன்மைகள் படிப்படியாக அமைந்து விடுகின்றன. இவை மனிதர்களின் ஒருவித சுபாவமாகி விடுகின்றன; இந்த சுபாவத் திற்கு சமூக வேர்களுண்டு.

கட்சி மனப்பான்மை என்பது மனிதர்களின் இந்த வர்க்க குணாதிசயங்களின் மிகவும் சிறந்த உருவமாகத் திகழ்கிறது. பிர புத்துவ வர்க்கத்தின் கட்சி மனப்பான்மை, முதலாளி வர்க்கத்தின் கட்சி மனப்பான்மை, தொழிலாளி வர்க்கத்தின் கட்சி மனப் பான்மை முதலிய பல்வேறு வித கட்சி மனப்பான்மையும் மனிதர் களிடம் காணப்படுகின்றன.

கம்யூனிஸ்டின் கட்சி மனப்பான்மை என்பது தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கத் தன்மை; அதன் நலன்கள், அதன் சாராம்சம் ஆகியவற்றின் சிறந்த உருவமாகத் திகழ்கிறது. ஒருவருடைய சாராம்சம் திருத்தியமைக்கப்பட்டு அவர் கம்யூனிஸ்ட்டாக வேண்



டுமென்றால் அவர்கட்சி மனப்பான்மையில் புடம் போடப்பட்ட உறுதியடைந்து பயிற்சி பெற்று பக்குவமடைய வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் பல புனிதமான முற்போக்கான குணாதிசயங்களை கம்யூனிஸ்ட் கட்சி மிகவும் உயர்ந்த நிலைக்கு வளர்த்துச் செல்ல வேண்டும். இந்த குணாதிசயங்களுக்கேற்ப ஒவ் வொரு கம்யூனிஸ்டும் தன்னை திருத்தியமைத்துக் கொள்ள வேண் டும். இந்த சிறந்த குணாதிசயங்களை ஒவ்வொரு கம்யூனிஸ்டும் தன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டும். சாராம்சத்தைத் திருத்தி யமைத்துக் கொள்வதென்பதின் பொருள் இதுதான். இயந்திரத் தொழிலாளர்களின் அணிகளிலிருந்து வராத எல்லா கட்சி உறுப் பினர்களிடமும் தொழிலாளி வர்க்கமல்லாத பிற பகுதிகளின் குணாதிசயங்கள் காணப்படுகின்றன. எனவே இந்த உறுப்பினர் கள் திருத்தியமைக்கப்பட வேண்டியது மேலும் அதிக அளவு அவ சியமாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் குணாதிசயங்களும் மாறக்கூடி யவை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தொழிலாளி வர்க்கம் தோற்றமெடுத்து வளர்ச்சி பெற்றதன் மூலமாகவே தொழிலாளி வர்க்கத்தின் குணாதிசயங்கள் உருவாகின; அவை வளர்ச்சி பெற் றன. இறுதியில் மார்க்சிசம்—லெனினிசத்தைப் பெற்றெடுத்தன. வருங்காலத்தில் சோஷலிஸ்ட் அமைப்பிற்கு மாறும்பொழுதும், சோஷலிசச் சமூகம் கம்யூனிசமாக மாறும் பொழுதும், தொழிலாளி வர்க் கம் இடைவிடாமல் சமூகத்தையும் மனித குலத்தின் சாராம்சத் தையும் மாற்றியமைக்கும்; அதே சமயத்தில் அது தன் சொந்த சாராம்சத்தையும் குணாதிசயங்களையும் மாற்றியமைத்துக் கொள் ளும். கம்யூனிஸ்ட் சமுதாயத்தில் மனிதர்களுக்கிடையே வர்க்க வேறு பாடுகள் இறந்தொழிந்துவிடும், அதேபோல் மனிதர்களின் வர்க்க குணாதிசயங்களும் இறந்தொழிந்துவிடும். அப்பொழுது மனித குலத்தின் பொதுவான குணம், அதாவது மனிதர்கள் யாவருக்கும் பொதுவான ஒரே குணம் தோன்றும். வருங்கால நிகழ்ச்சிப் போக் கில் மனிதகுலத்தின் சாராம்சம் இவ்விதம் மாற்றியமைக்கப் படும்.

உலக சரித்திரத்தில் கம்யூனிஸ்டுகளும் மார்க்சிஸ்டுகளும் மட்டும்தான் தங்களுடைய சொந்த கட்சி மனப்பான்மையையும் வர்க்கத் தன்மையையும் மற்றவர்களுடைய கட்சி மனப்பான்மை

யையும் மேலும் சரித்திரத்திலும் சமூகத்திலுமுள்ள விஷயங்களின் கட்சி மனப்பான்மையையும் வர்க்கத்தன்மையையும் ஏற்றுக் கொள்கின்றனர். தொழிலாளிவர்க்கத்தின்பிரத்தியேகமானவர்க்க அந்தஸ்தின் காரணமாகத்தான் கம்யூனிஸ்டுகள் ஒளிவு, மறைவின்றி இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு அதை பிரகடனம் செய்யமுடிகிறது. இவ்வுண்மையைப் பிரகடனம் செய்வதின் மூலம் தொழிலாளி வர்க்கத்திற்கு எவ்வித தீங்கும் நேரிடுவதில்லை; ஆனால் சுரண்டும் வர்க்கங்களுக்கு இதனால் மிகப்பெரிய அடி கிடைக்கிறது. இவ்வுண்மையைப பிரகடனம் செய்வதின் மூலம் சுரண்டும் வர்க்கங்களின் துரோகமும் ஆஷாடபூதித்தனமும் அம்பலமாக்கப்படுகிறது; சுரண்டல்காரர்களான ஒரு சிறு கூட்டத்தின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதென்பது மேலும் கடினமான காரியமாகிவிடுகிறது. இதர வர்க்கங்களும் இதர கட்சிகளும் அவற்றின் கட்சி மனப்பான்மையையும் வர்க்கத்தன்மையையும் ஏற்றுக்கொள்வதே கிடையாது. "கட்சிகளுக்கப்பாற்பட்ட"தாகவும், அவை தங்களை வர்ணித்துக் கொள்கின்றது. உண்மையென்னவெனில் 'கட்சிகளுக்கும் வர்க்கங்களுக்கும் அப்பாற்பட்டதென்னும் இந்த அபத்தப் பேச்சின் பின்னால் சுரண்டும் வர்க்கங்களும் அவற்றின் நலன்களும் ஒளிந்து கொண்டிருக்கின்றன. சுரண்டப்படுவோரின் கண் முன்னே அவை தங்கள் கட்சி மனப்பான்மையையும் வர்க்கத்தன்மையையும் ஒத்துக்கொள்ள அஞ்சுகின்றன. குட்டி பூர்ஷ்வாக்களும், அவர்களுடைய பிரமைகள் காரணமாகவும், அறியாமை காரணமாகவும் "கட்சிக்கு அப்பாற்பட்டது" என்னும் பொய்க்கூற்றை ஒத்துக் கொண்டு விடுகின்றனர்.

பிரமைகளில் மூழ்கிக் கிடப்பதும், பயன்தரத்தக்க நடைமுறை வேலைகளையும் போராட்டத்தையும் கண்டு அஞ்சுவதும் குட்டி-பூர்ஷ்வாக்களின் குண விசேஷங்களாகும்.